# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்



# கருணை மலர்

255.12
வற்றா
SL / PR

ருள்மிகு ஸ்ரீ வற்றாப்பளைக் கண்ணகை அம்மன்
தேவஸ்தான புனராவர்த்தன
மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
2003.


சக்தி
ஓம் சக்தி

# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்
# கருணை மலர்



அருள்மிகு ஸ்ரீ வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன
மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
2003.

பதிப்பாசிரியர் :
திருமதி ஹேமா சண்முக சர்மா

வெளியீடு:
வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் கோயிற் பரிபாலன சபை.

முதலாம் பதிப்பு : 1978.
திருத்தப்பட்ட மறு பதிப்பு: 2003.

34021

தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
அன்பளிப்பு
மு. சுகதாஸன்,
அன்பளிப்பாக அளிக்கப்பட்டது
திகதி 01/10/2004

# விநாயகர்

இரும்பினின் வலியரேனும் எழுத்தறிவில்லாரேனும்
மருப்பினாற் பாரதத்தை வரையினிற் பொறித்தான் தன்னை
விருப்பொடு அர்ச்சனையியற்றி விரதமுமநுட்டித்து அன்னோன்
திருப்பதம் மறவார் என்றும் திருவருள் வெறுவரன்றே.

*(விநாயக புராணம்)*

காலைப்பிடித்தேன் கணபதி! நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபலவாகச் சமைத்து நொடிப்பொழு(தும்)
வேலை தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டில் நிறுத்தல் குறியெனக்கே.


*(மகாகவி சுப்பிரமணிய பாரதியார்)*

பாலினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதியீச்சரத்தானே.

*(சம்பந்தர் தேவாரம்)*

கொழும்பு தமிழ்ச் சங்கம்


J.B- 6869



# அம்பாளின் அற்புதங்கள்

பண்டு பாலர்க்குக் காட்சி கொடுத்ததும்
பழைய வேப்பம் படவாள் தளிர்த்ததும்
வண்டு மேவுப னிச்சைய தாடலும்
வன்பறங் கியைக் காயா வெறிந்ததும்
மொண்ட நீரில் விளக்கை யெரித்ததும்
மோது குட்டரோ கந்தனைத் தீர்த்ததும்
கண்டு பற்றக்கள் ளன்கண் கவர்ந்ததும்
கருது சிற்பனுக் கேகண்க ளீய்ந்ததும்
அண்டர் போற்றுமுன் னாயிரங் கண்களை
அன்று பிள்ளைகள் காணக்காண் பித்ததும்
விண் டெழுந்திரு வேப்பம ரத்தினால்
மேவு பேய்பிணி யோய்வுறத் தீர்த்ததும்
மண்டு மாமழை தன்னி னனைந்துநீ
மடங்க டோன்ற வரமளித் திட்டதும்
கொண்டு நந்திக் கடற்கரை கோயிலாய்
குலவு கண்ணகை யற்புதங் கோடியே.

"கண்ணகை யம்மன் கமலமல ரடிவாழ்க"

கண்ணகியின் சின்னங்கள் :

**சிலம்பு, பிரம்பு, உடுக்கு, அம்மானைக்காய், வேப்பம்பத்திரம்**

| | | |
|---|---|---|
| மூர்த்தி | - | கண்ணகி (உமை) |
| தலம் | - | வற்றாப்பளை |
| தீர்த்தம் | - | நந்திக்கடல் |
| விருட்சம் | - | வேம்பு |

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# இளங்கோவடிகள்
# அருளுரை

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்ப்புரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்தும் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினின் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தே எத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன் மா ஞானத்து வாழிவீ ரீங்கு......"

"சிலப்பதிகாரம்" வருந்தருகாதை



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சிபுரம்

## அருளாசியுரை

எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து வரும் பராசக்தியானவள் ஜனங்கள் தன்னை வழிபட்டு மேன்மை அடைவதற்காகப் பல்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு உருவங்களுடன் கோயில் கொண்டு விளங்குகிறாள்.

இந்த முறையில் ஈழநாட்டில் வற்றாப்பளை என்னுமிடத்தில் கோயில் கொண்டு விளங்குவதும், ப்ரதி வருஷமும் வைகாசித் திங்களில் வரும் பௌர்ணமியை அண்டிய ஸோமவாரத்தில் பல்லாயிரம் அடியார்களால் வழிபடப்படுவதுமான ஸ்ரீ கண்ணகி அம்பாளின் மூர்த்தி முக்கியமானதாகும்.

இந்த அம்பாளின் ஆலயத்தை நன்கு நிர்வகித்து வரும் பரிபாலன சபையினர் அம்பாள் கருணை மலர் என்னும் சிறப்பு மலரை வெளியிடுவதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

அன்பர்கள் இவ்வாலய நித்திய, நைமித்திய பூஜைகள் , விஷேச உற்சவங்கள் இவைகளுக்கு தாராளமாக உதவி செய்தும், வழிபட்டுக் கொண்டும் அம்பாளின் அருளால் எல்லா வாழ்க்கை நலன்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி



இரண்டாவது குருமஹாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## அருள் ஆசிச்செய்தி


அம்பிகை அடியார்களுக்கு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளைத் திருப்பதியில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் கண்ணகை அம்பாளுக்கு புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் அண்ணமையில் நடைபெறத் திருவருள் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கையின் தனித்துவமான வழிபாட்டு முறைகளுக்குரிய தெய்வமாக கண்ணகி விளங்குகிறாள். நீதியையும், தர்மத்துடனான அரசியல் முறைகளையும் நிலைநாட்டுவதற்காக இந்நாட்டிலே பல இடங்களிலும் அன்னையானவள் குடிகொண்டிருந்து அருள் பாலிக்கிறாள்.

நம்நாட்டில் பல இடங்களிலும் அமைந்திருக்கும் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் முறையாகக் கொண்டு அமைந்துள்ளன. எனினும் இவ்வாலயம் தீர்த்தநீரிற் தீபம் எரிகின்ற சிறப்புடையது. இங்கு நடைபெறுகின்ற கும்பாபிஷேகத்தை ரசித்து வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இக் கும்பாபிஷேகத்தை சிறப்புறச் செய்து மலர் ஒன்று வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இதனை வெளியிடும் பரிபாலன சபையினருக்கும், ஊர் மக்களிற்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பதாக!

என்றும் வேண்டும் அன்பு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர், கலைப்பீடாதிபதி

# கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

ஈழத்திற் விளங்கும் புகழ்பெற்ற தலங்களுள் முல்லைத்தீவில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள, வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் குறிப்பிடத்தக்க தொன்றாகும். தொன்மையான வரலாற்றுப் பெருமையும், சமயப் பாரம்பரியமும் கொண்ட கோயிலாக இது விளங்குகின்றது. ஆகம வழிபாட்டு மரபுகளும், இத்தலத்திற்கேயுரிய ஐதீகங்களும் பொருத்தமுற இணைந்து இங்கு கடைப்பிடிக்கப்படுகின்றன. பல அற்புதங்களும் அருட்சிறப்புக்களும் இங்கு நிகழ்ந்துள்ளன. வருடந்தோறும் வைகாசி மாதத்தில் இடம்பெறும் பொங்கல், அம்பிகை அடியார்களிடையே ஆத்மீக எழுச்சியை ஏற்படுத்தும் விழாவாகும். இத்தகைய சமய விழாக்கள் மூலம் அடியவர்கள் கண்ணகி அம்மன் மீது கொண்டுள்ள தமது அளவற்ற பக்தியை வெளிப்படுத்தி வருகின்றார்கள். விழாக்காலங்களில் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அடியவர்கள் அம்பிகைக்குத் திருக்கோயில் அமைத்து அதனைக் காலந் தோறும் புனருத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வந்துள்ளனர். மக்களின் பக்திக்கு நிலைக்களனாகத் திகழும் இவ்வாலயத்திற்குரிய கும்பாபிஷேகம் இவ்வருடமும் நிறைவேறுவதற்கு அம்பிகையின் திருவருள் பாலிப்பினால் நிறைவேறியுள்ளது எமக்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.


கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியக் கிரியைகள் மிகவும் பாதிப்படைந்திருந்தன. தற்போதைய பரிபாலன சபையினர் சுமுகமான நிலைமை காரணமாக இவ்வாலயத்தை மிகவும் பழைய நிலைக்குக் கொண்டுவர முயன்று வருவது பாராட்டுக்குரிய விடயம். அனைத்துப் பாகங்களையும் திருத்தம் செய்து இராஜகோபுரத்தையும் திருத்தி அமைத்து புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் செய்வதையிட்டு மனமகிழ்ச்சி யடைகின்றேன்.



திருக்கோயிலில் நிகழும் கும்பாபிஷேகத்தைக் காண்பதே சிறந்த சிவபுண்ணியப் பேறாகும். உலகிலுள்ள உயிரினங்களின் உயிர்த்துணையாக விளங்கும் அன்னைக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து சங்காபிஷேகம் நிகழ்வது, எமது பக்திப் பெருக்கை ஏற்படுத்தும் தெய்வீக நிகழ்ச்சியாக அமைகிறது. இவ் வைபவத்தைக் காண்பதே நாம் பெற்ற பிறவியின் நற்பயனாகும். திருக்கோயில் பழுதுற்றால் அதனை முன்போலச் செய்தவர் பெறும் பயன் அவற்றை முன் செய்தவர் பெறும் பயனைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகும் என 'சிவபுண்ணியத் தெளிவு' எனும் நூல் சிறப்பித்துக் கூறும்.

"உய்வாருதவு நிதி வாங்கித் திருப்பணி செய்வார் பெறுக சிவம்" என்பது சைவ சமய நெறியின் வாக்கு. இம் மரபிற்கேற்ப வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் அடியார்கள் திருப்பணி செய்து, மகா கும்பாபிஷேக வைபவத்தைக் காணும் பேறு பெற்றுள்ளனர். இச்சிறப்பு வாய்ந்த கும்பாபிஷேகத்தைக் காலந்தோறும் நினைவு கூருமுகமாக 'அருளும் அன்னை'க்கு மலரொன்று சமர்ப்பணமாக்கப்படுகின்றமை பொருத்தமானதாகும். இச் சீரிய மலரின் கண்ணே இடம்பெறும் சமயச் சிந்தனைகள் அடியவர்களின் உள்ளங்களிலே பகிர்ந்து தெய்வீக அனுபவத்தை மிகுவிக்குமென்பதில் ஐயமில்லை. இத்தலத்தின் வரலாற்றுக் கருவூலமாகவும் , சமயக் களஞ்சியமாகவும் விளங்கும் இம்மலரினை உருவாக்குவதில் பங்குகொண்ட அனைவருக்கும் மற்றும் பரிபாலன சபையினருக்கும் அம்பிகையின் அருளாசி கிட்டுவதாகுக. அடியார்கள் சீரும் சிறப்புடனும் பெருவாழ்வு வாழ அம்பிகையின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

திருநெல்வீதி
யாழ்ப்பாணம்
25 - 05- 2003



## முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின்

## அருள் ஆசிச் செய்தி

*முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலவளம் கொண்ட வன்னிப் பெருநிலப்பரப்பிலே காவல் தெய்வமாகக் கண்ணகியம்பாள் வற்றாப்பளைப் பதியிலே வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். பாண்டிய மன்னனுக்கு நீதி புகட்டி, மதுரையம்பதியிலே தன் கற்புத் தீயால் அதர்மத்தையழித்து, சேர நாடு சென்று விண்ணகம் புகுந்த கண்ணகாதேவி முல்லைத்தீவின் நந்திக் கடற்கரை வெளியைத் தனக்கான உறைவிடமாகக் கொண்டிருக்கிறாள் என்பது வரலாற்றுச் செய்திகள்.*

*கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற போரனர்த்தங்களாற் சிதைவடைந்த இவ்வாலயம் மீண்டும் பரிபாலன சபையினருடைய முயற்சியினால் மீளமைக்கப்பட்டு மாபெரும் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவையும் கண்டிருக்கிறது. இவ்வாலயம் ஆகம முறையிலான வழிபாட்டு முறைகளுக்கமைய புனரமைக்கப்பட்ட காலத்திலிருந்து பிரதிஷ்டாகுருவாக இருந்து கும்பாபிஷேகம் செய்து வைக்கின்ற திருவருள் எனக்குக் கிடைத்திருப்பது பற்றி மிகவும் மகிழ்வடைகிறேன். இவ்வருடம் அம்பாளின் திருவடிகளைத் தொட்டுப் பூஜித்து அவளைப் பிரதிஷ்டை செய்து வைக்கும் பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன்.*

*அந்த வகையில் அம்பாளுடைய தெய்வீக சாந்நித்தியம் நிறைவாக நின்று அனைத்துலகப் பக்த கோடிகளையும் காப்பாற்ற வேண்டும்; அம்பாளின் கருணா கடாட்சத்தினாலே சாந்தியும் சமாதானமும் இந்நாட்டிலே நிலைபெற்றிருக்க வேண்டும்; இவ்வாலயம் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும்; நித்திய நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும் என அவளுடைய திருவடிகளை வேண்டி நிற்கின்றேன்.*

*"ஸர்வே ஜனாஹா - சுஹினோ பவந்து"*

# சிவஸ்ரீ கார்த்திகேய இரகுநாதக்குருக்கள்
# ஆலய பிரதான சிவாச்சாரியாரின்
## வாழ்த்துச் செய்தி

அற்புதங்கள் பல நிறைந்த வற்றாப்பளைக் கண்ணகை தேவி - ஆலயத்தில நித்திய பூசகராகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறேன். வன்னிப் பெரு நிலப்பரப்பின் காவல் தெய்வமாக அமர்ந்திருக்கும் கண்ணகை ஆச்சியின் இவ்வாலயம் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் பெரிதும் பாதிப்புக் குள்ளாகியிருந்தது. ஆலய அமைப்பு வடிவங்களும் சேதமுற்றிருந்தன. ஆலய ராஜகோபுர அமைப்பிலே பாரிய வெடிப்புக்களும் காணப்பட்டன. அதுமட்டுமல்ல இக்காலகட்டங்களில் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசை முறைகள் ஒழுங்காக நடத்த முடியாமல் இருந்தன. வருடாந்தப் பொங்கல் நிகழ்வுகளைக் கூடச் சில ஆண்டுகள் இங்கு நடத்த முடியாமற் போயிருந்த சூழ்நிலைகளும் இருந்தன.

எனினும் கண்ணகையாச்சியின் நீதிக்குரலான சிலம்பொலி மட்டும் தர்மத்தின் குரலாக எங்குமே ஒலித்துக் கொண்டிருந்தபடியால் காலச் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. சமாதானம் பிறந்தது. மீண்டும் கண்ணகை தேவியின் வழிபாட்டு முறைகள் யாவும் பழைய ஒழுங்குமுறைக்கு வந்தன.

அம்பாளின் திருமேனி தொட்டு மலர்சாத்தி அர்ச்சித்துப் பூஜிக்கின்ற திருவருள் எனக்குக் கிட்டியிருக்கின்றது. பல ஆண்டுகளின் பின், சென்ற ஆண்டு வைகாசிப் பொங்கலும் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து திருப்பணிவேலைகள் ஆலய பரிபாலன சபையினரால் தொடரப்பட்டுச் சென்றமாதம் புனருத்தாரண மகா கும்பாபிஷேகமும் வெகு சிறப்பாக நிறைவேற அம்பாளின் திருவருள் கைகூடியிருந்தது. இப்பொழுது கண்ணகைதேவி அம்பாள் ஆலயம் புதுப் பொலிவு பெற்றிருக்கின்றது. அம்பாளை நாடி வருகின்ற அடியார்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. மேலும் இந்நிலை தடங்கல் எதுவுமின்றித் தொடர வேண்டும்; நீதிதேவதையின் சிலம்பொலி எங்கும் ஒலிக்க வேண்டும்; அதற்கான திருவருள் அம்பாளின் கடைக்கண் பார்வை கிட்டும் என்ற நம்பிக்கையுடன் பாதங்களை வணங்கி நிற்கின்றேன்.



# ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

*"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேராதார்"*

என்பது வள்ளுவன் வாக்கு. அந்த வகையில் எமது பிறவிப்பிணியைத் தீர்த்து எமக்கெல்லாம் பேரானந்தப் பெரும்பேறு அருள்வதற்காக வற்றாப்பளை என்ற அழகிய கிராமத்திலே நந்திக்கடற்கரையில் வந்தமர்ந்து அருளாட்சி புரிகின்ற எங்கள் அன்னைக்கு இது மூன்றாவதாக நடைபெறும் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம். இந்தக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற இந்த மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி...." என்பதற்கிணங்க அவளருளால் அவளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்க அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன். சில புதிய விடயங்களைத் தாங்கிச், சில பழைய விடயங்களைத் தவிர்த்து மறுபதிப்பாக இந்த மலரைச் சிறப்புற வெளியிடுவதற்காக உழைத்த மலர்க்குழுவினருக்கும், ஆக்கங்கள் உவந்தளித்த அடியவர்களுக்கும் அம்பாளின் கிருபா கடாட்சம் கிட்டுவதாக.

திரு. மு.குகதாசன்
*தலைவர்*
*வற்றாப்பளைக் கண்ணகையம்மன்*
*ஆலய பரிபாலன சபை*



## ஆலய பரிபாலன சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அறத்தைக் காத்து அதர்மத்தை அழிக்கும் பத்தினித் தெய்வமாம் எங்கள் கண்ணகித் தாய்க்குத் தொண்டு செய்யக் கிடைத்தது எங்களின் பாக்கியமே. எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தப் புனிதத் தலத்திலே போர் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சேதங்களைத் திருத்தி ஒருவாறு கும்பாபிஷேகம் செய்த திருப்தியில் பரிபாலன சபை திளைத்திருக்கின்ற இந்த வேளையில் அம்பாளின் புகழ் கூறும் இந்த மலர் சில புதிய விடயங்களுடன் மறுபதிப்பாக வெளிவருவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்த மலரை வெளியிட உழைத்த அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைப்பதாக.

செ. கு. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்
வற்றாப்பளைக் கண்ணகை அம்மன்
ஆலய பரிபாலன சபை



## ஆலய பரிபாலன சபைப் பொருளாளரின்
## வாழ்த்துச் செய்தி

நந்திக்கடற்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தேவியாம் கண்ணகியின் கும்பாபிஷேகப் பெருவிழாவையும், ஆலய புனருத்தாரண வேலைகளையும் நிறைவேற்ற எமது பரிபாலனசபை எடுத்திருந்த முயற்சிகள் நாட்டின் போர்ச் சுழல் காரணமாகக் கடந்த வருடங்களில் நிறைவேறாது போய்விட்டது. எனினும் இந்த ஆண்டு அம்மன் மனம் வைத்தது போல் சமாதானம் மலர்ந்ததும் இந்தப் பணிகளை எம்மால் ஆரம்பிக்க முடிந்தது.

பாரிய பொருளாதாரப் பிரச்சனைகளுக்கும் மத்தியில் எம்மால் இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழாவை நடாத்தி, புனருத்தாரணப் பணிகளையும் தொடர முடிகிறதென்றால் அதற்குக் காரணம் அவளது கருணைதான்.

அவளது கருணைத்திறத்தைக் கூறும் இந்த கும்பாபிஷேக மலரை மறுபதிப்பாக வெளியிடுவதில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் அம்பாள் அருள்பாலிப்பாளாக.

திரு. செல்லையா - பாலகிருஷ்ணன்
பொருளாளர்
ஆலய பரிபாலன சபை



## "பதிப்பாசிரியரின் சிந்தனையிலிருந்து.........."

"தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின், புறஞ் சொல் போற்றுமின்
ஊன் ஊண் துறமின் , உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்யுமின் தவம்பல தாங்குமின்...."

என்று சிலப்பதிகார வரிகள் கூறிநிற்கின்ற அருள் வாழ்க்கையை உலகுக்குணர்த்தி நிற்கும் கண்ணகி வழிபாடு சிறப்புற்று விளங்கும் முல்லை மாவட்டத்தின் பெருவெளியாகிய நந்திக் கடல் வெளியில் கண்ணகைத் தாயார் குடிகொண்டிருந்து பக்தர்களுக்கு நிறைவான அருட் செல்வத்தை வழங்கித் கொண்டிருக்கிறாள்.

தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருட்பார்வையால் துயர் நீக்கி வரமளிக்கும் அற்புதங்களோ எண்ணிலடங்கா. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வருகின்ற பக்தர்களுக்கு ஆதரவளித்து ஆறுதல் கொடுத்து அருளுகின்ற தன்மையில் அம்பாளின் அருட்கோலங்களே பல.

கிராமிய வழிபாட்டு மரபுகளோடும் ஆகம வழிபாட்டு மரபுகளோடும் அமைதி பெறுகின்ற அம்பாளுக்கு அண்மையில் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது. இக் கும்பாபிஷேகப் பெருவிழாவை யொட்டி இக்கருணை மலரை வெளியீடு செய்ய வேண்டும் என இவ்வாலயப் பரிபாலன சபையினர் எண்ணிக் கொண்டதற்கமைய அவ்வெண்ணம் அம்பாள் அருளினால் இனிதே நிறைவு பெறுவதையிட்டு மகிழ்வடைகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டிருந்த கருணை மலரை மீள் பதிப்பாக்க வேண்டும் என்று மதிப்புக்குரிய தலைவரும் செயலாளருமாக என்னிடம் கேட்ட பொழுது "அதனை என்னால் இயன்ற வரையில் சரியாகச் செய்துதர முயல்கின்றேன்" எனக் கூறி அதற்கிசைந்தேன். அம்பாள் துணை நிற்க, என்னுடைய அனுபவங்கள் இப்பணியை ஓரளவு நிறைவாகச் செய்வதற்கு உதவிபுரிந்தன. இம்மலருக்கு அச்சுப்பதிப்புப் பொறுப்பேற்றிருந்த "யுனி ஆர்ட்ஸ்" நிறுவனத்தினருடைய தொழிற் தேர்ச்சியும் இம்மலரின் சிறப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது. அத்துடன் இம்மலர் சிறப்பாக வெளிவருவதற்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியவர் என்ற வகையில் ஆசிரியர் க. ஜெய வீரசிங்கம் அவர்களின்

சேவையை நாம் என்றுமே நினைவுகூர வேண்டும். தம்மால் ஆன முயற்சிகளை வழங்கி இம்மலரை நிறைவு பெறச் செய்பவர்களில் அவரும் ஒருவர்.

இம்மலரின் முதற்பதிப்பிலிருந்து தேவையான அம்சங்களைத் தெரிந்தெடுத்தும் மேலதிகமாகவும் பல விடயங்களைப் புதிதாகச் சேர்த்தும் அழகு நிறைந்ததும் பயனுடையதுமாக வெளிவருகின்ற இம் மறுபதிப்பு மக்கள் மத்தியிலே வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் பற்றிய பல செய்திகளைக் கொண்டு செல்லும், ஒரு சிறப்புக் காவியாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை. இவ்வாலயம் தொடர்பாக இன்றுவரை எமக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்கள் அனைத்துமே இம்மலரின் இதழ்களாக விரிந்துள்ளன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் வழக்கத்திலிருந்து வருகின்ற சமய பண்பாட்டுப் பாரம்பரியங்கள், வழிபாட்டு மரபுகள் போன்ற விடயங்கள் பற்றிய ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் கூட பல தகவல்களை வழங்கி நிற்கக் கூடிய ஆரோக்கிய மலராக இது அமைகின்றது.

> "காதலித்து அறம்செய்வோர்க்கெல்லாம்
> கவசமும் கண்ணுமாகி ஆதுலர்க்கு
> அன்னையாகி, இறைஞ்சினோர்க்கு இன்பமாகி
> ஏதிலார்க்கு இடும்பை யாகி..."

என்று திருவாதவூரடிகள் புராணம் அறங்காவலர்களின் அருட்பண்புகளைக் கூறுகிறது.

அந்தவகையில், மேற்கூறிய பண்புகள் நிறைந்தவர்களாகத் தம்மை வளர்த்தெடுத்துப் பெருமை பெறும் ஆலய அறங்காவல் சபையினர் ஆலயத்தின் உள்ளார்ந்த அபிவிருத்திப் பணியுடன் மட்டும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது, அனைத்துமக்களுக்குமான தேவைகளையறிந்து அவற்றினைத் தங்களால் இயன்ற வரை நிறைவு செய்து கொடுக்க வேண்டும் என்ற சீரிய சிந்தனையும் கொண்டவர்கள். அவ்வாறான சிந்தனையின் வெளிப்பாடுகளின் ஒன்று தான் இம்மலர் வெளியிடும் முயற்சி.

இதனைப் பதிப்பித்துக் கொடுப்பதற்கான அம்பாள் அருள் எனக்குக் கிடைத்தமையை நினைத்து அவளுடைய கமலமலர்ப் பாதங்களை வணங்கி நிற்கின்றேன்.

திருமதி - ஹேமா சண்முக சர்மா
**B.A. Dip in. Education**
**Dip - in- Journalism**
மேல் மாகாண ஆசிரியர், ஆலோசகர்

உ



# அருள்மிகு ஸ்ரீ வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா 2003. 03. 21

துதி

"பலஞ்சேர் நல்ல பாண்டிநகர் பற்றளரி வைத்து
நலஞ்சேர் நல்ல இடமாகவே நந்திக் கடற்கரைமேல்
வலம்சேர் நல்ல சிறியார் காண வந்து இருந்தருளி
புலம்சேர் நல்ல வற்றாப்பளை புகுந்தாள் பதம் பணிவோம்"

மெய்யடியார்களே!

இயற்கை வளங்கள் நிறைந்த இலங்கைத் திருநாட்டின் வடபால் வீரமும் விளைநிலமும் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் அற்புதமும் அருட்கீர்த்தியும் நிறைந்து வைகாசிப் மாதப் பொங்கல் திருநாளில் திரைகடலில் நீரள்ளி விளக்கேற்றி வழிபடுகின்ற தொன்மைச் சிறப்பும் வரலாற்று முதன்மையும் கொண்ட வற்றாப்பளை என்னும் புனிதப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கண்ணகை அம்மனுக்கும் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகட்கும்,

நிகழும் மங்களம் மிகு சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 7 ம் நாள் ( 21. 03. 2003) வெள்ளிக்கிழமை சித்தயோகமும திருதியைத் திதியும் சுவாதி நட்சத்திரமும் சுக்கிர ஓரையும் மீனலக்னமும் சேர்ந்திலங்கும் காலை 6.30 முதல் 7.45 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது.

அந்நேரமும் அதன் முன்னும் பின்னும் நடைபெறவுள்ள கிரியா காலங்களிலும் வந்து தரிசித்துக் கண்ணகாதேவியின் பேரருளுக்கு ஆளாகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

# கிரியா கால விபரம்

**17.03.2003 திங்கட்கிழமை**

மாலை 5.30 மணி முதல் விநாயகர் வழிபாடு, கணபதிஹோமம், அனுக்ஞை, திரவியபாகம், முதலியன.

**18.03.2003 செவ்வாய்க்கிழமை**

காலை 8.30 மணி முதல்: நிசாஹோமம், ரட்சோக்ன ஹோமம், அனுக்ஞை, திரவிய பாகம் முதலியன.

**19.03.2003 புதன்கிழமை**

காலை 8.00 மணி முதல்:பூமாதேவி பூஜைகள், தீர்த்த அக்கினி, மிருத்சங்கரகணம் முதலியன.

**20.03.2003 வியாழக்கிழமை**

காலை 7.00 மணி முதல்: பஞ்சசுத்தி, தைலாப்பியங்கம், யாக பூஜை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை , சர்வாஞ்சலி, காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அடியார்கள்

**எண்ணெய்க் காப்புச் சாத்துதல்**

மாலை 5.00 மணி முதல்: பஞ்சசுத்தி, யாக பூஜை ஸ்ரீ சுத்த ஹோமம், விம்பசுத்தி, பூர்வ சந்தான நியாசம், ஸ்பரிசாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி முதலியன.

**21.03.2003 வெள்ளிக்கிழமை**

காலை 5.00 மணி முதல்: பஞ்சசுத்தி , யாகபூஜை, ஹோமம் மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, பலிகள், தானங்கள், கும்பபிரதட்சணம், ஸ்தூபி அபிஷேகம்.

காலை 7.00 மணிக்கு கண்ணகாதேவி மஹா கும்பாபிஷேகம்

காலை 7.30 மணிக்கு பரிவாரமூர்த்திகள் அபிஷேகம், கர்பாவரண பூஜை, தச மங்கள தர்சனம், பக்தானுக்கிரகப் புரோட்சணம் ஆசீர்வாதம், ஆசியுரை முதலியன.

பகல் 10.00 மணிக்கு திரவ்ய மஹா அபிஷேகம், தீபாராதனை பூஜை மாலை 5.00 மணிக்கு விசேட பூஜை, வசந்த மண்டப தீபாராதனை சுவாமி திருவீதி எழுந்தருளல்.

## பிரதிஷ்டா பிரதமகுரு:

முத்தமிழ் குருமணி, கிரியாகிரமஜோதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் (கதிரமலை சிவன் தேவஸ்தானம் , கன்னாகம்)

**தேவஸ்தான பிரதமகுரு :**

சிவஸ்ரீ ம. பரமேஸ்வரக் குருக்கள்

**சாதகாசிரியர்:**

சிவஸ்ரீ பாலகிருஷ்ணபங்குசக் குருக்கள் (ஊரெழு)

சிவஸ்ரீ இ.பத்மகுமாரக் குருக்கள் (ஊற்றங்கரை)

## பங்குபற்றிச் சிறப்பிக்கும் ஏனைய குருமார்கள்:

சிவஸ்ரீ கா. இரகுநாதக் குருக்கள் (முள்ளியவளை) கலாவித்தகர் சிவஸ்ரீ நா. நடராசக் குருக்கள் (முள்ளியவளை)
சிவஸ்ரீ வரத சிவரூபக் குருக்கள் (புதுக்குடியிருப்பு) சிவஸ்ரீ நா. குகநேசக் குருக்கள் (வரியப்புலம்சுன்னாகம்)
சிவஸ்ரீ க. நாகேஸ்வரக் குருக்கள் (ஏழுமட்டு வாழ்) சிவஸ்ரீ ச. லம்போதா குமாரசாமிக் குருக்கள் (சித்தங்கேணி)
சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக் குருக்கள் (கதிரமலைசிவன் தேவஸ்தானம் கன்னாகம்)

**கட்டட நிர்மாணம்:**
திரு.க. கோபாலசிங்கம் (அராலித்தி)

**வர்ணவேலை :**
திரு.காங்கேயன் குருபரன்

**மங்கள வாத்தியம் (நித்தியம்):**
திரு.எஸ். கணபதிப்பிள்ளை குழுவினர் (முள்ளியவளை)

## மங்கள இசை:

லயஞான சிரோன்மணி தவில்வித்துவான் R. புண்ணியமூர்த்தி, லயஞான சிரோன்மணி தவில்வித்துவான் T. உதயசங்கர், லயஞான வித்துவமணி தவில்வித்துவான் K. சிறிதரன், நாதஸ்வர இன்னிசை வேந்தன் நாதஸ்வர வித்துவான் S. சிதம்பரநாதன், நாதஸ்வர வித்துவான் N.P.நாகேந்திரன்.


குறிப்பு: கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் நிறைவு நாளன்று சங்காபிஷேகமும் நடைபெறும்.

அபிஷேக உபயம் செய்யவிரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்க)

வற்றாப்பளை, முள்ளியவளை
14 . 02 . 2003


ஆலய பரிபாலன சபை

# வட இலங்கைப் பட விளக்கம்



| ஆறுகள் | பட்டினங்கள் | குளங்கள் |
|---|---|---|
| 1. கனகராயன் ஆறு | 9. யாழ்ப்பாணம் | i. இரணைமடு |
| 2. பேராறு | 10. பரந்தன் | ii.முத்து ஐயன்கட்டுக்குளம் |
| 3. நாயாறு | 11. முல்லைத்தீவு | iii.பதவியாக் குளம் |
| 4. மா ஓயா | 12. மாங்குளம் | iv. இராட்சதக் குளம் |
| 5. யான் ஓயா | 13. ஒட்டு சுட்டான் | |
| 6. அருவியாறு | 14. நெடுங்கேணி | |
| 7. பறங்கியாறு | 15. புளியங்குளம் | |
| 8. மண்டதெல் ஆறு | 16. வவுனியா | |
| | 17. மதவாச்சி | |
| | 18.திருகோணமலை | |
| | 19. தலைமன்னார் | |
| | 20. வற்றாப்பளை | |

# வற்றாப்பளைப் பிரிவுப்பட விளக்கம்




## ஆறுகள்

1. பேராறு
2. வாவெட்டிக்குளம்
3. கணுக்கேணிக்குளம்
4. பாலைக்கட்டுவான் குளம்
5. சிலாவத்தைக் குளம்
6. இறால் குளம்
7. உடுப்புக் குளம்
8. முல்லைத் தீவு
9. சிலாவத்தை
10. தண்ணீரூற்று
11. குமாரபுரம்
12. முள்ளியவளை
13. வற்றாப்பளை
14. கேப்பா பிலவு

## ஆலயங்கள்

1. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயம்
2. ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயம்
3. கல்யாணவேலவர் ஆலயம்
4. காட்டா விநாயகர் ஆலயம்
5. சித்திரவேலாயுதர் ஆலயம்
6. கற்பகப் பிள்ளையார் ஆலயம்
7. வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்
8. வட்டுவாகல் கன்னிமார் ஆலயம்





# வற்றாப்பளை அம்பாள் ஆலய நிருவாகமும் பரிபாலன சபையும்

- மு. குகதாசன் - (தலைவர்)

## ஆரம்ப காலம்

**கா**ல மாற்றங்களும் வளர்ச்சிப்படிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது இயல்பானதே. அம்பாள் ஈழ நாட்டின் பத்தாம் பதியாகிய வற்றாப்பளையில் மாடு மேய்த்த சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த காலம் தொடக்கம் இன்றுவரை ஆலயம் நிர்வகிக்கப்பட்ட வழிகளையும், நிர்வாகசபையின் தோற்றம், கட்டுப்பாடு, கடமைகள் என்பவற்றையும் சுருக்கமாக விளக்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில் ஆலயம் அமைந்துள்ள இடமானது; இருபக்கம் நந்திக்கடலும் மற்றிரு பக்கம் காடும், நீரூற்றுக்களும், புல் நிலங்களும் அமைந்ததொரு அமைதியான தனியிடமாகவே இருந்துள்ளது. ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்துக்கப்பாலேயே மக்கள் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன.

வருடாந்தம் நடைபெறும் பொங்கல் நிகழ்ச்சியும், மக்கள் தாம் வைத்த நேர்த்திக்கடன்களை நிறைவேற்றச் செய்வித்த பூசை, மடை, மண்டகப்படி, குளிர்த்தி என்பனவுமே அக்காலத்தில் நடைபெற்ற ஆலய நிகழ்ச்சிகளாகும்.

'கட்டாடுடையார்' என அழைக்கப்பெறும் பூசாரியாரே இக்காலத்தில் ஆலயப் பூசைகள் நிருவாகங்கள் எல்லாவற்றுக்கும் பொறுப்பாய் இருந்துள்ளார். பொங்கலுக்குத் தேவையான நெல், தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, பால், நெய் போன்ற எல்லாப் பொருட்களையும் வற்றாப்பளையிலும் முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு போன்ற அயற் கிராமங்களிலும் வாழ்ந்த வசதிபடைத்த கமக்காரரிடமிருந்து பெற்றுள்ளார்.

இவ்வழக்கத்தின் அடிப்படையிலேயே, மிக அண்மைக்காலத்தில்கூட ஒரு சில கமக்காரர், பூசாரியிடம் பொங்கல் நெல் ஒப்படைக்கும் முறை இருந்து வந்துள்ளது எனஅறிய வந்துள்ளது.

கிராம மக்களுக்கு, நோய்கள் காணும்போது அவற்றிற்கெல்லாம், பூசாரியார் கொடுக்கும் வேளை (மஞ்சள் தோய்த்துப் பூசையில் வைத்த சீலை) விபூதி, தீர்த்தம் என்பனவே மருந்தாக உதவின. இதனால் சமூகத்தில் உயர்ந்ததொரு இடத்தினைப் பூசாரியார் பெற்றுக் கொண்டதுடன் ஆலய நிர்வாகத்தினையும் நடாத்தித் தேவையான பொருளுதவிகளையும் பெற்றுக் கொண்டார். இவ்விதம் வேளை, வீபூதி முதலியன

கொடுக்கும் வழக்கம் ஆலயத்தில் இன்றும் **கடைப்பிடிக்கப்பட்டு** வருவது குறிப்பிடத்தக்கது. எனவே இக்காலத்தில் ஆலயம் சம்பந்தமான எல்லாக் கடமைகளும், நிருவாக அதிகாரமும் பூசாரிக்கே உரியதாயிருந்துள்ளது.

## *வன்னியர் காலம்*

அடுத்தபடியான காலகட்டம் ஆலயத்திற்கு வன்னி நாட்டின் குறுநில மன்னர்களான வன்னியரின் தலையீடும் ஆதரவும் கிடைத்த காலமாகும்.

அம்பாளின் அருட்கருணையில் ஈடுபாடு கொண்ட வன்னி மன்னர்கள் ஆலயப் பொங்கலுக்குத் தேவையான பொருள், மற்றும் உதவிகளைச் செய்தனர். இக்காலத்திலேயே கட்டாடுடையாருக்கும், பொங்கல் பணிகளில் உதவி செய்யவும், 'குடிமக்கள்' என வழங்கப்படும் தொழில் அடிப்படையிலான மக்களின் சேவை புகுத்தப்பட்டதெனலாம். சாதிப்பிரிவைக் கொண்ட வேளாளத் தலைவர்கள் எனச் சரித்திரம் கூறும். வன்னியர்கள் தமது ஏவல்களைச் செய்விப்பதற்காக பதினெட்டுப் பிரிவினரான குடிமக்களை வைத்திருந்தார் களென்றும், வற்றாப்பளைப் பொங்கல் சம்பந்தமாகப் பூசாரியாருக்கு உதவி செய்யும் பொருட்டு, இக்குடிமக்கள் அனைவரும் பணிக்கப்பட்டனரென்றும் கூறப்படுகின்றது. இன்றும் சில பணிகளைக் குறிப்பிட்ட குடிமக்களே செய்து வருவது இவ்வழக்கத்தினடிப்படையிலேயே எனக் கூறுவர்.

ஆலயப் பொங்கலில் வரிசை வாத்தியங்கள் புகுத்தப்பட்டதும், பொங்கல் காலத்தில் 'நோற்புக்காரர்' என்னும் பெயருடன் தொண்டு புரியும் பணியாளர்கள் அமர்த்தப்பட்டதும் இவ்வன்னியரசர் காலத்திலே யேயாகும். அதேபோல மன்னரது இராசதானி ஒன்று முள்ளியவளையில் அமைந்திருந்ததனாற், பொங்கல் சம்பந்தமான ஒரு பகுதி நிகழ்ச்சிகள் முள்ளியவளை ஆலயத்தில் நடக்கும்முறை ஆரம்பித்ததும் இவ் வன்னியர் காலத்திலேதான் எனக் கூறலாம். இவ் வன்னி மன்னருள் ஒருவரே ஆலயத்தின் தேவைக்காகப் பெருமளவு நெல்வயலையும் உபகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்திலும் ஆலய பூசை, நிர்வாகம் என்பன கட்டாடுடையாரிடமே இருந்துள்ளது.

## *பிராமணர் நிர்வாகக் காலம்*

வன்னி நாட்டில் வன்னியர்களின் ஆட்சியின் பிற்பகுதியிலே முள்ளியவளையில் பிராமணர்கள் குடியமர்த்தப்பட்டனர். வற்றாப்பளை அம்பாள் ஆலயத்திற்கும் அடியார் தொகை படிப்படியாக அதிகரித்தது.

கமக்காரரான கட்டாடுடையார் ஆலயப் பணிகளை அதிகமாகக் கவனிக்க வேண்டியிருந்ததால் தமது குலத்தொழில் பாதிக்கப்பட்டமையினாலோ அல்லது குடிபுகுந்திருந்த பிராமணரின் வருவாயை அதிகரிப்பதற்காகவோ, வேறு காரணங்களுக்காகவோ, வற்றாப்பளை அம்பாள் ஆலயத்திலும் அந்தணர்கள் பூசைக்கமர்த்தப்பட்டனர்.

படிப்படியாக மக்கள் தொகை அதிகரிக்க, ஆலயத்திலும் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் பூசை செய்யும் முறை கடைப்பிடிக்கப்பட்டது. பொங்கல் நிகழ்ச்சிகளிலும் ஐயரின் பங்குபற்றுதல் இடம்பெற்றது. ஐயர் பூசை செய்யும் ஆலயமொன்றில் பூசாரியார் முதன்மை பெறுவது முடியாததொன்றுதானே.

காலகதியில் பூசைப் பொறுப்புடன் நிர்வாகப் பொறுப்பும் பிராமணர் கையில் சேர்ந்தது. விசேட தினங்களில் மட்டும், வேளை, விபூதி வழங்குவதும், பொங்கல் காலத்தில் தனது கடமைகளைப் புரிவதுமாகப் பூசாரியாரின் உரிமை சுருங்கியது.

பொங்கல் காலத்தில் மட்டும் பூசாரியார் பிரதான பங்கு கொண்டிருந்தார். பழைய வழக்கப்படி தனது வாடிக்கையாளரிடம் பொங்கல் நெல் பெற்று வந்தார். மற்றைய செலவுகளை ஐயர் ஏற்றுச் செய்தார். மக்களும் தாராளமாக உதவிகள் புரிந்தனர்.

பூசைகள், காணிக்கைகள், உபயங்கள், அபிஷேகங்கள், அர்ச்சனைகள், வேளை, விபூதி கொடுத்தல் போன்றவற்றால் வரும் வருமானம் யாவும் ஐயருக்கானது. பூசாரியார் தானும் குறித்த ஓர் இடத்தில், வெள்ளை விரித்து வேளை, வீபூதியுடன் இருப்பார். இவரிடத்தில் வரும் அரிசி, தேங்காய், வேளை விற்ற பணம் என்பவற்றைத் தனது வருமானமாகப் பெற்றார். ஐயர் தனது பணியாளருக்கும், பூசாரியார் தனது குடிமக்களுக்கும் கூலி கொடுத்தார். இக்கொடுப்பனவு

யாவும் பொருட்களாகவே நடைபெற்றன. அரிசி, தேங்காய், சட்டி, பானை முதலிய பொருள்டகள் வழக்கமாக இடம் பெற்று இருந்தன. பொங்கல் வளந்தும் (பொங்கல்ப்பானை) ஒரு சூளை சட்டி பானையும் வழங்கும் கடமை குயவனுக்கிருந்தது. கடந்த ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன்புகூட இம்முறை நடை முறையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாக இரட்டை ஆட்சிக் காலமானது ஆலயத்தைப் பொறுத்தவகையில் நல்ல காலமாகக் கொள்ள முடியவில்லை. ஆலயத்திற்கு அதிக வருமானத்தையும் பெருந்தொகையில் அடியார் வருகையும் தரும் பொங்கல் காலத்தில் ஐயரும் அவரது ஆதரவாளர்களும் ஒருபுறம், பூசாரியாரும் அவரது உறவினரும் இன்னொரு புறமுமாகத் தமது வருமானத்தைப் பெருக்க முனைந்தனரேயன்றி, ஆலய நன்மையைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. ஐயருக்கும் பூசாரியாருக்கும் வருமானம் தேடுவதில் உதவி செய்பவர்களுள் ஒரு பகுதியினர், சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தித் தமது வருமானத்தைப் பேணுவதற்கே முனைந்தனர். இவ்விதமான குறைகள் மலிந்திருந்த காலத்தில், ஆலயத்தின் கட்டடம் பல ஆண்டுகளைக் கண்டும் புனரமைப்புகள் ஏதுமின்றியிருந்தது. வருமடியவர்களுக்குத் தங்குமட வசதியோ, நீர்வசதியோ வெளிச்ச வசதியோ கிடைக்கவில்லை. இவ்விதம் ஆண்டுகள் பல கடந்தன.

## *பரிபாலனசபை ஆரம்பம்*

அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உற்று நோக்கில், அனைத்தும் தெய்வச் செயல்களாகவே நிகழ்ந்துள்ளமையை உணர முடியும். நீக்கப்பட வேண்டியனவும், நீக்கப்பட வேண்டியவர்களும் தாமாகவே நீங்க, சேர வேண்டியனவும், சேர்ப்பிக்கப்பட வேண்டியவர்களும் வலியத் தாமாகவே வந்து சேர்வதையும் இன்றுவரை காணமுடிகின்றது. இதற்கிணங்கத் தமக்காக வருமானந்தேடும் தனியுரிமைகள், தாமும், தமக்கும் என்னுமுரிமையேது மற்றப் பொது நிருவாகமொன்று ஏற்படும் ஒரு காலகட்டம் வந்து கூடியது.

ஆலயம் வரும் அடியார்களின் வசதியை முன்னிட்டு ஆலயத்தில் மடம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்றும் எண்ணம் பலருக்கும் உதிக்கவே வற்றாப்பளையிலும் தண்ணீரூற்றிலுமுள்ள சிலர், முல்லைத்தீவில் வாழ்ந்த முதலியார் திரு. ஆ. சி. கனகசபாபதி J. P. U. M. அவர்களின் தலைமையில் அப்போதிருந்த ஆலுய ஐயரிடம் சென்றனர். ஐயரிடம் தமது எண்ணத்தைத் தெரிவித்தவர்கள் வேறொரு எண்ணத்துடன் திரும்பினர். வற்றாப்பளை அம்பாள் ஆலயம் சம்பந்தமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் தனக்கும் தெரியுமென்றும், மற்றவர்களுக்கு அவ்வுரிமை இல்லை என்றும், ஐயரின் பதில் கிடைத்ததாம். இதன் தொடர்ச்சியாக வவுனியா அரசாங்க அதிபருக்கும் மகஜர் (பெட்டிசம்) நூற்றுக்கணக்கான கையொப்பங்களுடன் அனுப்பப்பட்டது. 1955 ஆம் ஆண்டு அனுப்பிய இம்மகஜரில், ஆலய உரிமை ஐயர்மாருக்கு இல்லை என்றும், அது சம்பந்தமாக விசாரித்துப் பரிபாலனசபை ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும், வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கைக்கிணங்க இதுபற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு, மூவரடங்கிய ஆணைக்குழு ஒன்று அரசாங்க அதிபரினால் நியமனம் பெற்றது.

இக்குழு 1956ஆம் ஆண்டு தைமாதம், ஆலயத்துடன் சம்பந்தப்பட்ட ஐயர்மார், பூசாரியர், பணியாளர்கள், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து விசாரணைகளைப் பெற்றுத் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையைத் தொடர்ந்து, அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களைக் கொண்ட பரிபாலனசபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்படி ஆலயத்தினைப் பரிபாலிக்கும் பொறுப்பு பரிபாலன சபைக்குரியதாயிற்று.

# வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோயில் பரிபாலனசபை

## *வாக்காளர் சபை* (Electoral Roll)

வடமாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லொழுக்கமுள்ள 21 வயதுக்கு மேற்பட்ட இந்துக்கள் இவ்வாக்காளர் சபையில் உறுப்பினராக முடியும்.

வருடாந்தம் ஆடி மாதம் முதலாந்திகதிக்கு முன், பத்து ரூபாவுக்குக் குறையாத தொகையைக் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெறுவதன் மூலம், உறுப்புரிமையைப் பெறலாம். வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான அழைப்பு தனித்தனியாகக் கடிதமூலம் செயலாளரினால் அறிவிக்கப்படும்.

குறித்த கூட்டத்துக்குச் சமூகமளித்து, பரிபாலன சபைக்கான 20 உறுப்பினரைத் தெரிவு செய்யும் உரிமை இச்சபைக்குரியது.

## பரிபாலன சபை

வாக்காளர் சபையுள், அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட 20 உறுப்பினரும், நிரந்தர உறுப்பினர்களான 11 உறுப்பினருமாக மொத்தம் 31 பேரைக் கொண்டதே இப் பரிபாலன சபையாகும். தெரிவு செய்யப்படும் 20 பேரும் கரைதுறைப்பற்றை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்கள் குறிப்பிட்ட கிராமங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

## கூட்டம் :

சபையின் கூட்டங்கள் யாவும் ஆலய மடமண்டபத்தில் கூடும். முதல் கட்டத்தில் தலைவர் ஒருவர், இணைச் செயலாளர் (இருவர்) உப தலைவர் ஒருவர், தனாதிகாரி ஒருவர், கணக்குப் பரிசோதகர் ஒருவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

## தலைவர்

தலைவரே சபையின் உச்ச அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக உத்தியோகத்தவராவார். கூட்டங்களைத் தலைமை தாங்கி நடாத்துபவர் இவரே. தலைவர் சமூகமளிக்காதவிடத்து, உபதலைவர் இவரது கடமைகளைச் செய்வார்.

## இணைச் செயலாளர்கள்

இணைச் செயலாளரிருவருக்கும் கடமைகள் பிரித்தளிக்கப்படும். ஆனால் ஒருவரில்லாத சமயம் இரு கடமைகளையும் செய்யும் பொறுப்பு இவர்களுக்குண்டு. கூட்டங்களைக் கூட்டுதல், கூட்ட அறிக்கைகள், பிரேரணைகள், சுற்றுநிருபங்கள், சட்ட திட்டங்கள் என்பனவற்றிற்குப் பொறுப்பாயிருத்தல், அவற்றைச் சரிவர நிறைவேற்றுதல், சபையினால் காலத்துக்காலம் எடுக்கும் ர்மானங்களை நடைமுறைப்படுத்தல், கடிதத் தொடர்புகள் வைத்தல், ஆலய நடைமுறைகளை மேற்பார்வை செய்தல், இவர்களது கடமைகளாகும்.

## பொருளாளர்

ஆலயம் சம்பந்தமான எல்லா வரவு செலவுகளுக்கும் பொறுப்பானவர் இவரே. நிதியங்கள், பொருட்கள் முதலான எல்லா வருமானங்களையும் சேர்த்தல், பாதுகாத்தல், செலவு செய்தல், அவற்றிற்கான சரியான கணக்கு வைத்தல், திருத்திய கணக்கு வைப்பு முறையில் கணக்கறிக்கை வைத்திருத்தல் என்பன இவரின் பொறுப்பாகும்.

## கோயில் நிதி நடவடிக்கை

நிதி சம்பந்தமான எல்லாப் பொறுப்பும் பொருளாளருக்குரியது. முல்லைத்தீவு மக்கள் வங்கியில் பரிபாலன சபையின் பெயரிலுள்ள கணக்கில் பணம் முழுவதும் இடப்படும். கொடுப்பனவுகள் யாவும் காசோலைகள் மூலமே நடைபெறும். வவுச்சர் பத்திரங்களில் பூரணப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் செயலாளரால் சிபார்சு செய்யப்பட்ட பின்பே பணம் வழங்கப்படும். காசோலைகள் பொருளாளரினதும், தலைவர் அல்லது செயலாளரினதும் கையொப்ப மிடப்படும் பொங்கல் காலத்தில் ரூபா 3000/=மும், சாதாரண காலத்தில் ரூபா 500/= உம் அல்லது இவற்றிற்குக் குறைவான தொகையினையே பொருளாளர் கையிருப்பாக வைத்திருக்க முடியும்.

## அன்பளிப்புகளும் உபயங்களும்

ஆலயத்துக்கு அடியார்களினால் வழங்கப்படும் அன்பளிப்புக்கள், உபயங்கள் எல்லாவற்றிற்கும் உரிய முறைப்படியிலான பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டும். பற்றுச் சீட்டுக்களின்றி எந்தவிதப் பொருட்களையும் பெற முடியாது.

## பூசாரியார், ஐயர், முகாமையாளர், பிற ஊழியர்கள்

ஆலயக் கிருத்தியங்களையும், கடமைகளையும் நிறைவேற்றும் பொருட்டு மேற்குறிப்பிட்ட சேவையாளர்களை நியமிக்கவும், அவர்களின் செயல்கள் பற்றி மேற்பார்வை செய்யவும், விசாரணை செய்யவும், நீதி வழங்கவும், தவறுகள் புரியின் வேலை நீக்கம்

செய்யவும், இவர்களுக்கான சம்பளத்தினைக் காலத்துக்குக் காலம் ஏற்றபடி வழங்கவும் பரிபாலன சபைக்கு அதிகாரமுண்டு.

## பொது

பரிபாலன சபைக் கூட்டம் கூட்டுதற்கான கோரம் 10 ஆகும். வாக்காளர் சபையிலுள்ள 10க்குக் குறையாத அங்கத்தவர்கள் எழுத்துமூலம் கோருமிடத்து, விசேட கூட்டமொன்றினைக் கூட்டும் நடவடிக்கையைச் செயலாளர் மேற்கொள்ள வேண்டும். சாதாரண அங்கத்தவரொருவர் விலகிக் கொண்டால், வாக்காளர் சபையிலிருந்து புதியவர் ஒருவர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்படுவர். மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத சாதாரண அங்கத்தவர், தனது அங்கத்துவத்தை இழப்பர். மூன்று வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்கும் தொடர்ச்சியாகச் சமூகமளிக்காத நிரந்தர உறுப்பினர் ஒருவர், பதவியை இழப்பர். இவரது உரிமை அடுத்த உரிமையாளருக்குச் சேரும். தவறான நடவடிக்கையில் ஈடுபடும் அங்கத்தவர், ஒருவர்பற்றி விசாரணை செய்து தேவையானால் நீக்குமதிகாரம் பரிபாலன சபைக்குரியது. ஒன்றுக்கு மேற்பட்ட பிரேரணைகள் வருமிடத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதிகப்படியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அத்துடன் நிரந்தர உறுப்பினர் 11 பேருள் அதிகப் படியானோரின் ஆதரவு பெறாத தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவைகளாகும்.

## நன்றி

கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக ஆலயத்தினைப் பரிபாலித்து வரும் பரிபாலன சபையானது, பலரினது நன்மதிப்பினையும், பக்தர்களின் நம்பிக்கையையும் பெற்று வருவதற்கான காரணம், ஆலயத்தின் நிதி சம்பந்தமாகச் சரியான நடைமுறை இருப்பதும் பலதரப்பட்ட மக்களினது ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பதுமேயாகும்.

இவ்விதமான சபையொன்றினைத் தோற்றுவிக்க உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கடமை எமக்குண்டு.

ஆலய வளர்ச்சியில் கருத்துக் கொண்டு, ஐயர் காலத்திலிருந்தே உழைத்தவரும், பரிபாலனசபையின் தோற்றத்துக்குப் பாடுபட்டவரும், ஆரம்ப காலத் தலைவருமான முதலியார் திருவாளர் ஆ. மு. கனகசபாபதியவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பது கடமையாகும். சபையின் நீண்ட காலத் தலைவரும் ஆலய உரிமை சம்பந்தமான கோடு நடவடிக்கைகளில், பரிபாலன சபைக்காக உழைத்தவரும் பலரின் எதிர்ப்புக்களையும் துணிகரமாக எதிர்த்து நின்று வெற்றி பெற்றவருமான, சட்டத்தரணி தம்பையா முதலியார் சபாரத்தினம் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

ஆரம்ப காலத்தில் உரிமையையும் வருவாயையும் பெற்று வந்த பூசாரியார் குடும்பத்தினர், தமது உரிமையையும் வருவாயையும் ஆலயத்துக்காக விட்டுக் கொடுக்க முன்வந்து, பரிபாலன சபைக்கு இன்றுவரை ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். அத்துடன் கட்டாடுடையார் குடும்பத்தினைச் சேர்ந்த வற்றாப்பழையின் காலஞ் சென்ற கதிர்காமர் பொன்னையா அவர்கள் தம்மாலியன்ற பணிகள் மூலம் பரிபாலன சபையைத் தோற்றுவிக்க உதவியவராவர். அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப ஆண்டுகளில் ஐயர் ஆதரவாளருக்கும், ஏனையோருக்குமிடையில் நேரடியான மோதல்கள் கூட நடைபெறும் சந்தர்ப்பங்கள் கிட்டின. இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் தோளோடு தோள் கொடுத்துதவிய பொது மக்கள் பலருக்கும் குறிப்பாகப் பல ஆண்டுகள் பரிபாலனசபைக் காரியதரிசியாக இருந்த திரு. சி. வினாசித்தம்பி அவர்கள், திரு. தா. நடேசபிள்ளையவர்கள், திரு. க. பொன்னையா அவர்கள், வவுனியாவின் தற்போதைய தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள், முள்ளியவளை திரு. க. பொன்னம்பலம் அவர்கள் ஆகியோர் எமது நன்றிக்குரியவர்களாவர். அத்துடன் பரிபாலன சபையின் தோற்றத்திற்காகவும், வளர்ச்சிக் காகவும் பல்வேறு கிராமங்களிலிருந்து ஆதரவு கொடுத்துதவிய பொது மக்களும் அரச ஊழியர்களும் எமது மனமார்ந்த நன்றிக்குரியவர்களாவர்.

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய

# பரிபாலன சபை

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | திரு. மு. குகதாசன் |
| 2. | இணைச் செயலாளர்கள் | திரு. செ. சு. கிருஷ்ணமூர்த்தி |
| 3. | | திரு. இ. வரதராசா |
| 4. | பொருளாளர் | திரு. செ.பாலகிருஷ்ணன் |
| 5. | உப- தலைவர் | திரு. வே.தியாகராஜா |
| 6. | நிர்வாக சபை உறுப்பினர்கள் | திரு. கு. விவேகானந்தன் |
| 7. | | திரு. க. ஜெயவீரசிங்கம் |
| 8. | | திரு. க. மாணிக்கவாசகர் |
| 9. | | திரு. இ. கணபதிப்பிள்ளை |
| 10. | | திருமதி. த. சிவபாலன் |
| 11. | | திரு. க. சின்னராசா |
| 12. | | திரு. ச.கனகரத்தினம் |
| 13. | | திரு. ந.ஸ்ரீ.இளஞ்சிங்கநாதன் |
| 14. | | திரு. சி.நவரத்தினம் |
| 15. | | திரு. தி.பொன்னம்பலம் |
| 16. | | திரு. க. ஜெகதீஸ்வரன் |
| 17. | | திரு. ப. தங்கவடிவேலு |
| 18. | | திரு. கு. விமலானந்தம் |
| 19. | | திரு. க. செல்லையா |
| 20. | | திரு. க. பாலநாதன் |
| 21. | | திரு. ந. பரஞ்சோதி |
| 22. | | திரு. சு. சிவஞானம் |
| 23. | | திரு. இ. வேதநாதன் |
| 24. | | திரு. வே. தேவராசன் |
| 25. | | திரு. இ. சிவநாதன் |
| 26. | | திரு. ம.நல்லநாத பிள்ளை |

# இதழினுள்ளே ................

பக்கம்


1. ஈழத்திற் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் 01
- எம். சற்குணம் -

2. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வரலாற்று மரபு 07
- பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் -

3. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களும் அவற்றில் இருந்து மீண்டெழுதலும் 12
- திரு. செ. சு. கிருஸ்ணமூர்த்தி - (செயலாளர்)

4. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல் 15
-அமரர். சி.பாலகிருஷ்ணன்-

5. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வயந்தன் 26
- சி. வினாசித்தம்பி-

6. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கலும் கதிர்காமம் கரையாத்திரையும் 29
- ந. மயில்வாகனம் -

7. வற்றாப்பளைக் கண்ணகையம்மன் வரலாற்றுச் சிந்து 38

8. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் அற்புதமும் அனுபவமும் 40
- அமரர் கா.கார்த்திகேய சர்மா-

9. அம்பாள் உலாவரும் அழகுத் திருமஞ்சம் 43
- திரு. க.ஜெயவீரசிங்கம் -

10. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் மழைக் காவியம் 45

11. பத்தஞானி பொங்கல் - வழிபாட்டு மரபு முறைகள் 48
-மயில் நல்லநாத பிள்ளை-

12. அம்மானை 50

13. வற்றாப்பழைக் கண்ணகை அம்மன் வழிபாடு - முள்ளியவளைத் தொடர்புகள் 57
- கலாபூஷணம் முல்லைமணி -

14. லக்ஷ்மி கடாட்சம் 62
சிவஸ்ரீ நா. நடராஜக் குருக்கள்

15. தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயம் 65
இ. வரதராசா

16. கண்ணகி வழிபாட்டில் தேசிய ஒருமைப்பாடு 67
சுப்பிரமணியம் திருஞானம்

17. வற்றாப்பளை ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம் 70
திரு. க. ஜெயவீரசிங்கம்

18. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பனிச்சையாடிய பாடற்சிந்து 72
சி. இராசசிங்கம்

19. மண்ணக மாதர்க்கு அணி 76
திருமதி. புவனா ஐயம்பிள்ளை

20. வற்றாப்பளைக் கண்ணகி அம்மனும், கோவலன் கண்ணகிக் கூத்தும் 79
அருணா செல்லத்துரை

21. சக்தி தத்துவம் 86
பண்டிதை தங்கம்மா அப்புக்குட்டி

22. வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வரலாற்று வணக்கப்பாக்கள் 88
சோதிடர் ச. இராமலிங்கம்

23. வற்றாப்பளை கண்ணகி அம்மன் சிலம்பு கூறல் வருகை தந்த வரலாறு 90

24. வேதங்கள் 92
அமரர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள்

25. குமுழமுனை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் 94
சி. தெய்வேந்திரம்பிள்ளை

26. தெக்ஷிணாமூர்த்திப் பெருமானின் தனிப் பெருங்கருணை 97
சிவஸ்ரீ. பூரண தியாகராஜக் குருக்கள் - B.A. Hons (Cey)

27. பழந்தமிழர் பண்பாடு பேணும் வன்னி நாடு 101
அநு. வை. நாகராஜன்

28. கண்ணன் தூது சென்றது ஏன்? 104
ஸ்ரீ வத்ஸ ஜெயராம சர்மா

29. சமயம் + விஞ்ஞானம் = மனிதப் பண்பாடு 106
செ. சிவராசா

30. காப்பிய ஆசிரியர் வெற்றிவேற் புலவர் வரலாறு 110

31. வெற்றிவேற் புலவர் பாடியருளிய சிலம்பு கூறல் காவியம் (முன்னுரை) 112

32. சிலம்பு கூறல் காவியம் 114

33. உபநிடதங்கள் - ஓர் அறிமுகம் 144
சுவாமிஆத்மகணானந்தாஜி மகராஜ்

34. பாரோர் புகழ் வரும் பங்குனி உத்தரம் 150
திரு ஹரிஹரசர்மா

35. சைவ சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை 153
கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி



# ஈழத்திற் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்



- எம். சற்குணம் -

திராவிட மக்களிடையே தாய்த்தெய்வ வழிபாட்டு முறை பண்டு தொட்டு இருந்து வந்திருக்கின்றது. இதனாலேதான் பெண் தெய்வங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் மிகக் கூடுதலான இடத்தினை அம்மக்களிடையே பெற்றுக் கொண்டுள்ளன. மரபு வழியாகவே பெண்ணைத் தெய்வமாகவும் தெய்வத்தைப் பெண்ணாகவும் கொண்டு வணங்கும் முறை திராவிடரிடையே வேரூன்றிப் பரவுவதற்கும் தாய்த்தெய்வ வழிபாட்டு முறையே காரணமாய் இருந்திருக்க வேண்டும். திராவிடப் பண்பாடும் ஆரியப்பண்பாடும் கலந்து உருவான இந்து சமயத்திலே தாய்த் தெய்வ வழிபாடு அல்லது சக்தி வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. சக்தியின் அம்சமாகவே ஏனைய பெண் தெய்வங்கள் யாவும் தோற்றம் பெறுகின்றன. கொற்றவை, மாரி, ஐயை போன்ற பெண் தெய்வங்கள் யாவும் சக்தியின் அவதாரமாகவே கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இந்நிலையிலேதான் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாம் கண்ணகிக்கும் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

கண்ணகி கதை பற்றி நாம் அறிந்து கொள்ள மிக முக்கியமானதும் மிகப் பழைமை பொருந்தியதுமான ஆதாரம் சிலப்பதிகாரமே. இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றுக்குக் காவிய வடிவம் கொடுப்பதற்கு முன்பே பண்டைக்கால மக்களிடையே இக்கண்ணகிக் கதைமரபுகள் வழங்கி வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் உள.[1] இதனை நாம் அறிந்து கொள்ள நற்றணைப்பாடல் ஒன்றும் [2] புறநானூற்றுப் பாடல்கள் சிலவும்[3] துணை செய்கின்றன. இவ்வாறு மரபு வழியாக இருந்து வந்த கண்ணகி பற்றிய கதைகளே சிலப்பதிகாரத்தைக் காவிய வடிவமாக எழுதி முடிப்பதற்கு இளங்கோவடிகளுக்கு உதவியிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்திற் பொதிந்துள்ள பல கதைகள் தமிழகப் பகுதிகளிலே பொதுமக்களால் வில்லுப் பாட்டாகவும், மலையாளப் பகுதிகளில் அம்மானை உருவத்தில் நாடோடிப்பாடல்களாகவும் பாடப்பட்டு வந்துள்ளன[4]. புகழேந்திப் புலவர் இயற்றியதாகக் கொள்ளப்படும் கோவலன் கதை அம்மானை உருவத்திலே பாடப்பட்டுள்ளது. அதே போலக் கோவலன் கதைபற்றி மலையாள நாட்டில் வழங்குவதும் தமிழ் மொழியில் அமைந்ததுமான காதற்பிரபந்தம் ஒன்று உண்டு எனவும் அறிய முடிகின்றது.[5]

தமிழகத்திற் சிலப்பதிகார காலத்தில் இருந்து கொற்றவை கண்ணகியாக வணங்கப்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையிலே கொற்றவை, காளி என்னும் தெய்வங்களோடு கண்ணகியின் தோற்றம் ஒப்பீடு செய்யப்பட்டிருப்பது

இதற்குச் சான்றாக அமைகின்றது.[6] எனவே சிலப்பதிகார காலத்தில் இருந்து கொற்றவை, காளி ஆகிய தெய்வங்களின் அம்சங்கள் கண்ணகியோடு சேர்க்கப்பட்டும் கண்ணகி வழிபாடு தோற்றம் பெற்றிருக்கலாம்.

சேரன் செங்குட்டுவன் சேர நாட்டிற் கண்ணகிக்கு விழாவெடுத்த போது கடல் சூழ் இலங்கைக்கயவாகு வேந்தனும் சென்று சிறப்பித்தான் எனச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையும் [7] வரந்தருகாதையும்[8] கூறியுள்ளன. இது போலவே பாண்டியன் வெற்றிவேற் செழியனும் சோழன் பெருங்கிள்ளியும் கொங்கிளங்கோசரும் மாளுவ வேந்தரும் கண்ணகி விழாவிற் பங்கு கொண்டு தத்தம் நாடுகளுக்கும் கண்ணகியை எழுந்தருளுமாறு வேண்டி நின்றனர்.

இவ்வாறு தத்தம் நாடுகளுக்கு எழுந்தருளுமாறு வேண்டிய அரசர்களில் ஒருவனாகிய கயவாகு வேந்தனே இவ்வழிபாடு ஈழத்திற் பரவி வேரூன்றக் காரணமாயிருந்தான். இதனை ஈழத்து வரலாற்று நூலான இராஜாவலியும், இராஜரத்னாகரவும் கஜபா கத்தாவ என்னும் பத்தினி வரலாறு கூறும் சிங்கள நூலும் குறிப்பிடுகின்றன. எனினும் இராஜாவலிய சிலப்பதிகாரக் கதையினின்றும் சிறிது வேறுபட்ட கதையினையே கூறியுள்ளது.[9] இதன் மூலம் கஜபாகு பத்தினித் தெய்வத்தின் சிலம்பையும் நான்கு கோயில்களின் தெய்வங்களையும் ஆயுதச் சின்னங் களையும் வரவழைத்துப் பெற்றுக்கொண்டு வாலகம்பாகு காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டிருந்த புனித பாத்திரத்தையும் பெற்றுக் கொண்டு ஈழம் மீண்டான் என அறிய முடிகின்றது. இச் செய்திகளிற் சிலவற்றைக் கோகில சந்தேச நூலும் கூறும்.[10] எனவே கயவாகுவே ஈழத்திற் கண்ணகி வழிபாடு தோன்றி வளர்ச்சி பெறக் காரணமாயிருந்தான் எனக் கூறலாம்.

கண்ணகி வழிபாடு ஈழத்துக்குக் கொண்டு வரப்பட்டதும் அது சிங்கள, தமிழ் மக்களிடையே நிலைத்து வளரலாயிற்று . தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடெனவும் கண்ணகை அம்மன் வழிபாடெனவும் வளர்ச்சி பெற்ற போது, அது சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாக மலர்ந்தது. இதனாலே தமிழில் உள்ள கண்ணகியைத் தலைவியாகக் கொண்ட இலக்கியங்களைப் போலச் சிங்களத்திலும் பல பத்தினி காவியங்கள் தோன்றலாயின. பத்தினிஹல்ல, பாளங்க ஹல்ல, பத்தினி கத்தாவ, பத்தினி விலாபய, கஜபா கத்தாவ, வயந்தி மாலா, அம்ப பத்தினி உபத, அம்ப விதுமன, மல்பத்தினி உபத்த, மாதேவி கத்தாவ, பத்தினி யாதின்ன, பத்தினி பிளிம, பத்தினி கோள்முற, பாளங்க மறுவீமே சிந்துவ, பண்டி நெத்த மெகு உபத்த, அங்கெலி உபத்த, சலம்ப கத்தாவ முதலிய சிங்களப் பத்தினி இலக்கியங்கள் இதற்குச் சான்றாகும்.

ஈழத்துக்கு இவ்வழிபாட்டைக் கொண்டு வந்த கயவாகு வேந்தன் ஆடிமாதந்தோறும் தலைநகரிற் பத்தினிக்குப் பெருவிழா எடுத்துப் பத்தினியின் காற்சிலம்பை யானையில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு சென்று பெருவிழா கொண்டாடினான். இந்த யானை ஊர்வலம் பண்டு தொட்டு இன்றுவரை சேர நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உற்சவ காலங்களில் வழங்கி வருதல் குறிப்பிடத்தக்கது. கயவாகு மன்னன் கண்ணகி விழாவிற் கலந்து திரும்பி வந்தபோது அதே முறையைத் தான் பின்பற்றினான் எனக் கருத வேண்டியுள்ளது. இது கண்டி மாநகரில் நடைபெறும் எசல பெரஹராவின் ஆரம்பமாய் இருக்கலாம் எனக் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி தனது "மத்தியகாலத்துச் சிங்களக் கலை" என்னும் நூலிற் கூறிப்போந்தார். "ஆடித்திங்க ளகவையினாங் கோர் பாடிவிழா" பற்றிச் சிலப்பதிகாரம் கூறுவதும் ஆடி ஆவணி மாதங்களில் எசல பெரஹரா நடைபெறுவதும் சான்றாக அமைகின்றது.

பத்தினி வழிபாடு சிங்கள மக்களிடையே சமய வாழ்வில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. இத் தெய்வத்தினைத் தொற்று நோய்களின், அதாவது அம்மை, சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நோய்களின் அதிதேவதையாக அவர்கள் கொள்வதோடு கண்ணகியைத் துர்க்கையாகவும் எட்டுக் காளிகள் சூழ்ந்திருக்கும் ஈழத்தின் காவற் தெய்வமும் இதுவே. எனக் கொள்வர். இது சம்பந்தமான ஐதீகங்கள் பல சிங்கள மக்களிடையே இன்றும் நிலவி வருகின்றன[11]. நிக்கவவக் குகையிற் கண்டெடுக்கப்பட்ட சந்தணக் கட்டையாலான கண்ணகை , கோவலன் சிலைகள் கயவாகு மன்னனால் கொண்டு வரப்பட்டதாய் இருக்கலாம். என ஹென்றி பார்க்கர் கருதுகின்றார்.

கொழும்புக்கு அண்மையில் இருக்கும் கந்தானைப் பகுதியிலே முத்துராச வெளி வயல்வெளிக்கு அணித்தாகக் கடற்கரைக்கண் அமைந்துள்ள நடுவபிட்டிய என்னும் இடத்திற் பழைய பத்தினி ஆலயம் ஒன்று காணப்படுகின்றது. குருணாகலைப் பகுதி, கட்டுகம்பளைப் பற்று, மினுவாங்கொட, நீர்கொழும்பு முதலான இடங்களிலும் ஒவ்வொரு பழைய இராசதானியிலும் , அனுராதபுரத்தை விட, பத்தினிக்குக் கோயில்கள் உள. குண்டசாலையிலும் ஹங்குறன் கட்டையிலும் பத்தினிக்குப் பழைய கோயில்கள் இருந்திருக்கின்றன. தெய்வேந்திர முனை எனப்படும் தேவிநுவரையிலும் பத்தினிக்கு கோயில் இருந்திருக் கின்றது. இப்பத்தினிக்கு வருடத்தில் ஒரு முறை ஏழு நாட்கள் பூசை நடப்பது வழக்கம். இந்த ஏழு நாட் பூசைக்காக மட்டுமே பத்தினி காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்பாடல்களைச் சிங்கள மக்கள் வரிசைக்கிரமமாகப் பூசை வேளைகளில் வாசித்துப் பத்தினித் தெய்வத்தின் அருளை வேண்டி நிற்பார்கள். இதற்கென முப்பத்தைந்து நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே இவை பன்திஸ் கோள்முற'' என அழைக்கப்படுகின்றன. [12]

கயவாகு வேந்தன் ஈழத்துக்கு திரும்பிய போது சம்புத்துறை வழியாகவே வந்திருக்க வேண்டும். சம்புத்துறை வழியாக வந்த கயவாகு வேந்தன் முதன் முதலாகக் கந்தரோடையில் உள்ள அங்கணாமைக் கடவையில் பத்தினிக்குக் கோயில் அமைத்துத் தனது உருவச்சிலையையும் கோயில் முன்றலில் நிறுவியிருக்கலாம் என்று முதலியார் சி. இராசநாயகம் குறிப்பிட்டுள்ளர்.[13] கந்தரோடைப் பாங்கரில் அமைந்துள்ளன இக் கோயில்களைப் போலவே முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயிலும் சிறப்பு வாய்ந்தது. கயவாகு மன்னன் நாடெங்கும் கண்ணகிக்குக் கோயில்கள் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டதைத் தொடர்ந்து விரோதைய சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிகளிற் கண்ணகிக்கு ஆலயங்கள் தோன்றின என்று சி. கணேசையரும் [14] வேலம்பரையில் உள்ள கண்ணகி கோயில் அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதென்றும் அதன் பின்பு கட்டப் பட்டவையே களையோடை, அங்கணான் கடவு முதலிய இடங்களில் உள்ளவை என்றும் ஆ. முத்துத் தம்பிப்பிள்ளையும் கூறியுள்ளனர்.[15]

ஈழத்திற் கண்ணகி வழிபாடு அழியாத ஒரு வழிபாடாக நிலைத்து விட்டாலும் இவ்வழிபாட்டை ஆறுமுகநாவலரும் அவரது சகாக்களும் ஆதரிக்கவில்லை [16]. எனவே கண்ணகி கோயில்கள் நாகேஸ்வரி, நாகபூஷணி, ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டதாக அறியமுடிகின்றது. எனினும் கீழ்வரும் கண்ணகி அம்மன் பள்ளுப்பாடல் மூலம் யாழ்ப்பாணப்பகுதிகளில் புகழுடன் இருந்த கண்ணகை அம்மன் ஆலயங்களைப் பற்றி அறியலாம்:

*அங்கணம்மைக் கடவை செட்டிபுல மச்சூழ*
*ஆனதொரு வற்றாப்பளை மீதுறைந் தாய்*
*பொங்கு புகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்*
*புகழ்பெருகு கோலங்கிராய் மீதுறைந் தாய்*
*எங்குமே உன்புகழை மங்காம லோத*
*என்றனது சிந்தையி லுறைந்த காரணியே*
*பங்கமுறு துயரங்கள் தீரவருள் புரிவாய்*
*பரிவுசெறி கோலங்கிராயி லுறை மாதே.*[17]

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மாள் ஊஞ்சல், எச்சரிக்கை, பாராக்கு மேற்படி கண்ணகை சரித்திரச் சுருக்கம் எழுதிய சாவகச்சேரி வித்துவான் ச.பொன்னம்பலப்பிள்ளையும் தனது நூலிலே அக்காலத்திலே யாழ்ப்பாணத்திற் கிராமந்தோறும் வீற்றிருந்த கண்ணகை ஆலயங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[18]

பாண்டியனாற் பல துண்டங்களாக வெட்டப்பட்ட கோவலனைக் கண்ணகி சேர்த்தெடுத்துத் தைத்து உயிரளிக்கக் கோவலன் எழுந்திருந்து,

*"மாதகியோ கண்ணகியோ வந்தவர்கள் படுகளத்தில்*
*மாதகியாள் வந்தாலே வாடியென் மடிமேல்"*

எனக் கூறினான். இதனால் , மாதவியின் பெயரை முதலில் குறித்துக்கேட்டானே என்று மனமுடைந்து கோபங்கொண்டு, கண்ணகி தன்னை ஐந்தலை நாகமாக மாற்றி, மதுரை நகரம் துறந்து, தெற்கு நோக்கி ஊர்ந்து சென்று , முதலில் நயினாதீவிற் தங்கினாள். பின்னர் வட்டுக்கோட்டைப்பாங்கரில் உள்ள சுருட்டுப்பனை வழியாக சீரணி, அங்கணாமைக்கடவை, அளவெட்டி, சுருவில் முதலான இடங்களில் இறங்கினாள் என்ற

ஐதீகம் வழக்காற்றில் இருந்து வந்திருக்கின்றது.[19] ஐந்தலை நாகம் நகர்ந்து சென்றவழி வழுக்கியாற்றுப் பள்ளமாக மாறியதென்பர். இவ்விடங்களில் அமைந்த கோயில்களில் எல்லாம் ஐந்தலை நாக சந்நிதானமும் அம்மன் சந்நிதானமும் அமைந்திருக்கின்றன. சீரணியில் உள்ள கோயில் நாகம்மாள் கோயில் எனவும் அளவெட்டி, சுருவில் கோயில்கள் நாகதம்பிரான் கோயில் எனவும் வழங்கப்படுகின்றன. நாகதீவில் இருந்து புறப்பட்ட கண்ணகி, கோப்பாய், மட்டுவில், வேலம்பிராய், கச்சாய் வழியாகச் சென்று நாகர் கோயிலை அடைந்தனள் என்று வேறுஞ் சிலர் கூறுவர். பின்னர் கரைச்சியில் உள்ள புளியம்பொக்கணையை அடைந்து அப்பால், முல்லைத் தீவில் உள்ள வற்றாப்பளையை அடைந்தனள் என்பர்.

யாழ்ப்பாணத்தில் மந்திகையிற் கோயிற் கொண்டெழுந்தருளிய கண்ணகை அம்மனைச் சார்ந்தததாக மந்திகைக் கண்ணகை அம்மன் அந்தாதி பாடப்பட்டிருக்கின்றது. அத்துடன் அக்கோயிலில் வருடந்தோறும் வைகாசிப்பூரணையிற் பாடப்பட்டு வரும் கோவலனார் கதையும் வெளிவந்துள்ளது. நவாலிக் களையோடைக் கண்ணகை அம்மனுக்கு உயிர் வருக்கத்தகவலும் கண்ணகை அம்பாள் பேரிலூஞ்சலும் பாடப்பட்டுள்ளன. அதே போலக் கோப்பாய்க் கண்ணகைக்குச் சேனாதிராச முதலியாரால் ஊஞ்சல் பாடப்பட்டுள்ளது. குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகிக்குப் பதிகமும் வற்றாப்பளைக் கண்ணகிக்கு தோத்திரம், காவியம், சிந்து முதலியனவும் உள. அதுபோல அங்கணாமைக் கடவைக் கண்ணகிக்குத் தோத்திரங்களும் காவியங்களும் பாடப்பட்டு வெளிவந்துள்ளன.

ஈழத்தின் வடக்கிலே யாழ்ப்பாணப்பகுதியிற் போல, திருக்கோணமலை, வவுனியா முதலான பிராந்தியங்களிலும் கண்ணகிக்கு ஏராளமான கோயில்கள் அமைந்திருக்கின்றன. கோயிற் புளியங் குளத்தில் உள்ள கண்ணகை அம்மன் கோயில் பத்தினி அம்மன் கோயிலாக இருந்ததாக "ஆர். டபிள்யூ. ஐவேர்ஸ்" குறிப்பிட்டதோடு மடுத்திருப்பதியில் உள்ள புனிதமேரி அம்மனும் பத்தினி அம்மனாகவே வழிபடப்பட்டு வந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.[20] பூனகரியில் (பத்தினிபாய்) அமைந்துள்ள கோயிலும் கண்ணகைக் குரிய கோயிலே என்று எஸ். குமாரசுவாமி கருதியுள்ளார்.[21]

ஈழத்தின் ஏனைய பாகங்களைவிட இன்று மட்டக்களப்புப் பகுதியிலேதான் கண்ணகை அம்மன் வழிபாடு பெருவழக்காகவும் உன்னத நிலையிலும் உள்ளது. எனவேதான் அப்பகுதிகளிற் கண்ணகையைத் தலைவியாகக் கொண்ட இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றியுள்ளன. மட்டக்களப்புப் பகுதியிலே ஏனைய தெய்வங்களுக்குக் கிடைக்காத சிறந்த இடம் கண்ணகைக்கு கிடைத்திருப்பதால் கண்ணகி வழிபாடு இங்குதான் வேரூன்றி வளர்ந்ததோ என்று கூட எண்ணத் தோன்றும். இப்பகுதிகளிற் கிராமங்கள் தோறும் கண்ணகிக்குக் கோயில்கள் உள. இதனைக் கீழ்வரும் ஊர்சுற்றுக்காவியத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

*பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை*
*பலிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூரெருவில்*
*செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை*
*செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை*
*அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை*
*அன்பான சித்தாண்டி நகரதனில் உறையும்*
*வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை*
*மனமதில் நினைக்கவினை மாறியோ டிடுமே.*[22]

இதே போலக் கூவாய் குயில் வசந்தனும், பட்டி மேட்டுக் கண்ணகை அம்மன் காவியமும் கிழக்கு மாகாணத்தில் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் ஆலயங்களின் எண்ணிக்கையினைத் தெளிவாகக் கூறியுள்ளன.

கண்ணகை அம்மனின் ஏழு விக்கிரகங்களை நாடாரும் நம்பிகளும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து கொண்டு வந்து வழிபட்டதாக மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் அறியமுடிகின்றது. பின்னர் அந்த ஏழு விக்கிரகங்களும் ஏழு கிராமங்களில் வைக்கப்பட வேண்டும் என அக்காலக் கண்டி அரசன் கட்டளையிட்டதாகவும் நாடார்களே பூசகர்களாகவும் கோவியர்களே ஊழியர்களாகவும் இருந்ததாக மேலும்

சில தகவல்களை மட்டக்களப்பு மான்மியமே தருகின்றது.[23] இச்செய்திகள் எந்தளவுக்கு வரலாற்று உண்மையாகும் என்பது தெரியுமாறில்லை.

வெருகலகம்பதிக்குக் கிழக்குப் பக்கத்திலே உள்ள இலந்தைத் துறைமுகத்தில் மதுரை நகரில் இருந்து செம்பகநாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகை அம்மன் சிலைகள் மூன்று கொண்டு வரப்பட்டதாகவும் செம்பகநாச்சியார் சிலையை ஈச்சிலம்பத்தையிலும் பத்திரகாளியம்மன் சிலையைச் சம்பூர்க்கடற்கரையிலும் கண்ணகி அம்மன் சிலையை மட்டக்களப்புத் தென்பாகத்திலே ஓர் ஊரிலும் வைத்து வழிபட்டு வந்ததாக அறியமுடிகின்றது. [24]

மட்டடக்களப்புப் பகுதியிலே இன்று பிரபல்யத்துடன் வழங்கிவரும் கண்ணகி ஆலயங்களுள் காரை தீவு, பட்டிமேடு முதலான கிராமங்களில் உள்ள கண்ணகை அம்மன் ஆலயங்களே மிகவும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இவ்விரு கோயில்களைப் பற்றிய பல செய்திகள் நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டின் மூலம் தெளிவாகின்றன.[25] இக்கோயில்கள் வன்னியர் களின் ஆட்சி உச்சநிலை பெற்றிருந்தபோது தோன்றியவை என்று கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. காரைதீவுக் கண்ணகை அம்மனுக்கு ஏழு விருத்தப்பாடல்கள் ஊர்சுற்றுக் காவியத்தில் உண்டு. அத்துடன் ஊஞ்சலும் விருத்தமும் அகவலும் காவியமும் இவ்வம்மனுக்கு உண்டு. வற்றாப்பளைக் கண்ணகை அம்மனின் பூசை முறைகளும் வழிபாட்டுக் கிரியைகளுமே இவ்வாலயத்தில் வருடந்தோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

பட்டிமேட்டுக் கண்ணகை அம்மனின் வரலாற்றினைப் பொற்புறாவந்த காவியத்தின் மூலம் அறியலாம். சீதாவாக்கையில் இருந்து வந்த நாகமங்கலையம்மனின் புறாவழிபாடே இங்கு அம்மன் வழிபாடாக மாறியிருக்கின்றது.[26] இவ்வம்மனுக்கு மழைக்காவியமும் அம்மன் காவியமும் உண்டு. அதே போலவே தம்பிலுவிற் கண்ணகை அம்மனுக்கு மழைக்காவியமும் அம்மன் காவியமும் உண்டு . தாண்டவன் வெளிக் கண்ணகை அம்மனுக்கு அம்மன் காவியம் உண்டு.

கண்ணகை அம்மன் வழிபாடு தொடர்பாக ஈழத்திலே தோன்றிய முழுமையான காவியம் கண்ணகி வழக்குரையே. இது வழக்குரை, பழிவாங்கியகதை, கோவலனார்கதை என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்புப் பகுதியில் ஆலயங்கள் தோறும் படிக்கப்பட்டு வரும் ஏடு வழக்குரை எனவும் யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள ஏடு கோவலனார் கதை எனவும் அழைக்கப்பட்டு வருடந்தோறும் வைகாசித்திங்களிற் படிக்கப்பட்டு வருகின்றது. கோவலனார் கதை ஏட்டைத் தென்புலோலியூர் ம. சே. செல்லையா **1962** லும் வழக்குரை ஏட்டை வித்துவான் வி. சீ. கந்தையா **1968** லும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். இவற்றைவிட மட்டக்களப்புப் பகுதிகளில் நிலவிவரும் வசந்தன் பாடல்களிற் சிலவும் கொம்பு விளையாட்டு தொடர்பான பாடல்களும் ஊஞ்சற் பாடல்களும் குளுத்திப்பாடல்களும் கண்ணகை அம்மனோடு தொடர்புள்ள பாடல்களாகவே காணப்படுகின்றன.

எனவே கண்ணகை அம்மன் வழிபாடானது ஈழத்திலே சிங்கள, தமிழ் மக்களுக்கு அத்மீகத் தொடர்பாக இருந்ததோடு தென்னிந்தியத் தமிழ் மக்களையும் இணைக்கும் ஒரு தொடர்பாக மாறிய பெருமையைப் பெற்றது எனலாம். எனினும் ஈழத்தின் மட்டக்களப்பு பகுதியிலேதான் இவ்வழிபாடு நன்கு வேரூன்றி இன்றும் நிலைத்துள்ளது.

## குறிப்புக்கள்:


1. வையாபுரிப்பிள்ளை, எஸ் , சிலப்பதிகாரம் (புகார்க்காண்டம்) ஆர்.கே.சண்முகஞ் செட்டியார் பதிப்பின் முன்னுரை , பக்கம் 10, கோயம்புத்தூர், 1946.
2. நற்றிணை 216
3. புறநானூறு 144, 145
4. வையாபுரிப்பிள்ளை, எஸ், இலக்கியமணிமாலை (2ம் பதிப்பு) பக். 127 . மதறாஸ், 1957.

5. இராகவையங்கார். மு, ஆராய்ச்சித் தொகுதி (2ம் பதிப்பு) பக். 239, சென்னை, 1964.
6. சிலப்பதிகாரம். 20: 36 –40.
7. சிலப்பதிகாரம் உரைபெறுகட்டுரை. 3.
8. சிலப்பதிகாரம் 30: 159–164
9. குணசேகர. பி, (பதிப்பாசிரியர்) இராஜாவலிய, பக்.34, கொழும்பு, 1926
10. குணவர்த்தன டபிள்யூ. எம். (பதிப்பாசிரியர்) கோகிலசந்தேச (2 ம் பதிப்பு) பக்.84, கொழுப்பு 1945.
11. Parker, Henry. **Ancient Ceylon**, p.633, London, 1909.
12. சுப்பிரமணியன் . நா. "சிலப்புச் செல்வியும் சிங்கள இலக்கியமும்", இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் (மூன்றாந் தொகுதி) பக். 162, சென்னை, 1968
13. Rasanayakam C. Mudaliyar, **Ancient Jaffna**, p.74, Madras, 1926.
14. கணேசையர். சி, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், பக் 7 சுன்னாகம் , 1939
15. முத்துத்தம்பிப்பிள்ளை. ஆ, யாழ்ப்பாணச் சரித்திரம், (3ம் பதிப்பு) பக். 29, யாழ்ப்பாணம், 1933
16. கைலாசப்பிள்ளை. த, (திரட்டப்பட்டது) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் பிரபந்தத்திரட்டு (முதற்பாகம் – 3ஆம் பதிப்பு) பக். 65, சென்னைப்பட்டணம், 1954.
17. இராமலிங்கம், மு."வன்னியிற் பரவிய கண்ணகி வணக்கம்", வீரகேசரி, 8,12. 48.
18. பொன்னம்பலப்பிள்ளை. ச.(சாவகச்சேரி) மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மாள் ஊஞ்சல் எச்சரிக்கை பராக்கு, பக் 33–34, யாழ்ப்பாணம், 1938.
19. ஞானப்பிரகாசர். சுவாமி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம் தமிழரசர் உகம் ) பக். 21, அச்சுவேலி, 1928.
20. Ivers, R.W.**The Manual of the North Central Province**, p..110, Colombo, 1899.
21. குமாரசுவாமி எஸ், வடமாகணத்திலுள்ள இடப்பெயர் வரலாறு, பக். 15, யாழ்ப்பாணம், 1918.
22. கந்தையா. வி, சீ, (பதிப்பாசிரியர்) கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல் (முதலிய நான்கு நூல்கள்) பக். 40, மட்டக்களப்பு, 1958.
23. நடராசா. எவ். எக்ஸ். சி. (பதிப்பாசிரியர்) மட்டக்களப்பு மான்மியம் பக். 61–62 கொழும்பு 1962.
24. கணபதிப்பிள்ளை. ம. க. "வெருகலம்பதிச் செவிவழிச் செய்தி", கலைப்பூங்கா, மலர் 1 இதழ் –1, பக் 47–48 கொழும்பு 1961.
25. பத்மநாதன். எஸ் (பதிப்பாசிரியர்) "நாடுகாட்டுப்பரவணிக் கல்வெட்டு" மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர், பக் 87, மட்டக்களப்பு, 1976.
26. கணபதிப்பிள்ளை. சி (பதிப்பாசிரியர்) மகாமாரித்தேவி திவ்விய கரணி, பக் 99–104. யாழ்ப்பாணம், 1971.

*(நன்றி : திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக மலர்)*

* * *

## வீட்டில் இல்லை என்றும் சப்தம் ஒலிக்கக் கூடாது

*எப்போதும் வீட்டில் 'இல்லை' என்றும் சப்தம் ஒலிக்கக் கூடாதாம். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கிரகதேவதை கட்டாயம் உண்டு. நாம் "இல்லை" என்னும்போது அந்த தேவதை "அப்படியே ஆகட்டும்" என்று ஆசீர்வதிக்குமாம். அதுபோலவே ஆலயத்தினுள் செல்லும்போதும் அபசகுனமான வார்த்தைகள் பேசினால் அங்குள்ள தேவதைகள் "அப்படியே ஆகட்டும்" என்று எஆசீர்வதிக்குமாம். எனவே ஒரு போதும் "இல்லை" என்ற வார்த்தை நம் வாயில் வெளிப்படாமல் காத்துக்கொள்ள வேண்டும். அதுபோல 'ஐயோ' என்பது இயம தர்மனின் தர்மபத்தினியாவாள்.*

நன்றி – ஆலயம் சஞ்சிகை -



# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வரலாற்று மரபு

- பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் -

ஒரு மக்கள் சமூகத்தினரிடையில் பண்டு தொட்டு வழங்கி வரும் சமய வழிபாட்டு மரபுகள், பிற பண்பாட்டுத் தாக்கங்களால் தமது மூல நிலையை இழந்து உருமாற்றம் பெற்று விடுவது வரலாற்றுப் போக்கில் காணக்கூடிய ஓர் அம்சமாகும். இவ்வண்ணம் உருமாற்றம் பெறாமல், பழைமையும் புதுமையும் இணைந்து "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய்" காலத்தைவென்று நிற்கும் சமய வழிபாட்டு மரபுகளும் உண்டு. இந்த இரண்டாவது வகையிலே தனக்கேயுரிய தனிப் பண்புகளுடனும், பழமைச் சிறப்புக்களுடனும், தெய்வீகப் பெருமையுடனும் திகழ்வது வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம். வற்றாப்பளைக் கிராமத்தில் நந்திக் கடற்கரையில் கோயில் கொண்டு வன்னிநாட்டிற்கு மட்டுமன்றி ஈழம் முழுவதற்குமே அன்னைத் தெய்வமாக அருள்பாலித்து வரும் கண்ணகி அம்மனின் தெய்வீகம் வரலாற்றாராய்ச்சிக்கு அப்பாற்பட்டது. வரலாறு என்பது நம்பகமான திட்டவட்டமான தரவுகளின்படி அமைக்கப்படுவது. தெய்விகப் பெருமைகள் மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. வரலாற்றுச் சான்றுகள் போதிய அளவு கிடைக்காத நிலையில் நம்பிக்கைகளிலும் புராணக் கதைகளிலும் காலூன்றி வரலாற்றுக்கான மரபை வகுத்தமைத்துக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

கண்ணகி வழிபாடு பற்றிய மிகப்பழைய இலக்கியச் சான்றாக எமக்குக் கிடைப்பது சிலப்பதிகாரம். ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவியமை பற்றிய சில தகவல்களை 'ராஜாவலிய', 'ராஜரத்நாகர' முதலிய சிங்கள வரலாற்று நூல்கள் தருகின்றன. ஈழத்தில் ஏனைய பாகங்களில் கண்ணகி வழிபாடு பரவிய வகைபற்றி ஆராய இவை பயன்படுகின்றனவேயன்றி வற்றாப்பளையில் கண்ணகி அம்மன் கோயில் கொண்டமைக்கு இவற்றில் சான்று கிடைக்கவில்லை.

ஒரு தெய்வத் தலத்தின் வரலாறு அதனை வழிபடும் மக்கள் சமூகத்தினரின் வரலாற்றில் தங்கியுள்ளது. அவ்வகையில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் ஆலய வரலாறு அதனைச் சூழவுள்ள வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு ஆகிய கிராமங்களின் வரலாற்றுடன் இணைந்தது. இக் கிராமங்களினதும், இவற்றைத் தன்னகத்தே கொண்ட வன்னிப் பெருநிலத்தினதும் வரலாறு இன்றுவரை தெளிவாக்கப்படவில்லை. வரலாற்றாராய்ச்சி இன்று உள்ள நிலையில் கி. பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து வன்னிப் பெருநிலத்தின் வரலாறு

தொடங்குகின்றது. அக்காலம் தொட்டு கடந்த நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி வரலாறு கூட இன்னமும் கால முறைப்படி அமைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்து அரசர் காலத்திலும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரது ஆட்சிக் காலத்திலும் வன்னிப் பெருநிலத்தின் பல்வேறு பகுதிகளும் 'வன்னியர்கள்' எனப்படும் குறுநிலத்தலைவர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன என்ற செய்திகளும் கயிலை வன்னியன், பண்டார வன்னியன் முதலிய சிலரது ஆட்சிக்கால நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளும் வரலாற்றுச் சான்றுகளுடன் உள்ளன. வற்றாப்பளைக் கண்ணகி ஆலய வரலாற்றுக்கு இவை பகைப்புலம் என்ற வகையிலேயே குறிப்பிடக்கூடியன. துணைச் சான்றுகளாகப் பயன்படவில்லை.

இந்நிலையில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் தெய்விகம் பற்றி மக்கள் மத்தியில் வழங்கிவரும் மரபுக் கதைகளில் வரலாற்று ஆதாரங்களைத் தேட வேண்டியுள்ளது. இம்மரபுக் கதைகள் ஏட்டு வடிவிலுள்ள இலக்கியங்களையும் செவிவழிப் பாடல்களையும் ஆதாரமாகக் கொண்டவை. ஏட்டு வடிவிலுள்ள இலக்கியம் 'சிலம்பு கூறல்'. இதற்கும் ஈழத்தின் பிற்பகுதிகளில் கோவலனார் கதை என்ற பெயரிலும் கண்ணகி வழக்குரை என்ற பெயரிலும் வழங்கிவரும் இலக்கியங்களுக்கும் இடையிலுள்ள பாடபேதங்கள் ஆராயப்பட வேண்டியன. 'சிலம்பு கூறலின்' ஆசிரியர் வெற்றிவேலுச் சட்டம்பியார் எனப்படுகிறார். 'கண்ணகி வழக்குரை' நூலின் ஆசிரியர் சகவீரன் என்பர். இப்பிரச்சினை 'சிலம்பு கூறல்' நூற்பதிப்பின்போது விரிவாக ஆராயப்பட வேண்டியது. அம்மன் சிந்து என்பது ஏட்டு வடிவிலுள்ள சிற்றிலக்கியம். செவிவழிப் பாடல்களாக பத்தும் பதிகமும், பனிச்சை ஆடிய சிந்து, வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வரலாற்றுச் சிந்து, வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் தோத்திரம், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் காவியம், அருவிவெட்டுச் சிந்து முதலியன குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்றும் பழைய பாடல்கள் என்றும், பின்னையவை பிற்காலத்தன என்றும் கருதப்படுகின்றன.

இவை தரும் கதை மரபின்படி வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வரலாறு நான்கு முக்கிய வரலாற்றுக் கட்டங்களைக் கொண்டது. முதலாவது கட்டம் வற்றாப்பளையின் நந்திக் கடற்கரையில் ஆநிரை மேய்த்த சிறுவர்க்கு காட்சி கொடுத்து அவர்களது பொங்கல் மடையை ஏற்றருள் புரிந்து வழிபாட்டு மரபைத் தொடக்கி வைத்ததாக அமைந்தது.

"ஆநிரை மேய்த்து நின்ற சிறுவர்கள் முன் ஒரு நரை மூதாட்டி வந்தனள். சிறுவர்கள் அவரை அன்புடன் வரவேற்றுபசரித்தனர். மூதாட்டியின் பசியை அகற்றப் பாற்பொங்கலிட்டுப் படைத்தனர். அந்திநேரம் கடந்து இருளானமையின் தீபம் தேவைப்பட்டது. மூதாட்டி பணித்ததற்கிணங்கக் கடல் நீரில் தீபமேற்றினர். அவர்களின் அன்புப் படையலை ஏற்று அருள் சுரந்து; தொடர்ந்து வைகாசி விசாகங் கூடிய திங்கள் நாளில் பொங்கல்மடை செய்யப்பணித்து மறைந்தனள் அம்மூதாட்டி".

சிலம்பு கூறலில் இச் செய்தி சுமார் பத்துப் பாடல்களில் விரித்துரைக்கப்படுகிறது. இவ்வாறு மூதாட்டி காட்சி கொடுத்து மறையும்போது தனது பெயர் கண்ணகி என்றும், தன் பெயருரைத்தால் 'ஆகும் பிணி போகும்' என்றும் திருவாய் மலர்ந்தருளினாள் எனப்படுகின்றது. கண்ணகி காட்சி கொடுத்து மறைந்தபின் அச்சிறுவர்கள் ஊர்ப் பெரியோரிடம் அவ்வற்புதத்தைக் கூறினர். ஊர்த்தலைவனும் ஊரவரும் நந்திக் கடற்கரையில் பொங்கல் மரபைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

*"அந்திப் பொழுதினிலே நந்திக் கடற்கரையில்*
*ஆலயந்தனிலே பொங்கல்மடை செய்வோம்*
*பொங்கல் மடைசெய்தே திருவிளக்கேற்றிடப்*
*பொன்னின் குடக்கும்ப மீதிலுறைந்தாள்"*

என்னும் வாய்மொழிப் பாடல் வழக்கிலுள்ளது.

இப்படித் தொடங்கிய கண்ணகி வழிபாட்டு மரபு இரண்டாவது கட்டத்தில் அயற்கிராமமாகிய முள்ளியவளையுடன் தொடர்பு கொள்கின்றது. முள்ளியவளை ஈழத்தமிழ் வரலாற்று மூலங்களி லொன்றான வையா பாடலிலும், கதிரையப்பர் பள்ளு என்ற பிரபந்தத்திலும் குறிப்பிடப்படும் வரலாற்றுச் சிறப்புடையது. இங்குள்ள காட்டா விநாயகர் ஆலயம்

சுமார் ஐந்து நூற்றாண்டுகட்கு முற்பட்ட பழைமை யுடையது. வற்றாப்பளை நந்திக் கடற்கரையில் அம்மன் காட்சி கொடுத்த இடத்தில் வேப்ப மரத்தின் கீழ் பொங்கலிட்டு வந்தவர்கள். இப்பொங்கலுக்கு முன்னோடியான சில வழிபாட்டு நிகழ்ச்சிகளை முள்ளியவளைக் காட்டா விநாயகர் ஆலயத்தில் விநாயகப் பெருமானுடைய அருளுடன் தொடக்கி வைத்தனர். வற்றாப்பளைப் பொங்கலுக்கு முதல் ஏழுநாள் மடைகளும், பொங்கலும் காட்டா விநாயகராலயத்தில் நடைபெறலாயின. வன்னிக் குறுநிலத் தலைவர்களது 'ராஜதானி'களுள் ஒன்றாக முள்ளியவளை அமைந்திருந்தமை வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கலில் முள்ளியவளை பங்கு கொள்ளத் துணைக்காரணமாக இருந்திருக்கலாம். மேலும் விநாயகப் பெருமானை வழிபட்டு எச்செயலையும் தொடங்கும் சைவ மரபின் செல்வாக்கையும் இரு கிராமத்தவர்களுக்கு மிடையிலிருந்த உறவுத் தொடர்பையும் உணர்த்தும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்ததெனலாம்.

மூன்றாவது கட்டம் கண்ணகி வழிபாட்டு மரபிலே ஆகமமரபு செல்வாக்குப் பெறுவதைக் காட்டுகின்றது. வேளாளரும் பிற தொழில் சார் குலப் பிரிவினரும் இணைந்து நிகழ்த்தி வந்த பொங்கல் விழாக்களில் ஆகம நெறிப்படி பூசை புரியும் அந்தணர்களும் பங்கு கொள்ளத் தொடங்கினர். திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னைமரவாடி என்னும் கிராமம் தமிழ் நாட்டுப் பாண்டிய மன்னர்களது வரலாற்றுடன் தொடர்புடையது. இக்கிராமத்தில் இருந்த பிராமணர்கள் முள்ளியவளைக்கு அழைத்து வரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டனர். பொங்கல், மடை நிகழ்ச்சிகளில் ஆகம நெறிக்குரிய பூசை முதலியவற்றைப் பிராமணர்கள் செய்யும் மரபு ஏற்பட்டது. ஆயின் பொங்குதல், படைத்தல் முதலிய மரபு வழிக்கிரியைகளைக் "கட்டாடி உடையார்" என்பாரும் பிறதொழில்சார் குலப் பிரிவினரும் ஒழுக்க சீலராக அமைந்து முறைப்படி நடத்தி வந்தனர்.

இவ் வழிபாட்டு மரபில் சிலம்பு, பிரம்பு, அம்மானை, உடுக்கு முதலிய புனித சின்னங்களும் 'முகபாடம்' எனப்படும் வெள்ளியாலமைந்த முக அமைப்பும், சித்திரச் சேலைகளும் இடம்பெறத் தொடங்கின. தமிழ் நாட்டிலிருந்து வந்த கண்ணகி பக்தனான 'பத்த ஞானி' என்பவர் இப்புனிதப் பொருட்களைக் கொணர்ந்து கண்ணகி அம்மன் வழிபாட்டில் இவற்றை இடம் பெறச் செய்தார் என்பர். கும்பத்தில் வெள்ளிமுக அமைப்பைப் பொருத்தி வெள்ளியாலான கை கால் முதலியவற்றை முறைப்படி அமைத்து கண்ணகி அம்மனது திருவடிவம் அமைக்கப்படும். சிலம்பு, அம்மானை, பிரம்பு, உடுக்கு என்பன பூஜையிலே வைக்கப்படும். பத்தஞானி கொணர்ந்த இப்புனிதச் சின்னங்களை அம்மனுக்குப் பூசை புரியும் பிராமணர்கள் தங்களது பாதுகாப்பில் முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயத்துக்கருகில் தாம் வாழ்ந்த இல்லத்தில் வைத்துப் பூசித்து வந்தனர். வெள்ளி தோறும் இல்லத்தில் பூசையும் திங்கள் நாளில் வற்றாப்பளை நந்திக் கடற்கரை ஆலயத்தில் பூசையும் நிகழ்ந்து வந்தன.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மனது வரலாற்றில் நான்காவது கட்டம் ஆகம முறைப்படி அம்மனை விக்கிரக வடிவில் அமைத்த நிகழ்ச்சியாகும். சுமார் நூற்றாண்டுகட்கு மேலாகப் பழமையாய் இருந்த ஆலயம் இடிக்கப்பட்டு புதிய ஆலயம் "தூபியுடன்" அமைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த சுமார் இருபதாண்டுகளாக் கண்ணகி அம்மன் ஆலயம் புதிய நிர்வாகத்தின் கீழ் நவீனகால தேவாலயத்துக் குரியதொரு பொலிவுடன் வளர்ந்து வருகின்றது.

இந்த வரலாற்று மரபை நோக்கும்போது வற்றாப்பளைக் கண்ணகி அம்மனுக்கும் சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகி அம்மனுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

சிலப்பதிகாரக் கண்ணகி கற்பின் திறத்தால் தெய்வமாக மதிக்கப்பட்ட மானிடப் பெண். ஆனால் "சிலம்பு கூறல்" கண்ணகி பத்திரகாளி என்ற தேவியின் அவதாரம். மதுரையிலே கோயில் கொண்டிருந்த அத்தேவி பாண்டிய மன்னனைப் பழிவாங்குவதற் கானதோர் முனைப்புடன் அவனது மகளாக அவதரித்துப் பூம்புகார் மாநாகச் செட்டியின் வளர்ப்பு மகளானாள்" என்று சிலம்பு கூறல் கதை அமைகிறது.

மதுரையை எரித்த பின் கண்ணகி சேர நாட்டில் விண்ணவருலகு சென்றாள் என்பது சிலப்பதிகாரச் செய்தி. அப்படி விண்ணுலகு சென்ற அச் செய்தியைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் அவளைத்

தெய்வமாகப் பேண விழா எடுத்தான் என்பதும் அவ்விழாவிற் கலந்து கொண்ட 'கடல் சூழிலங்கைக் கயபாகு வேந்தன்' ஈழத்திற்கு அத்தெய்வத்தின் வழிபாட்டைக் கொணர்ந்தான் என்பதும் சிலப்பதிகாரம் மூலம் அறியப்படுகின்றது. ஈழத்து வரலாற்று நூல்களான "ராஜா வலியவும்" "ராஜரத்னாகர"வும் இச்செய்தியைச் சிற்சில மாற்றங்களுடன் கூறுகின்றன என்பர்.

சிலம்பு கூறல் கண்ணகி மதுரையை எரித்த பின்னும் தனது கோபம் தணியாதவளாகத் தமிழ் நாட்டினின்று ஈழம் போந்து பல்வேறு இடங்களிலும் கோயில் கொண்டு அன்பர் பூசனையால் குளிரப் பெற்றாள் என்பது தெரிய வருகின்றது.

*"பெரிய வதிசயமுடனே பெண்ணணங்கு மிலங்கை*
*நண்ணி*
*சரியரிய வரங்கொடுத்துத் தார்குழல் வற்றாப்பளையில்*
*மருவியிருந்தருள் கொடுத்து வளர்கதிரை*
*மலையணுகி.....*

எனவரும் பாயிரப்பகுதி கண்ணகி அம்மன் இலங்கை போந்து வற்றாப்பளைக்கு வந்ததைக் குறிப்பிட்டுள்ளது.

நூலில் முற்குறிப்பிட்டபடி,

*"வலங்கொள் வென்றி வேல் விழியார்*
*வற்றாப்பளை மேவினரே"*

என்ற குறிப்புண்டு அம்மன் சிந்துப் பாடலிலே;

*"அங்கணாமைக் கடவை செட்டி புலமச்சூழ்*
*ஆனதொரு வற்றாப்பளை மீதுறைந்தாய்"*

என்று தொடங்கி ஈழத்தில் கண்ணகி அம்மன் கோயில் கொண்ட தலங்கள் பல குறிப்பிடப்படுகின்றன. வற்றாப்பளை என்பது பத்தாவதாகக் கண்ணகி அம்மன் வந்து அமர்ந்த இடம் எனவும் அது பத்தாம் பளை என வழங்கியதெனவும் காலப் போக்கில் மருவி வற்றாப்பளையாயிற்றென்றும் செவி வழிச் செய்தியுண்டு.

கண்ணகி அம்மன் வழிபாடு வற்றாப்பளையில் தொடங்கியமை பற்றிய மரபுக் கதையையும் சிலப்பதிகாரம், ராஜாவலிய முதலிய நூல்கள் தரும் செய்திகளையும் ஒப்பிட்டு நோக்குவது பொருத்தமானது. கண்ணகி வழிபாட்டை பத்தினித் தெய்வ வழிபாடாக ஈழத்தில் அறிமுகம் செய்து வைத்தவன் கி.பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த கஜபாகு என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆயின் அக்காலப் பகுதியில் தான் கண்ணகியின் கதை நிகழ்ந்தது என்று கொள்ள வேண்டியதில்லை. தமிழ் மக்கள் மத்தியில் நிலவி வந்த பழைய மரபுக் கதையொன்று இளங்கோவடிகளால் காலத் தேவைக்கேற்ப இலக்கியமாகச் செய்யப்பட்டது என்று கொள்ளலாம். சிலப்பதிகாரம் இயற்றப்படுவதற்கு முன்பே கண்ணகி கதை மரபுகள் வழங்கி வந்தன என்பதற்கு நற்றிணையிலும், புறநானூற்றிலும் சான்றுகள் உள. பெண்மையைத் தெய்வமாகப் போற்றும் பண்பு தமிழ் மக்கள் மத்தியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே நிலவி வந்துள்ளது. ஈழத்தில் தமிழர் வாழ்ந்த பகுதிகளிலும் பெண் தெய்வ வழிபாடு நிலவி யிருந்திருக்கலாம். ஈழத்தமிழரது வரலாறு பற்றிய விரிவான ஆய்வின் பின்னரே இது பற்றி முடிவு கூறலாம். அவ்வாறு நிலவி வந்திருக்கக் கூடிய ஒரு பழைய பெண் தெய்வ வழிபாடும் கஜபாகு காலத்தில் பரவிய பத்தினித் தெய்வ வழிபாடும் இணைந்த ஒன்றாகவே வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வழிபாட்டைக் கொள்ளலாம். காலப் போக்கிலே ஆகம முறைப்படியான பத்திரகாளியுடன் கண்ணகியை இணைத்து அவதாரக் கதை புனைத்து "சிலம்பு கூறல்" இலக்கியம் படைக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வரலாற்றில் மரபு வழியாக வரும் பொங்கிப் படைக்கும் முறைக்கும், ஆகம முறைப்படியான வழிபாட்டிற்குமிடையிலுள்ள முரண்பாட்டையும் நாம் நோக்க வேண்டும். கதை மரபின் படி ஆரம்பத்தில் வேளாளர் "பொங்கல்" கிரியைகளைச் செய்தனர். பிற தொழில்சார் குலப் பிரிவினர் அதற்குத் துணை புரிந்தனர். ஆகமமுறை பேணும் பிராமணர் தொடர்பு இருக்கவில்லை. பின்னர் ஒரு இடைக்காலப் பகுதியில் தான் பிராமணர் கிரியைகட்கு வந்தனர். அவர்களும் பொங்கலின் எல்லாக் கிரியை முறைகளுடனும் தொடர்பு கொள்ளவில்லை. இதிலே முரண்பாடு தெளிவாகத் தெரிகிறது. பிராமணரின் பூஜைக்கிரியை நிகழும் எந்த ஆலயத்திலும் அக்கிரியைகளில் பிராமணரல்லாதார் பங்கு கொள்ள முடியாது. அதேபோல் பிராமணரும் பிறர் பூஜை புரியும் ஆலயத்தில் கிரியைத் தொடர்பு கொள்வதில்லை. வழிபாட்டு முறைகளில் ஆகம மரபுகட்கு அப்பாற்பட்ட பல அம்சங்கள் வற்றாப்பளைக்

கண்ணகி அம்மன் ஆலயத்தில் உள்ளன. இவற்றை நோக்க எமக்குப் புலனாகும் ஒரு வரலாற்றுண்மையை இங்கு குறிப்பிடுவது அவசியம். ஆகம மரபின் தாக்கத்தால் தனது தனித்தன்மையை இழக்காமல் பழைய இனக்குழு மக்களின் வழிபாட்டு மரபைப் பேணி வருவதில் உறுதியாக நிற்கும் அதேவேளையில் ஆகம முறைப்படியமைந்த திருவிழா, கும்பாபிஷேகம் முதலியவற்றையும் புரிவதில் ஆர்வங்காட்டி இரு மரபுகளையும் பொருட்பொருத்தமுற இணைத்துள்ளமை பாராட்டற்குரியது. இப்படிப் பொருத்தமான வகையில் பழைய வழிபாட்டு மரபையும் ஆகம நெறியையும் இணைக்க முடியாத நிலையில் ஈழத்தின் பிற பாகங்களிலிருந்த கண்ணகி அம்மன் ஆலயங்கள் பல ஆகம மரபுக்குப் பணிந்து கொடுத்து ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி போன்ற உமையம்மனின் மூர்த்தங்களை மூல தெய்வமாகக் கொண்ட ஆலயங்களாகிவிட்ட வரலாறுகளும் உண்டு.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் தெய்விகத்தை உணர்த்தும் வகையில் முன் கூறியபடி கடல் நீரில் தீபம் எரியும் புதுமை அமைகின்றதென்பர். பறங்கியர் ஆட்சிக் காலத்தில் அம்மனின் தெய்வீகத்தில் அவநம்பிக்கையுற்ற 'நெவில்' என்னும் பறங்கியனை அம்மன் ஆலயத்தருகில் நின்ற பனிச்சை மரம் தனது காய்களால் துரத்திய செய்தியைப் "பனிச்சை ஆடிய சிந்து" எனும் செவி வழிப்பாடலால் அறிய முடிகிறது. மேலும் அம்மன் முதலில் காட்சி கொடுத்தபோது வீற்றிருந்த வேப்பம் படவாள் (அறுத்துக் கழிக்கப்பட்ட வேப்பமரத்துண்டு) அம்மன் மறைந்த பின் தளிர்த்து நீண்டகாலம் நிழல் செய்து, தன்னை அணைவோரது பிணிகளைத் தவிர்த்தது என்பர்.

அம்மனின் ஆலயத்தில் வழங்கப்படும் 'வேளை'யும், மஞ்சட் காப்பும் தீயரோகங்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் ஆற்றல் வாய்ந்தன என்பது அம்மனடியார்களது அனுபவ முடிவு.

இத்தகைய தெய்வீகப் பெருமைகளையுடைய கண்ணகி அம்மனுக்கு இருபது ஆண்டுகட்கு முன் புதிய முறையிலமைந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் அமைந்த பின் பிலவங்க ஆண்டு (1968) பங்குனியிலும் ஒரு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னரும் புதிய நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆலயத்தை அடியார்களது உள்ளத்தையும், கண்களையும் கவரத்தக்க வகையில் அமைத்து வருவதுடன் அடியார்கள் வந்து தங்கிப் போகத்தக்க வகையில் மடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மனது தெய்வீகப் பெருமைகளைப் பரப்பும் வகையில் கருணைமலர் தயாரிக்கும் முயற்சியை மேற்கொண்ட பரிபாலன சபை ஏட்டு வடிவிலும், வாய் மொழியிலும் உள்ள அம்மன் புகழ்பாடும் இலக்கியங்களை அச்சேற்றி நிலை பெறச் செய்யும் முயற்சியை மேற்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கலாம்.

* * *

## ஸ்ரீ ராமநவமி

*நவமித் திதியில் அவதரித்தவர் ஸ்ரீராமர். அதனால் அன்றைய திதி 'ஸ்ரீராமநவமி' என்ற சிறப்பைப் பெறுகிறது. அன்று விரதமிருந்து ஸ்ரீராமபிரானை வழிபாடு செய்வார்கள்.*

*எலுமிச்சம்பழம், வெல்லம், இவற்றால் தயாரிக்கப்படும் பானகமும், மோருடன் பச்சை மிளகாய், மல்லித்தழை, எலும்மிச்சம் பழம், உப்பு கலந்த நீர்மோர் பானமும் அன்றைய படையலில் சிறப்பிடம் பெறும். அத்துடன் இனிப்புப் பண்டங்களையும் கனி வகைகளையும் படையலில் வைப்பார்கள். இராமர் கோவிலிலோ அல்லது ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படத்துக்கு முன்போ துளசி மாலை அணிவித்து படையல் வைத்து வழிபடுவார்கள். பின்னர் எல்லோருக்கும் படையல் பானகங்களை வழங்குவார்கள்.*

*ஸ்ரீராம நவமி விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு ஆஞ்சநேயர் அருள் எளிதில் கிடைக்கும். வறுமை ஒழியும், பிணி அகலும்.*

*- சக்தி விண்மணி -*





# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களும் அவற்றில் இருந்து மீண்டெழுதலும்

- திரு. செ. சு. கிருஸ்ணமூர்த்தி - (செயலாளர்)

அடியார்களின் கண்ணீரைத் துடைக்கும் வற்றாப்பளைக் கண்ணகியம்மன் ஆலயத்தைக் கூட போரின் தீ நாக்குகள் தீண்டத்தவறவில்லை. அவ்வாறு தீண்டுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் அதே போர்த்தீயிலேயே வேகுவதற்கும் நாட்கள் எடுக்கவில்லை. அந்த அனர்த்தங்களில் இருந்து மீளுவதற்கும் அவளின் அருட்கடாட்சமே காரணமாக இருந்தது என்பதையும் அவளின் அடியார்கள் எவரும் மறுப்பதற்குமில்லை. அந்த வகையிலே பனிச்சையாடி பறங்கியை விரட்டிய பத்தினியாள் தலத்திலே பகைவர்களால் நிகழ்த்தப்பட்ட அனர்த்தங்களையும் அதன்பின் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளையும் தொகுத்து நோக்குவோம்.

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் புகுந்து பின் ஈழமெங்கும் தனது சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கிய 1987இன் நவம்பர் மாதக் காலப் பகுதியில் 2.11.1987 அன்று மாங்குளம் – முல்லைத்தீவு பிரதான வீதி வழியாக முல்லைத்தீவை நோக்கி கவச வாகனங்கள் சகிதம் படைப்பிரிவொன்று நகர்வதாக பரவிய செய்தியால் கிலிகொண்ட தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளைக் கிராமமக்கள் அம்பாளின் ஆலயத்தில் தஞ்சமடைந்தனர். சிலாவத்தை பிரதான வீதியூடாக படைப்பிரிவு நகர்வதை ஆலய முன்றலில் இருந்து நந்திக் கடலூடாக அவதானிக்க முடியும். அவ்வாறு அவதானித்து மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டபோது இரவு 8.30 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து இந்திய இராணுவம் ஆலயத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தியது. ஆலய மண்டபங்கள் பாரிய சேதமடைந்தன. கூரைகள் சிதறின. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எனப் பலர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பனிச்சையாடிப் பறங்கியை விரட்டிய தலத்தில் நடந்த அனர்த்தம் இதுவா என்று மக்கள் கண்ணீர் வடித்தனர். அன்று அன்னை ஆவேசம் கொண்டாள். அதன் விளைவுதான் எந்த முல்லைத்தீவில் இருந்து எறிகணை வீசப்பட்டதோ அதே முல்லைத்தீவுக் காட்டில் இந்திய வல்லரசு பற்களையும் நகங்களையும் இழந்து படுதோல்வி அடைந்தது என்பதை வரலாறு கூறும். இந்த அனர்த்தத்தின் பின்னர் 1989இல் கும்பாபிஷேகம் சிறுதிருத்த வேலைகளுடன் செய்யப்பட்டு ஆலயம் மீண்டும் ஆகம வழிபாட்டுக்குரிய முறைக்கு கொண்டு வரப்பட்டது.

இதன்பின் 1990ம் ஆண்டு வைகாசி விசாகப் பொங்கல் என்றுமில்லாத அளவுக்கு பெருந்திரளான பக்தர் கூட்டத்தின் மத்தியில் நிகழ்ந்தேறியது. அக்காலப்பகுதி இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை

நடந்து கொண்டிருந்த காலப் பகுதி என்பதால் மக்கள் பெருந் தொகையாகத் திரண்டிருந்தனர். பொங்கல் முடிய போரும் வெடித்தது. போர்க் காலத்தில் 30. 07. 1990 அன்று இலங்கையின் விமானப்படையின் வான்கலங்கள் ஆலயத்தின் மீது குண்டுத் தாக்குதலை நிகழ்த்தின. தொடர்ந்து வான் தாக்குதல்களும், இராணுவ முகாமில் இருந்து எறிகணைத் தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டதனால் ஆலய குருக்கள் விடுதி, நோற்பாளர் விடுதி, மண்டபங்கள், மதில்கள், மடங்கள் என்பன சேதமாக்கப்பட்டன. இராசகோபுரம் சேத மாக்கப்பட்டது. பதட்டமான நிலையிலும் ஆலய மண்டபங்கள் மட்டும் சிறுதிருத்த வேலைகளுக் குட்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப் பட்ட அளவில் மக்கள் சென்று வழிபாடு நடாத்தினர்.

இதன்பின் 1992ம் ஆண்டு வைகாசி விசாகப் பொங்கல் வருவதை முன்னிட்டு ஆலய பரிபாலன சபையினர் அரசாங்க அதிபர் ஊடாக பாதுகாப்புப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பொங்கலுக்கு உரிய ஏற்பாட்டைச் செய்தனர். தீர்த்தக்கரைப் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டு இருந்ததால் நந்திக்கடலில் தீர்த்தமெடுப்பதற்காக 11.05.1992 அன்று பி. ப. 6.30 இற்கு காட்டாவிநாயகர் ஆலயத்தில் இருந்து மேளங்கள் முழங்க தீர்த்தக் குடத்துடன் ஆலயத்திற்கு அடியார்கள் வருகை தந்தனர். நந்திக் கடலில் தீர்த்தமெடுக்கத் தயாரானவேளை முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து எறிகணைகள் ஏவப்பட்டன. ஏதும் அறியாத ஆநிரைகள் கொல்லப்பட்டன. அநியாயக்காரர்களால் கொல்லப்பட்ட பசுவொன்றின் முலையில் அதன் கன்று பால்குடித்துக் கொண்டிருந்த காட்சி பயத்தின் மத்தியிலும் பார்த்தோர் மனதை நெகிழ வைத்ததென்றால் மதுரையைத் தகனம் செய்து அதர்மத்தை அழித்தவள் மனது சும்மாவா இருந்திருக்கும்?

அதே ஆண்டு பொங்கல் தினமாகிய 18.05.1992 அன்று மக்கள் ஆலயத்தில் கூடத் தொடங்கினர். பொங்கல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததால் அனர்த் தங்கள் நிகழாது என்று அவர்கள் நம்பினர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தனது அலுவலகத்தை ஆலயச் சுற்றாடலில் அமைத்திருந்தது. வியாபாரிகள் ஆலயச் சுற்றாடலில் கடை பரப்பியிருந்தனர். காவடி எடுக்கும் அடியார்களும், பாற்செம்புடன் பெண்களும் கூட்டங்கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர். இவ்வாறான வேளையில் மதியம் 12.00 மணிக்கு அம்மனுக்குப் பூசைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை மதியம் 12.30 இற்கு முல்லைத்தீவு இராணுவமுகாமில் இருந்து எறிகணைகள் ஆலயச் சுற்றாடலை நோக்கி ஏவப்பட்டன. மக்களை குறிவைத்து மிகத்துல்லியமாக ஒரு சில நிமிட இடைவெளிவிடப்பட்டு நடாத்தப்பட்ட இந்த எறிகணைத் தாக்குதலால் ஆலய வீதி இரத்தக் கடலானது. பலர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். ''அம்மாளே நீ என்ன செய்கிறாய்?'' என்று பக்தர்கள் கூக்குரலிட்டனர். காவடிகளும், பாற்செம்புகளும், பொங்கல் பானைகளும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் அல்லவா? விடுவாளா எங்கள் தாய்? 1996 இல் முல்லைத்தீவில் இருந்த அநியாயக்காரர்கள் அவலக்குரல் எழுப்பி அழிந்தபோது ----- அன்னை எப்படிப்பட்டவள் என்பதை அனைவரும் அறிந்தனர்.

1992ம் ஆண்டு வைகாசி விசாகப் பொங்கலில் நடந்த அனர்த்தம் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றமும் ஏனைய பொது அமைப்புகளும் விடுத்த கண்டனத்தைத் தொடர்ந்து ''ஜயலத்'' விசாரணைக்குழு அப்போதைய ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாஸாவால் அமைக்கப்பட்டு 26.05.1992 அன்று வவுனியாக் கச்சேரியில் விசாரணை நடாத்தப்பட்டது. தற்போதைய பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. குகதாசன், பொங்கல் தினத்தன்று பூசை நடாத்திய சி. பத்மநாதக்குருக்கள் அவர்கள் உட்பட அப்பிரதேச கிராம அலுவலர் என்ற முறையில் நானும் விசாரணைக்குச் சமூகமளித்தேன். மு. ப. 11.20 தொடக்கம் பி. ப. 4.10 வரை நாங்கள் சாட்சியமளித்தோம். அதிலும் கிராம அலுவலர் என்ற ரீதியில் நான் 2½மணித்தியாலம் விசாரிக்கப்பட்டேன். தாக்குதலின் நியாயமற்றதன்மை எம்மால் நிரூபிக்கப்பட்டது. அதன்பின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகச் செய்தி கிடைத்தபோதும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்படி 1992ம் ஆண்டு வைகாசி விசாகப் பொங்கல் அனர்த்தத்தைத் தொடர்ந்து ஆலயம் காலவரையறையின்றிப் பூட்டப்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் அம்மனின் வரலாறு கூறும் சிலம்பு கூறல் காவியத்தின் ஏட்டுப்பிரதி என்னும் அரும்பெரும் பொக்கிஷம் அழிந்து போனது ஒரு பேரிழப்பாகும். தொடர்ந்து நடாத்தப்பட்ட இராணுவத் தாக்குதல் களால் மஞ்சம், மஞ்சமுட்டி என்பன அழிந்து போயின. கோயிற் சொத்துக்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் சேதம் ஏற்பட்டது.

இவ்வாறான அனர்த்தங்கள் நிகழ்ந்த போதிலும் ஆலயப் பரிபாலன சபையினரை அம்மன் உள்ளிருந்து இயக்கியதன் காரணத்தால் அழிவுகளில் இருந்து மீண்டெழுத் தொடங்கினோம். இந்த வரிசையில் முதன்முதலாக மீண்டும் ஒரு மஞ்சம் அமைக்கும் வேலை கடுமையான பொருளாதாரத் தடையின் மத்தியில் ஆரம்பமாகி 06.04.2001 அன்று வெள்ளோட்டமும், 09.04.2001 அன்று அம்மன் திருமஞ்சத்தில் வீதியுலா வருதலும் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மஞ்சத்தை நிறுத்துவதற்கான தரிப்பிடமாகிய மஞ்சமுட்டி அமைக்கும் வேலைகள் 2002 பங்குனி மாதத்தில் பொருளாதாரத் தடையின் மத்தியில் ஒரு பைக்கற் சீமெந்து 4000/=வுக்குக் கொள்வனவு செய்யப்பட்டும் மஞ்சமுட்டி அமைத்து முடிக்கப்பட்டது. மஞ்ச அமைப்புடன் தொடர்ந்து மஞ்சம் செல்வதற்கான வீதி நந்திக்கடலின் முற்பகுதியைப் பல ஆயிரக்கணக்கான "லோட்" மண் போடப்பட்டு நிரப்பப்பட்டு அமைக்கப்பட்டது. தற்போது இருக்கும் இந்த மஞ்ச வீதியின் ஒரு பகுதி முன்னர் கடலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு தொடக்கம் சேதமடைந்திருந்த மண்டபங்கள், அன்னதானமடம், ஏனைய மடங்கள், கலையரங்கம் என்பன திருத்தப்பட்டன. குருக்கள் விடுதி, நூல்நிலையம், முன்பள்ளி என்பன அமைப்பதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகம் நடாத்துவதற்காக மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தரிசன மண்டபம் அகற்றப்பட்டு வில்லு வடிவிலான கூரையுடன் கூடிய புதிய மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது. சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர் ஆலயம் உரிய இடத்தில் புதிதாக பஞ்சாங்க வேலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரத்தின் சேதங்கள் திருத்தப்பட்டு விக்கிரகங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறாக அனர்த்தங்களில் இருந்து மீண்டு எழுகின்ற வலிமையை எமக்கு வழங்கிய அன்னையின் கருணையை உளங்கொள்வோம். இவ்வாறான அனர்த்தங்கள் இனியும் நிகழாது பாதுகாக்க வேண்டுமென அவளை இறைஞ்சுவோம். பக்தியுடன் அவளை இறைஞ்சினால் பனிச்சை மரம் கூட ஆடும். பகையெல்லாம் ஓடும்.

*"அனைவரும் அம்மன் அருள்பாலிக்கப் பிராத்திக்கிறேன்"*

* * *

## நமஸ்காரத்தின் வகைகள்

*ஏகாங்க நமஸ்காரம்* : *தலை மட்டும் குனிந்து வணங்குதல்.*

*திரியாங்க நமஸ்காரம்* : *தலைமேல் இருகரம் கூப்பி வணங்குதல்*

*பஞ்சாங்க நமஸ்காரம்* : *கை இரண்டு, முழந்தாள் இரண்டு, சிரம் - ஆக ஐந்தும் நிலம் பொருந்த வணங்கல்.*

*அஷ்டாங்க நமஸ்காரம்* : *தலை, கை இரண்டு, இரு செவிகள், இரு முழந்தாள், மார்பு இவை பூமியில் படும்படி வணங்குதல்.*



எண்ணெய்க்காப்புச் சாத்துவதற்காக
திரண்டு வந்திருந்த அடியார்கள்



பிரதான கும்பம்
உள்வீதி வலம்வரும் காட்சி



கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண
வருகை தந்திருந்த அடியார்கள்
கண்ணிலானந்த அருவிநீர் சொரிய
கைமலர் உச்சிமேற் குவித்து நிற்கும்
அருட்காட்சி.

## கும்பாபிஷேக காட்சிகள் 2003

கும்பங்கள் வெளிவீதி வலம்வரும் காட்சி





பிரதான ஸ்தூபிக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.





# வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல்

*கிராமிய வழிபாட்டு மரபு வழக்கமுறைகள்*

*-சி.பாலகிருஷ்ணன்-*

அருட்பதியாகிய இவ்வற்புதத்தலத்திலே கண்ணகித் தெய்வத்திற்குப் பொங்கலிடும் திருக்கரும நெறிமுறைகளை என் புல்லிய அறிவினால் தெள்ளிதில் விளக்க முடியாதென அஞ்சுகின்றேன். ஆயினும் அம்மையாரின் அருள் என்னை ஊக்குவிப்பதால் அடியேன் கண்டு கேட்டுற்ற விடயங்களைப் பணிவுடன் உங்கள் முன் வைக்கிறேன்.

இக்கட்டுரையில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாவருடம் வைகாசித் திங்களில் பொங்கலிட்டு வழிபாடாற்றும் நிகழ்வுகளுடன் ஒட்டி அதன் முதல் நாள் இவ் ஆலயத்தில் இருந்து மூன்றரைக்கல் தொலைவில் அமைந்த முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் பொங்கல் முறைகளையும், அதற்கு முந்திய பிந்திய நாட்களில் நடைபெறும் கருமங்களையும் சுருக்கமாகக் கூறுதலே நோக்கமாகும். அஃதாவது "பாக்குத்தெண்டல்" என்ற கருமத்தில் இருந்து "பக்தஞானியார்" பொங்கல் வரையான பத்தொன்பது நாட்களுள்ளும் அடங்கிய பொங்கலோடு சம்பந்தமுடைய வழக்கமுறைகள் பற்றி அவ்வவற்றுடன் தொடர்புடையவர்களுடன் கலந்து அவர்களின் கூற்றுப்படி இவற்றினை வரிசைப்படுத்தி இங்கே தருகின்றேன். இவ்வாலயப் பொங்கலுக்கான முதற்கருமம் "பஞ்சாங்கம் ஆளல்" எனப்படும்.

### *பஞ்சாங்கம் ஆளல்*

ஒவ்வொருவருடமும் அம்மனார் பொங்கல், பண்டைய நாளில் கண்ணகி மாடு மேய்த்த சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த தினமான வைகாசித்திங்கள் விசாகஞ்சேர் பௌர்ணமியைக் கிட்டிய (திங்களில்) சோமவாரம் வரும் நாளில் நடைபெற்று வருவதால் அத் தினத்தையும் அதற்கு முந்திய "பாக்குத் தெண்டல்", தீர்த்தமெடுத்தல் ஆகிய தினங்களையும் தீர்க்கமாக அறிவான் பொருட்டு பஞ்சாங்கத்தில் அத்தினங்களை அறிந்து கொள்வதே பஞ்சாங்கம் ஆளல் எனப்படும்.

பிரதி வருடமும் சித்திரை வருசப்பிறப்பன்று, பூசாரியார் ஆகிய கட்டாடி உடையாரும் மற்றும் கோவிற் தொடர்புடைய பெரியார்களும் சேர்ந்த ஓர் அவையிலே, மேற்படி பொங்குதல், தீர்த்தமெடுத்தல், பாக்குத்தெண்டல் ஆகிய கரும தேதிகளைப் பஞ்சாங்கத்தில் அறிந்து நிர்ணயித்துக் கொள்வார்கள். இதன்படி உரிய தினத்தில் பாக்குத் தெண்டல் நடைபெறும்.

## பாக்குத் தெண்டல்

மங்களகரமான அந்த வழமையான (பொங்கல்) கருமம் நடைபெறப் போகிறதென்பதை உபகரிப்புக் காரருக்கும், மற்றும் பொதுசனங்களுக்கும், புலப்படுத்தலே இதன் நோக்கமாகும். பொங்கலுக்கான அரிசி, மடைக்கான பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் வளந்து ஆதியாம் பொருட்களை இப்பகுதியில் உள்ள சில பெரியார்கள் தொன்று தொட்டு இன்றுவரை வழமையாக உதவி வருகின்றார்கள். இவர்களையே உபகரிப்புக்காரர் எனக் கூறுவர். இந்த உபகரிப்புக்காரர்களிடம் மங்கலப் பொருட்களான மஞ்சள், பாக்கு, வெற்றிலை என்பவற்றைப் பெறுதலையே பாக்குத் தெண்டல் எனக் கூறுவர் . முற்கூறியபடி பஞ்சாங்கமாளலில் கரும நாட்களை அறிந்து வைத்துள்ள பூசாரியார்., பாக்குத் தெண்டும் தினத்துக்கு மூன்று நாட்களுக்கு முன் பாக்குத் தெண்டும் காரியமியற்றுவதற்கு நியமிக்கப்பட்ட கோபியக் குடி மகனாருக்குச் சம்பிரதாய முறைப்படி அறிவிப்பார். அவரும் அதனை ஏற்று அத்தினத்துக்கு முன்னாள் ஞாயிற்றுக்கிழமை இரவே காட்டு விநாயகர் ஆலயத்தில் பூசாரியுடன் வந்து தங்கி இரவு மூன்று மணியளவில் நியம அனுட்டானங்களை முடித்து, ஆசார சீலராகி விநாயகரையும் அம்மனையும் பூசித்து , நேர்த்தி செய்து பூசாரியாரால் கொடுக்கப்படும் மஞ்சள் சீலைத்துணியால் பொதியப்பட்டுள்ள ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, சிறு மஞ்சள் துண்டு ஆகிய பொருட்களைப் பய பக்தியுடன் கையேற்று, விடியுமுன்னதாக முள்ளியவளையில் உள்ள உபகரிப்பாளரின் வீட்டு வாசலில் தமது வாயை வெண் துணியால் மூடிக்கட்டி, வாய் பேசாது வந்து நிற்பர். இவருடைய வருகையை முன்பே எதிர்பார்த்தவரான அவ்வீட்டுக்காரர், தானும் முன்பே முழுகிக்குளித்து, ஆசாரமுடன் பாக்குத் தெண்ட வாசலில் வந்து நிற்பவர் வைத்திருக்கும் மஞ்சட் சீலைச் சிறு பொதியுள், தான் தயாராக வைத்திருந்த பொருட்களான மஞ்சள் துண்டு, பாக்கு, வெற்றிலை, தட்சணைப்பணம் ஆகிய மங்கலப் பொருட்களை வைத்து விடுவார். இக்கருமம் இனிவரப் போகின்ற பொங்கலுக்கு வேண்டிய தன்னால் வழமையாக உதவப்பட்டனவற்றை இப்பொழுதும் செய்வதற்குத் தனக்குப் பரிபூரண விருப்பம் என்பதை உபகரிப்புக்காரர் காட்டிக் கொள்ளும் ஒரு சம்பிரதாய நிகழ்ச்சியாகும். இவ்வண்ணம் பாக்குத் தெண்ட வருபவர் முள்ளியவளையிலும், பின்பு தண்ணீரூற்றிலும் அதன் பின் வற்றாப்பளையிலுமாக வழமைப் பிரகாரம் ஒன்பது உபகரிப்புக்காரர் வீடுகளுக்குச் சென்று அவர்களால் கொடுக்கப்படும் பாக்காதியாம் மங்கலச் சம்மதப் பொருட்களை வாங்கிக் கொண்டு அன்று மாலை ஒன்பது மணியளவில் திரும்பவும் காட்டு விநாயகர் பதிக்கு வருவார். அதன்பின் அந்தப் ஆலயவளவில் நிற்கும் வேப்பமரக் கொம்பரில் அந்த பாக்கு முடிச்சைக் கட்டிவிடுவது வழக்கமாகும். இங்ஙனம் பாக்குத் தெண்டல் வைபவம் வற்றாப்பளைப் பொங்கலுக்கு முன்னதாக பதினைந்தாம் நாள் சோமவாரத்தில் நடைபெறுவது வழமையாகும். இது இலங்கையில் நாமறிந்த வேறேந்த தெய்வத் தலத்திலும் மேற்கொள்ளப்படாத இத்தலத்துக்கே விசேடமாய் உரியதான ஒரு வழமை நிகழ்ச்சியாகும். இப்பாக்குத் தெண்டல் தினம் வந்ததும் இப்பகுதிவாழ் மக்கள் பொங்கல் வந்துற்றதெனப் பொலியும் மனத்தினராய் மிக்க மகிழ்வுற்று இதற்கடுத்த எட்டாம் நாள் தீர்த்தமெடுத்தல் நிகழப்போகின்றதே என்று எண்ணி சந்தோசிப்பார்கள். அஃதேபோல் அத்தினத்திற்கு எட்டாம் நாளாகிய சோமவாரத்தில் தீர்த்தமெடுத்தல் நடைபெறும்.

## தீர்த்தமெடுத்தல்

பாக்குத் தெண்டிய நாளுக்குப் பின்னும் பொங்கலுக்கு முன்னுமாகிய எட்டாம் நாள் திங்கட்கிழமை கண்ணகியின் அழியாத அற்புதத்தை உலகில் வேறெங்கும் நடைபெற்றுவராத மகிமை நிறைந்த செயலை மக்களுக்கு உணர்த்தி வருவதான தீர்த்தமெடுத்தல் வைபவம் சிறப்பாக நடைபெறும். அன்று இப்பகுதி வாழ் மக்கள் விரதானுட்டானமுடன் இருந்து பிற்பகல் ஒருமணியளவில் காட்டு விநாயகர் ஆலயத்தில் தீர்த்தமெடுக்கச் செல்லும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காகச் செல்வர். அங்கு தீர்த்தமெடுக்கக் கொண்டு செல்லும் வெண்கலப் பாத்திரத்தின் வாயை வெண்துணியால் மூடி அதற்குப் பூசைகள் செய்து விநாயகப் பெருமானையும் அம்மனையும் வேண்டித் தோத்திரஞ் செய்து தீர்த்தமெடுக்கப் புறப்பட ஆயத்தமாவார். இதுவரை பிற்பகல் மூன்று மணி நேரம் ஆகிவிடும். தீர்த்தமெடுக்கும் பாத்திரத்தைச் சுமந்து செல்ல வேண்டிய கடமையைச் செய்பவர் (பாக்குத் தெண்டியவர்) தன் வாயை வெண்துணியால்

மறைத்துக் கட்டி அப்பாத்திரத்தைப் பூசாரியார் மற்றும் உரிமை சேர்ந்தவர்கள் கை தொடத் தூக்கித் தன் தோளில் பக்திச்சிரத்தையுடன் வைத்துக் கொண்டு மேலாப்புப் பிடித்துவர, பறைமேளங்கள் முழங்க, விரதம் அனுட்டிப்பவர்களும் அம்பாள் அடியார்களும் பின்தொடர, இவ்வாலயத்திலிருந்து பாதசாரிகளாகப் புறப்படுவார்கள். இந்த வைபவத்தில் பூசாரியாரும், ஐயரும், பெண்களும் தீர்த்தமெடுக்கச் செல்வதற்கு அவர்களுடன் போவதில்லை. இங்கிருந்து குறுக்கு வழியாகச் சென்று மாங்குளம் –முல்லைத்தீவு பிரதான வீதியைக் கடந்து, முள்ளியவளை வற்றாப்பளை வீதியால் சென்று, குஞ்சுக்குளம் தாண்டி, தாழைகள் நிறைந்த வழிப்போந்து, புன்னை மரஞ் சூழ் புதரிகுடா என்னும் புனல் சேர் இடத்தினூடாக, உம்பரும் போற்றும் ஊற்றங்கரைப் பதியை நண்ணி, மீண்டும் தண்ணீரூற்று ஆலடிச்சந்தியில் மாங்குளம் – முல்லைத்தீவுப் பிரதான வீதியில் செல்வார்கள். இவ்வூர்வலத்தில் மேலும் ஆங்காங்கு அடியார்களும், சிறுவர்களும் சேர்ந்து கொள்வார்கள். இங்ஙனம் பிரதான வீதியாற் சென்றவர்கள் முல்லைத்தீவையும், தண்ணீரூற்றையும் இணைத்து நிற்கும் பெரும் பாலம் தாண்டி சிறிது தூரம் சென்றதும் சிலாவத்தை என்னும் கிராமத்துக்குச் செல்கின்ற பாதையிற் பிரிந்து செல்வார்கள். உலகத்திலே வேறெங்கும் இல்லாத அற்புதத் தீர்த்தம் தன்னிடத்தே உண்டென்று அகங்களிக்கும் ஆழி சூழ்ந்ததால் சிறப்புப் பெற்ற சிலாவத்தை என்ற அக்கிராமத்தினூடாக தீர்த்தம் எடுக்க வேண்டிய வடகடலின் கரையை அண்ணுவர். இவர்கள் வருகையை எதிர்பார்த்து முன்னதாகவே கரையோர மக்கள் நறுங்கனிகள் நல்கிடும் நாவல் மரங்கள் நிறைந்து நிழலுடைய இக்கரையில் நிறைகுடம் வைத்து, மடைபரவி ஊர்வலத்தினரை வரவேற்கச் சிரத்தையுடன் காத்திருப்பர். இவர்களின் மடையில் தரித்துப் பூசை வழிபாடாற்றி சிரமந்தீர்த்துக் கொண்டு கடலில் தீர்த்தம் அள்ளும் காரியத்தில் ஈடுபடுவர்.

தீர்த்தமெடுக்கும் பாத்திரத்தினுடன் அதைக் கொண்டு வந்தவரும், அவருக்கு உதவியாக மற்றும் இருவரும் சேர்ந்து மூவருமாகக் கரையில் இருந்து அலைவீசி ஆர்ப்பரிக்கின்ற ஆழியில் இறங்கி வாயளவு நீர் வரைக்கும் சென்று நிற்பர். பேரலைகள் வந்து வந்து அவர்களை மோதி மோதிச் செல்லும். பேரலைகள் வருகின்ற நேரத்தில் பாத்திரத்தைக் கழுவி மீண்டும் தோளில் வைத்தக் கொண்டு அடுத்த அலை வந்து மூடும் பொழுது பாத்திரத்தில் நீரை நிறைத்துக் கொள்வர். இரண்டாவது அலை வந்து போனதும் நிறைந்தாலும் நிறையாவிடினும் ( அநேகமாக நிறைவது வழக்கம்) கரையேறி விடுவார்கள். நீர் நிறைந்த பாத்திரத்தைத் திரும்பவும் அங்குள்ள மடையில் வைத்துப் பூசனைகளை நிறைவேற்றிய பின் மாலை ஆறுமணியளவில் அங்கிருந்து புறப்படுவர். அப்போது அக்கரையின் வெண்மணலின் சிறிதளவு, ஒரு துணியில் முடிந்து கொண்டு தீர்த்தக்குடத்துடன் வேறொருவர் அம்முடிச்சையுங் கொண்டுவர போன போன வழியிலேயே திரும்பவும் வருவார்கள். இப்பொழுது "தீர்த்தக்குடம்" குடிசனமுள்ள பகுதிகளில் எடுத்து வரப்பட மாவிலை தோரணங்கள் தூக்கிப் பந்தரிட்டு அலங்கரித்து, நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி தூப தீப ஆராதனையுடன் தீர்த்தக்குடத்தை மக்கள் வரவேற்று, வழிபட்டு நிற்பர். அம்மனே திருவுலா வருகிறாள் என்று எண்ணுவது போல் பயபக்தியுடன் வணங்கி வரவேற்று கண்ணகி அம்மனுக்கு அரோகரா, என்று திருக்கோசமெழுப்பி அடியவார்களுக்கும் தாக சாந்தி செய்வித்து வழியனுப்பி நிற்பர். இங்ஙனம் தீர்த்தக்குடம் வரும்போது இருட்டி விடுவதால் வீதியின் இருமருங்கிலும் நிறைகுடம் குத்து விளக்குகளின் வரிசையின் அலங்கார எழில்தனை என்னென் றுரைப்ப! இங்ஙனம் வரிசை வரிசையாக வைக்கப்பட்ட நிறைகுடப் பந்தர்களில் தரித்துத்தரித்து இடையிடையே வைக்கப்பட்ட மடைகளையும் கண்டு அன்று இரவு ஒன்பது மணியளவில் காட்டு விநாயகர் ஆலயத்தைத் திரும்பவும் அண்மிக்கும் ஆலயத்தில் தீர்த்தக்குடத்தை வரவேற்க விசேட பூசைகள் நடைபெறும். இதத்தருணம் அடிக்கப்படும் ஆலய மணியின் ஓசையும், பறை மேளங்களின் ஒலியும் சேர்ந்து, அப்பகுதி எல்லாம் பரவி அம்மன் அடியார்களின் மெய்சிலிர்த்து, அவர்களின் உள்ளமெல்லாம் அம்மனை வழிபட்டு நிற்க வைக்கும். தீர்த்த மெடுத்தல், தீர்த்தக்குடம் வருதல், ஆகிய வைபவங்கள் முற்றுப் பெற, கொணர்ந்த உப்பு நீரில் ஒப்பரிய அற்புத விளக்கை எரிக்கும் திருக்கருமம் தொடங்கும்.

## *உப்பு நீரில் விளக்கெரித்தல்*

அன்று இரவு 10 மணியளவில் காட்டு விநாயகர் ஆலயத்தில் உள்ள அம்மன் மண்டபத்தில் அம்மன் கும்பம் வைத்து, மடைகள் பரவி, கொண்டுவரப்பட்ட உப்புத்தீர்த்தத்தில், ஒரு சிறிய மட்கலத்தில் கொள்ளக்கூடிய நீரினை எடுத்து அதனை அம்மடையருகே கும்பத்துக்கு ஒளி வீசக்கூடிய வகையில், கடற்கரையில் எடுத்து வரப்பட்ட வெண்மணல் முடிச்சின் மீது வைத்த துணியில் ஆக்கிய ஒரு திரியினை, அந்த மட்கலய நீரில் அதன் நடுப்பாகம் உப்பு நீரில் நனையும் விதத்தில் திரியின் இரு முனைகளையும் கலயத்தின் வாய் விளிம்பில் பதிய வைத்து அடியார்களின் அரோகரா ஒலியும், மணி ஒலியும் பரவசமூட்ட அந்தத்திரியின் ஒரு முனையில் சிறு தீயிட்டு அந்த அற்புத விளக்கை ஏற்றி வைப்பார்கள். அந்த விளக்கும் சுடர்விட்டெரியத் தொடங்கும். நீரில் நனைந்தும் நிறையாது நின்றெரியும் சோதி மணி விளக்கின் தொன்மையான பெருமைதனை, விஞ்ஞானம் வியக்கும் விந்தைகளை எங்ஙனம் சொல்லக் கூடும்! விளக்கேற்றியதும் கும்ப பூசனைகள் செய்து உடுக்கடித்து, அம்மன் சிந்துபாடி, அம்மனை வழிபட்டு நிற்பர். அத் தருணம் காப்பியமான "சிலம்புகூறல்" என்னும் ஏட்டுப்பிரதிக் காப்பினைச் சொல்லிப் படிப்பது தொடக்கி வைக்கப்படும். இக்காப்பியம் இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குத் தொடர்புபடுத்தி இருவர் படிக்கும் பொழுது ஏனைய அடியார்கள் சூழ இருந்து, அம்மனின் திரு அவதாரத்தினையும் அது சார்ந்த வரலாற்றினையும் அறிந்து இன்புறுவர்.

இத்தினத்தில் இருந்து அம்மன் பக்தர்களும் அடியார்களும் பொங்கல் வரும் வரை எட்டு நாட்களும் விரதம் அனுட்டித்து நிற்பர். தீர்த்தமெடுத்த நாளில் இருந்து அம்மன் பொங்கலுக்கு அடுத்த நாள் செவ்வாய் வாரம் வரை இப்பகுதி மக்கள் காடுகரம்பை போன்ற இடங்களுக்குச் செல்ல மாட்டார்கள். இவ்வண்ணம் மக்கள் அத்திருநாளுக்குப் பெருமதிப்பளித்துப் பயபக்தி உடையவர்களாய் இருப்பர். இந்த எட்டு நாட்களுக்கும் கோயில் வழிபாடு சம்பந்தமான சில கருமங்களை மேற் கொள்வதற்காக சில பேர்களை வழமையாக நியமிப்பார்கள். இவர்களை நோற்புக்காரர் என அழைப்பர்.

## *நோற்புக்காரர்*

இவர்கள் இவ் எட்டு நாட்களும் நோன்பிருந்து ஆசாரமுடன் காட்டு விநாயகர் ஆலயத்தில் இவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள நோற்பாளர் மடத்தில் தங்கி, தமது வீடுகளுக்குச் செல்லாமல் தமக்கு வழமையாக உள்ள பணிகளைத் தவறாது இயற்றிடுவர். இந்நோற்பாளர்களில் பூசாரியார், தச்சர், கோபியர், வண்ணார், பறையர், வேளாளர், ஐயர் என்னும் இவ்வர்ணத்தவர்கள் அடங்குவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பணிகள் உண்டு.

### ஐயர்-

இவர் நோற்பாளர் மடத்தில் தங்காது கோயிலில் தங்கியிருப்பார். இவர் ஆகம விதிகளுக்கு அமைய அருச்சனை, பூசை என்பவற்றை நிறைவேற்றுவதுடன் பொங்கலுக்கான கைங்கரியங்களிலும் பூசாரியாருக்கு உதவுவார்.

### பூசாரியார்-

இவர் அம்மனுக்குரிய பொங்கலைச் செய்பவர். அத்துடன் மடைபரவுதல், வளந்து நேரல், பொங்கிப் படைத்துப் பூசிக்கட்டாடுதல், அம்மனைக் கும்பத்தில் ஆவாகனம் செய்தல், அம்மன் சிந்து தோத்திரம் ஆகியனவற்றைச் செய்தல், வேளை விபூதி கொடுத்தல் என்பன இவரின் வழமையான கருமங்களாகும்.

### கோபியர்-

பாக்குத் தெண்டல், தீர்த்தமெடுத்தல், உபகரிப்பாளரால் கொடுக்கப்பட்ட நெல்லைக்குற்றி அரிசியாக்கி பொங்கலுக்கும், நோற்பாளர் சமையலுக்கும் உதவுதல். பொங்கிப் படைக்கும் கருமங்களுக்கு உதவுதல் என்பன இவரது பணிகள். (நோற்பவருக்கான நெல்லைக் குற்றுதலை நோற்புக் குற்றல் என்பர்).

### தச்சன்

தீர்த்தமெடுக்க உதவியாகச் செல்லல், தீர்த்த விளக்கிற்கு வேளாவேளைக்குத் தீர்த்தக் குடத்தில் உள்ள உவர் நீரை விளக்கிற்கு விடுதல். மடை பரவுவதற்கு உதவுதல், சிந்து படிக்கும் போது உடுக்கை அடித்தல். அம்மனின் சின்னப் பேழையை மடைப் பண்டத்துடன் கொண்டு செல்லுதல், பக்தஞானிக்குப் படைத்தல் ஆகிய கருமங்கள் இவருக்குரியதாகும்.

### பறையர்

தீர்த்மெடுக்கச் செல்லும் போதும் மற்றும் பூசைக்குரிய காலங்களிலும் பறையை ஒலித்து பக்தியை மேலிட வைத்தல் இவரது பணிகள்

### வண்ணான்–

வேண்டிய நேரம் மேலாப்பு பிடித்தல், கச்சு நேரும் துணியை உதவுதல். தூளி பிடித்தல் என்பன இவரின் பணிகளாகும்.

### வேளாளர்

இவர்களே பொங்கலுக்குரிய வளந்துகளைச் (மட்பாத்திரங்களை) செய்து கொடுப்பவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் பொங்கலின் ஓர் அங்கமாகி தம்மால் ஆகவேண்டிய பணிகளைச் செய்து வருவர். இங்ஙனம் நோற்பாளர்கள் நீரில் விளக்கேற்றி அதை அணையாது பாதுகாத்து வருவதுடன் தொடர்ந்து காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெறுகின்ற ஏழு நாள் கருமங்களையும் இனி நோக்குவோம்.

## *காட்டு விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து ஏழு நாட்கள்*

இங்கு தீர்த்த விளக்கேற்றிய திங்கள் இரவு போல் அடுத்து வரும் புதன், வெள்ளி ஆகிய இரண்டு இரவுகட்கும் பழைய கும்பம் குலைக்கப்பட்டு புதிதாக வைக்கப்படும். மடைபரவி அம்மன் பூசைகள் நிகழும். இக்கருமங்களை நோற்புக் காரர்களே செய்து வருவார்கள். கும்பம் மற்றும் மடைக்கான பொருட்களை உபசரிப்புக்காரர் வழமை போல் உதவி வருவார்கள். சிலம்பு கூறல் கதைத் தொடர், ஒவ்வொரு இரவும் தொடர்ந்து படிக்கப்படும். ஏழாவது நாளாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு மற்ற இரவுகளைப் போலல்லாது மிகச் சிறப்பான இரவாக அமைந்ததாயிருக்கும். இத்தினத்தின் காலையில் இருந்தே பல இடங்களிலுமிருந்து பக்தர்கள் இவ்வாலயத்தில் இரவு நடைபெற உள்ள பொங்கலைக் காணவும் நேர்த்திக் கடன்களைச் செய்யவும் வந்து கூடுவர். தங்கள் தங்கள் விருப்பப்படியான நேர்த்திகளை நிறைவேற்றி, அர்ச்சனை முதலியவற்றையும் செய்வித்து வழிபடுவார்கள். இந்த இரவுதான் கண்ணகி அம்மையார் இவ்வாலயத்தில் நடைபெறும் பொங்கல் மடைகளைக் கண்டு அடுத்த நாள் திங்கள் காலை வற்றாப்பளைக்கு ஏகினாள் என்பது ஐதீகம். இதனை ஆதாரபாவனையாகக் கொண்டு தான் இத்தினத்தில் இங்கு பொங்கல் விழா நடைபெறுகின்றது. இவ்விரவு பத்து மணியின் மேல் பொங்கலுக்கான ஆயத்தம் நடைபெறும். விநாயகருக்கு ஒரு வளந்தும், இருபக்க வளந்துகளும், அம்மனுக்கு ஒரு வளந்தும் வைத்துப் பொங்கப்படும். இப் பொங்கலுக்கு பச்சை அரிசியும், பசுப்பாலும் தான் சேர்க்கப்படும். சர்க்கரை, பயறு, என்பவை சேர்ப்பதில்லை. மாட்டுக் காரச் சிறுவர் படைத்த முறையை நினைவு கூருவதாக இது அமைந்துள்ளது. ஒருபுறம் பொங்கற் கருமம் நடைபெற்றுக் கொண்டிருக்க இன்னொரு புறத்தில் "சிலம்பு கூறல்" காவியம் படிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். படிப்பவரைச் சுற்றி அம்மன் அடியார்கள் கண்ணகியின் மகிமை நிறைந்த கதை தன்னைக் கேட்டு ஆனந்தக் கண்ணீரும், புளகாங்கிதமுறலும் மெய்யுரு கலுமாகி நேரில் காண்கின்ற மனதுடையார் போன்று கதையில் ஒன்றி விடுவர்.

இவ்வண்ணமிருக்க பொங்கி முடிவுற்றதும் முன்பு வைக்கப்பட்ட மடைகளிலேயே அம்மனுக்கும், விநாயகருக்கும் நிவேதித்து தூபதீப ஆராதனை செய்து வழிபட்டு அம்மனின் அருள் பெற்று, வேளை, விபூதி, பிரசாதம் முதலியனவும் பெற்றுக் கொள்கின்றார்கள். இங்கு மேற்படி கருமங்கள் யாவும் நிறைவேற திங்கள் அதிகாலை நாலுமணியாகி விடும். இத்தருணத்தில் மடைப்பண்டம் கொண்டு செல்கின்ற கருமவைபவம் ஆரம்பிக்கும்.

## *மடைப்பண்டம் செல்லுதல்*

காட்டு விநாயகர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் முடிவுற்றதும் அடுத்த நாள் திங்கள் இரவு வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தில் நடைபெறும் பொங்கலுக்குரிய மடைக்கு,உரிய பொருட்களை இவ் ஆலயத்தில் இருந்தே கொண்டு செல்வது வழமையாகும். அதனையே"மடைப்பண்டம் செல்லுதல்" என்பர். இவ் ஆலயத்தில் இருந்து மூன்றரைக் கல் தொலைவிலுள்ள கண்ணகி ஆலயத்துக்கு மடைக்குரிய பொருட்களான வாழைப்பழக் குலைகள், பாக்கு, வெற்றிலை முதலியனவும் பொங்குதற்குரிய அரிசி, வளந்து என்பனவும், அம்மன் கும்பம் வைப்பதற்கான சாமான்கள், நீர்விளக்கு, தீர்த்தக் குடம் என்பனவும்,

மற்றும் அம்மன் பத்ததிச் சின்னங்களடங்கிய பேழையும், ஆகிய இப் பண்டங்களை திங்கள் அதிகாலை ஐந்து மணியளவில் வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்துக்குக் கொண்டு செல்வதற்காக நோற்புக்காரர்கள் எடுத்து வர பறைமேளம், சங்கு, சேமக் கலம் முதலிய வரிசை வாத்தியங்களுடன் தீ வெட்டிகள் ஏந்தி, "கண்ணகித் தாயாருக்கரோகரா, அம்மனுக் கரோகரா" என்ற பக்தி மிகு ஒலி பரவ, பய பக்தியுடன் மடைப்பண்டம் செல்லத் தொடங்கும். "கண்ணகித்தாயே! தயாபரியே! நீ செல்லும் வழியே நாமும் உனைப்பாடிப் பரவிப் பணிந்தேத்தி உன் கூடவே வருவோம்" என்பதே போல் பல்லடியார்களும் இந்த மடைப் பண்டத்துடன் செல்லுவார்கள். இவ் வாலயத்தில் இருந்து நேராகச் சென்று மாங்குளம் முல்லைத்தீவுப் பிரதான வீதியைக் கடந்து, முத்தமிழ் வளர்ந்து வரும் முள்ளியவளைப் பதியை விடுத்து முள்ளியவளை –வற்றாப்பளை வீதி வழியாகச் சென்று, முப்போதும் கதிரறுக்க விளைவு தரும் களனி சூழ்ந்த பள்ளவெளி வீதியால் மடைப்பண்டம் செல்லும். பின் வற்றாப்பளை– முல்லைத்தீவு வீதியைத் தாண்டி, தெய்வம் உறைந்திடு திருப்பதியாம் வற்றாப்பளையை நோக்கி ஆலய வீதியால் சென்று கொண்டிருக்கும். மடைப் பண்டம் ஆலயத்தை அண்மிக்கின்ற வேளையில், அம்மனின் பொங்கல் கண்டு அடியார்கள் பேரானந்தக் கடலில் மூழ்கிடும் காட்சிதனைக் கண்டின்புறுவான் போல், ஆதவனும் ஆழியின் நீங்கித்தன் எழில் கிரணங்களைப் பரப்பி எழுகின்ற போது பல்லோரும் பார்த்திருந்த அந்தக் திங்கட் போது புலரத் தொடங்கும். பொழுது புலர அடியார்கள் மனமும் மலர்ந்து நிற்கும். மடைப்பண்டம் அம்மன் ஆலயத்துள் பிரவேசித்ததும் வரவேற்று உரிய இடங்களில் வைக்கப்படும். இந்நேரம் திங்கள் காலை ஆறுமணி ஆகிவிடும். இத்துடன் இக்கருமம் முடிய, ஏழுநாட்களாக முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கருமங்கள் நிறைவு பெறும். மடைப்பண்டம் வந்ததில் இருந்து வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் விழாக் கருமங்கள் அரம்பித்து வைக்கப்படும். அமம்ன் கும்பம் வைத்து மடை பரவுதல் முதற்கருமமாக அமையும்.

## கும்பம் வைத்தல்

சிவாகம விதிப்படியாக வைக்கப்படும் கும்பத்திற்கும் (கடஸ்த்தாபனம் ) இக் கண்ணகி ஆலயத்தில் வைக்கப்படும் கும்பத்திற்கும், நோக்கம் ஒன்றாயினும் வைக்கும் முறையிலே பேதமுண்டு. இங்கு வைக்கப்படும் கும்பத்திற்கு நூல் சுற்றி நவதானியங்கள் இடப்படுவதில்லை. மாவிலைக்குப் பதிலாக தென்னங்காம்பு நெட்டுக்களே வைக்கப் படும். மாவிலைகள் வைப்பதில்லை. இங்ஙனம் வைக்கும் முறையிலுள்ள வேற்றுமைக் காரணிகளைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

மடைப் பண்டத்துடன் கொண்டு வரப்பட்ட கும்பப் பாத்திரங்களையும், அதற்குரிய மற்றும் பொருட்களையும் உபயோகித்தே இங்கு கும்பம் வைக்கப்படும். கும்பம் வழமையாக வைக்குமிடத்தை நீரால் சுத்திகரித்து அவ்விடத்தில் அரிசியை வட்டமாகப் பரவி அதன்மேல் அம்மன் மந்திரம் தாவி, அதன் மேல் கும்பப் பாத்திரத்தை நிறுத்தி, அதன் மீது தேங்காயை வைத்து மாவிலைக்குப் பதிலாக இளம் தென்னம் பாளை நெட்டுக்களையும் வைத்து, அம்மன் முகவடாகத்துள் மஞ்சட் காப்புச் சாத்தி அம் முகவடாகத்தை கும்பத்தின் சிரசான தேங்காயில் பதித்து, பட்டுவஸ்திரம் சாத்தி பூக்கள் இட்டு, அம்மனை அக்கும்பத்தில் பூசனைக்காக ஆவாகனம் செய்து கொள்வதே கும்பம் வைத்தலாகும். இதனைப் பூசாரியாரே செய்து கொள்வார்.

இத்தருணத்தில் மடைப்பண்டத்துடன் கொண்டு வரப்பட்ட உவர் நீரில் எரிகின்ற விளக்கும் இங்கு ஏற்றி வைக்கப்படும். கும்பம் வைத்து நீர் விளக்கை ஏற்றி ஆனதும் மடைபரவுதல் செய்யப்படும். அம்மடை பரவுவதற்கு முன் கச்சுநேரல் என்ற வழமையான கருமம் நடைபெறும்.

## கச்சு நேரல்

மடைக்குரிய பொருட்களைப் பரவுவதற்கு வெள்ளைத்துணியை நேருதலையே கச்சு நேரல் என்பர். வண்ணானால் கொடுக்கப்படும் தூய்தான இந்தத் துணியைப் பூசாரியார் வாங்கி, அதனைக் கொய்து அதன் ஒரு அந்தம் முழுவதையும் இரு கைகளாலும் அடக்கிப் பிடித்து, நான்கு திக்குமுகமாகவும் நின்று ஒவ்வொரு திசையிலுமுள்ள காவல் தேவாதிகளை வேண்டி நேருதலையே கச்சுநேரல் எனக் கூறப்படுகின்றது. இந்நேரம் பறைமேளம் முழங்கப்படும். பூசாரியார் உருக் கூடிய நிலையில் காணப்படுவார். இங்ஙனம் நேர்ந்து முடிவுற்றதும், கும்பத்தின் முன் மடைபரவுமிடத்தில் அத்துணியை விரித்து விடுவார்கள். அதன் மேல் தான் மடை பரவப்படும்.

### *மடை பரவுதல்*

மடைப் பண்டங்களாகக் கொண்டு வரப்பட்ட வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றில் ஒவ்வொன்றிலும் ஆயிரம் ஆயிரமாக எண்கணக்கிட்டு வைக்கப்படுதல் வழமையாகும்.

முன் கூறியபடி நேர்ந்து விரிக்கப்பட்ட வெண்துணியின் மீது வாழைப்பழம் , வெற்றிலை, பாக்கு, இளநீர் ஆதியாம் பொருட்களுடன் இளந் தென்னம் பாளையின் மலர்கள் உதிர்த்திப் பரப்பி விடுவார்கள். இது இங்குள்ள மடையின் ஒரு விஷேடமாகும். இங்ஙனம் மடைபரவியதும் கும்ப பூசனை வழிபாடு நடைபெறும். "கும்பத்தழகி" என்று கூறப்படும் கண்ணகித் தெய்வத்தை கும்பத்தில் ஆவாகித்து அருளைப் பெறுவான் பொருட்டு வழிபாட்டைத் தொடங்கி வைத்ததும் இந்த நேரத்தில் இருந்து அடியார்கள், நேர்த்தியாளர்கள் தங்கள் விருப்புகளுக்கேற்ற முறையில் நேர்த்திக் கடன்களைச் செய்து வழிபாடாற்றி தமது தலையாய நோக்கினை நிறைவு செய்து கொள்வார்கள்.

### *நேர்த்திக் கடன் நிறைவேற்றல்*

அம்மனை வேண்டியதால் தங்களுக்குற்ற நோய் பிணிகள் நீங்கி சுகமடைந்தமைக்கும், தமது இஷ்டங்கள் பூர்த்தியாகி நல்வாழ்வு பெற்றமைக்கும் அடியார்கள் அம்மனின் சன்னிதியில் அங்கப் பிரதட்சணம், அடியளித்தல், தீக்குளித்தல், காவடி, பாற்செம்பு, தீச்சட்டி எடுத்தல், பொங்குதல், அர்ச்சனை செய்வித்தல், மடிப்பிச்சை கொணர்தல், நேர்த்தியின் போது தாங்கள் தீர்மானித்த பொருட்களைக் காணிக்கையாகச் செலுத்துதல் என்பன போன்ற வகையில் தமது நேர்த்திகளைப் பூர்த்தியாக்கிக் கொள்வர். இங்ஙனம் அடியார்கள் நேர்த்திகளைச் செய்தும் கண்நோய், வெப்புநோய் முதலியவற்றால் வாழ்க்கை பாதிக்கப்படாமலும் , மற்றும் கஷ்டதுன்பங்கள் நீங்கி சுகவாழ்வு பெறவும், மறுமையில் பேற்றடையவும், கதிர்காமக் கரை யாத்திரை போவதற்கு உத்தரவு பெறவும், கண்ணகித் தாயாரை மனங்கசிய வேண்டி நின்று பிரார்த்தித்துக் கொள்வார்கள். அடியார்களின் ஆடல்கள், பாடல்களும், ஆனந்தக் கூத்துக்களும் வீதி எங்கணும் நிலவி நிற்கும்.

இக்கட்டுரை பொங்கற் கிரியா கருமங்களை விளக்க வேண்டுமென்னும் நோக்க முடையதாதலின் அந் நோக்கம் மாசுறும் என்பதாலும், கட்டுரை விரியும் என்றஞ்சியும் இனிப்புறக்கரும நிகழ்ச்சிகளைக் கூறாது விடுகின்றோம்.

திங்கள் அதிகாலையில் இருந்தே கோயில் வீதி எங்கும் வந்து நிறைந்துள்ள அடியார்கள் அந்திப் பொழுது எப்போது வரும்; அம்பாளின் பொங்கல் மடைகண்டு பூசித்து மகிழ்வோம் எனக் காத்திருப்பர். இவர்களின் மனம் சலிப்புற நேருமே என்று அஞ்சியும், தான் பெற்ற இன்பம் மற்றவர்க்கும் என்பது போல் ஆதவன், அன்று பகல் முழுவதும் அம்மனின் ஆலயத்தில் தான் கண்ட அரிய காட்சிதன்னை அம்புலியும் காணவைத்து விட வேண்டும் என்ற ஆசை மிகுதியாலும், கிழக்கெதிர்சாய, அம்மன் அடியார்கள் தவங்கிடந்த அந்த மகிமை பெற்ற திங்கள் இரவு, மெல்லென வருகின்ற வேளையிலே தேவியாருக்குரிய பொங்கல் ஆரம்பிக்கத் தொடங்கி விடும். இத்தினத்தின் காட்சியிலாத பகலும் மாட்சியுடைய இரவும் சங்கமிக்கின்ற அந்த அந்திப் பொழுதினிலே தான் கண்ணகிக்குப் பொங்கல் செய்ய அடியார்கள் காத்திருப்பார்கள்.

இந்த அந்தி நேரத்தில் தான், இப்பகுதியில் கிழவி ரூபத்தில் வந்த கண்ணகித் தெய்வம், மாடு மேய்த்திடும் சிறுவரிடம், தான் "பசியால் வாடுகிறேன்" என்று தன் வாய் திறந்து கூறியதனாலேயே அந்திப் பொழுதான நேரத்திலே சிறுவர்கள் தாயாருக்கு அமுது படைத்து நின்றார்கள். மேலும், தான் கண்ணகி என்பதை அவர்களுக்குணர்த்தி "வருடாவருடம் இத்தினத்தில் இப்பொழுதில் இங்கே என்னை வழிபாடாற்றினால் நான் உங்களுக்கருள்வேன்" என்று கூறி மறைந்தார். இவைகளை நினைவு கூர்ந்தே இந்த அந்தி நேரத்தில் அடியார்கள் பொங்குகின்றார்கள். எனவே அடியார்கள் அந்தி நேரம் வந்தது முதல் வெளிவீதியில் அம்மன் சன்னிதானம் முன்பாக, அமைந்த இடங்களிலே நிலத்தில் அடுப்பு வெட்டி, தங்கள் விரும்பிய பாத்திர பண்டங்களில் பொங்கல் செய்து, படைத்து, வழிபாடாற்றுவர். ஏனைய அடியார்களும் தங்கள் விருப்பப்படியான முறைகளில் அம்மனைப் பூசித்து நிற்பர். இதே வேளையில் ஏழு இரவுகளில் காட்டு விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து

படித்து வரப்பட்ட "சிலம்பு கூறல்" காவியத்தின் மிகுதிப் பகுதியை இவ்வாலயத்தின் ஒரு புறத்தில் குத்து விளக்கேற்றி அனுபவமுடையவர்கள் படித்துக் கொண்டிருப்பர் .(காவியம் வழமையாக இந்த இரவு படித்து முடிக்கப்படும்)

அடியார்களின் பொங்கல் வழிபாடுகளுக்கு நேரவசதியை அளித்து இரவு ஒன்பது மணியின் பின் பூசாரியார் பொங்குகின்ற கருமம் நடைபெறத் தொடங்கும். மகா மண்டபத்தின் முன்னதாக பொங்கல் வழமையாகச் செய்யப்படும் இடத்தில் நிலத்தில் மூன்று அடுப்புகள் வெட்டப்படும். இவற்றில் நடு அடுப்பில் அம்மன் வளந்தும், இரு பக்க அடுப்புக்களிலும் பக்க வளந்துகள் இரண்டும், வைத்துப் பொங்கப்படுதல் வழமையாகும். வளந்து என்பது பொங்குதற்கு உபயோகிக்கப்படும் இரண்டரை அடி உயரமுடைய பருமனான மட்பாத்திரமாகும். இந்த வளந்துகள் பொங்க அடுப்பிலேற்ற முன், நூல் சுற்றுதல் வளந்து நேரல் என்ற விஷேட கருமங்களுக்கு உட்படுத்தப்படும்.

### *நூல் சுற்றுதல்*

பொங்குதலுக்குரிய அம்மன் வளந்திற்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கும்பத்திற்கு நூல் சுற்றப்படுவது போல் சுற்றப்படும். ஐயரோ, பூசாரியாரோ, வளந்திற்கு நூல் சுற்றுவதை மேற் கொள்வார். இதே போன்று மற்ற இரு வளந்துகளுக்கும் நூல் சுற்றப்படுவதில்லை. இங்ஙனம் நூல் சுற்றி முடிவுற்றதும் "வளந்து நேரல்" ஆரம்பிக்கப்படும்.

இந்த நேரம் கட்டாடி உடையாரின் (பூசாரியாரர்) பூசகத் தோற்றத்தையும் குருக்களுக்கும் இவருக்கு முள்ள சமய விதிமுறையில் அமைந்த பேதத்தையும் சிறிது நோக்குவோம். இருவருக்கும் ஆகம விதியில் அமைந்த தமது உடல், உடை பூண்டிடும் சமயச் சின்னங்கள் என்பவற்றின் தோற்றங்களில் வேறுபாடுகள் அநேகமுண்டு.

பூசாரியார் குருக்களைப் போன்று சைவ ஆகம விதிப்படியான நித்திய, நைமித்திய பூசைகளுக்குரிய மந்திர சுலோகங்கள் அறிந்தவராகவோ அன்றேல் அவற்றில் பூசனை வழிபாடு இயற்றக் கூடியவராகவோ இருக்க வேண்டுமென்ற நியதியில்லை. அப்படி இருப்பதுமில்லை. பூணூல் தரித்திடுதல் இல்லாதவராவார். கும்பம் வைத்தல், மடை பரவுதல், பொங்குதல், படைத்தல், கட்டாடுதல், வேளை, விபூதி, மஞ்சள்க் காப்பு அடியார்களுக்கு அளித்தல் , ஆதியாம் கருமங்களை மாத்திரம் இயற்றுவர். இப்பதியில் கண்ணகி வந்து காட்சியளித்த கால முதல் வருடா வருடம் பொங்கலைச் செய்து வழிபட்டு வரும் வற்றாப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பரம்பரையினரான உயர் வேளாளர் குலத்தின் தோன்றல் ஒருவரே இக்கட்டாடி உடையார் என்பர். உயர் வேளாளரை உடையார் என்றழைப்பர். முற்காலத்தில் இங்கு பொங்கலிடும் காலங்களில் பூசாரியாருக்கு (உடையார்) தேவியின் அருள் கிடைக்கப் பெற்று உரு வந்து ஆடி, கட்டுச் சொல்வார்.

### *கட்டுச் சொல்லல்*

கட்டுச் சொல்லல் என்பதற்கு பலவித கருத்துக்கள் இருப்பினும், இங்கு யாரைப் பற்றியோ, அல்லது எதனைப் பற்றியோ எக் காலத்திலும் அறிந்து கொள்ள முடியாமல் முடமாக இருக்கும், அல்லது இருக்கச் செய்யப்பட்ட விடயத்தை சில வேளைகளில் சூசகமாகவும், சில வேளைகளில் விளக்கமாகவும் தெரியக் கூறல் என்பதாகும். ஆனால் இக் காலங்களில் இது நடைபெறுவதில்லை.

கட்டாடி உடையார் வமிசத்தில் தோன்றிய பூசாரியார் முற் கூறப்பட்ட பூசாகருங்களைச் செய்பவராய், பூசைக்குரிய காலத்தில் தேகத்தில் தீட்சைப் பூச்சுகளுடன் , நெற்றியில் சந்தனம், குங்குமம், பொலிய எட்டு முழமுடைய புதிய வெள்ளை வேட்டி அணிந்து அதன் மீது இடுப்பில் சால்வை தனை வரிந்து கட்டி, வேப்பம் பத்திரியும், வெள்ளி சுற்றிய பிரம்பும் இடையில் செருகியிருப்பார். காதில் வெண் வைரக்கல் பதித்த கடுக்கண் அணிந்து, இடக்கையில் வெள்ளிக் காப்பு (இரட்சாபந்தனம்) அணிந்து ஆசாரம் நிறைந்து காணப்படுவார். இப் பூசாரிய பரம்பரை இயற்றி வந்த பொங்கல் முறைகளை பிறிதொரு காலத்தப் "பக்தஞானி" என்னும் ஒரு பெரியார் நெறிப்படுத்த உதவினார். அவருடைய பத்ததிப்படியே இப்பொழுது அம்மனுக்குப் பொங்கல் நடைபெற்று வருகின்றது. இவரைப்பற்றி பிறிதோர் இடத்தில் கூறுவாம். இத்துடன் இனி அடுத்ததிருக்கருமத்தினை அணுகுவோம்.

## வளந்து நேரல்

நூல் சுற்றப்பட்டு வளந்து நேரலுக்குத் தயாரான அம்மன் வளந்தினை பூசாரியார் தன் இரு கைகளாலும் எடுத்துக் கொள்வார். மகா மண்டபத்துக்கு முன்னால் பொங்கலிடும் இடத்துக் கண்மையில் வந்து நின்று அம்மனைத் தோத்தரித்து பின் அட்டதிக்குப் பாலகரையும், தேவாதி தேவுக்குளையும் வேண்டுதல் செய்து இங்கே நடைபெறப் போகின்ற பொங்கல் தனை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் பாதுகாப்பை வேண்டி நிற்பர். இச் சமத்தில் தன் இரு கரங்களாலும் அந்த வளந்துதனை மேலெறிந் தெறிந்து திக்குகளை நோக்கிப் பக்திப் பரவசமாய் உரு ஏறிய நிலையில் ஆடுவார். பறை மேளத்தின் ஒலித்தாளத்துக்கமைய இவர் லயந் தவறாது, வளந்தினை எண் திசையும் நின்று எறிந்தேந்தி ஆடுவார். இந்நேரம் அம்மனின் பரிகலங்கள் என்று கூறப்படும் தேவாதிகளுக்குப் பச்சரிசி வானத்தில் எறியப்படும். பொங்கல் இனிது நிறைவுறத் தேவாதிகளை வேண்டுதலையே வளந்து நேரல் என்பர் போலும். நடுவான அடுப்பில் வைக்கப்படும் அம்மன் வளந்தினை மாத்திரம் நேர்த்திக்கு உள்படுத்தி, இருவளந்துகளையும் உட்படுத்தாமல் மூன்று வளந்துகளையும் நீர் நிறைத்து அடுப்பில் எற்றுவார். பூசாரியார் இவற்றைத் தொடக்கி விட மற்ற நோற்பாளர்களில் உரிமையானவர்கள் அடுப்பை எடுத்துப் பொங்குதற்குத் துணையாய் நிற்பர். பானையில் முதல் அரிசியை இடுவதும் பூசாரியார் தான். பின் மற்றவர்கள் நிறைவேற்றிக் கொள்வர். பசுப்பாலும் பச்சரிசியும் தவிர வேறு எவையும் சேர்ப்பதில்லை.

பறை மேளம் முழங்கிக் கொண்டிருக்க, பொங்கலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அடியார்கள் இத்திருப் பொங்கலை பய பக்தியுடன் சூழ இருந்து கவனித்துக் கொள்வார்கள். வருடத்தில் ஒருமுறை இவ்வாலயத்தில் நடக்கும் அதி முக்கியமான கருமம் அல்லவா! இதற்காகத்தானே பல இடங்களிலும் இருந்து யாத்திரிகர்கள் வந்திருக்கிறார்கள். இன்றிரவு உச்சமாய் அமையும். இக்கருமமும் இரவு நாலு மணி வரையில் நிறை வெய்தத் தொடங்கும். பொங்கி முடிவுற்றதும் அந்த அமுது தன்னை அம்மனுக்குப் படைக்கின்றதைப் பூசாரியார் மேற் கொள்வார். இதற்கு முன் பட்டு நேரல் என்று ஒரு கருமம் நடைபெறும்.

## பட்டு நேரல்

அம்மன் அணிவதற்காக வழங்குதல் போலும், ஒரு பட்டுச் சேலையை நேர்ந்து கும்பத்தில் அணிய வைப்பது ஒரு வழமை. இதற்கென உள்ள ஒரு பட்டுத்துணியைப் பூசாரியார் கைகளில் எடுத்து நான்கு திக்கு முகமாகவும் காட்டி நேர்ந்து அதைக் கும்பத்தில் சாத்துவார். இதன் பின் திருவமுது அக்கும்பத்தின் முன்பதாகப் படைக்கப்படும். பொங்கலைப் பத்ததி முறையாக நெறிப்படுத்தியவரான பக்தஞானியார் மறைந்து விட்டாலும் அவர் ஞாபகமாக அவருக்கும் இத்திருவமுதை ஒருபால் புறம்பாகப் படைக்கப் படுகின்றது.

அம்மனுக்குப் படைக்கப்பட்டதும் பூசா வழிபாடுகள் ஆரம்பமாகும். அடியார்கள் இந்நேர வழிபாட்டை மேற் கொள்வதற்கு மிக ஆவலுடையவராய் ஆலயத்தின் மண்டபத்தில் நிறைந்து நிற்பர். இப்பூசையைக் காண்பதும் பெரும் பேறு எனக் கொள்வர். இதனைக் காண்பதால் இங்கு வந்து வழிபாடாற்றியதன் முழுப்பயனையும் அடைந்ததாகக் கொள்வர். இதனால் இந்நேரம் அடியார்கள் முண்டியடித்து தேவியின் இப்பூசையைக் காண நிற்பார்கள். கண்ணகைத் தாயாருக்கு அரோகரா! அம்மனுக்கு அரோகரா! என்று பக்தி வயப்பட்டால் அடியவர் கூட்டம் இட்ட ஒலி தனைக் கேட்டு ஓடியே வருவது போல், செவ்வாய் தினமும் அதிகாலை ஐந்து மணிப் பொழுதாகி வந்து கொண்டிருக்க அம்மன் சிந்து படிக்கப்பட்டு பூசனைகள் முடிவுற மறு கருமமாகிய தூளி பிடித்தல் என்பது ஆரம்பமாகும்

## தூளி பிடித்தல்

இக்கருமத்திற்குரிய நோக்கம் என்ன என்பதைத் திட்டமாகக் கூற முடியா விட்டாலும் இக்கருமம் நடைபெறுகின்ற வழமைகளை யாவரும் கூறுகின்றனர். முற் கூறிய கருமங்கள் முடிவடைந்ததும் வெளியே இரு வண்ணார் வெண் துணியைப் படுக்கைப் பாட்டில் விரித்தப் பிடித்துக் கொள்ள, பூசாரியார் அத்துணியின் நடுவே அம்மன் மந்திரம் தாவி, அதன் மீது அம்மன் சின்னங்களான சிலம்பு, பிரம்பு அம்மனைக் காய் என்பனவற்றை வைப்பார். தூளி என்று சொல்லப்படுகின்ற அத்துணியின் நடுவே பதினொரு பாக்கு, பதினொரு வெற்றிலை ஆதியாம்

பொருட்களை வைத்துப் பூசனை செய்து சிலம்பு தனை எடுத்துக் குலுக்கி, உரு ஏறிய நிலையில் உள்ளவராய் நான்கு திக்கும் நின்று நேர்த்தி செய்து நிற்க, வெற்றிலையுள் ஒரு பாக்கை வைத்து கூம்பு போல சுருட்டிக் கொடுக்க, அதனையும் நான்கு திக்கும் நேர்ந்து தூளியின் மேலால் மறுபுறத்தே வீசுவார். இதே போன்று கொழுத்திக் கொடுத்த எரியும் திரி தனை தன் கையால் உயரப் பிடித்து நாற்புறமும் நேர்த்தி செய்து முன்பு கூறியபடி தூளியின் மேலாக எறிவார். இது அம்மனின் பரிகலங்கள் என்று சொல்லப்படுகின்ற தேவாதிகளைப் பிரீதிப்படுத்துதல் எனக் கூறுகின்றார்கள். இதன் பின் அம்மன் குளிர்த்தி பாடப்படும்.

### *திருக்குளிர்த்தி பாடுதல்*

ஏட்டிலேயுள்ள அம்மன் திருக்குளிர்த்தி தன்னைப் பூசாரியாரும் மற்றும் அதற்கு உரியோரும் பாடுவர். அம்மனின் உள்ளத்தை குளிர்விப்பதால் அவரின் கருணை தன்னைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாகும் என்று நோக்கியே திருக் குளிர்த்தி பாடப்படுகின்றது. அன்னையாகிய கண்ணகியை வரவேற்று அவர்க்கு அமுதாதியன படைத்தப் பூசித்து , அவளின் மனம் குளிரக் குளிர்த்தி பாடி, அவளின் விருப்புக்கிசைந்த விளையாட்டாகிய அம்மானை விளையாட்டும் விளையாடப்படும்.

### *அம்மானைப் பாடலும் ஆடலும்*

குளிர்த்தி பாடி முடிந்ததும் அம்மானைப் பாட்டுப் பாடப்படும். அங்ஙனம் பாடுகின்ற நேரத்திலே பூசாரியார் தன் கரத்தில் வைத்திருக்கின்ற வெள்ளியாற் செய்யப்பட்ட மூன்று சித்திரக் காய்களை மேலெறிந்து ஏந்துவார். பாட்டின் இறுதி அந்தத்திலேயே இப்படிச் செய்து கொள்வார். இவ்விளையாட்டை ஆடுவதன் நோக்கம் கண்ணகியார்க்கு இவ்விளையாட்டில் மிக விருப்பத்தினாற் போலும், என்பதனாற் அம்மானை முடிவுற்றதும் மடை பிரித்த பிரசாதம் வழங்கப்படும்.

### *பிரசாதம் வழங்கல்*

அம்மானையும் பாடி முடிய செவ்வாய்க் கிழமை காலை ஏழு மணியளவாகிவிடும். கும்பத்திற்குப் படைக்கப்பட்ட மடைகளை மாற்றி அதில் உள்ள பழம், பாக்கு, வெற்றிலை பிரசாதம் என்பவற்றை அடியார்களுக்கு வழங்குவார்கள். பிரதானமாக கதிர்காமக் கரை யாத்திரை போகின்ற அடியார்களே இந்நேரத்தில் இங்கே கூடுதலாகக் காணப்படுவர். அவர்களே அம்மனின் பிரசாதங்களைத் தவறாது வாங்கிக் கொள்வார்கள். அத்துடன் மஞ்சட் காப்பும் வாங்கிக் கொள்வர். இம் மஞ்சட் காப்பு என்று சொல்லப்படும் பொருளை மருந்துக்குப் பதிலாக யாத்திரையில் நோய் வரின் அடியார்கள் பாவித்துக் குணமடைவதால் பிணி போக்கும் இதனைப் பெற்று யாத்திரை செல்வதையே விரும்புவர். யாத்திரை அடியார்கள் பிரசாதம் பெற்று அம்மானை வழிபட்டதும் தமது யாத்திரையை முதலில் கண்ணகி ஆலயத்தின் உள்வீதியில் தொடங்குவர். வேலைத் தாங்கிய ஒரு பேரடியார், கந்தனின் நாமாவளிப் பாடல்களைப் பாடிமுன் செல்ல மற்றைய அடியார்கள் தொடர்ந்து பாடிக் கொண்டு பின்செல்வார்கள். பின் கண்ணகி மண்டபத்தின் முன் வந்து வணங்கி கண்ணகிக்கும் கதிர்க் கந்தனுக்கும் அரோகரா ஒலித்து கோயிலின் முன் வாயிலின் வெளியே செல்லக் கண்ணகி ஆலயத்தின் கதவுகளும் மூடிக் கொள்ளும். அம்மனும் அவர்களுடன் செல்கிறாள் என்பதைக் காட்ட இக்கதவினை மூடுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது. இத்துடன் இத்தலத்தில் நடைபெற்ற பொங்கல் வைபவம் முற்றுப் பெற்று விடும். ஆயினும் இப்பொங்கலுடன் சம்பந்தமுடையது என்று கூறப்படும் இன்னொரு கருமம் இத்தினத்தைத் தொடர்ந்து வரும் வெள்ளிக் கிழமை வழமையாக நடைபெற்று வருகின்றது. பக்தஞானிப் பொங்கல் எனப்படும் இக்கருமம் இக்கண்ணகி ஆலயத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள நாவற்காடு என்னும் இடத்தில் செய்யப்படுவதுடன் இப் பொங்கல் வைபவம் முற்றுப் பெறுகின்றது என்று கூறலாம்.

### *பக்த ஞானி பொங்கல்*

கட்டாடி உடையார் மரபில் வந்த பூசாரியார்கள் ஒழுங்கு முறையில்லாத வகையில் பூசை செய்து வருகின்ற காலமதில் கண்ணகை அம்மனின் திருவுள ஆக்ஞைப்படி இந்தியாவில் தஞ்சாவூர் என்னும் இடத்திலிருந்து பக்தஞானி என்னும் ஒருவரும் அவருடைய சிஷ்யரும் இலங்கை வந்து வற்றாப்

பளையை அடைந்து, தான் அம்மனின் பக்தன் எனவும் அவரின் திருவுளப்படி பொங்கலைச் சீர்மையுறச் செய்ய வந்துள்ளதாகவும் தன்னிடம் அதற்கான பத்ததி முறைகளும் சின்னங்களும் வைத்திருப்பதாகவும் கூறி, இதுவரை காலமும் பொங்கல் நடந்த முறையினை மாற்றியமைத்து நெறிப்படுத்தி உதவினார். அவர் தன் இறுதிக் காலம் வரை பத்ததி முறையான பொங்கல் நடைபெற உதவினார் என்று கூறுவர்.

அவரை நினைவு கூருதற் பொருட்டே அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பொங்கல் கழிந்த வெள்ளிக் கிழமை மாலையில் பொங்கல் செய்து, சிறுமடை பரவித் திரும்புவர். இதில் தச்சனும், ஐயரும் மற்றும் சிலருமே பங்கு கொள்வார்கள். பூசாரியார் இங்கு செல்வதில்லை. இந்த வைபவத்துடன் அவ் வருட பொங்கல் வைபவம் கோலாகல நிறைவு பெறுகின்றது.

"சக்தியொரு வடிவான கண்ணகையாள் பதம் பணிவாம்"

## குறிப்புகள்

1. *வடகடல் – வங்காளக் குடாக் கடல்*
2. *அம்மானை – ஒரு விளையாட்டு*
3. *பக்தஞானியை சிலர் பொற்கொல்லர் வம்சம் என்றும், சிலர் தச்சர் என்றும் (சிலர்) அவை அல்லரென்றும் கூறுவர். இவர் யாராயினும் பக்தர்கள், ஞானிகள், அறிவாளர்கள் ஆகிய இவர்கள் உலக ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் பொது என உணராது தத்தமர் எனப் போட்டியிடும் பேதமையாளர் குணம் நகைத்ததற்குரியதாகும். இவர் எவ்வருணத்தா ரெனினும் கண்ணகியின் அருள் பாலிப்பு உடையவராய் அம்மனின் பக்தராய் இருந்துள்ளார் என்பதைப் பலரும் ஒப்புக் கொள்கின்றார்கள்.*

## சிந்தனைக்குச் சில துளிகள்

★ *தீயவர்களை ஒழிப்பதும், நல்லவர்களைக் காப்பதும் அரசாங்கத்தின் தர்மமும், கடமையும் ஆகும்.*

★ *பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம் (காட்டில் வாழ்வது) சந்நியாசம் ஆகிய நான்கிலும் இல்லறமே இறைவனை எளிதில் அடைவதற்குரிய உபாயமாகும்.*

★ *ஒவ்வொருநாளும் மாலையில் சூரியன் அஸ்தமிப்பதை அனைவரும் பார்க்கிறார்கள். அவ்விதம் பார்க்கும்போது அன்றைய பகல் முடிந்து, இரவு வந்து விட்டது என்று மட்டும் நினைக்கிறார்கள். ஆனால் அந்த மாலையுடன் தனது ஆயுளில் ஒருநாள் மரணத்தை நெருங்கியிருக்கிறோம் என்ற உண்மையை நினைத்துப் பார்ப்பதில்லை. காலம் என்ற சக்கரம் வெகுவேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. காலன் ஒருவன் நமது கணக்கை கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், குறுகி வரும் ஆயுட் காலத்தில் நற்செயல்களைச் செய்து புண்ணிய பலன்களைச் சேமித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் மனிதன் உணர்வதில்லை.*

★ *இறந்த முன்னோர்களுக்கு (பித்ருக்களுக்கு) தர்ப்பணம், யக்யம் போன்ற கடமைகளை செய்யாதவன் மகத்தான பாபத்திச் செய்தவனாகிறான்.*

★ *ஆபத்துக் காலத்தில் தானே வலிய வந்து உதவி செய்பவனே உண்மையான நண்பனாகும்.*





## வற்றாப்பளை கண்ணகை அம்மன்

# வயந்தன்

- சி. விநாசித்தம்பி-

வயந்தன் என்பது ஒருவகை விளையாட்டு . பெரும்பாலும் இவ் விளையாட்டு வன்னி நாட்டின் பல பகுதிகளிலும் இன்றும் நடைபெற்று வருகின்றது. வன்னி நாட்டில் உள்ளவர்களில் அதிகமானோர் உழுதுண்டு வாழ்பவர்களாகவே இன்றும் இருக்கின்றார்கள். அதிலும் ஆதிகாலத்தில் அவர்கள் தங்கள் வயல் வேலைகள் முடிந்ததும் மீதியுள்ள நேரத்தை ஆடல் பாடல்களிலும் விளையாட்டுக்களிலும் கழிப்பது வழக்கம். அவர்களது விளையாட்டுக்களில் (கோலாட்டம்) மகிடியாடுதல், வேதாளமாடுதல் (கரகமாடுதல், காவடியாடுதல்) இளந்தலைப்பாப்பறித்தல், பகிடிக் கல்யாணம் பண்ணுதல், நீதித்தலமும் விசாரணையும், கிந்தியடித்தல், தட்டு மறித்தல் வாரோடுதல் முதலாகப் பலவகையுண்டு.

இவர்களது அறுவடைக்காலம் பிரதானமாக மாசி, பங்குனி மாதங்களில் முடிவடைந்து விடும். அதன் பின்னவர்கள் தங்கள் வீட்டோடு கூடிய சிறுமுயற்சிகளைக் கவனித்துக் கொண்டு , மிகுதி நேரத்தினைக் கலை கலாச்சார விளையாட்டுக்களிற் கழிப்பர். அதற்கேற்பவே அக்காலத்தில் இந்துக்களின் புதுவருடத் திருநாளாகிய சித்திரை வருடப் பிறப்பும் வந்தணையும். அக்காலம் அவர்களது விசேட கொண்டாட்டங்களுக்குரிய காலமாகும். அவர்கள் தங்கள் பொன்விளையும் பூமியிலிருந்து கொண்டு வந்த பொருட்களால் தமது களஞ்சியங்களை நிறைமீதி எங்கும் வேண்டிய மட்டும் குவிந்து கிடப்பதால் அவர்களது உள்ளம் அவர்களை அறியாமலே துள்ளி விளையாடுகின்ற காலமது. ஆனந்தமான அந்த வசந்த காலத்தில் விசேடமாக யாவராலும் விளையாடப்படுவதான இவ்விளையாட்டு வயந்தன் எனப் பெயர் பெற்றது. அக்காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் இருந்த பல கவிஞர்கள் அங்கு நடைபெறுகின்ற விசேட நிகழ்ச்சிகளையும், தேவ, அற்புதங்களையும் வேறு பல முக்கியமான காவியங்களையும் இனிய கவிதைகளாக ஆக்கஞ் செய்தனர். அக்கவிதைகளிற்பல தாளகதிக்கமைவனவாதலால் அவற்றைத் திறமைசாலிகளாகிய அண்ணாவிமார் விளையாட்டுக்களுக்கும் அறுவடை போன்ற பல தொழில்களுக்கும் பயன்படுத்தினர்.

இவ்வாறு அவர்கள் விளையாடுகின்ற விளையாட்டிலொன்றே கோலாட்டம் எனப்படும். இதில்,இவர்கள் இரு கைகளிலும் பதினைந்து ஆங்குல நீளமுள்ள உருளை வடிவான ஒரிஞ்சிச் சுற்றளவு கொண்டதும், சலங்கை இணைக்கப் பெற்றதுமாகிய கம்புகளைக் கையில் வைத்துக் கொண்டு, சோடி சோடியாக ஒருவரை ஒருவர் பார்த்த

வண்ணம் எண்மரோ பன்னிருவரோ வட்ட வடிவாக நிற்பர். அவர்கள் மத்தியில் ஆசானாகிய அண்ணாவியார் தாளத்தோடு நடுவே நின்று பாட, இவர்களும் பாடிய வண்ணம் தாளலயம் தவறாது கம்புகளை ஒருவரோடொருவர் மாறியடித்துக் கொண்டு, சலங்கைகள் கட்டிய கால்களையும் கதிக்கேற்ப மிதித்து சுற்றிச் சுழன்றாடி விளை யாடுவார்கள். இவ்வாறு இவர்கள் கோல் கொண்டு விளையாடுவதனாலேயே இவ்விளையாட்டு கோலாட்டம் எனப் பெயர் பெற்றது. இதனை கம்படி என்றும் சொல்வர். இதில் உறிபின்னுதல் , ஈர்வாணியிளைத்தல், கொம்பறை (நெற்கழஞ்சியம்) அமைத்தல், சேவலாட்டம், குறங் கூறுதல், வயந்தன் எனப்பலவகையாட்டங்களுள. இவற்றில் ஒன்றாகிய வற்றாப்பளைக் கண்ணகையம்மன் மீது பாடியாடுகின்ற "வயந்தன்" பாடல் இம்மலரை அலங்கரிக்க வேண்டுமெனும் விருப்பால் , பழமை வாய்ந்த இப்பாடலை இங்கு தருகின்றேன். இது நாட்டில் மழையற்று வரட்சியான போது நாட்டுமக்கள் மழையின் பொருட்டம்மனை வேண்டி நேர்கடனாகப் பாடியாடிய வயந்தன் என்பது புலனாகிறது.

### வற்றாப்பழைக் கண்ணகையம்மன்
### வயந்தன்
### "தரு"

*தானதனாதன – தான தன*
*தானதனாதந்த தானானே – (தான)*

சீர்தங்கும் வற்றாப்பளை நகர்வாழ்
செல்வியாங் கண்ணகைத்தாயார் மேல்
ஏர்புகழும் வயந்தன் பாட
எப்பிழையும் பொறு கற்பகமே.

வார்தங்கு சூழுலகம் போற்ற
மாரிதன்மேல் வயந்தன் பாட
ஓர் கொம்பன் காட்டு விநாயகனார்
ஓங்கு மலர்பதந் தான் றுணையே.

கந்தனை முன்னி நினைந்து கொண்டு
கையிலே கம்பு மெடுத்தோமே
வந்தோமே நாங்கள் விளையாட
வங்கிசமுள்ள தெருத்தனிலே.

பங்குனி சித்திரை வைகாசி யம்மன்
பங்கயப் பூரணைத் திங்களிலே
எங்கு முலகஞ் சிறந்திடவே
எண்ணியே பொங்கல் புரியவென்று

முன்பான திங்கள் முதற்கிழமை
மூவைந்தெனத் திகழன் நாளில்
அன்பான திங்கட் கிழமையிலே
ஆனதோர் பாக்குகள் தண்டிவந்து

கலைவளர் அட்டமித் திங்களிலே
காசினியோர்கள் வரவேற்க
அலைகடலிலுப்புத் தண்ணீரள்ளி
யந்தணராதவர் கொண்டுவந்து

நலந்தரு வெற்றிலை பாக்குடனே
நற்கனி கொண்டு மடைபரப்பி
உலகம் விளங்க விளக்கேற்ற
உண்மைபதாய் நின்றெரியுதம்மா

தெய்வகட் டாடியா றன்னருளால்
தேசம் புகழ வளந்தெடுத்து
ஐயமில்லாமலே வெற்றிலையும்
அன்பாக நூலும் வளைந்து சுற்றி

வையக மெங்கும் புகழ்ந்திடவே
வாகுடன் பொங்கியே பூசைசெய்வார்
தையலே முத்து மகமாரி
தாயாரே யுந்தன் கிருபையினால்

வெற்றிலை வாடாது நூலுங்கருகாமல்
வெற்றிமிகு பொங்கலுற்றிடலால்
தெள்ளிதிற் தேசம் மிகச் செழித்து
செல்வங் கொழித்திட நாம் வாழ்ந்தோம்

நீராவியெங்கும் பொருக்கெழும்பி
நிற்கும் பயிர்முகம் வாடுதம்மா
தாவிப்பலித்த நம் வான் பயிர்கள்
தரையிற் படுத்திட நீதியுண்டோ

காட்டினி லுள்ள குறையுமில்லை
காரண மிப்படி யம்மாளே
நாட்டினிலுள்ள சனங்களெல்லாம்
நாயகியே கெட்டுப் போகுதம்மா

பெற்றதோர் பிள்ளைக்குத் தாயடித்தால்
பிள்ளைக்கு வேறோர் துணையுமுண்டோ
உற்றதோர் கோபந்தனைப் பொறுத்து
உவந்தருள் முத்து மகமாரி

சென்ன லரசிக்குச் சல்லி பத்தும்
சேரலரிசி முக்காப் பணமும்
அன்னீத மில்லாமல் விற்றிடுங்கோ
அம்ம னிரங்கி மழைதருவார்

வானங் கறுத்து மழைபொழிய
வையக மெங்கும் மிகச்செழிக்க
தானந் தருமந் தழைத்திடவே
தாரணியோ ரென்றும் வாழியவே

சீருஞ் சிறப்பும் மிகவாழி
செங்கோல் மனுவேந்தன் நூல்வாழி
ஊருமுற் றாருமுடன் வாழி
உற் றதாய் தந்தையர் தாம் வாழி

பாடினோர் தங்கிளை தம்முடனே
பாடுவித் தோர் தங்கள் சுற்றமதும்
பாடிப் படித்து விளையாடும்
பாலரும் நீடூழி வாழியவே

ஆல்போற் றழைத்து மிகக்கிளைத்து
ஆறுகது போறபல வேரூன்றி
மூங்கில் போல் சுற்றமும் தான் தழைத்து
முசியாமலென் றென்றும் வாழியவே.

–முற்றும்–

⁂ ⁂ ⁂

# தாமரைப் பூ

சூரியன் உதித்தால் எப்படி தாமரை மலர்கின்றதோ, அது போல் கடவுள் நினைப்பு இருந்தால் நம் மனம் எனும் தாமரையும் ஆனந்தத்துடன் மலர்ந்திருக்கும்.

தாமரையானது தண்ணீரில் இருந்தால்தான் செழிப்புற்று இருக்கும். அதேபோல் நமது மனம் கருணை (அன்பு) என்றும் குளத்தில் இருந்தால்தான் சாந்தமாக இருக்கும். ஆனால் தண்ணீரிலேயே இருக்கும் தாமரையில் தண்ணீர் ஒட்டுவதில்லை. பற்றற்ற நிலையில் வாழ வேண்டிய தத்துவத்தை இது விளக்குகிறது.

தாமரைத் தண்டின் நூலினால் எப்படி பெரிய பிராணியைக் கட்ட முடியாதோ, அதுபோல நம் மனத்தின் நினைப்பினால் மாத்திரம் எல்லாக் காரியத்தையும் செய்ய முடியாது.

தாமரைப்பூ எப்படி நல்ல வாசனையுடன் திகழ்கிறதோ அதேபோல் நம் மனமும் நல்லபடி திகழ வேண்டும். தாமரைப் பூ எப்படிச் சிவப்பாகவும், வெண்மையாகவும் இருக்கிறதோ அதேபோல நம் மனத்தில் ரஜோ குணமும், ஸத்வ குணமும் இருக்கிறது. செந்தாமரை ரஜோ குணம், வெண்தாமரை ஸத்வ குணம்.

தாமரைத் தண்டு எவ்விதம் கறுப்பாக இருக்கிறதோ அதேபோல் நம் மனம் தமோ குணம் உடையதாய் இருக்கிறது. தாமரைக் குளத்தில் தண்ணீர் எப்படி எப்பொழுதும் 'ஜில் என்று இருக்கிறதோ அதுபோல நம் மனமானது கடவுள் நினைப்போடு இருந்தால் எப்பொழுதும் சாந்தமாயும் குளுமையாகவும் இருக்கும்.

சுவாமி தத்துவானந்தா

# வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில்

# பொங்கலும் கதிர்காமம் கரையாத்திரையும்





- ந. மயில்வாகனம்

## ஆதிவரலாறு

ஆதியில் ஒருநாள் வற்றாப்பளையில் கண்ணகி அம்மன் மாட்டிடைச் சிறுவர்களுக்கு காட்சி கொடுத்து மறைந்ததாக வரலாறு கூறுகின்றது. அப்போது கண்ணகி அம்மன் ஒரு கிழவி வடிவில் காட்சி கொடுத்து சிறுவர்களை "பொங்குங்கோ மக்கள் சாப்பிடுவோம்" என்றார். சிறுவர் பொங்க கிழவி தலையை விரித்து தலையை வகிர்ந்து பேன் பார்க்கச் சொன்னாள். ஆச்சியர்மேல் அன்பு மறுக்க முடியவில்லை. தலையை வகிர்ந்து பார்த்தார்கள். தலையெல்லாம் கண்களாக இருக்கக் கண்டு பயந்தார்கள். பயந்த சிறுவரைத் தேற்றிக் கொண்டாள் கிழவி. அதிசயித்த சிறுவர் யாரென வினவினர். அதற்குக் கிழவி "யான் சோழநாட்டினள். கதிர்காமம் போக வந்தேன்" என்றாள். (சிலம்பு கூறல் ) சான்று பகர்கிறது.

*அமைந்திடு மவ்வேளை தன்னில்*
*ஆச்சியரும் ஈது சொல்வார்*
*உறைந்திடல் காண் சோழநகர்*
*உற்றுவந்தேன் கதிர்காமம்.*

பின்தான் கண்ணகி என்பதை உணர்த்தி ஒவ்வொரு வருடமும் வைகாசி விசாகமும் பறுவத்தைச் சேர்ந்த திங்கட்கிழமை பொங்கி வழிபடுவீர்களாகில் இத்தலத்திற்கு வருடம் ஒருமுறை வந்து பொங்கல் முடிய இங்கிருந்து கதிர்காமம் கரையாத்திரை போவதாகவும் கூறிய ஆதி வரலாற்றின்படி வற்றாப்பளை அம்மன் பொங்கல் முடிந்த மறுநாட்காலை கதிர்காமம் கரையாத்திரை செய்வதும் வழமையாகின்றது. அம்பாள் இங்கிருந்துதான் கரையாத்திரை புறப்படுவதால் அடியார்களும் அம்பாளைப் பின்பற்றி, அம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்து வருகின்றார்கள். அம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்வதற்காக பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வற்றாப்பளைக்கு வருவர். இங்கிருந்து ஆரம்பிப்பதே கரையாத்திரை என்ற பெயர் பெறும். பல்வேறு இடங்களிலிருந்தும் அடியார்கள் கூட்டம் கூட்டமாக கதிர்காமம் யாத்திரை செய்பவர்களை கரையாத்திரீகர் என்று சொல்வதில்லை. கரையாத்திரையுமாகா. உண்மையில் வற்றாப்பளையிலிருந்து பொங்கல் முடிய வற்றாப்பளை கண்ணகி அம்பாள் புறப்பட்டு கரையோரமாக போகும் போது அம்பாள் செல்லும் பாதையில் அம்பாளுடன் கூடி அம்பாள் சென்ற வழி தப்பாமல் பின்

தொடர்ந்து செல்வதே கரையாத்திரையாகும். அம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்வதால் இஷ்டசித்திகளைப் பெறலாம் என்று நம்பினர். நம்பியபடி நற்பலன் பல பெற்றவர்கள் இன்னும் தொடர்ந்து வருடா வருடம் பொங்கல் முடிந்த மறுநாள் கரையாத்திரை போகிறார்கள்.

## *பொங்கல்*

வைகாசி விசாகம் அதையடுத்து பறுவம், அந்தப்பறுவத்தையடுத்து திங்கட்கிழமை வற்றாப் பளைக் கண்ணகை அம்பாளுக்குப் பொங்கல். ஒரு திங்கட் கிழமை பாக்குத் தெண்டி அதற்கடுத்த திங்கட்கிழமை தீர்த்தமெடுத்து அதற்கடுத்த திங்கட்கிழமை பொங்கல் நடைபெறும். ஊரெங்கும் திரள்கின்றார். பொங்கலிடப் பக்தர்கள். ஆயிரங் கண்ணுடைய அம்பாள் கடைக் கண்ணோக்கம் நல்கவேண்டும். ஆயிரங் கண்ணுடைய அம்பாளுக்கு ஆயிரங்கண்பானை, அதனுள்ளே கற்பூரம். சோதி சுடரொளி உப்புத் தண்ணீரில் விளக்கு எரிகிறது. ஆலயத்தில் ஆஹா! என்ன அற்புதம். தீச்சுவாலை, பவளம் போலும் நெருப்புத் தணல் தீக்குளிக் கின்றார்கள். பாற்செம்பு, கரகம், அங்கப்பிரதட்டை, பாற்காவடி என்றெல்லாம் கண் கொள்ளாக்காட்சிகள். வண்ணவேலன், கதிரைக்குமரன் நாமஞ்சொல்லி காவடி ஆட்டம், ஆரார்காவடி, அம்மன் காவடி, தாளத்திற் கிசைந்து சாய்ந்து, சரிந்து மயிலெனத் தோணுது பச்சைப்பசேலென பவளக் கண்ணாடி இறகு. கோலமயில் கூட்டம் போல் ஆலயத்தை வலம் வருகின்றது. அடியார் கூட்டம் அளவிடமுடியா. தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால், ஆடுவர், பாடுவர் எனப் பல பேர்கள். பொங்கற் பானைகள் நிரப்பி வழிந்த பொங்கலுமோ பாற்பொங்கல், பக்குவமான பொங்கல் அருந்திடும் தாயின் உள்ளக் கருணை கூறவும் கூடுமோ, நோய் பிணி தீர்ந்து ஆசிகள் பெற்றனர் அடியார். குளிர்த்தி பாடுகிறார்கள்.....

அம்மானை கூறுகிறார்கள்........

பட்டுச்சாத்துகிறார்கள் .... வழி வெட்டப்படுகிறது.....

## *கரையாத்திரை*

பரிவாரங்கள் எங்கே! மெய்யடியார் கூட்டம் எங்கே! யாவரும் ஆலயத்தைச் சூழ்ந்து தவம் கிடக்கிறார்கள். உத்தரவு கேட்கிறார்கள். உத்தரவு கிடைத்தவர்கள் அடப்பங் கட்டுகிறார்கள். ஒரு தேங்காய், ஒரு பணங்காசு, ஒருகொத்து பச்சையரிசி, ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை இவை யாவும் அடப்பத்தில். அடப்பம் அம்பாள் வாசலில், வழிக்குத்துணை வெற்றி வேலாயுதம், வேலைக் கையிலேந்திய வண்ணம் அடியார் கூட்டம். (அ) முத்துக்குமாரசாமி வேல் கூட்டம் (ஆ) சன்னதி வேல் கூட்டம் (இ) இயக்கச்சிச் சாமியார் வேல் கூட்டம் (ஈ) சடையம்மா கூட்டம் ஒருவர் பின் ஒருவராக வேலை முன்னே கொண்டு செல்ல தலையில் அடப்பங்களுடன் ஆலயத்தை வலம் வருகிறார்கள். வழி நடைச் சிந்துபாடிக் கொண்டு... கோபுர வாசலில் வந்து கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைக்கின்றார்கள். எல்லோர் கழுத்திலும் உருத்திராக்க மாலை, காவி உடை. நீறு பூசிய மேனிராகக் காட்சி அளிக்கின்றார்கள். அவர்கள் வாய் அரோகரா... அரோகரா.... என்று மீட்டுக் கொண்டே இருக்கின்றது. வற்றாப்பளை அம்மனுக்கு அரோகரா, வற்றாப்பளை அம்மனுக்கு அரோகரா, கந்தனுக்கு அரோகரா, வள்ளி தெய்வானைக்கு அரோகரா, வழிக்குத்துணையாய் வரும் வெற்றி வேலாயுதத்திற்கு – அரோகரா என்று அரோகரா துதி பாடிக் கொண்டிருக்க வற்றாப்பளை அம்பாள் கதிர்காமம் போகும் காட்சி பழவடியார்களுக்கு தோற்றுகிறது. சில அடியார்கள் பக்திப் பரவசமாய் காட்சியளிக்கிறார்கள். சன்னதம் (உரு) பக்தி ஆடுகிறார்கள். அரோகராக் கோஷம் தொடர்ந்து ஒலிக்க, அடியார் கூட்டத்துடன் கதிர்காமம் கரையாத்திரை முதல்வியாம் கண்ணகியார் பயணமாகிறார். வேலேந்தியபடி – வேல்சாமியார் – முன்னே செல்ல ஒருவர் பின் ஒருவராகத் தலையில் அடப்பங்களுடன் அடியார்கள் அரோகராச் சொல்லிக் கொண்டு போகும் காட்சி அருமையான காட்சி அன்றோ! வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் கதிர்காமம் போகும் பாதையில் அடியார் கூட்டம் செல்கிறது. சென்றவழி தப்பாமல் செல்கிறார்கள். செவ்வாய்க்கிழமை காலை தண்ணீரூற்று ஊற்றங் கரைப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று ஆலயத்தை வலம் வந்து வேலை ஆலயத்தில் ஓரிடத்தில் நிறுத்திக் கொண்டு அடியார்கள் குளித்து, பின் பூஜை செய்து,

பூஜை முடிய அவ்வூர் அன்பர்கள் அளிக்கும் அன்னதானத்தை ஏற்றுக்கொண்டு மாலையாக தல பூஜை முடித்துக்கொண்டு அன்னங்கொடுத்த அடியார்களுக்கு – அரோகரா சொல்லி விடைபெற்று மாமூலை என்னும் இடத்திற்குப் போவார்கள். அங்கே அடியார்கள் வரவை வழிமேல் விழியாகக் காத்திருப்பார் இயக்கச்சிச்சாமியார். (தற்போது கூடு விட்டு விட்டார்) அவருடைய தவச்சாலை பெருந்தலமாக மாறுகிறது. அரோகரா ஒலி கேட்கிறது. அடியார் கூட்டம் தவச்சாலையில் வேலை நாட்டி இயக்கச்சிச் சாமியார் கொடுக்கும் தேநீரை முதலில் குடித்துக் கொண்டு அப்பால் அவ்வூரன்பர்கள் வரவேற்று அடியார்களை ஆதரித்து அமுதூட்டி வழியனுப்பி வைக்க கணுக்கேணிப்பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். அங்கிருந்து குமுளமுனை கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். அங்கே இரண்டு நாட்கள் தங்குவர். அடியார் வரவை வரவேற்று அவர்களுக்கு அன்னமளித்து வழியனுப்பி வைப்பது ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறும் . யாத்திரிகர் சமைத்துச் சாப்பிட வேண்டிய தேவை இராது. எனினும் மிகச்சில இடங்களில் சமைத்தே உண்ண வேண்டி நேரும். செம்மலை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் என்னும் கிராமங்களில் உள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு புல்மோட்டை செல்வர். அங்கே முஸ்லீம்களும், தமிழர்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். அவர்கள் அடியார்களை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைப்பார்கள். அப்பால் திரியாய், கும்புறுபிட்டி, குச்சவெளி என்னும் கிராமங்களுக் கூடாகச் செல்வர். அங்கிருந்து பல மைல் தூரம் நடந்து தான் உப்புவெளி தாண்ட வேண்டும் . வழி நடைச்சிந்துகள் பாடி அம்பாளை நினைக்க அம்பாள் கிருபையால் வழி குறுகி கோபாலபுரத்தை அடைவார்கள். கோபால புரத்திலிருந்து நிலா வெளியைச் சென்றடைவர். அங்கே அடியார்களுக்கு மிகுந்த வரவேற்பு அளிப்பார்கள். மாரியம்மன் கோவில், கண்ணகை அம்மன் கோவில் இரண்டிலும் அடியார்கள் அடப்பங்கட்டுவார்கள். இங்கு இரண்டு நாட்கள் தங்கி யாத்திரையைத் தொடர்வர். கன்னியாய் போகும் பாதை மிகவும் கரடு முரடானது. ஏற்ற இறக்கம் உடையது. நீண்டவழி வடந்து கன்னியாய் செல்வர். அங்கே ஏழு விதமான நீரூற்றுக்கள் பொருந்திய வெந்நீர்க் கிணறுகள் உண்டு. இது ஓர் சிறந்த தீர்த்தமாகும். பாவநாஸ தீர்த்தமென்று கூறுவர். இராவணன் இதில் தீர்த்தமாடி தாய்க்கு ஈமக் கிரியைகள் செய்தான் என்பது ஐதீகம். இத் தீர்த்தமாடி அங்கிருந்து தென் கயிலாயமாம் கோணேசர் பதியை நோக்கிச் சென்று, திரு கோணமலையை அடைந்ததும் அங்கே சிவன் கோவில் அம்மன் கோவில் இரண்டும் அடியார்க்கு உறைவிடமாக விளங்க, அங்கு அடப்பம் கட்டி இரவு தங்கி, மாலை கோணேசர் தீர்த்தமாடி பாடல் பெற்ற தலமாகிய கோணமாமலை ஏறி பார்வதிதேவியாரோடும் ஈசனைத்தரிசிப்பர், மறுநாள் தம்பலகாமம், கோணசரைத்தரிசிப்பர். இப்படி 108 தலங்கள் சூழ கோணேசர் வீற்றிருப்பதால் ஏனைய தலங்களையும் முறையே தரிசிக்கும் பொருட்டு இங்கே ஒருவாரம் தங்கநேரிடும். திருகோணமலை அன்பர்கள் அடியார்கள் கரையாத்திரை செய்யும் அடியார்களை பெரிதும் மதிப்பவர்கள். குருலிங்க சங்கம வழிபாடு நிரம்பியவர்கள் இறைவனோ "தொண்டருள்ளத் தொடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே" என்று கரையாத்திரை செய்யும் அடியார்களை வணங்குவர். போற்றி மதிப்பர். நெய்ப்பொரியல், பால், தயிர், தேன் கூட்டி மிக்க சுவையும் புனிதமும் ஒருங்கே அமைய அமுதமளிப்பர். சுருங்கச் சொல்லின் பிரமாதமான உணவுகள் அடியார்களுக்கு கொடுப்பர். அடியார்களை இருத்தி அவர்கள் முன் உணவு படைத்து அடியார்களுக்கு தீபதூபம் காட்டி அடியார்களை வணங்கி "சுவாமி பசியிருந்த பிழையைப் பொறுத்துக் கொண்டு சாப்பிடுங்கள்!" என்று வேண்டிக் கொள்வர். அடியார் முகம் வாடினால் அம்பாள், முருகன் முகம் வாடியதற்குச் சமமென்று அச்சம் குடி கொண்டவர்களாக மிகுந்த பய பக்தியுடன் நடந்து கொள்வர். கரையாத்திரை அடியார்களுடன் வற்றாப்பளை அம்பாளும் மானிட வடிவமெடுத்து யாத்திரை செய்து கொண்டிருப்பதனாலேயே இவர்கள் இவ்வாறு பக்தி சிரத்தை காட்டுகிறார்கள். கொக்கட்டிச்சோலை சென்று சிவன் கோவிலை அடைவர். அங்கே சுயம்புலிங்கம் ஒன்றிருக்கிறது. இலிங்கங்களில் தலை சிறந்தது சுயம்புலிங்கம். சுயம்புலிங்க மூர்த்தியை இங்கே தரிசித்த பின்னர் சாந்தமலை செல்வர். அங்கே குன்றிலாடும் குமரன் கோவில் கொண்டிருக்கிறான். குன்றின் அடிவாரத்தில்

கேணியும் பழைய கோவில் இடிபாடுகளும், மரஞ்செடிகளால் மறைந்து கிடக்கின்றன. புதிதாக குன்றின்மேல் ஆலயம் கட்டுகின்றார்கள். இங்கே தரிசனம் செய்த பின்னர் வனத்தில் இருக்கும் கௌபீனதாரி ஒருவரைக் காணலாம். யோக சாதனங்களுடன் வாழ்கிறார். தனித்து வனத்தில் இருக்கும் இவரின் தவநிலை அதிசயமானது. அவரின் ஆசியைப் பெற்றுக் கொண்டு மண்டூர் கந்தனிடம் செல்வர். அங்கே இரவு தங்கி பூசை கண்டு கொள்வர். கதிர்காமத்தைப் போல் வாய்கட்டித்தான் பூசை செய்வர். வள்ளி தெய்வானைக்கு புறம்பான ஆலயங்களும் உண்டு. நீர்வசதி பொருந்த, விருட்சங்கள் நிழல் கொடுக்க அமைதியான ஒரு வழிபாட்டுத்தலமாக இத்தலம் சிறந்து விளங்குகின்றது. மண்டூரிலிருந்து 'அமிர்தகழி' சென்று அங்கு ஒரு நாள் தங்குவர். இங்கே சீதாபிராட்டியார் மணலால் சிவலிங்கம் ஸ்தாபித்து பூசை செய்ததாக ஐதீகம் கூறுகிறார்கள். சீதாபிராட்டியார் ஆடும் பொருட்டு தோற்றிய தீர்த்தம் இங்கே உண்டு. இதன் பெயர் மாமாங்கத் தீர்த்தம் என்பதாகும். மாமாங்கத் தீர்த்தம் ஆடி விநாயகரை வழிபட்டு இங்கிருந்து புறப்பட்டு செல்வர். மட்டக்களப்புப் பட்டணத்தை அடைந்து அங்கே பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு யாத்திரையைத் தொடர்வர். பின் கிளிவெட்டியை அடைந்து அம்பாளைத் தரிசிப்பர். இங்கிருந்து புறப்பட்டு வெருகலம்பதியை அடைவர். வெருகல் தீர்த்தமாடி ஆலய தரிசனம் செய்வர். அண்மையிலிருக்கும் வனத்தில் ஓர் குன்று. அக்குன்றிலிருந்து ஒருவர் தவமேற்றுகிறார். இவரோ முருகபக்தர். இவரைத் தரிசித்து ஆசிகள் பெற்றுச் சென்றால் நீண்டவழி போக நேரும். வழிநடைச் சிந்து, சிவனாமவழி அரோகரா துதி முதலிய பக்திப் பாடல்களையும் பாடியவாறு வழி நடந்தகளை சற்று மில்லாதவாறு சங்கு மாங்கண்டியைச் சென்றடைவர். செல்லும் பாதையில் வேடர் வாழும் கிராமங்கள் உண்டு. அவ்விடங்களில் அன்னதானம் கொடுக்கும் வழக்கம் இல்லை. மர நிழலில் தங்கி சமைத்துச் சாப்பிடுவர். சங்கு மாங்கண்டிப் பிள்ளையார் வனத்தின் மத்தியல் அடியார்கள் ஏதும் கொண்டு வருவார்கள் என்று காத்து கொண்டிருப்பர். வன விலங்குகளும் குரங்குக் கும்பலும் இங்கே நிரம்பக் காணப்படும். பிள்ளையாருக்குப் பொங்கி மோதகம் அவித்து படைத்து வணங்கிடுவர். இங்கிருந்து பொத்துவில் போகவேண்டும். போகும் வழியோ மிக நீண்டது அதனால் அடியார்கள் அரோகரா, அரோகரா, அரோகரா என்று கூறிக் கொண்டு செல்வர். அரோகரா என்ற ஒலி மீட்கவே அடியார்கள் பொத்துவிலை அடைவர்.

பொத்துவில் என்னுமிடத்தில் ஒரு வாரம் தங்குவர். இதிலிருந்து புறப்பட்டால் சனசஞ்சாரம் குறைந்து காணப்படும். கடை தெருக்கள் இல்லை. எனவே காட்டுப்பாதைக்குக் கொண்டு செல்லத் தேவையான மிளகாய்த்தூள், அரிசி, காய்கறி, தேங்காய், மா, கற்பூரம் முதலிய பொருட்களை போதிய அளவு வாங்கி ஆயத்தஞ் செய்வர். காசு தேவையானவர்கள் தங்கள் தங்கள் ஊரில் இருந்து தபால் தந்தி மூலம் பணத்தை வரவழைத்துக் கொள்வர். இந்த இடம் தப்பினால் கிட்டத் தட்ட பத்து நாட்களின் பின் கதிர்காமத் தபாற் கந்தோரைக் காணலாம். பொத்துவிலை விட்டுப் புறப்பட்டு காட்டில் நாவல் ஆறு என்னும் ஆற்றில் இரவு அடப்பங்கட்டி தங்குவர். இங்கே தீவளர்ப்பர். யானைகளும் இந்த ஆற்றில் தண்ணீர் குடிக்க அடியார்களும் ஒரு பக்கத்தில் தண்ணீர் குடிப்பர். ஆனால் அம்பாள் கிருபையாலும் முருகன் கிருபையாலும் ஒரு தீங்கும் நேர்வதில்லை. காலை இங்கிருந்து புறப்பட்டு மத்தியானம் பாணகை என்னும் வேடர் கிராமத்தை அடைவர். இங்கே சிங்களவர் தமிழர் இருசாதியாகும் கலந்து மணமுடித்து ஒற்றுமையாகவே வாழ்கிறார்கள். இவர்கள் இப்போது திருத்தமடைந்து பள்ளிக்கூடம் சென்று படிக்கிறார்கள். இங்கிருந்து மத்தியானம் புறப்பட்டு மாலை சந்நியாசி மலையை அடைவர். அடர்ந்த காட்டுமத்தியில் இம்மலை இருக்கின்றது. இங்கே ஆதியில் சந்நாசம் (சன்னியாசி) ஒருவர் தவமியற்றினார். அவரடியில் இரவு தங்குவது வழக்கம் அவர் இப்போது இல்லை வழமைபோல் அவ்விடத்தில் தங்கித்தான் போகிறார்கள். மலையில் கட்டிடங்கள் கட்டப்பட்டதற்குச் சான்றுகள் உள. தூண்கள் பழங்காலத்துச் செங்கட்டிகள் உண்டு. இங்கே கேணி ஒன்றும் உண்டு. இது தண்ணீர் குடிக்கப் பெரிதும் உதவியாக விளங்குகின்றது. காட்டில் கிணறு இல்லை. இதன் உதவிதான். சன்னியாசி மலையின் அடியில் ரொட்டி, அவல் நிவேதிப்பர். பெரிய தீவளர்த்து அதைச் சூழ்ந்து அடியார் வீற்றிருப்பர்.

தேவாரம் திருவாசகம் பாடுவர். ஒரே ஆனந்தமும் அதிசயமுமாக அன்றிரவு இருக்கும். வனத்தின் மத்தியில் அடியார் கூட்டம், மிருகங்களின் ஒலி ஒருபுறம் அடியார் பாடல் ஓசை ஒருபுறம், ஒரு புதிய சூழல். இங்கிருந்து தீயை அணைத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றால் சிறு அடிப்பாடு ( சிறு ஒற்றைக்கால் பாதை ) தப்பாமல் செல்ல வேண்டும். வாகனப் புழக்கமில்லை. சன நடமாட்டம் இல்லை. இப்படியான காட்டில் ஆறு குறுக்கிடும். ஆற்றின் ஆழம் யாரறிவார். முருகன் திருநாமமும் அம்பாள் திருநாமமும் ஒலிக்க அடியார்கள் வழி நடப்பர். வழிக்குத் துணையான வெற்றி வேலாயுதத்தின் பின் அடியார்கள் சென்று எதுவித கஷ்டமுமின்றி உகந்தமலையை அடைவர்.

உகந்தை மலையைப் பற்றி ஒரு ஐதீகம் உண்டு. கதிர்காமத்தில் முருகன் வள்ளி திருமணம் முடித்து வீற்றிருந்தகாலை தெய்வானை பழனியிலிருந்து இது அறிந்து பக்தன் மாணிக்கவாசகனாம் பெருமுனிவனை முருகனை அழைத்து வரும்படி ஏவ அவர் கதிர்காமஞ் சென்று அறுகோணத்தில் முருகனை மந்திரித்துக் கொண்டிருக்கையில் முருகன் ஈர்க்கப்படுகிறார். அந்த வேளை முருகன் அறிந்து வன்னியம்மனுடன் இங்கே வந்தார். வரும்போது கரையோரமாக கடல்மார்க்கமாக தங்கக் கப்பல் வெள்ளிக் கப்பல் என தனித்தனிக் கப்பலில் வந்து உகந்தையில் உகந்து வீற்றிருப்பதாக ஐதீகம். இங்கே அவர்கள் ஏறிவந்த தங்கக் கப்பல் வெள்ளிக் கப்பல் இரண்டும் கிடக்கக் காணலாம். அவர்கள் ஆடிய முப்பத்திரண்டு தீர்த்தமும் மலையில் இன்றும் விளங்குவதைக் காணலாம். இத்தலத்தில் முருகனுக்கு ஓர் ஆலயமும் உண்டு. இங்கு குடிகள் இல்லை, அன்பர் ஒருவர் கட்டிய ஆலயம், மடம் கிணறுகள் மாத்திரம் உண்டு. இத்தலத்தில் இரண்டு நாட்கள் தங்குவர். அதன் பின் வேடர் வாழும் பூமுனையைத் தாண்டி குமுக்கன் ஆற்றங்கரையில் மத்தியானம் விடுதிவிடுவர். இவ்வாறு வற்றும் பெருக்குமுள்ளது. ஆனால் அடியவர்களை விழுங்கியது என்றுங் கிடையா. இவ்வாற்றோரத்தில் சமண்டலை மரங்களும் சில பூமரங்களும், புளியமரம் விளாத்தி மரங்களுமுண்டு. பூமரங்களில் பூவெடுத்து வேலுக்குப் பூசை செய்வார்கள். இவ்விடங்களில் உள்ள மரவேரில் தலையை வைத்து துயில்வர். சருகுகளைக் கூட்டித் துப்பரவு செய்தால் அதுவும் ஒரு இரம்மியமான உறைவிடமாக இருக்கும். காட்டில் அசுங்கிலியங்கள் இல்லை துப்பரவாக இருக்கும். சமைப்பதற்கு அலுமினிய பாத்திரங் கொண்டுசெல்வர். சிலர் "கவ்வன்கேற்" பேணியில் சமைப்பர். குறைந்த அளவு பாத்திரங்களே கொண்டு செல்வர். சிறு பாத்திரம் பேணி போன்றவற்றையே வாளிக்குப் பதிலாகப் பாவிப்பர். ஒருவரிடமுள்ளதை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுவர். சமைக்க வசதியில்லாமல் வரும் அடியாருக்கும் சாப்பாடு கிடைக்கத்தான் செய்யும். இது தாயின் திருவருள். குமுக்கனிலிருந்து புறப்பட்டால் ஒரே வனம். பாதை கிடையாது. மனித சஞ்சாரம் கிடையா. மான்கூட்டம் ஆயிரம், மரைக்கூட்டம் ஆயிரம், மயிற் கூட்டம் ஆயிரம், யானைக் கூட்டம் ஆயிரம், காட்டெருமைக் கூட்டம் ஆயிரம், பன்றிக்கூட்டம் ஆயிரம்,கொக்கினமும் குருவியினமும் ஆயிரம் ஆயிரம் என்னும் அளவில், இவை கண்கொள்ளாக் காட்சி, கானல் நீர் சில இடங்களில் தோன்றும் தண்ணீர் கிடையா. இந்த இடத்தில் கையில் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். கொண்டு செல்லாதவர்களும் தண்ணீர் குடிக்கிறார்கள். காட்டில் இடைவெளியில் கிழவி தண்ணீர்ப் பேணியுடன் நின்று தாகசாந்தி செய்துவைக்க சிங்களச் சிறுவன் வழிமாறிய அடியவருக்கு சாமி இந்த நேரில் போங்கோ என்று சொல்ல அடியார்கள் வழிமாறாமற் செல்வர். கிழவியாரும் சிங்களச் சிறுவனும் யாவர்? வற்றாப்பளைக் கண்ணகையாரும் கதிர்காமக் கந்தனுந்தான். வாதரை வெட்டையில் வேப்ப மரத்தடியில் அடப்பம் கட்டுவார்கள். மார்க்கண்டு முதலாளி என்னும் அன்பர் இங்கே இரண்டு கிணறுகள் கட்டி வைத்திருக்கிறார். விளாத்தி மரங்கள் தண்ணீர்ச் செம்பளவு பெரிய தேன்போலும் விளாம்பழங்களைக் கொட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். அங்கு மனிதரில்லை. பன்றிக்கூட்டமும் யானைக் கூட்டமும் தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கக் காணலாம். மயிலிறகும், மான் மரைக் கொம்புகளும், புலிப்பல்லும், புலிநகமும் கொட்டுப்பட்டுக்கிடக்க அடியார்கள் இவற்றை மெல்லென நீக்கிக் கால் வைத்துச் செல்ல நேரும். உடல் வேலம் பற்றைகளும் முட்களும் நிரம்பக் காணலாம். யானைகள் முன்னே செல்ல அடியார் கூட்டம் பின்னே செல்ல மானினம் அவர்களைத் தொடர வள்ளியம்மா வள்ளியம்மா என்று கூப்பிட்டு மகிழ்வதும் அடியார் வழமை.

காட்டில் விளாம்பழம், பாலைப்பழம், துவரம்பழம் நிறைந்து கிடக்கும். புளியமரங்கள் பழுத்திருப்பதைக் காணலாம். தங்கள் தேவைக்குப் பறிதெடுக்கலாம். சில இடங்களில் காட்டில் முருங்கைக்காய் பலாக்காய்களும் உண்டு. நாவல்மடு என்னும் இடத்தில் அடுத்தபடி தங்கி இரவு கழிய அதிகாலை புறப்பட்டால் கடும் நடை நடந்து கள்ளவியாளையில் ஒருக்கால் தரித்து வியாளையை அடைவர். இங்கே ஒரு இரவு தங்குவர். இது மாணிக்க கங்கையின் தொடர். தீர்த்தமாடி மறுநாள் புறப்பட்டு 11 மணியளவில் மலைகண்டவெளியை அடைவர். இங்கு நின்று பார்த்தால் கதிரைமலை உச்சிதெரியும். இந்த இடத்தில் அவல் குழைத்து வைத்துக் கற்பூரங் கொளுத்தித் தேங்காய் உடைப்பது வழக்கம். இங்கே சில அடியார்கள் கதிர்க்கந்தனைக் கண்டதேபோல் உணர்ச்சிவசப்பட நேரும். ஆடுவர் பாடுவர் அரோகரா சொல்லுவர். இந்த அளவிலேயே கதிரைமலைத் தரிசனம் கிடைத்த ஆனந்தம் தோன்றும். தோன்றவே விரைந்து நடந்து மத்தியானம் கட்டகாமத்தையடைவர். கட்ட காமத்திலிருந்து கதிர்காமம் எட்டு மைல். கட்டகாமத்தில் குடிகள் இல்லை. அழகிய தாமரைத் தடாகம் உண்டு. நீராடிப் பூப்பறித்து பூசைசெய்து குளக்கரை மரங்களின் அடியில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு கதிர்காமம் மணக்குதென்பர். தங்கார், தரியார் ஆவல் மீதூர மாலை நான்கு ஐந்து மணியளவில் கதிர்காமம் புண்ணிய தலத்தையடைவர். வற்றாப் பளையிலிருந்து புறப்பட்டு (43) நாற்பத்து மூன்றாவது நாள் கதிர்காமம் கரையாத்திரை முற்றுப்பெறும்.

முதலில் முடி, தாடி இறக்கி மாணிக்க கங்கையில் தீர்த்தமாடுவர். கங்கைக்கரையில் அன்னதான மியற்றியே கங்கை தாண்ட வேண்டுமென்பது மரபு, அதன்படி செய்தபின் முதலில் முத்துலிங்கசுவாமியும் வள்ளித்தாயும் அடியார் தரிசனைக்கு வாய்த்தபேறாக ஆலயம் அமைந்திருக்கிறது. மகாதேவாலயத்தில் முருகன் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருக்க வலது பக்கம் மாணிக்கப்பிள்ளையார் வீற்றிருக்கிறார். கதிர்காமம் கரையாத்திரை செய்யும் அடியார்கள் செல்லக் கதிர்காமஞ் சென்று பிள்ளையாரை வணங்கப் பின்நிற்பதில்லை. அதன்பின் கதிரைமலைத் தரிசனஞ் செய்வர். சிறுவரும், வயோதிபருங் கூட மலையேறி இறங்குங் காட்சி மிகவும் அற்புதமானது, கதிர்காமத்தில் பழனியாண்டவர், தெய்வானையம்மன் இருவருக்கும் தனித்தனிக் கோவில்கள் உண்டு. இவற்றை அடுத்து அசுரன் மலையும் ஒன்று உண்டு. இங்கே மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்று விசேடங்களும் ஒருங்கே அமைந்திருப்பது உண்மையே.

மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாக ஆடினற்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே.

அடியார் கூட்டம் கரையாத்திரை தொடர்ந்து கொண்டிருக்கும். அடியார்கள் இரவு வேளைகளில் ஓரிடத்தில் தங்குவது வழக்கம். பகலில் நடந்து செல்வர். வாகனங்களில் ஏறமாட்டார்கள். சில இடங்களில் பகலிலும் தங்குவர். குமுளமுனையில், திருக்கோணமலையில் 5, பொத்துவிலில் 5, உகத்தைமலையில் 2 நாட்கள் தங்க நேரும். தங்குமிடங்களில் அடியார்கள் கூட்டம் கூட்டமாக இருப்பர்.

வேல் கூட்டம் வேலுக்குப் பக்கத்தில் அடப்பங்களைக் கட்டி வேலுக்குக் காலை மாலை பூசை செய்து பஜனையும் பக்திப்பாடல்களும் பாடிக் கொண்டிருப்பர்.

சாதுக்கள் ஒரு கூட்டமாக இருப்பர். சற்சனர் பலர் அவர்கள் கூட்டத்தில் குழுமி இருந்து யாத்திரை, மகிமை, அம்பாள் முருகன் மகிமை பதி, பசு, பாசத்தின் உண்மைத் தத்துவங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பர்

ஞானிகள், இவர்களும் கரை யாத்திரை தொடர்ந்து தங்கும் இடங்களில் ஒரு பக்கமாக இருப்பார்கள். இவர்களடியில் ஒரு கூட்டம், கைரேகை பார்ப்பதும் நினைத்தகாரியம் சொல்வதும் இஷ்ட தெய்வ வழிபாடுகள் நன்மை தீமைப் பலாபலன்களை அறியும் ஆர்வத்தினர், ஒரு கூட்டமாகக் காணப்படுவர்.

யோகிகள் தனித்துத் தனித்து நிட்டைகூடி கண்மூடி மௌனியாக இவர்கள் இருப்பர். இடையறா தவமுயற்சியுள்ள இவர்கள் ஒரு புறம் இருப்பர்.

ஏனைய அடியார்கள் தேனீ, பூக்கள் தோறுஞ் சென்று தேன் சேகரிப்பதைப் போல் எங்கெங்கே நல்லன, நறியன உண்டோவென, தேடி பக்திப்பசியையும் தாகத்தையும் தீர்க்க ஒரு கூட்டம் சுழன்று கொண்டிருக்கும். இவ்வாறு அடியார் கூட்டத்தினர் பல திறத்தினராய்ப் பல படியினராய்க் காணப் பட்டாலும் ஒரே இடத்தில் காணும்போது ஒரு ஆனந்தம். மாணிக்கவாசகருக்குக் குருந்தமரத்தடியில் சிவபிரான் உபதேசஞ் செய்தாரென்ற ஞாபகம் உடனே வரும். மெய்யடியார் கோலங்காண்டல் இனிதே இனிதே.

யாத்திரையின் போது அடியார்கள் பலவிதமான விரதங்களையும் அனுட்டிப்பர் (அ) சிலர் மௌனவிரதமிருப்பர். மௌனவிரதமாவது இறைவன் திருநாமத்தை மனதில் நினைப்பதன்றி வாயினால் ஒரு வார்த்தையும் பேசாதிருத்தல் (ஆ) ஒரு நாளைக்கொரு போது உண்டல்: காலையில் காலைக்கடன் முடித்துப் பூசைமுடித்து மத்தியானஞ் சாப்பிட்டால் மறுநாளும் மத்தியானமே உணவு உட்கொள்ளல். இடையில் காலை இரவு வேளைகளில் உணவைத் தவிர்த்துக் கொள்வர் (இ) வழியில் முக்கிய தலங்களில் சிலர் தீக்குளிப்பதை விரதானுக்ஷ்டானமாகச் செய்வதைக் கடைப்பிடிப்பர் (ஈ) சிலர் யாசகஞ் செய்து (மடிப்பிச்சை எடுத்து) கொண்டு போய் அதை அன்னதானங் கொடுப்பர் (உ) வேறுசிலர் முருகன் பக்திப்பாடல்கள் பாடி புத்தகரூபஞ் செய்து கொண்டு வந்து வழிநெடுகப் பாடி விற்று அப்பணத்தை அடியவருக்கே சேரச் செய்வதை நெறியாகக் கொள்வர் (ஊ) சிலர் சாப்பிடாமல் பலகாரம் மட்டும் சாப்பிட்டுக்கொள்வர். (எ) கந்தபுராணம் படித்து பயன் சொல்லிக் கொண்டுபோவதையும் சிலர் தம் நெறியாகக் கொள்வதும் உண்டு. வழியில் தங்குமிடங்களில் கந்தபுராணத்தைப் படித்துப் பயன் சொல்லிக் கொண்டு போவார்கள். இப்படி அடியார்கள் நெறிமுறைகள் விரதங்கள் பக்தியில்லாதவர்களுக்கும் பக்தியை ஊட்டுந் திறத்ததாய் அமைந்திருக்கும்.

பலப்பல படியான அடியார்கள் யாத்திரை செய்தாலும் அவர்கள் ஒருவரோடு ஒருவர் முரண்படார். இனிக் கரையாத்திரை செய்ய உத்தரவு வேண்டுமென்று கதைப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறோமல்லவா! ஆம் உத்தரவு வேண்டும். வற்றாப்பளை அம்மன் கோவிலில் உத்தரவு கொடுக்கப்படுகிறது. இந்த உத்தரவுக்காக நாட்டின் பலபாகங்களிலுமிருந்தும் பிறநாட்டிலிருந்தும் வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கலன்று வருமடியார் பொங்கல் முடிய செவ்வாய் அதிகாலை ஆலய முன் வாசலில் காத்திருப்பர். அம்பாள் கிருபையால் உத்தரவு கொடுக்கப்படுகிறது. அகக்கண் திறக்கப்பட்டு யாத்திரை வழிகாட்டப்படுகின்றது. சிலருக்கு கனவில் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கும் வேறு சிலருக்கு அம்பாள் அன்பர் ஒருவர் உருவந்து சன்னதத்துடன் ஆடி உத்தரவு கொடுப்பார். யாத்திரை செய்யுந் தீர்மானமில்லாமலே வழிபாட்டுக்கென வந்தவர்களுக்கும் சில சமயம் உத்தரவு கொடுக்கப்பட்டால் அவர்கள் பெண்டிர் பிள்ளைகள் தமது சொத்து உத்தியோகம் ஒன்றையும் பொருட்படுத்தாது கரையாத்திரை தொடர்வார். அப்போது அவர் விம்மி அழுவார். சிலவேளை தன்னை மறந்து ஆடுவார். பாடுவார் உறவினர் நண்பர் யாரையும் பொருட்படுத்தார். எல்லா முகங்களிலுந் தெய்வ ஒளி (எல்லாஞ்சிவமயம்) கண்டு வணங்கி சுவாமி என்று அழைப்பதன்றி மனைவியென்றோ, மக்களென்றோ கருதாதவராய்க் காணப்படுவார். நினைவெல்லாம் யாத்திரையின் நினைப்பாகவே இருக்கும். அவரை இடைமறித்து வைப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் தோல்வியாய் முடிய அதனைக் கண்ட உற்றார் உறவினர் அவருக்கு வழிச்செலவு கொடுத்து அனுப்பி வைப்பர், வழிச் செலவு கொடுக்க ஒருவருமில்லாதவரும் அம்பாள் கிருபையால் யாத்திரை தொடர்வாரின்றித் தரியார். இப்படிப் பட்டவர்களில் சில அதிசய சக்திகள் இருப்பதையும் காணலாம். அவர் வாக்குகள் பலிக்கும் நினைத்தது நடக்கும். சொல்வதெல்லாம் சொல்லியபடி நடக்கும். இவை அம்பாளின் உத்தரவால் அம்பாளால் கிடைக்கும் வரப்பிரசாதமாகும். இப்பேறு யாத்திரை முற்றுப் பெறும்வரை நிலைக்கும். யாத்திரை முடிந்து அவர் வாழ்க்கை செவ்வியதாக இருக்கும். தீர்த்த யாத்திரை கைமேல் பலன் என்றது ஆன்றோர் வாக்காகும்.

## அடியார் பெருமை

யாத்திரையால் அடியார் உறவு வளரும் பக்தி பெருக்கெடுக்கும். முத்திநெறி அறிந்தவராவர். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடியவராதலால் பாவம் தீர்ந்து ஞானகுரு கிடைக்கப்பெறுவர் சக்திதான் சிவத்தைக் காண்பிப்பவள். ஆதலால் கண்ணகி அம்பாள் கிருபையால் ஞானபண்டிதன் தந்தைக்குபதேசஞ் செய்தவன் – ஏழுமலைக்குரு நாதன் – சிவசுப்பிரமணியக் கடவுள் பாதந் தரிசித்து உய்ந்தனர் அடியார். அடியார் பெருமையை ஔவையார் கூறிப்போந்தாரே. புவனம் பெரிது புவனமோ அரவினுக்கொருதலைப் பாரம் அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம் , உமையவள் இறைவன் பாதத்து ஒடுக்கம், இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம். தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே.

## அற்புதங்கள்

கரையாத்திரையின் முதல்வி வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் என்றும், அடியார்கள் அம்பாளைத் (தொடர்ந்து) பின்பற்றி யாத்திரை செய்து வருகிறார்கள் என்றும் பார்த்தோம். அடியார்களுடன் சேர்ந்து கரையாத்திரை செய்யும் அம்பாள் சில அற்புதங்கள் காட்டிக்கொண்டு செல்வது வழக்கம்.

கரையாத்திரை செய்து கொண்டிருந்த பெண் வழியில் வயிறு நொந்து பிரசவ வேதனைப் பட்டாள். அப்போது ஒரு கிழவி வடிவில் அம்பாள் அப்பெண்ணை அணுகி ஆறுதல் கூறிக் கூட்டிக் கொண்டு போய் ஒரு பற்றையும் மரமும் ஒதுக்குமாயமைந்த இடத்தில் தங்க வைத்தார். பிரசவம் பார்த்து குழந்தையைப் பெற்று மூன்று நாள் மட்டும் அங்கே தங்கினர். ஏனை யாத்திரிகர்கள் போய்விட்டார்கள் இது நடந்தது குமுக்கனுக்கும் நாவல் மடுவுக்குமிடையில். மூன்றாம் நாள் அந்தக்கிழவி குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு போக குழந்தையைப் பெற்ற தாய் மெல்லெனக் கால் எடுத்து வைத்து நடக்க கரை யாத்திரை தொடர்ந்தனர். சிறிது நேரத்தில் பார்த்தால் அடியார் கூட்டம் தெரிந்தது. அந்த அளவில் இனிக் கிட்டத்தான் கதிர்காமம். அடியார்கள் அதோ செல்கிறார்கள். கூடிக்கொண்டுபோ. இந்தா குழந்தையைப்பிடி என்று கிழவி குழந்தையைத் தாய் கையில் கொடுத்த உடனே மறைந்தாள். இந்த அதிசயத்தைக் கண்ட பெண் வற்றாப்பளைக் கண்ணகை அம்பாள்தான் தனக்குதவியது என்று உணர்ந்தாள். அடியார் கூட்டத்தினருக்கும் இந்த அற்புதத்தைக் கூறி சிறிது தூரம் நடக்க மாணிக்க கங்கையை அடைந்தனர்.

குழந்தை இல்லாத ஒருவர் பிள்ளைப்பாக்கியம் கேட்டு யாத்திரை செய்தார். ஒரு பெண், மேல் முழுவதும் சிரங்கு நிறைந்த குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டுபோய் "கையுளைகிறது சுவாமி இந்தப் பிள்ளையைக் கொஞ்சம் பிடியுங்கோ" என்று கேட்டாள். அதற்கு அவர் "இந்தச் சிரங்கோடை தூக்கிறதோ" வென்று கூறி மறுத்துவிட்டார். அன்றிரவு அவருக்குக் கனவில் "நீ நான் தந்த குழந்தையைத் தூக்க மறுத்தாய் உனக்குக் குழந்தை இல்லை" என்று கூறக் கேட்டு விழித்தெழுந்தால் கனவு. இது விடயத்தை அடியார்களுக்குக் கூறி அவர் துக்கப்பட்டார்.

உகந்தை மலையில் தங்கியிருக்கையில் நாகர் கோயிலில் இருந்து வந்த அடியார் ஒருவர் காணாமற் போனார். அடியார்கள் தேடிக்கண்டுகொள்ள முடியவில்லை. நித்திரையாய் இருந்த அடியேனுக்கு அம்பாள் கனவிலே, மறைந்துநின்ற இடம்கூற அதன்படி அடியவரைக் கண்டுபிடித்தோம். இது நடந்தது 1973– ஆம் ஆண்டு.

கள்ளவியாளையை கடந்து செல்லவேண்டிய இடத்தில் படம் (MAP) கொண்டு முன்னே சென்றவர்கள் வழிமாறிப்போனார்கள். இதைக் கண்ட இயக்கச்சிச்சாமியார் கண்ணைமூடிப் பார்க்கையில் செல்ல வேண்டிய சரியான பாதை அவருக்குக் காட்டப்பட்டது. அவர் முன்னே செல்ல ஏனைய அடியார்களும் அவ்வழியே போனார்கள். இது 1964– ஆம் ஆண்டு அடியேன் யாத்திரை செய்தபோது நடந்தது.

யாத்திரை செய்து கொண்டிருக்கும்போது சில சந்தர்ப்பங்களில் அசரீரி வாக்குகளும் கேட்பதுண்டு இதைச் சில அடியவர்கள் கேட்டிருக்கிறார்கள். பலர் அறிந்திருக்கிறார்கள். இன்னும் அநேக அற்புதங்கள். காட்டில் 5 நாட்கள் நடக்க வேண்டும். மனிதசஞ்சாரங் கிடையாத இடம், பாதை ஏதுங் கிடையா. கதிர்காமங்

கரையாத்திரை போகும் அடியார் வருடம் ஒருமுறை போவதன்றி வேறெவரும் அக்காட்டில் பிரவேசித்தறியார். வனவிலங்குகள், யானை, புலி, கரடி, பன்றி, மான், மரை, காட்டெருமை புள்ளினங்கள் அடியவரைக் கண்டால் வழிவிட்டுக் கொடுப்பதுமல்லாமல் துன்பஞ் செய்யமாட்டா. ஆறுகளில் அடியார்கள் குளிக்கும் போதே யானையும் ஒருபுறங் குளிப்பதைக் காணலாம். ஏதும் துன்பம் செய்வதில்லை. பாதை இல்லை. போவதெப்படி. எல்லாம் திருவருள் வழி காட்டுகிறது. செல்கிறார்கள், அடியார்கள், மனிதபலத்தில் பார்க்க தெய்வபலம், அதன் மகத்துவம் இந்தக் காட்டுப்பாதை 5 நாளில் தெரிய வரும். கடவுள் இல்லை என்பாருக்கும் நான் எனது என்ற மமதை உடையவர்க்கும் இந்த இடம் நல்ல பாடங்கற்பித்து அறிவு வரச் செய்கிறது. மயிலினம் இங்கே ஆடிக் களிப்பதையும் குயிலினம் பாடிக் களிப்பதையும் இயற்கை அழகையும் காணலாம். மயில் இறகு, புலிப்பல்லு, மான் கொம்பு என்பவை நிறைந்திருப்பதைக் காணலாம். ஆனால் கொண்டு வரமுடியாது. வியாளையில் கட்டகாமத்தில் வனபரிபாலனப் பகுதியார் காவல். இப்பகுதி யாத்திரிகர்ளால் மறக்கமுடியாத இடம். அரோஹரா.... அரோஹரா.... அரோஹரா..... வற்றாப்பளை அம்மனுக்கு அரோஹரா, வழிக்குத் துணையாய் வரும் வெற்றிவேலாயுதத்துக்கு.... அரோஹரா, கந்தனுக்கு .. அரோஹரா, வள்ளி தெய்வானைக்கு அரோஹரா, அடியார் கூட்டத்திற்கு அரோஹரா, அன்பர்களுக்கு அரோஹரா, மாணிக்கப்பிள்ளையாருக்கு.... அரோஹரா, மாணிக்க கங்கைக்கு .. அரோஹரா, வழி அனுப்பி வைத்த அடியார்களுக்கு .... அரோஹரா, அமுதளித்த அன்பர்களுக்கு அரோஹரா, அம்மை அப்பனுக்கு ....... அரோஹரா, அரோஹரா.... அரோஹரா...........

# சிரஞ்சீவிகள் ஏழு பேர்

*சிரஞ்சீவிகள் எனப்படுபவர்கள் என்றும் வாழ்பவர்கள், மரணமற்றவர்கள்.*

*அஸ்வத்தாமா, மஹாபலி, வியாஸர், ஹனுமார், பிபீஷணர், கிருபாச்சாரி, பரசுராமர் இந்த ஏழு பேரும் இப்படிப்பட்டவர்கள்.*

*இவர்கள் என்றும் இன்றும் வாழ்பவர்கள். இவர்கள் எங்கோ மேருமலையில் மறைந்து உறைபவர்கள் மட்டுமல்ல, மேன்மையான மானிடரிடத்துத் தங்கள் அம்சமாக உறைபவர்கள்.*

*எத்தகையோரிடத்தில் யார் எந்த அம்சமாக விளங்குகிறார்கள் என்று பார்பாபோமா .......*

1. *உலகில் எந்த மனிதரிடத்தில் மந்திர பலம் இருக்கிறதோ அவர்கள் அஸ்வத்தாமாவின் அம்சம்.*
2. *எந்த மன்னர்கள் (இப்போது மன்னர்கள் எவரும் இல்லாவிடினும் ஆட்சியாளர்கள் என்று வைத்துக் கொள்ளலாம்) பூமியில் நியாய வழியில் சம்பாதித்த பொருளால் நாட்டைக் காக்கிறார்களோ அவர்கள் மஹாபலியின் அம்சம்.*
3. *நல்ல வீரர்களாக விளங்குபவர்கள் ஆஞ்சனேயரின் அம்சம்.*
4. *ஸ்ரீ ராம பக்தர்களாகவும் சாந்த குணமுடையவர்களாகவும் இருப்பவர்கள் விபீஷணருடைய அம்சம்.*
5. *எந்த மனிதர்கள் தைரியத்தோடு போர் புரிகிறார்களோ அவர்கள் கிருபாச்சாரியாரின் அம்சம்.*
6. *பூமியில் எந்த வீரர்கள் கோபத்தோடு கூடினவர்களோ அவர்கள் பரசுராமனின் அம்சம் பெற்றவர்கள்.*
7. *எவர்கள் சமஸ்கிருதப் பாஷையில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்களோ அந்தப் பண்டிதர்கள் வியாசரின் அம்சமுள்ளவர்கள்.*

   *எவர்கள் ஸ்ரீ ராமர், ஈஸ்வரர், ஸ்ரீ கிருஷ்ணர் இவர்களைத் துதிக்கிறார்களோ அவர்கள் வியாசரின் அம்சமுள்ளவர்கள்.*

   *கவியாயினும்கூட, மானிடனை ஸ்தோத்திரம் செய்பவர்கள் வியாசரின் அம்சமாக மாட்டார்கள். அதேபோல் மன்னனையும் பெண்ணையும், தாசியையும், அரச சபையையும் ஸ்தோத்திரம் செய்பவர்களும் வியாச அம்சமாக மாட்டார்கள்.*

   *வியாசர், உலகில் ஸ்ரீ ராம சரித்திரம் உள்ள வரையில் இங்கு வசிப்பார், பின்னரே மேலுலகம் செல்வார்.*






# வற்றாப்பளைக் கண்ணகையம்மன் வரலாற்றுச் சிந்து

ஆதிகாலத்தில் கண்ணகையம்மன் தானாகவே எழுந்தருளி வந்து பல புதுமைகளைக் காண்பித்துக் கோயில் கொண்டருளிய வரலாற்றை விரித்துக் கூறுதலின் வரலாற்றுச் சிந்தெனப் பெயர் பெற்றது.

## 'சிந்து'

*தனனதன தான தனனதன தான*
*தனனதன தானதன தானதன தான*

படிமதுரை யெரியப் பளையவளை சாயப்
    படர்ந்தமர மத்தனையு முறிந்துதலை சாய
அடியவர் தமக்குதவு வணிகர்குல மாதே
    அங்ஙணம் மைக்கடவை தங்குகண் கண்ணகையே
அங்ஙணம் மைக்கடவை தங்கிவந் ததுவும்
    அன்புசெறி கோவலர்க் கமுதளித் ததுவும்
பங்கமுறு பாண்டியன் றனைவதைத் ததுவும்
    பரிவுடன் முப்புரந் தனையெரித் ததுவும்மெய்
துங்கமுறவே எமது துன்பநோய் பிணிகளைச்
    சுறுக்காக வேவந்து மாற்றா திருந்தால்
எங்குமுன தாகவே நின்றபுக ழெல்லாம்
    யாவரும் பொய்யென் றியம்புவார் தாயே
பிந்திவந் தங்ஙணம் மைக்கடவை தனிலும்
    பேரான முள்ளிய வளைப்பதி யுறைந்தாய்
நந்திமுகன் கோயிலில் வந்துமடை கண்டு
    நன்செய்வயல் சூழவரு வற்றாப் பளையில்
அருவிக் கடற்கரையில் விடுதிவிட வந்தாய்
    ஆனதோர் படவா னதன்மீ திருந்தாய்
அரியதொரு வைகாசி விசாக பூரணையில்
    அழகான மாட்டிடையர் கண்ணில் வெளிநின்றாய்



கண்ணகித் தாயாரின் விருப்பத்திற்கிணங்க சிறுவர்கள் பாற்பொங்கல் பொங்குதல்.



கண்ணகித் தாயாருக்கு பழவகையால் மடை பரவி வழிபாடு இயற்றல்.

"பொங்கலோ பொங்கலம்மா புதுமைமிகு பொங்கலம்மா
புவியுளோர் போற்றி வரும் புதுப்பானைப் பொங்கலம்மா
பத்தாம்பளைப் பதியில் பத்தினிக்குப் பொங்கலம்மா
பழவகையால் மடை பரவி பாங்கான பொங்கலம்மா"

கண்ணகி அம்மன் ஆலயத்தினுடைய வரலாற்றுச் சிற்பங்களைத் தாங்கி நிற்கும் ஆலயத்தின் அமைப்பு.





உள்ளபடி பசியதிக மென்றனுக் கென்றாய்
உற்றவன் றலைமீது பேனதிக மென்றாய்
பிள்ளைகளு மப்போது பிரியமுட னேதான்
பேரான தலையதனைப் பிளகாய் வகிர்ந்து
அழகான தலையதனை யவர்களும் பார்த்து
அங்கவர்கன் கண்டனரே யாயிரங் கண்கள்
புளகாங் கிதங்கொண்டு புதுமையிது வென்றோ
பூவையுன் பாதமர் போற்றிப் பணிந்தே
அம்மனே தாயேநா மறியாத புதுமை
அரியவுன் பசிக்குண வளிக்கின்றோ மென்று
செம்மைநெல் லரிசியொடு சிறந்தபால் சேர்த்து
சீரான பாலமுது செய்தே கொணர்ந்து
இடமாக வமுதைப் படைக்க விலையில்லை
ஏதுசெய் வோமென்று பாலக ருரைக்க
வடதருவி யிலையுருவி வாருங்கோ மக்காள்
வண்ணமா யொருகல்லை செய்வோமே யென்ன
வண்ணமா யிலையுருறி வந்தே கொடுக்க
வாங்கியே வடதருவி னிலையைப் பரப்பி
தண்ணீரைக் கையினாற் றானே தெளித்தாள்
தாமரை யிலையாக வானதே யப்போ
அன்னையே யமுதைப் படைத்து விட்டோமே
ஆனதோர் விளக்கில்லை யந்தியு மாச்சே
என்று கூறக்கேட் டியம்பினா ளம்மன்
இங்குள்ள பாற்கலச மொன்றை யெடுத்து
எதிருள்ள நந்திக் கடற்றண்ணி யள்ளி
இட்டமொடு திரியிட்டு ஏற்று மென்றாளே
பதிலாக வம்மையார் பகருமொழி கேட்டுப்
பாங்கான பாற்கலச மொன்றில் நீரள்ளி
நூலான திரிச்சீலை யொன்றதனை யிட்டு
நுவலரிய நீர்விளக் கேற்றினா ரப்போ
நீரால் விளக்கெரியும் விந்தையது கண்டு
நின்றவர்கள் கிழவிதனை யங்குகா ணாமல்
ஆச்சரிய மாச்சரிய மவளில்லை யிங்கு
ஆரிந்தக் கிழவியென வாராய்ந்து நின்று
ஏச்சொன்று மில்லாம லெல்லோருந் தேடி
எங்கிவ ளுற்றாளென் றறியாது நின்றார்
அப்போது கண்ணகை யம்மனுந் தோன்றி
அறியாத பிள்ளைகா ளறியுநீ ரென்றே
தப்பாது மதுரையி லிருந்துகதிர் காமம்
தான்போக வெண்ணிவழிவந்தகண் ணகையாள்

திருநிறைந் திடுதிங்கள் வாரமுறுபூரணை
சேரவரு நாளது விசாகமுங் கூடி
வருடங்கள் தோறுமுறு வைகாசி தனிலே
வழிபடுகில் வந்துங்கள் குறைகள் தீர்ப்பேனே
மறைகளுள் ளளவுமண் ணுலகமுள் ளளவும்
மறவாது நான்வந்து தவுவே னென்று
மறைந்தாளே கண்ணகியும் மாட்டிடையர் கண்ணில்
மலரடி வணங்கி யற்புதமெய்தி நிற்க
இருந்தவேப் பம்படவாள் ளிலைவிட் டெழும்ப
எல்லோரும் புதுமையென் றேகோவில் கட்டி
அரும்பொங்கல் செய்தம்மன் நிறைவிளக் கேற்றி
ஆனபொன் னின்கும்ப மீதினில் நிறுத்தி
கட்டாடி யுடையாருங் கச்சதனை யோதிக்
காணுமா றலங்கார சன்னதமு மாடி
இட்டமு னேவளந் ததனைக் கொணர்ந்தே
எண்ணரிய நூலினால் வண்ணமாய்ச் சுற்றி
வெற்றிலை யெடுத்ததன் விளிம்பிலே கட்டி
வேடிக்கை யாகவே யேந்திவிளை யாடி
உற்றபறை மேளமவை ஒலித்தே முழங்க
உடனடுப் பக்கினி யதன்மீது வைத்து
பத்தியுட னேபொங்கல் பொங்குவார் தாயே
பரிவுமிகு பூசையும் பண்ணுவா ரம்மா
சத்திசிவ காமியுன் சித்தியத னாலே
தாரணி தளைத்தோங்கு தேசெழித் திடுமே
அங்குவெற் றிலைவாட வில்லையே யம்மா
அழகான நூலெரிய விலையே தாயே
பொங்கல்மடை பூசைமடை புறவாடை வீச
புறவீதி கற்பூர மணவாடை வீச
கங்கைசேர் வன்னியூ ரைந்துபற் றோரும்
காராள ரும்மட மாதரெல் லோரும்
இங்குவந் துன்னருட் சந்நிதி யடைந்து
இயல்பான புதுமைபல கண்டோமே தாயே
புண்ணியம் பலபெருகப் புகழுமிக வோங்கப்
பூதலத் துயிர்கள்நிறை வெய்தியே வாழ
கண்ணியத் துறுமரசர் செங்கோல் விளங்க
கங்கைவன முற்றுவரு செந்நெல் லிலங்க
எண்ணரிய செந்தமிழ்ச் செல்வம் நிறைந்தே
ஏத்தரிய சைவநெறி யெஞ்கும் பரந்தே
கண்ணகைத் தாயார் கடாட்சத்தி னாலே
காசினி தோர்குறையு மினற வாழியவே.





## வற்றாப்பளைக் கண்ணகை அம்பாள்

# அற்புதமும் அனுபவமும்

*- அமரர் கா.கார்த்திகேய சர்மா-*

**ப**ராசக்தியாகிய பார்வதி தேவியாரின் அவதாரமாகிய ஆதி கண்ணகியார் அழகிய மதுரை மாநகரை அழலூட்டி, திருச் செங்குன்று சென்று குன்றக் குறத்தியரின் பூசை வழிபாட்டினாலே சீற்றம் தணிந்து, மழை பொழிய, அருள் புரிந்து அங்கிருந்து புறப்பட்டுத் தன் அருள் பிரவாகத்தை அனைவரும் அறிந்து உய்யும் பொருட்டுச் சென்ற இடங்களிலெல்லாம் பல அற்புதங்களைச் செய்து, அவ்விடங்களிலுள்ளோர் செய்யும் பூசையில் மகிழ்ந்து, போற்றினவர்க்கெல்லாம் பல வரங்களைக் கொடுத்தருளியதன் பின்னர் ஈழம் வாழ் மக்களாகிய நாமும், நம்மவர்களும் செய்த புண்ணியமென எழில் மிகு இலங்கா புரியிலும் வந்து தோற்றியருளினார்.

இவ்வாறு இலங்கையில் தோற்றிய கண்ணகையார், பல்வேறு இடங்களிலும் காட்சி கொடுத்தருளியிருக்கிறாள். ஒரு நாள் வற்றாப்பளை என்னும் கிராமத்தில் நந்திக் கடல் ஓரத்தில் மாடுகள் மேய்த்துக் கொண்டு நின்ற சிறுவர்கள் முன் வயது முதிர்ந்து, தளர்ச்சியடைந்த மூதாட்டியாகத் தோன்றித் தனக்குப் பசியாக இருப்பதால் சாதம் படைக்குமாறு கேட்டருளினார். அதைக் கேட்ட சிறுவர்கள் "தாயே இப்படியே இருங்கள். நாங்கள் உங்களிற்கு அமுது பொங்கித் தருகின்றோம்." என்று பால் கறந்து வந்து பொங்கிச் சாப்பாட்டிற்கு அழைத்தனர். அந்த நேரத்தில் நந்திக் கடலிலே பால் முட்டியில் தண்ணீர் அள்ளி வந்து விளக்கேற்றுமாறு அம்மன் திருவாய் மலர்ந்தருள அவர்களும் அவ்வாறே செய்தனர். தீபம் சுடர் விட்டெரிந்தது. அப்போது அம்மையாரைக் காணவில்லை. அதனால் அற்புதமெய்திச் செய்வதறியாது திகைத்து நின்ற பிள்ளைகள் கேட்டுணரும் படியாக "நீங்கள் அஞ்சாதீர்கள்! என் பெயர் கண்ணகை. நீங்கள் என்னை நினைத்து நான் உங்கள் முன் காட்சி கொடுத்தருளிய தினமாகிய வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரமும் பூரணையுமான திங்கள் வாரத்தில் வழிபாடு செய்யுங்கள். நான் உங்களுக்கு வேண்டிய வரங்களைத் தந்து காத்தருள்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளிய தாலும் அவ்விடத்தில் அம்மையார் இருக்கும் பொருட்டுக் கொடுத்த பழைய வேப்பம் படவாள் (வேப்பங் குற்றி) முளைத்துத் தளிர்த்து மரமாகி நிழல் பரப்பி நின்ற அற்புதத்தாலும் அவ்விடத்திலேயே அம்பாளுக்கு பொங்கல் மடை செய்து, பூசை புரிந்து வழிபட்டு வருவாராயினர்.

இவ்வாறு பூசை புரிந்து வழிபட்ட வந்தவர்கள் வேளாண்மை மரபினராதலால் அவர்கள் தங்களுக்குப் பூசை முறைகளோ, மந்திர தந்திரங்களோ தெரியாததினாலும், தாங்கள் ஆசார சீல மற்றவர்களாதலாலும், அம்பாளின் பூசைக்கு அந்தணரை அமர்த்த விரும்பித் தென்னன் மரபு அடி (தென்னமரவடி) என்னும் இடத்தில் பாண்டிய மன்னரால் கொண்டு வந்தமர்த்தப்பட்ட பிராமணர்களில் ஒரவரை அழைத்து வந்து, முள்ளியவளையிலே குடியிருந்து, அம்மன் கோயிலிற் பூசை செய்யுமாறு இருத்திச் சில மானியங்களையும் வழங்கினர். அக்காலந் தொடங்கி ஆசை ஐயர், ஆனந்தையர், பரமசாமி ஐயர், என்று இவ்வாறு ஐயர் சந்ததியினரே பூசை வழிபாடுகளைச் செய்து வந்தனர். அப்பரம்பரையைச் சேர்ந்தவனாகிய தமியேனிற்கும் அவ்வழிபாட்டைச் செய்து வருகின்ற பேறு கிட்டியுள்ளது.

இவ்வித அனுபவங்களினாலேயே நானும் இக்கட்டுரையை எழுத முன் வந்துள்ளேன். அம்மன் எழுந்தருளியிருந்த வேப்பமரம் இன்று இல்லாவிடினும், எமது தாய் தந்தையர்கள் அறியக் கூடியதாக அப்புண்ணிய தரு காட்சியளித்தே மறைந்துள்ளது. அந்த வேப்பமரத்தின் பட்டைகளையும் தழைகளையும் பக்தர்கள் தீராத கொடிய நோய்களிற்கெல்லாம் மருந்தாக உபயோகித்தனர். இன்றும் அம்மன் பிரகாரத்தைச் சூழ்ந்து வேப்ப மரங்கள் நிற்கின்றன.

அன்றியும் பறங்கிக் காரர் இலங்கையை அடக்கி ஆண்ட காலத்தில், இக்கோவிலிலுள்ள புதுமை யாதெனக் கேட்டு நின்ற பறங்கியொருவன் குதிரையோடு கூக்குரலிட்டு ஓடும் வண்ணம் அசைந்து ஆடிக் காய்களால் எறிந்த பனிச்சை மரமொன்று அன்று முதல் காயாது நின்று சமீபகாலத்தில் நாமறியக் கூடியதாக நின்று மறைந்ததை யாவருமறிவர். அந்த பனிச்சை மரக் கொட்டிலே ஒரு நாக பாம்பு வாசம் செய்து வந்தது. அது சில காலங்களில் கோவிலுனுள்ளே போய்ப் படுத்திருப்பதுமுண்டு. ஆனால் அது எவரையாவது தீண்டியது கிடையாது. ஒரு நாள் பங்குனித் திங்கள் விசேட பூசை நேரத்தில் அந்த நாகம் கோவில் வாசலால் தனது இருப்பிடமாகிய பனிச்சை மரத்தை நோக்கிப் போவதைக் கண்டவர்கள் எல்லோரும் விலகி வழி விட்டு நிற்க, அறியாமை மேலீட்டினால் ஒருவன் அதனை ஒரு தடியால் அடித்தான். உடன் நாகம் மறைந்து விட்டது. உடனே அதை அடித்த ஆடவன் ஆவேசங் கொண்டு ஆடிப் பூமியில் வீழ்ந்து அறிவற்றுக் கிடந்தான். அந்நேரம் பூசை செய்து கொண்டு நின்ற பரமசாமி ஐயர் அவர்கள் பூசையை முடித்துக் கொண்டு வந்து தீர்த்தம் தெளித்து விபூதி இட்ட பின்னரே அவன் உணர்ச்சி வந்து எழுந்தான். அங்கு நின்றவர்கள் யாவரும் அம்மனின் அற்புதங் கண்டு ஆனந்தங் கொண்டு புகழ்ந்து போற்றினர். வெகு சமீப காலத்தில் பொங்கல் பொங்கி கோவில் கருமங்களைச் செய்கின்ற தெய்வக் கட்டாடியார் (பூசாரியார்) பாரிச வாதத்தினாலே பீடிக்கப்பட்டுச் சுதேச வைத்தியர்கள், ஆங்கில வைத்தியர்கள் எனப் பலர் சிகிச்சை செய்தும் குணப்படாமையினால், யாவரும் தம்மால் இயலாதென்று கைவிட்டனர். பூசாரியார் பற்று ஒன்றின்றிப் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி அம்மன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு, அருகிலேயே இருந்த மடத்தில் தங்கியிருந்து வேப்பம் பட்டை, பத்திரி ஆகிய இரண்டையும் அவித்து அதனையே மருந்தாக உட்கொண்டு சில தினங்களிற் பூரண சுகம் பெற்றார். இவர் இன்றும் உயிருடன் இருந்த கடமை புரிகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யக் கங்கணங் கட்டி முன் நின்ற கனவான் திரு.ஆ.மு கனக சபாபதி முதலியாரவர்கள் ஒரு நாள் கோவிலுக்கு வந்து திரும்பிய போது அழகிய ஒரு மூதாட்டி ஒரு மரத்தின் கீழ் நின்று சிறிய மழையில் நனைவதைக் கண்டார். "ஏனணை நனைகிறாய்" என்று அவர் கேட்டதற்கு நனையாமல் என்ன செய்வது? எனப் பதில் கூறியருளி நின்ற மூதாட்டியாரைத் தனது வாகனத்தில் ஏற்றிச் செல்ல நினைத்துத் திரும்பிப் பார்த்த போது அவ்வம்மையாரைக் காணாது திகைத்து, அம்பாளின் திருவருள் இவ்வாறோ என்று அதிசயங் கொண்ட அன்னார் அன்று முதல் இறக்கும் வரை அம்பாள் ஆலயத்தில் செய்த தொண்டுகளை அறியாதவர் இலரென்றே கூறுதல் வேண்டும்.

கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்றில் திருடன் ஒருவன் அம்பாளின் களஞ்சியத்திற் புகுந்து அம்பாளின் ஆபரணங்களையும், அங்கிருந்த சிறு தொகைப் பணத்தையும் திருடினான். திருடிய திருடனாற் புறப்பட்டுச் செல்ல முடியவில்லை. அம்பாளின் அற்புதத்தால் அவனுடைய கண்கள் பார்வை இழந்தன. கள்வனும் பிடிபட்டான். பொருட்களும் கிடைக்கப் பெற்றன. பொருட்கிட்டியதும் கள்வனின் கண்களும் வெளித்தன. இன்றும் உப்பு நீரிலே ஒளிப் பிரகாசமாக விளக்கெரிவதும் வித்தகியின் விந்தையன்றோ! இவ்வாறு கண்ணகைத் தேவியின் பெருங்கருணைத் திறத்தைப் பேசிக் கொண்டே இருக்கலாம். கண்ணகை அம்பாளிற்கு இலங்கைக் கயபாகு மன்னன் கோவில் அமைத்து விழாவும் ஆண்டு விழாவும் நடாத்தினான். சேரன் – செங்கொட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகள் இக் கண்ணகி கோவலன் கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் என்றென்றும் உலகம் கொண்டாடும் வண்ணம் தேனொழுகத் தித்திக்கும் தீந்தமிழால் காவியம் பாடியருளினார். கண்ணகை அம்மையார் தன் அற்புதங்களைக் கூறின் அவை எண்ணில் அடங்கா. வற்றாப்பளைக் கண்ணகை அம்மையாரின் அற்புதங்களை அறிய வல்லவரே அறிவாரெனக் கூறி அம்பாளின் அனுமதி பெற்றுக் கொள்கின்றேன்.

* * *

# உடம்பே ஓர் ஆலயம்

*கால் பாதத்தைக் கோபுரமாகவும்*
*மூலாதாரம் என்ற அடிவயிற்றுப்*
*பகுதியைக் கொடி மரமும் பலிபீடமாகவும்*
*சுவாதிஷ்டானம் என்ற அடிவயிற்றுக்கும்*
*தொப்புளுக்கும் இடையே உள்ள பகுதியை*
*அதிகார நந்தி இருக்கும் இடமாகவும்*
*மணிபூரகமான தொப்புளை அம்பிகை வாசம்*
*செய்யும் இடமாகவும் அனாகதம் என்ற*
*இருதயப் பகுதியை நடராஜப் பெருமான்*
*இருக்கும் இடமாகவும், விசுத்தி ஆகிய*
*தொண்டைப் பகுதியை வாகன நந்தி*
*இருக்கும் இடமாகவும் ஆக்ஞை என்ற*
*புருவப் பகுதியை இறைவன் தங்கும்*
*இடமாகவும், சகஸ்ராரம் என்ற மூளைப்*
*பகுதியை இறைவனின் தனிப்பெருங் கருணையான*
*பேரொளி வீசும் இடமாகவும் வைத்து*
*ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.*

*தமிழன் மனித உடலையே கோயிலாகக் கண்டு வழிபட்டான். மனித உடல் ஒன்றினுள் ஒன்றாக அமைந்த ஐந்து பகுதிகளையும் ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்த ஏழு படிகளையும் உடையது.*

*"பெருமை கொள்ள உயர்வோம்" என்ற கட்டுரையில் இருந்து*
*ஆன்கச் செல்வர் - நா. மகாலிங்கம்*





# அம்பாள் உலாவரும் அழகுத் திருமஞ்சம்

*சில குறிப்புக்கள்*

- திரு. க.ஜெயவீரசிங்கம் -

உமையம்மையின் அவதாரமாய்க் கண்ணகி என்று சிலம்கூறல் காவியம் கூறுகின்ற எங்கள் கண்ணகி நந்திக்கடற்கரையில் வந்தமர்ந்து நிகழ்த்திய, நிகழ்த்துகின்ற அற்புதங்கள் எண்ணிறைந்தவை. அவள் ஆநிரை மேய்க்கும் சிறுவர்க்கு காட்சி கொடுத்தபோது அமர்ந்திருந்த "பட்ட வேப்பம் படவாள்" தளிர்த்து மரமாகி இன்று மூலஸ்தானம் அமைந்துள்ள இடத்தில் நின்றமையை எமது முன்னோர்கள் கூறுவார்கள். அதுமட்டுமல்லாது பறங்கியை பனிச்சங்காயால் எறிந்து விரட்டிய பனிச்சை மரம் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களின் முன்புவரை நிழல் பரப்பி நின்றதை இங்குள்ள நடுத்தர வயதினரும் நன்கறிவர். ஆலயத்தில் திருடிய திருடன் பார்வையிழந்து தவித்ததும் மூன்று தசாப்தங்களின் முன்னர் நடந்த நிகழ்வு. இன்றும் உப்புநீரில் தீபம் ஒளிர்கின்ற அற்புதம் வைகாசி விசாகப் பொங்கலின் போது இங்கு நடந்தேறுவது ஒரு பெரும் அதிசயமான நிகழ்வாகும். இவ்வாறான அற்புதத்திருத்தலத்திலே அம்மன் உலாவருவதற்கு அமைக்கப்பட்ட அழகுத்திருமஞ்சம் தொடர்பான சில விடயங்களை நோக்குவோம்.

இன்றுள்ள திருமஞ்ச வேலைகள் 25–02–2000 இல் ஆரம்பிக்கப்பட்டு திருமஞ்சம் 06 –04–2001 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. மயிலிட்டியைச் சேர்ந்த ஸ்ரீ "முருகன் கனக சிற்பாலயத்"தைச் சேர்ந்த பிரதம ஸ்தபதி சின்னத்துரை நவரட்ணம் தலைமையிலான குழுவினர் இந்த அழகுத் திருமஞ்சத்தைக் கச்சிதமாக அமைத்துத் தந்திருந்தனர். இந்தத் திருமஞ்சத்தை அமைக்கும் பணியில் பிரதம ஸ்தபதியுடன் இணைந்து உதவி ஸ்தபதிகளாக செ. சண்முகநாதன், செ. சிவரத்தினசிங்கம் ஆகியோரும், பிரதம உதவியாளர்களாக செ. தியாகராசா, ந. செல்வேந்திரன், மு. சங்கர் ஆகியோரும் ஈடுபட்டனர். மஞ்சத்துக்கான இரும்பு வேலைகளை முள்ளியவளையைச் சேர்ந்த தேவதாஸ் (தேவன்) அவர்களும், வர்ணவேலையை காங்கேயன் அவர்களும் நிறைவு செய்தனர்.

இந்த மஞ்சத்தின் உயரம் 24 அடிகளாகும். இதன் எடை 80 தொன்களாகும். இந்தப் பிரமாண்டமான மஞ்சத்தின் சில முக்கியமான அம்சங்களை நோக்குவோம்.

மஞ்சத்தில் இரண்டு குதிரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு குதிரைகளும் நான்கு வேதங்களையும் உருவகப்படுத்துகின்றன. மஞ்சத்தின் சில்லுகள் சூரிய சந்திரர்களை உருவகப்படுத்துகின்றன. மஞ்சத்திலே பூதப்பார், தாங்கு சிம்மப்

பார், கஜபந்தி, குமிழ்ப்பார், கபோதகப்பார், தன்னிலைப்பார், சிம்மப் பூத்தலைப்பார், விஸ்தாரப்பார் என்பன முக்கிய அமைப்புகளாக இடம் பெற்றுள்ளன.

இதில் விஸ்தாரப்பார் என்பது நராசனம் என் அழைக்கப்படும். அந்த இடம் மனிதர்கள் நின்று அம்பிகையை வணங்குவதற்கான இடமாகும். அதற்கு மேலாக தேவாசனம் அமைக்கப்பட்டுள்ளது. இது தேவர்கள் அம்பிகையை வழிபடுத்தற்கான இடம். அதற்குமேல் அம்பிகை அமர்கின்ற சிங்காசனம் அமைந்துள்ளது.

மஞ்சம் என்பது தெய்வம் மகிழ்ந்து உலாவருகின்ற வாகனமாகும். பொழுது போக்குக்காக கடவுளர் பயன்படுத்துகின்ற வாகனம் என்று அதைக் குறிப்பிடலாம். மஞ்சத்தை நடமாகும் வசந்த மண்டபம் என்று கூறுவார்கள்.

மஞ்சத்துக்கும் தேருக்கும் இடையில் பிரதானமான சில வேறுபாடுகள் உண்டு. தேர் நடமாடும் கர்ப்பக்கிருகம் என அழைக்கப்படும். தேருக்குமேலே ஒரு முடி மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். மஞ்சத்துக்கு ஐந்து முடிகள் அமைக்கப்படும். மஞ்சத்தின் மேற்பகுதி நீள்சதுரமாக இருக்கும். தேரின் மேற்பகுதி வட்டவடிவமாக இருக்கும். மஞ்சத்துக்கு குடையில்லை. தேருக்கு ஏகசக்கரக் குடை உண்டு. தேர் அழித்தலுக்குப் பயன்படும். மஞ்சம் களிப்புடன் உலாவரப் பயன்படும். இவையே மஞ்சத்துக்கும் தேருக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளாகும்.

இவ்வாறான அழகுத்திருமஞ்சத்தை இழுக்கும் குதிரைகளைச் செலுத்துவதாக அமைக்கப்பட்டிருக்கும் பெண் உருவம் "பிரம்மாவின்" என்று அழைக்கப் படுகின்றது. பெண் தெய்வங்களின் மஞ்சங்களுக்கு இந்த உருவமே அமைக்கப்படுவது வழக்கமாகும்.

எனவே இவ்வாறான அழகிய திருமஞ்சத்திலே அம்பாள் அமர்ந்து உலாவருகின்ற போது "சாம்பவ" தீட்சையைப் பெற்று அடியார்கள் உய்வர் என்பது திண்ணம்.

* * *

# கங்கை ஸ்நானம்

*கங்கையில் ஒருமறை மூழ்கி எழுந்தால் எல்லாப் பாவங்களும் தொலைந்து மோட்சம் அடைந்து விடலாம் என்பது நம்பிக்கை. இது உண்மையானால் கங்கை நீரிலே சதா சர்வகாலமும் வாழ்ந்து கொண்டிருக்கும் மீன்களும், ஆமைகளும் மோட்சத்திற்கு அல்லவா போக வேண்டும்.*


*வெறும் கங்கா ஸ்நானம் பாவத்தைப் போக்கி விடாது. பாவங்களை நினைத்து வருந்தும் மனோபாவமும், மீண்டும் அந்த பாவங்களைச் செய்யாதிருக்கும் வைராக்கியமுமே ஒருவனை தூய்மையாக்க முடியும். இந்த வைராக்கியத்தைப் பெறவே கங்கா ஸ்நானம்.*

ராமகிருஷ்ண பரமஹம்சர்

அடியார்கள்
மஞ்சத்திற்கான
பவளக்கால்களைத் தமது
தோள்மேற்
தாங்கிவரும் காட்சி.







அடியார்கள் புடைசூழ அம்பாள் மஞ்சத்திலேறி ஒய்யாரமாக வீதிவலம் வரும் காட்சி.

ஸ்தபதியார்
கௌரவ நிகழ்ச்சி
மயிலிட்டி - ஸ்ரீ முருகன்
கனக சிற்பாலயத்தைச் சேர்ந்த
சின்னத்துரை - நவரட்ணம்
(பிரதம ஸ்தபதியார்)
தலைமையிலான
குழுவினர் கௌரவிக்கப்படுகிறார்கள்.







நந்திக் கடல் வெளியில் அம்பாளை அலங்கரித்து நிற்கும் அருட் திருமஞ்சத்தின் அழகொழுகும் தோற்றங்கள்



# வற்றாப்பளைக் கண்ணகை அம்மன்
# மழைக்காவியம்

*"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கு மீண்டும் - குறள்"*

**வா**னம் வறண்ட விடத்து நீர்த்துளியைப் புவி காணாத விடத்து தேவர்களுக்கும் கூட சிறப்பான பூஜைகள் நடைபெற மாட்டாதென்று வள்ளுவர் பெருமான் கூறிச் சென்றபின் மழையின் தேவை புரிகின்றதல்லவா? எனவே "அணுவுக்கணு வாய் அப்பாலுக்கப்பாலாய்" நிற்கும் அந்தப் பரம் பொருளை வேண்டுதல் செய்து மழையை வருவிப்பது எமது மரபு.

அந்த வகையிலே பூமி வறட்சி காண்கின்ற வேளைகளில் எல்லாம் அம்பாளின் ஆலயத்திலே விசேட பூஜை ஆராதனைகள் செய்து அவளின் திருவருள் மழையை நாடிநிற்பது அடியவர்களின் முறைவழக்கம். அம்பாளுக்கு விசேட பூஜை ஆராதனைகள் செய்து உடுக்குவாத்தியத்துடன் மழைக் காவியமும் படித்து வருகின்ற விடத்து மழை பெய்து நாட்டுக்குச் செழிப்பைத் தரும் என்பது குடிமக்களின் நம்பிக்கை. அதே வேளை பாடப்படுகின்ற மழைக்காவியம் தான் இது.

01 அரியபுவி மகளுமலை கடலிலுறை பவனும்
அரவதனை யணிபவனு மலையரசன் மகளும்
பெரியதவ முனியுமிரு டிகளுமல ரயனும்
பெருமை செறி கலைமகளு முனுவசியிந் திரனும்
தெரிவரிய வுனதுபத மலரையனு தினமும்
தெண்டனிட் டடிபணிய வேமன மிரங்கி
விரிவு செறி குளமவைகள் நிறையமழை பொழிய
மேவியருள் காட்டா விநாயக வினோதா.

02 ஆழமுறு கடலிநீர் வானமது வருசித்து
அகிலமுறு மாறுகுள நிறையமழை பொழிய
கோளவை குணங்கெடு மிராசியவை மேவியே
கொடியவெயி லல்லாது மழை பொழிவ தில்லை
நாளது தெரிந்துமறை வேதியர்க ளோத
நாங்கள்படு துயரமவை தாங்கரிது வெள்ளம்
தாழ முறு குளமவைகள் நிறையவே நின்கிருபை
தந்துதவு வற்றாப்பளையில் மாதாவே.

03 வில்லிடப முழுவையொடு கோள் கும்ப ராசியில்
மேவியுற வாய்வெள்ளி மேவுநா ளதனில்
நல்மதி யனைந்துகே சரியோக முற்று
நன்மைபெறு குருசந்தி ரன்னான தன்பின்
சொல்லரிய வானமதி லிடமுற்ற முகில்கள்
சொரிகின்ற சோணைமழையெனவே பொழிந்து
நெல்விளைவு பெறவுனது திருவுளமிரங்கி
நிமிடமதில் மழையுதவு நிமலை கண் ணகையே

04 மலரழக மதுகுலைய வண்ணவுடல் நலிய
வடிவுறுமு னிடைதுவழ நுதல்வியர்வை பெருக
திலகமெழு தியதழிய வெய்யிலிற் புனு கொழுகத்
திருமேனி கருகவெளி வரவேணு மோதான்
உலகமுழு தும்பெற்ற தாயல்ல வோமழை
ஒருநாழி கைப்பொழுதி லுதவவொண் ணாதோ
குலதிலக வணிகர்மகள் வனிதைவற் றாப்பளை
குடிகொண்ட கண்ணகைக் கோதை மாதாவே.

05 செப்புமூ தலைகடற் பேழைதனில் வந்தாய்
சிட்டமா யாயருடை சேரியி னுய்ந்தாய்
கொப்புமா வின்கனிய தாகிமு னமைந்தாய்
கோதற்ற வற்றாப் பளைகோயில் கொண்டாய்
இப்படியி லெத்தனை தலத்திடை யிருந்தாய்
எப்பமா மழைதருவ தென்றே நினைந்தாய்
தப்பினா லுலகமுறு வார்கள் துயர் காண்பாய்
தற்பரா பரனுடைய சக்திகண் ணகையோ.

06 தண்ணீரில் லாமல்வயல் சாலியிழங் கதிர்கள்
தலைசோர வயலிலுள சனமத தவிக்க
கண்ணீரி னால் மூழ்கிக் கனதுயர மெய்திக்
கண்கலங் கிப்படுங் கவலையறி யாயோ
தண்ணீரி னால்நுரை மிதக்கநிதி பெருகித்
தாவிவர வெள்ளமொரு மழையருள வேணும்
பெண்ணீர்மை யானகுண காரணச் செல்வி
பேசுவற் றாப்பளைப் பெண்ணரசி யாரே.

07 எந்தவித மானபிழை செயினும் பொறுத்து
ஏழையடி யார்களென வேமன மிரங்கி
நொந்தகன லாறியிப் போதிலொரு மழையே
நூதனம தாகநீ தந்தருள வேணும்
கொந்தழக பந்திமட வார்கள் நீ ரோடையிற்
கொண்டாட வாவிதொறு நின்றாடு மலரில்
தெந்தென தெனாவென்று வண்டிசைகள் பாட
தேசுறுவற் றாப்பளைத் தேவிகண் ணகையே

08 கப்பல்திசை கெட்டதொரு கரையிலடை யாதோ
கட்டைதனில் வைத்தபிண மற்றுயிர் பெறாதோ
உப்பள மதிற் பயிர் விதைக்க முளை யாதோ
உத்தமமி லூமைய னுரைக்க வறியானோ
இப்பிறவி யிற்குரு டினித்தெளிவ திலையோ
எப்பமா மழைதருவ தென்றினி திருந்தாய்
தப்பினா லுலகமுறு வார்கள் துயர்கண்டாய்
தக்கவற்றாப்பளை தங்குகண்ணகையே.

09 கெற்பமா யுலகமதி லவதரித் தாயே
கேளுடைய பாலூறக் கிருபை செய்தாயே
நெற்பயிர்க ணீரின்றி வாடுதல் கண்டும்
நின்றமுத பேர்மகிழ மின்னிமழை தாராய்
அற்பனென் றெனையிகழ்ந் தாலுமிப் பாடல்
அதிலுள்ள சீர்தனுக் காயினு மிரங்கிச்
சற்பமா மணிநூ புரத்தினாற் கூடல்
சார்ந்தண லவியமழை யுதவு மாதாவே.

10. தேனுலவு கற்பகநன் னிழலதனி லிட்ட
தெய்விக மணித்தவின் மீதுறை யுனக்கு
வானவரு வந்தடி வணங்கவர மருளும்
வற்றாப் பளைத்தல மதிக்கவருள் கொண்டு
வானமுள மட்டுமழை மின்றுதர வேணும்
மாமழையின் வெள்ளமது நாளைவர வேணும்
பானல்மொழி நற்கருணை மாரிசொரி விப்பாய்
பார்புகழ்வற் றாப்பளையில் வாழு மாதாவே.

11 கற்புநெறி தவறாத காரிகை மாதர்
கானல்வெயில் மூடுபனி காவண மிருப்ப
வற்றாப் பளையதனில் வந்தமா தாவே
மற்றுமுன் நினைவன்றி வேறொன்று மறியோம்
வெப்புவெயில் கானலது பகலெல்லாம் வீச
வீழ்பனிய தால் முழுவதும் மேனிநனை விக்க
இப்படி யெமக்குமிது வருவதோ வம்மா
இன்பமுடனே மழை யீந்தருளு வாயே.

12 கடல்கடைய வுலகின்மிசை யமுதொடு பிறந்தாய்
கலைதெரியு மதுரைநகர் வழுதியை முனிந்தாய்
விடவரவின் மணியையொரு பணியா யணிந்தாய்
மேருதனில் மலையரசன் மகவாய் வளர்ந்தாய்
அடவியுறு மருதடியில் விடுதிவிட வந்தாய்
அரகரா வுனதருமை யுடலிடையில் நொந்தாய்
திடமுடன் மழையுதவு சடுதியி லெமக்காய்
சீருலவு கருணை மிகு தேவிகண் ணகையே.

13. அட்டவகை யானதொழில் செப்பநட வாதோ
அறிவிலா தவனுலக மரசுபுரி யானோ
பட்டமரமானது தழைத்து வளராதோ
பழமை செறி கிழவர்க்கு மிளமை வாராதோ
இட்டமழை கோடையினி லிப்பபொழி யாதோ
எந்தவெளி யும்முழு விளைச்சல் விளையாதோ
திட்டமுட னுன்கிருபை செய்திடுவை யானால்
சீருலவு செந்தமிழ்ச் செல்விகண் ணகையே

14 சோதிமதி பானுகடல் பொய்த்திடினும் மேலோர்
சொன்னமொழி தவறாது குறிதவறி னாலும்
காதலுறு வேதவிதி பொய்த்திடினு முனது
கற்புநெறி பொய்தொரு காலமது முண்டோ
காதலடி யார்கள் பணி விடைகார னுன்னுடைய
கட்டாடு கின்றவர்க் காயினு மிரங்கி
மோதுகுளிர் தாரைமழை நீயருள வேணும்
முத்துவற் றாப்பளையில் வந்தமா தாவே.

15. மாதருறை வற்றாப் பளைவாழி வாழி
வரிசைபெறு வணிகர்குல மாதுமையும் வாழி
வேதமோ டைந்தெழுத் தோதுவர் வாழி
வெண்ணீ றணிந்தசிவ சமயமும் வாழி
நீதிசெறி யரசர்செங் கோலுமிக வாழி
நீலமயிலேறுகதிர் வேல்முருகர் வாழி
பாதிமதி சூடுமரன் பாதமற வாமல்
பாடினவர் வாழிபார் வாழி வாழியவே.

❋ ❋ ❋

# உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| *மிக மிக நல்ல நாள்* | *- இன்று* |
| *மிகப் பெரிய வெகுமதி* | *- மன்னிப்பு* |
| *மிகவும் வேண்டாதது* | *- வெறுப்பு* |
| *மிகப் பெரிய தேவை* | *- சமயோசித புத்தி* |
| *மிகக் கொடிய நோய்* | *- பேராசை* |
| *மிகவும் சுலபமானது* | *- குற்றம் காணல்* |
| *கீழ்த்தரமான விஷயம்* | *- பொறாமை* |
| *நம்பக்கூடாதது* | *- வதந்தி* |
| *ஆபத்தை விளைவிப்பது* | *- அதிக பேச்சு* |
| *செய்யக் கூடாதது* | *- உபதேசம்* |
| *செய்ய வேண்டியது* | *- விவாதம்* |
| *உயர்வுக்கு வழி* | *- உழைப்பு* |
| *நழுவ விடக்கூடாதது* | *- வாய்ப்பு* |

*(ஒரு கோயிலில் கண்ட கருத்துப் பட்டியல்)*





# பத்தஞானி பொங்கல்

## *வழிபாட்டு மரபு முறைகள்*

-மயில் - நல்லநாத பிள்ளை-

**வ**ற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம். வைகாசி மாதம் பூரணதினத்தை அண்டி வரும் திங்கட்கிழமை நடைபெறுவது வழக்கம். அப்பொங்கல் தினத்தை அடுத்து வரும் வெள்ளிக்கிழமை ஒரு பொங்கல் நடைபெறும். அது பத்த ஞானி பொங்கலாகும். அம்மன் கோவில் பொங்கலுக்கு இருவாரங்களுக்கு முன்பு ஆரம்பமாகும். "பாக்குத்தெண்டுதல்" தொடக்கம் "தீர்த்தமெடுத்தல்" "அம்மன்மடை" விசாகப் பொங்கல் வரை நடைபெறும் நிகழ்வுகளே பொங்கற் கால நிகழ்வுகளாகும்.

இதில் இறுதியாக நடைபெறும் "பத்தஞானி பொங்கல்" பற்றிய குறிப்புக்கள் இக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் முறைகள் வழிபாடு தொடங்கிய காலமுதலே கிராமிய முறையில் ஊர்ப் பூசாரி மலர்களினாலேயே அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் இந்தியாவில் இருந்து இங்கு வந்து பத்தஞானி என்ற ஒரு விஸ்வப்பிரம்பகுல முதியவரினாற் பொங்கல் மற்றும் வழிபாட்டு முறைகள் பற்றிய "பத்ததி" (விதிகள்) வகுத்துக் கொடுக்கப்பட்டன.

பிற்காலத்திற் பிராமண பூசகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது கோயில். அங்கே ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறத் தொடங்கின . இருப்பினும் பொங்கல் முறைகள் மட்டும் பத்த ஞானியின் பத்ததிப்படியே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இது ஆகமவிதிகளும் , கிராமிய முறைகளும் சார்ந்த ஒரு வழிபாட்டு முறையாகும்

பக்தஞானிகள் என்னும் சித்தர் கொண்டு வந்த பத்ததி முறைகளும் பூசைப்பொருட்களும், உடுக்கை, சிலம்பு, வெள்ளிப் பிரம்பு என்பனவும் கூட பிராமணர்களது பாதுகாப்பில் பூசாரியார்களினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்களும் அம்முறைகளை அனுசரித்துப் பொங்கல் கிரியைகளைச் செய்து வருகின்றனர். பத்தஞானியின், பக்தியும், சித்தும் மக்களை மிகவும் கவர்ந்தன. அவர் மீது பயபக்தியை ஏற்படுத்தின. இவ்வாறு பலகாலம் வாழ்ந்து அம்பாளுக்குத் தொண்டு செய்த பத்தஞானி தனது இறுதிக் காலத்தில் தன்னை ஆதரித்தவர்களையும் , விசுவாசிகளையும் அழைத்து ஒரு செப்புப் பேழையைக் கையளித்துத் தான் இறந்தாற் தனது உடலுடன் அதையும்

புதைத்துவிடும்படி வேண்டியதுடன் அதை திறக்கக் கூடாது எனவும் கட்டளையிட்டார். ஆயினும் அவர் சமாதியடைந்தவுடன் அவரை அடக்கம் செய்த அடியார்கள் பேழையை மட்டும் புதைக்காமல் திறந்து பார்த்தனர். அதனுள் இருந்த ஏழு குளவிகள் "விர்"ரெனப் பறந்தன. அவ்வேழு குளவிகளுமே ஏழு வைரவர்களது நாமத்துடன் வெவ்வேறு இடங்களில் குடிகொண்டன என்பது கர்ண பரம்பரைக் கதையாகும்.

முதலாவது பத்தஞானியை சித்தரை அடக்கம் செய்த நாவற்காட்டு மயானத்தில் நாவற் காட்டு வைரவர் என்றும், இரண்டாவது செங்கற்பனை வைரவர் என்றும், மூன்றாவது புதறிகுடா வைரவர் என்றும், இன்னொன்று கண்டுப் புளியடி வைரவர் என்றும், ஆறாவது சிலாவத்தை வைரவர் என்றும் இறுதியானது தீர்த்தக் கரை வைரவர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

வைரவர் வழிபாட்டிலும் அவற்றை ஆதரிப்பதிலும் முன்னின்ற பத்தஞானி முனிவருக்கு மரியாதை செய்யும் முகமாகவும் அம்மன் கோவில் பொங்கல் நடை முறைகளுக்காக ஒரு பத்ததியை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காகவும் அவருக்கு நன்றி கூரு முகமாகப் பொங்கலை அடுத்துவரும் வெள்ளிக்கிழமையன்று அவரை அடக்கம் செய்த மயானத்திற் பொங்கல் செய்வது வழமையாகும். அப்பொங்கல் முறையும் விசித்திரமானதாகும்.

வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்குப் பின் கோயில் ஐயர், தீர்த்தம் எடுப்பவர், ஆசாரியார் உட்பட ஒரு சிலரே பொங்கலுக்கான பொருட்களை எடுத்துக் கொண்டு மயானம் நோக்கிச் செல்வர். அங்கு பத்தஞானிக்கு ஒரு வளுந்தும் (பொங்கற்பானை) வைரவருக்கொரு வளுந்தும் வைத்து பொங்கல் செய்வர். பொங்குவதற்கு முன்பு சிறு பந்தலிட்டு வெள்ளை கட்டி அலங்கரித்து மடைபரவுவர். அதன் பின்பு பொங்கல் இடம்பெறும். பொங்கிய பின்பு தூரத்தே போய் நிற்பர். படையல் முடிந்தபின் ஐயர் பூசை செய்து கையிலே தட்டி "கூ" என்று சத்தமிடுவார். அதன்பின் தூரத்தே நின்றவர்கள் மண்டபத்துக்கு வந்து பூசைப் பொருட்களை ஒன்று சேர்ப்பர். அவ்வேளையிற் சுற்றுப்புறத்தில் இருந்து 'சூளிக்' கள் என்ற எறும்புகள், பரவிய மடையில் மொய்த்திருப்பதைக் காணலாம் எறும்புகள் பத்தஞானியினதும், வைரவரப் பரிவாரங்கள் என்றும் இவை பொங்கல் மடையை ஏற்க வருபவை என்றும் சொல்வர்.

அதன் பின் எல்லோரும் பின்புறமாக வந்து வெளியேறுவர். வரும் பாதையில் 108 விளக்குத் திரிகளை ஒவ்வொன்றாகக் கொழுத்தி வைத்து வருவர். இறுதியாக பெரிய பந்தம் ஒன்று கொழுத்தி வைத்துத் திருப்பிக் கைதட்டி 'கூ' என்று கூவியபின் திரும்பிப் பாராமல் வந்து குளத்தில் நீராடிக் கோவிலுக்குச் செல்வா.

பத்தஞானி பொங்கலுடன் வற்றாப்பளைப் பொங்கல் நிகழ்ச்சிகள் பரவும் இனிதே நிறைவேறும்.

## எது?

| | | | |
|---|---|---|---|
| எது வாழ்வு | – குற்றமின்மையே | சத்துரு எது? | – காமமே |
| பெருமை எதனால் | – எதையும் பிறரிடம் வேண்டாமை | எமன் எது? | – கவனக்குறைவே |
| ஈகை எது? | – கேளாது கொடுத்தல் | பெரிய தீட்டு எது | – கடன் தொல்லையே |
| எதிரி யார்? | – முயற்சியற்ற சோம்பல் | சேனாபலம் எது? | – தைரியமே |
| உறக்கம் எது? | – அறியாமை | அனர்த்தத்தைத் தருவது எது | – அகம்பாவம் |
| நரகம் எது? | – பிறர் வசம் இருப்பது | இரகசியமாகச் செய்யும் பாவம் | – சாகும்வரை மனதை வாட்டும். |
| சாவு எது? | – மூர்க்கமே | நல்ல நண்பர்களின் நட்பு | – நலத்தைக் கொடுக்கும் |

*ஆதி சங்கரர்*



# அம்மானை



இஃது ஒரு வகைப்பாடலையும் ஒருவகை விளையாட்டையும் குறிப்பதாகும். அம்மானை அல்லது அம்மனை விளையாட்டு என்பது தமிழ் நாட்டில் பெண்களது பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று. மூன்று காய்களை வைத்து எறிந்து ஏந்தி விளையாடுவது. கைகளில் இருகாய் இருக்கும்பொழுது ஒரு காய் அந்தரத்தில் நிற்கும். இருவர் அல்லது மூவராக இருந்து பாட்டுப்பாடிக் காய்களை எறிந்து ஏந்தி விளையாடுவர். இங்ஙனம் எறிந்து ஏந்தும் பொழுது பாடப்படும் பாடல்களை அம்மனைப் பாடல்கள் என்று கூறுவர். இதில் இருந்தே அம்மானை இலக்கியங்கள் எழுதப்பெற்றன.

பின்வரும் பாடல்கள் வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தில் படிக்கப்படும் அம்மானை ஆகும். ஆனால் இது அம்மானைப் பாடல் வகையைச் சாராமல், அம்மனை விளையாட்டைக் குறிக்கும் பாடல்களாய் அமைவதனால் அம்மானை எனக் கூறப்படுகின்றது. ஏனெனில் இப்பாடல்கள் அம்மானைப் பாடல் பாணியில் அமையாமல், வயந்தன் மெட்டில் அமைகின்றமை நோக்கற்பாலது. 21–ம் பாடல் தொடக்கம் 29–ம் பாடல் வரையுள்ள ஒன்பது பாடல்கள் கண்ணகி விளையாடிய அம்மனை விளையாட்டைக் குறிப்பதாகவுள்ளது.

மதுரையை எரித்த கண்ணகி மனத்தழல் நீங்கி மனங்குளிர்ந்து தோழியருடன் குமரக் கடவுள் உறையும் திருப்பரங்குன்றிலே அம்மனை விளையாட்டை ஆடியருள்கிறார். கண்ணகிக்கு மிகப் பிரீதியான அம்மனை விளையாட்டை ஆடுவித்து அவர் மனதைச் சாந்தியுறச் செய்யத் தோழியர் ஏற்படுத்திய உபாயமாகும். அங்ஙனமே கண்ணகியின் சீற்றம் குறைந்து, அவர் அவ்விளையாட்டை லயித்தார் போலும்.

வெள்ளி, பொன், மரம் என்பவற்றால் அம்மனைக் காய்கள் செய்யப்படும். தகுதி, தரத்திற்கேற்ப மணிகள், இரத்தினங்களை இக்காய்களில் இழைத்துக் கொள்வோருமுண்டு.

*(பின்வரும் அம்மனைப் பாடல்கள் ஏட்டுப் பிரதியிலிருந்து தொகுக்கப்பட்டன.)*

# கண்ணகை அம்மன் அம்மானை

## காப்பு

வீசுகர மேகநிற வேதநுத லாள்கருணை
மேவுமத வாரண வினாயக வினோத
சேசுருதி மேருவினிற் கோடுகொடு பாரதம்
சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வல்லிக்கோர்
கொஞ்சு மதலைக்களப குஞ்சரமுகத்தோன்
பேசுதமி ழின்கதைக ளேபாடுதற்கு
பிழைகள்வா ராமலருள் பேழைவயி றோனே.

சீர்பொருந்து மைங்கரனே திருமாலின் மருகோனே
கார் பொருந்து மானைமுகக் கணபதியே கற்பகமே
பார்பொருந்துங் கண்ணகையார் பழ்வாங்கிக் குளிர்ந்த கதை
ஊர் செழிக்கப் பாடுகிறேன் ஓர்பிழையும் வாராமல்
ஒருபிழையுஞ் செய்யாத உலகுபுகழ் கோவலரை
பெருமழுவாற் கொல்வித்த பிழை மாறன் தனைவதைத்து
கருதரிய ஆயர்மனை கனல்மூளச் சாபமிட்டு
ஒருமுலையைக் குறைத்தகதை யானுரைக்கக் காப்பாமே.

## கதை வயந்தன்

1. காரணியுங் கொடை வாழ் வணிகர்
காதல் மிகுந்ததோர் கோவலனார்
சீரணியுந் திரு மாமணி மங்கை
தேவி குலத்தினில் தோற்றினளே.

2. மன்னுயர் மாநாகர் தன்மகளார்
மாசாத் தருக்கரு மருமகளார்
பொன்னுளதும் மாதவிக் குத்தோற்று
போகைக் கிசைந்தார் கணவனோடே

3. கொஞ்சிய செந்சொற் கிளிப்பிள்ளைதான்
கொண்டு சென் றுற்றவர் கைக் கொடுத்து
வஞ்சம தின்றியே வாருமென்று
வந்தாரே கோவலர் முன்பு செல்ல.

4. தீதறு காதம் பலகடந்து
சிறந்த கவுந்தியோடங் கிருந்து
மாசறு வல்வினை தீரவென்று
வகையறி வோமெனப் போயினரே.

5. வைகைக் கரையதன் மீதிருந்து
மாது வணிகர் நடந்தனரே
தையல் வருந்தக் கவுந்தியரும்
தார்வணிகற் கோர்தாழ் வில்லையென்றார்.

6. அன்னங் குருகு புறவினங்கள்
அவைதுணையாக விருந்தவாறே
பொன்னின் மணிச் சிவிகை தனிலேறி
போந்தே யிடையர் தெருப்புகுந்தார்.

7. முதிரும் பழவினை மூளலுமே
மொய்குழ லாள்தமை யங்கிருத்தி
மதுரை புகுந்து சில நாளில்
வாணிபஞ் செய்வோ மெனக்கருதி

8. கண்ணகைகாற் பொற் சிலம்பு கொண்டு
கருத்துடன் நல்லோர் கடைபுகுந்து
எண்ணமொன் றில்லாத கோவலனார்
ஏற்றவிலை மாற்றஞ் செப்பினரே.

9. விற்குஞ் சிலம்பின் விலை பெரிதென்று
வேளாளர் கொள்ளாமல் மீண்டிடவே
தற்கம் பெரியதோர் தட்டானுக்கே
தன்கைச் சிலம்பொன்றைக் காட்டினரே.

10. நிற்கவிவ் வாசலில் நிற்கவென்று
நீணில வேந்தற் கெடுத்துரைக்க
கொற்கைச் சிலம்புகொள் கள்வனைத்தான்
கொடுவாரு மென்றவர் கூறினரே.

11. மாற்றமொன் றின்றியே மன்னவனும்
வணிகனைக் கொல்வோ மெனநினைந்து
குற்றமொன்றில்லாத கோவலரை
கொடுமழுவாற் பிளப் பித்தானே.

12. காதலன்பட்ட படுகளத்தைக்
கனவிலே கண்டு கனங்குழலாள்
மாதிரஞ் சூழு முலகறிய
மதுரை யெரிக்க மனந் நினைந்தார்.

13. வெய்யநற் றோழியும் மாதரியும்
மெல்லி நல்லாள்தனை அங்கிருத்தி
துய்ய மொழியே நீ சொன்னமாற்றம்
தொல்லுல கோற்கு முடியாதென்றார்.

14. மாறுரை கேட்டு மனங் கலங்கி
மன்னவன் வாச லருகு சென்று
கூறுவேறான உடல் பொருத்தி
கொம்பனையாளுயிர் மீட்டுக் கொண்டாள்.

15. பாண்டியன் செய்த கொடும் பழியால்
பார்மே லெழுந்த பதிமதுரை
மூண்ட வடவனல் தனைமூட்டின்
முன்னமெரித்தாளே மொய்குழலாள்.

16. ஆயர் குலக்கொடிப் பாவையர் வந்து
ஆயிளை தன்னையடி பணிந்து
தூயநல் வெண்ணெயை அள்ளிவந்து
சுடர்நுதல் கொங்கையிலப்பினரே.

17. ஆறிய சிந்தை யரிவைதன்பால்
ஆனதோர் சீத்தலைச் சாத்தர் வந்தார்
நாறிய பூங்குழல்க் கோதைமாதே
நங்கையே நீ வருந்திங்கள் மொழி.

18. ஐயனே எந்த னடிபணிந்து
ஆதுலர் சேரி குளிர்கவென்று
வைகாசித் திங்கள் வருவேனென்று
வருகைக் கிசைந்து விடைகொடுத்து.

19. தானுந் தோழியும் மாதரியும்
தன்னிலொன்றானதோர் கோதையுமாய்
வானோ ரெதிர்கொள்ள வையமுய்ய
மங்கை மகிழ்ந்துல கேறினளே.

20. ஆறிநடந்தா ளாயினையாள்
ஆனதிருப்பதி வாசலிலே
தேறி நடந்தாள் திருமங்கை
செல்வி திருப்பதி வாசலிலே.

21. காந்தஞ் செறிந்த கனங்குழலாள்
கணவனுடன்பிரி யாதகன்னி
இந்த மனையிடர் தீரவென்று
ஏந்திளையம்மனை யாடினளே.

22. பூந்தடங் கண்ணார் புடைசூழ
பொன்னனை யார்தமை யங்கிருத்தி
கூந்தல் மடமயில் சாயல் நல்லார்
கோதை நின்றம்மனை யாடினளே.

23. பூரண வேல்விளிப் பொன்னனையாள்
புவனம் முழுதும் புரிகுழலாள்
ஆரணமேத்தி அரிவையர் போற்ற
ஆயிளையம்மனை ஆடினளே.

24. சித்தங் கலங்கிய தென்னவன் கூடலைத்
தீக்கொண்டு வந்து சிறப்பழித்து
பத்தினி யென்று பலரும் போற்றப்
பாவை நின்றம்மனை ஆடினளே.

25. விற்புருவ விழிச் சாயல் நல்லாள்
மேதினியெங்கும் குளிர்ந்து வாழ
கற்புடையாளென்று சொற்படைத்த
காரிகை அம்மனை ஆடினளே.

26. காந்தஞ் செறிந்த குழலசைய
காசினியெங்குந் தழைக்க வென்று
அந்தரவானத் தரம்பையர் போற்ற
ஆயிளை யம்மனை யாடினளே.

27. ஆலிலைபோல அணிவயிறாள்
ஆயிரங் கண்ணுடையாயிளையாள்
சாலிவிளைய மழை பொழிய
தார்கோதை யம்மனை யாடினளே.

28. கன்னியர் தாம்வந் தடிபணிய
கற்றவர் தங்கிளை வாழ வென்று
சென்னி வளவன்றன் மாநகரில்
சேயிளையம் மனை யாடினளே.

29. கைமானையேந்திய காரிகையார்
கணவனுடன் பிரியாதவாறே
அம்மனையேந்திய அங்கையற்கண்ணி
அம்பொற் சிலம்படி போற்றுதுமே.

## வேறு

30. ஒருமா பத்தினி வந்தாள் வந்தாள்
உலகேழும் தழைத்திட வந்தாள் வந்தாள்
திருமா மணிமங்கை வந்தாள் வந்தாள்
தேசந் தழைத்திட வந்தாள் வந்தாள்.

31. இப்பாரிடந்தனில் வந்தாள் வந்தாள்
இடைச் சேரிவாழ்விக்க வந்தாள் வந்தாள்
ஒப்பான பாலகர் காண அன்பாய்
ஒருமாபத்தினி வந்தாள் வந்தாள்.

32. வீறாடும் பத்தினி வந்தாள் வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்
மாறான பாண்டியர் மாழவென்று
வளமான கொங்கையரிந்தாள் வந்தாள்.

33. பாலருமென் மொழி வந்தாள் வந்தாள்
பணிந்தோர் கிளைவாழ வந்தாள் வந்தாள்
மேலானவேல்விழி வந்தாள் வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்.

34. கொற்றவன் முன்னே பிளந்து போட்ட
கோவலரங்கத்தைக் கூட்டிக் கட்டி
மற்றுமே தென்று வசனங் கேட்ட
மாதுநல்லாளிவள் வந்தாள் வந்தாள்.

35. ஆணிப் பொன்னாலே சமைத்த சிலம்பை
அங்கே வருந்த வுடைத்தெறிந்து
மாணிக்கங் காட்டி வழக்கினை வென்ற
மாதுநல்லாளவள் வந்தாள் வந்தாள்.

36. மாது பராபரி ஈசுவரி
மங்கை திரிபுர சங்கரியே
ஆதுலர் சேரி குளிர்கவென்று
ஆதிரையாள் வந்துதித்தாள் வந்தாள்.

37. மாதிரஞ் சூழு முலகறிய
மதுரை யெரிப்பே னெனநினைந்து
கோவலரோடு விமானத்திலே
கொம்பனையாளிவள் வந்தாள் வந்தாள்.

38. ஏற்றம் மிகுந்ததோர் பாண்டியன் தன்னை
இழுக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்
மாற்றம் மிகுந்ததோர் மன்னவன் தன்னை
வழக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்.

39. கானாறு மாலைக் குழல்சரியக்
கடுஞ்சுரமெல்லாங் கடந்து வந்து
மீனவன் செல்வம் அழித்த கோபம்
வெஞ்சமர் வேல்விழியாளேயாறாய்.

40. கற்றவர் தங்கிளை வாழவென்று
காசினியேழுங் குளிரவென்று
கொற்றவன் செல்வம் மழித்த கோபம்
கோல மழகிய மாதேயாறாய்.

41. கொஞ்சும் பரிபுரத் தாழிணைநோவக்
கோவலர் பின்னே மதுரையில் வந்து
பஞ்சவன் றன்னை யழித்த கோபம்
பாலாரு மென்மொழி யாளேயாறாய்.

42. வாடாத பூங்குழல் சோர நடந்து
வஞ்சிய ரோடே மதுரையில் வந்து
கூடலன் செல்வமழித்த கோபம்
கோலமழகிய மாதே யாறாய்.

43. விளிகளிரண்டு மனல் சொரிய
வேகமுடனே மதுரையில் வந்து
வழுதி மதுரை யழித்த கோபம்
தோகையழகிய கோதையே ஆறாய்.

44. சிந்தை வருந்த வணிகேசன் பட்ட
சினத்தை யடக்கிக் கழந்தனைத்தேடி
சந்ரகுல மன்னன் தனைக்கொன்றகோபம்
சாயல் மயிலனையாளே யாறாய்.

## வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தில் படிக்கப்படும்

# கண்ணகை அம்மன் குளிர்ச்சி

காரிபுடைசூழுங் காவிரிப்பூம் பட்டணத்தில்
வாழ்வணிகர் தங்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்
இளவேம்பின் கீழே இருந்து வருந்தாமல்
வளமை பெரிதுடைய மாதே குளிர்ந்தருள்வாய்
மீகாமனுக்கு மிகுந்த வரங்கொடுத்து
நாகமணிவாங்க நயந்தாய் குளுர்த்தருள்வாய்
சொற்பெரிய மாநாகர் துய்யகுலத் தேயுதித்து
சற்பமணி தானணிந்த தாயே குளிர்ந்தருள்வாய்
மாதவிக்குப் பொன் தோற்ற வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் பின்போன கன்னி குளிர்ந்தருள்வாய்
காவிரிப்பூம் பட்டினத்தை கைவிட்டகன்றபின்பு
பூவிரியுஞ் சோலை புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஓடத்திலேறி உயர்காவிரி கடந்து
தேடரிய தென்மதுரை சென்றாய் குளிர்ந்தருள்வாய்
கொக்கினமும் புள்ளும் குயிலோசையுங் கேட்டு
தக்கவழிநடந்த தாயே குளிர்ந்தருள்வாய்
தென்னம் பழஞ்சொரிய தேமாங்கனியுதிர
வன்னிவழி நடந்த மாதே குளிர்ந்தருள்வாய்
கொற்கைப் பதிதனிலே கோவலருடன் போந்து
துற்கைப் பதியடைந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்
மடையூடு கயல்பாயும் மதுரை நகர்தனிலே
இடையரகம் புகுந்த ஏந்திழையே குளிர்ந்தருள்வாய்
கட்டிக் கிடந்ததொரு காற்சிலம்பைச் சென்றெடுத்து
செட்டுக்குக் கோவலரைச் சேர்ந்தாய் குளிர்ந்தருள்வாய்
மற்பொலியுந் தோளான்வணிகர் தமைக் கொன்றதற்பின்
சொற்பனத்திற் கண்டெழுந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்
தேறிக் கனாவைத் திருந்திடைச்சிக் கேயுரைத்துச்
சீறிமதுரையிலே சென்றாய் குளிர்ந்தருள்வாய்
தன்கணவன் பட்டகளந் தான்தேடி மதுரைநகர்
அன்புடன் வந்தேயுயிரை மீட்டாய் குளிர்ந்தருள்வாய்
தட்டான்முன் சென்ற தலைவர் தமைத் தான் கண்டு
பட்டீரோ வென்றழுத பாவாய் குளிர்ந்தருள்வாய்
கூறும் மொழியெல்லாங் கோவலரைத் தான்கேட்டு
ஏறும் விமானத்தே என்றாய் குளிர்ந்தருள்வாய்
மன்னிய வேகம் மனத்துள்ளே தானடக்கி
தென்னவனைப் பூசலிடச் சென்றாய் குளிர்ந்தருள்வாய்
வாசலது கடந்து வந்தவதரித்த பின்பு
பூசலிடப் பாண்டியன் பாற்போனாய் குளிர்ந்தருள்வாய்
தீதறியாக் கோவலரைத் தென்னவனே வெட்டுவித்தான்
ஏதுகுறையாக என்றாய் குளிர்ந்தருள்வாய்
நல்லோர்கள் தங்கள் முன்னே நாகமணி காட்டி
கொல்லாமல் பாண்டியனைக் கொன்றாய் குளிர்ந்தருள்வாய்
வாளையெடுத்து வார்முலையைத் தானரிந்து
தோளாடையாகத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஏழுகதவடைத்து ஏகினான் பாண்டியனும்
ஏழுகதவூடுருவ எறிந்தாய் குளிர்ந்தருள்வாய்
பட்டேன் பழியெனவே பாண்டியனும் போய்வீழ
செட்டிபழி கேட்டுநின்ற தேவி குளிர்ந்தருள்வாய்
தட்டான் பொடியாக தார்வேந்தன் நீறாக
சுட்டெரித்துப் போட்டதொரு தோகாய் குளிர்ந்தருள்வாய்
எல்லைபடும் பழிக்கு எல்லையில்லாப் பழிவாங்கி
சொல்லரிய மாமதுரை சுட்டாய் குளிர்ந்தருள்வாய்
மதிகேடு செய்தமையால் மாறன்பதியழித்து
ஏதிலிடைச் சேரிவந்த ஏந்திழையே குளிர்ந்தருள்வாய்
அரிந்தமுலையோடும் அங்கணைந்தார் தம்மோடும்
தெரிந்தாயர் மனைபுகுந்ததேவி குளிர்ந்தருள்வாய்
விரைந்து மனைபுகவே வெண்ணெய்தனை யள்ளிவந்து
அரிந்த முலைதனிலே அரிந்தார் குளிர்ந்தருள்வாய்
ஆயர்குலமாதே அன்னமே தார்குழலே
தூயவர்கள் சேரி சுடாதே குளிர்ந்தருள்வாய்
எச்சேரிவெந்தாலும் இடைச்சேரி வேகாமல்
கச்சுமுலை குளிர்வதுபோல் கன்னி குளிர்ந்தருள்வாய்
எண்ணாது செய்த இயல்மாறன் பதியழித்து
நண்ணாவிமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
இன்னபடியே இயல்மாறன் தனைவதைத்து
பொன்னுலகம் வீற்றிருக்கப் போனாய் குளிர்ந்தருள்வாய்
தேவர் பலர் சூழுந் திருமானத் தேரேறி
கோவலரை நீங்காத கொம்பேகுளிர்ந் தருள்வாய்
வாராய்புறாவே வளர்மதியைக் கைதொழுவோம்
ஓராய்புறாவே ஓம் நமச்சிவாய வென்றே
கோலப்புறாவே கொடுவாராய் வெற்றிலையே

ஏலாப்பு நோய் பிணிகளின்றே பறந்தோட
ஆங்கால் போற்றளைத்து அறுகது போல் வேரூன்றி
மூங்கில் போற்கூட்டம் முளைத்துக்கிளை வளர்ந்து
கன்றுகிளைக்கக் கறவையின முண்டாக
இன்றுபோ லென்று மினிதூழி வாழியவே.

கற்பதித்த தூண்போற் கலங்காப் பதியனையார்
நெற்பதித்த தூண்போல் நீடூழி வாழியவே
பாடினோர்வாழி படித்தோர் மிகவாழி
நாடினோர் கேட்டோர் நயந்தோரும் வாழியவே.

❋ ❋ ❋

## வற்றாப்பளையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணகை அம்மன் பேரில் கும்மி

01. சங்கு முழங்கிடும் வங்க விரிகுடா
சாகரத் திரைகளார்ப் பரிக்கும்
மங்களம் சேர் எழில் தங்கும் வற்றாப்பளை
மாநகர் மேவிடும் ஞானவல்லி.

02. சங்க இலக்கிய காவியநூ லெனும்
சான்று நிறையும் கலைப் பொக்கிஷம்
மங்கா சிலப்பதிகாரத்தில் மங்கையர்
மாண்புயர வந்துதித்த கன்னி.

03. தென்னன் பதிவாழ்ந்த பெண்ணை வாணிபனவன்
தன்னாலுயிர்விட்ட காரணத்தால்
மன்னனிடம்பலி வாங்கமானாக் கனின்
மகவாய் ஜெனித்த மாதுசக்தி.

04. கோதில்லா பாண்டியன் நீதியறி யாமல்
கோவலனைக் கொன்ற காரணத்தால்
ஜோதிமிகும் கூடல்நகரை எரித்த
சுந்தரா னந்தி சுகுணவல்லி.

05. கண்ணகியினருள் கண்டுநம் பாரத
புண்ணிய பூமியில் வாழ்ந்த பக்தர்
வண்ண சிற்பவேலை ஆலயம் அமைத்து
வணங்கித் தேனபிஷேகம் செய்தார்.

06. ஞாலம்புகழும்மை கண்ணகியை ஈழ
நாட்டில் பிரதிஷ்டை செய்ய எண்ணி
நீலக்கருங்கடல் சூழ்ந்த வற்றாப்பளை
நிலத்தில் ஆலயமுமமைத்தார்.

07. தென்னிலங் காபுரி தன்னிலர சாண்ட
மன்னன் குளக்கோட்டு மாமகிபன்
கண்ணகி கோயிலை வற்றாப்பளை தனில்
கட்டிமுடித்து தினம் துதித்தான்.

08. அன்று முதல்கொண்டு ஈழநாட்டு மக்கள்
ஆர்க்கும் விசாகத் திருநாளில்
சென்று கண்ணகியின் சேவடி பணிந்து
ஜென்ம சாபல்யமதைப் பெற்றனர்.

09. மாதவக்கன்னி மகேஸ்வரி கண்ணகி
மாட்சி உலாவரும் நேரத்திலே
பூதலமாந்தரும் வேந்தரும் பெண்டிரும்
பூரண கும்பம் வைத்துப் பணிவர்.

10. சென்னியின் ரத்ன மகுடமின்ன சித்ர
தேரினிற் அம்மன் பவனி வந்து
நண்ணிப் பணிந்திடும் பக்தர்க் கருள்தரும்
நாரணி கண்ணகி வீதி உலா.

11. தாங்கும்ஜெய பேரிதம்பட்டம் முரசு
தவில் நாதசுரம் ஊதிவர
மாங்கல்ய மாதரும் அம்மன் சேயடிக்கு
மகிழ்ந்தபி ஷேகம் செய்திடுவர்.

12. முக்கனியின்சாறு கற்கண்டு சர்க்கரை
முந்திரி தேங்கின் தனிப்பால் தேன்
பக்குவமாகக் கலந்து பால் பொங்கலும்
பத்தினி கண்ணகிக்குப் படைப்பார்.

13. மாகதலி கொய்யா மணக்கும் வேர்பலா
மாதுளை அன்னாசி கன்னலின் சார்
பாதாம் பருப்புடன் தேன்விட்டுப் பிசைந்து
பஞ்சாமிர்தம் வைத்துப் பூசைசெய்வார்.

14. கண்ணகியின் காட்சிகண்டு கதிர்காமம்
காலநடை யாகவரும் பக்தர்கள்
நண்ணும் முருகண்டி ஒட்டிசுட்டான் வழி
நாதன் சிவன ருட்தாள் வணங்கி.

15. கண்ணியம் மிகுந்த செம்மலை னாயாறு
கார்க்கும் புல்மூட்டை தீயாறு கடந்து
கண்ணுதலோன் வாழும் கோணேஸ்வரம் கண்டு
கங்காதரன் பாதம் தெண்டனிட்டு.

16. தம்பலகாமம் தவக்கொட்டி யாபிரம்
தாங்கும் கிளிவெட்டி காளியம்மன்
உம்பர் துதித்திடும் எருக்கலம்பதி
ஊரும் கங்கையாறு தான்கடந்து.

17. பொங்கும் வாழைச்சேனை கடந்து சிற்றாண்டி
போதகன் முருகன் காட்சி கண்டு
சங்கு முழங்க மீன்பாடும் மட்டுநகர்
சாலும் அமிர்தகழிப் பிள்ளையார்.

18. செந்தமிழ் மண்டூர் கடந்து பட்டிருப்பு
சேந்தன் திருக்கோயில் பூசைகண்டு
அந்தங்கு முக்கணார் விஷயாளை ஆறுதாண்டி
அத்தன் கட்டகாமம் கிட்டிவந்து.

19. போதிமாதவனின் தாள்வணங்கியருள்
பொங்கும் சரவணன் தங்கும் தலம்
ஜோதிக் கதிர்மலை கண்டு தெரிசித்து
சொர்ண விபூதிமலை கடந்து.

20. மாதவத்தோர்கள் வசிக்கும் கதிர்காமம்
மாணிக்க கங்கைக் கரையில் வந்து
பாதகம் தீர்த்தருள் கந்தாவென்று தெய்வ
பக்தியாய் நீராடி முத்துலிங்கர்.

21. சித்தன் திருவடிபோற்றி வள்ளியம்மன்
சீர்பாதம் பணிந்து தெண்டனிட்டு
முத்துக்குமரன் கதிர்காமக் கந்தவேள்
முக்கோண வீதியில் சென்றிடுவார்.

22. முத்திக்குவித்தா யிலங்கும் குருபர
மூர்த்தி முருகனின் சேவடியை
பக்தியோடு பணிந்தேற்றி தெய்வானையின்
பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுவார்.

23. கண்ணகியின் காட்சிகண்டு கதிர்காம
கந்தன் கடாட்சம் பெற்றுலகோர்
எண்ணிய வரங்கள் யாவும் பெற்றுமக்கள்
எக்குறையுமின்றி வாழ்ந்தனரே.

24. வற்றாப்பளைநகர் கண்ணகிக்கும் சக்தி
வாலைமகன் கதிர்காமனுக்கும்
நற்றமிழால் வழிநடைக் கும்மியாக
நன்கமைத்தான் பெரியான்பிள்ளைக் கோன்.

*முற்றிற்று.*

* * *

# அவதாரத்தின் வகைகள்

*மீனே, ஆமை, வராகம், நரசிங்கம்*
*வாமனன், பரசுராமன், இராமன்*
*பலதேவன், வாசுதேவன், வருகற்கி என்று ஆகும் ஈரைந்து அரி அவதாரம்.*

**என்பது திவாகரம்**





# வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வழிபாடு

## முள்ளியவளைத் தொடர்புகள்

- கலாபூஷணம் முல்லைமணி -

வட இலங்கையில் பிரசித்தி பெற்ற தேசத்துக் கோயில்களில் முக்கியமானதாக வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில் திகழ்கிறது. தேசத்துக் கோயில்கள், கோயில் அமைந்திருக்கும் கிராமத்தவர்கள் மாத்திரமன்றி அயல் மாவட்ட மக்களும் வழிபாட்டு அருள் பெறுவதற்கானவை. வடக்கு கிழக்கு வாழ் சைவத் தமிழ் மக்கள் மட்டுமன்றி மத்திய தென் இலங்கைப் பௌத்த மக்களும் இக்கோயிலில் நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்து கொள்வர்.

"நுவரகலவியாவின் கிழக்குப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த, தற்போது றட்டே மகத்தயா என்று அழைக்கப்படும் தாமரை வெவ வன்னியன் நூற்றுக்கு மேற்பட்ட சிங்களவர்களுடன் சென்று வற்றாப்பளைக் கோயில் பொங்கலில் கலந்து கொண்டான்" என டைக் என்னும் ஆங்கிலேயர் 1839 ஆம் ஆண்டு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தக் கோவிலுக்கான விழா மே மாத முடிவில் அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில் நடைபெறுவது வழக்கம்...... வடமத்திய மாகாணத்திலிருந்து அதிக சிங்களவர்கள் வந்து இந்த விழாவில் பங்குபற்றுவர்" என ஜே. பி. லூயிஸ் (1895) கூறுகின்றார்.

கண்ணகி வழிபாடு பற்றிய மிகப் பழைய இலக்கியச் சான்றாக எமக்குக் கிடைப்பது சிலப்பதிகாரம். பிற்காலத்தில் கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் என்னும் பொது மக்கள் காப்பியங்களும், அம்மன் சிந்து என்னும் சிற்றிலக்கியமும் தோன்றியுள்ளன. ஈழத்தில் கண்ணகை அம்மன் பரவியமை பற்றிய சில செய்திகளை ராஜவலிய, ராஜரத்னாகர முதலிய சிங்கள வரலாற்று நூல்கள் தருகின்றன.

கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டில் (171 – 193) அனுராதபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த கஜபாகு என்ற மன்னனால் கண்ணகி வழிபாடு அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையமைத்து வஞ்சியில் கோயில் அமைத்துப் பிரதிஷ்டை செய்தமை பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. கடல்சூழ் இலங்கைக் கஜபாகு மன்னன் இவ்விழாவில் கலந்து கொண்டான். இவனே இலங்கையில் கண்ணகி வழிபாட்டைக் கொண்டு வந்தான். எனினும் இரண்டாம் நூற்றாண்டில்தான் கண்ணகி கதை நிகழ்ந்தது

என்று கொள்ள முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் நிலவி வந்த பழைய மரபுக் கதையொன்று இளங்கோவடிகளால் காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியமாக்கப்பட்டது என்றே கொள்ள வேண்டும்.

கண்ணகி மதுரையை எரித்தபின்னர் இலங்கைக்கு வந்த பத்து இடங்களில் தங்கினாள். அவள் தரித்திருந்த பத்தாவது இடமே பத்தாம்பளை. இதுவே காலப்போக்கில் வற்றாப்பளை என மருவிற்று எனக் கூறப்படுகின்றது. இதற்கு மேற்கோளாகப் பின்வரும் பாடல் காட்டப்படுகின்றது.

*அங்கொணா மைக்கடவை செட்டிபுலம் அச்சூழ்*
*ஆனதோர் வற்றாப் பளைமீ துறைந்தாய்*
*பொங்குபுகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்*
*புகழ்பெருகு கோலங் கிராய்மீ துறைந்தாய்*

இதில் எட்டு இடங்களே இடம் பெறுகின்றன. இதனால் பத்தாம் பளை என்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை. வற்றாத நீரூற்றுக்கள் நிறைந்த இடத்தை வற்றாப்பளை எனச் சொல்வதே பொருத்தமாகக் காணப்படுகின்றது. பளை, வளை என்னும் சொற்கள் வாழ்விடத்தைக் குறிக்கும். எலி வளை என்பது நோக்கத்தக்கது. ஆழியாவளை, முள்ளியவளை என்னும் இடப் பெயர்களையும் புலோப்பளை, பளை என்ற ஊர்ப் பெயர்களையும் நோக்கலாம்.

வற்றாப்பளையில் அம்மன் கோயில் கொண்ட வரலாற்றைச் சிலம்புகூறல் காவியம் பின்வருமாறு பதிவு செய்துள்ளது :

நந்திக் கடல் ஓரத்தில் சிறுபிள்ளைகள் மாடு மேய்த்துக் கொண்டு நின்றனர். விளையாட்டாகக் கோயில் கட்டிப் பொங்கல் செய்து மடை பரவினர். அவ்விடத்தில் நரை மூதாட்டி ஒருத்தி தோன்றினாள். 'தாயே நீங்கள் யார்?' எனப் பிள்ளைகள் கேட்டனர். 'நான் சோழ நாட்டைச் சேர்ந்தவள். கதிர்காமம் போவதற்காக இவ்வழியால் வந்தேன். நீங்கள் கோயில் கட்டி விளையாடுவதைப் பார்த்தேன் இதுபற்றிக் கூறுங்கள்' என்று மூதாட்டி சொன்னாள்.

'நாங்கள் மாட்டிடையர் பிள்ளைகள்; விளையாட்டாகக் கோவில் கட்டிக் பொங்கல் மடை செய்கிறோம்' என்றனர்.

'விளக்கும் ஏற்றினால் பூசை இன்னும் சிறப்பாக இருக்கும்' என்றாள் மூதாட்டி. 'விளக்கேற்ற எண்ணெய் இல்லையே' என்றனர் சிறுவர்கள்.

நந்திக் கடலிலே உப்புநீரை அள்ளி அதனை நெய்யாக விளக்கை ஏற்றுங்கள்' என்றார். பிள்ளைகள் கடல் நீரில் விளக்கெரிவது கண்டு அதிசயித்தனர். உண்மையில் இந்த மூதாட்டி தெய்வம்தான் என்று அவளை அடிபணிந்து தொழுதனர்.

''பிள்ளைகளே, எனது பெயர் கண்ணகை; வைகாசி மாதத்தில் பூரணையை யண்மிய திங்கள் கிழமையில் கும்பத்தில் பூசை செய்தால் நான் பிரசன்னமாவேன். வேண்டுவார் வேண்டும் வரம் கொடுப்பேன், முத்திப்பேற்றை அருளுவேன்; எனது பேரை உச்சரித்தால் நோய் அகலும்'' என்று கூறி மறைந்தாள்.

பிள்ளைகள் இதனை முதியோருக்குச் சொன்னார்கள். அவர்கள் அந்த இடத்திலே பந்தலிட்டு வைகாசி மாதத்தில் பொங்கல் மடை செய்து வந்தனர். கட்டு ஆடி உடையார் என அழைக்கப்படும் பூசாரியாரே பொங்கல் மடை செய்தார். வன்னியரசுகள் தோன்றுவதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்ணகை அம்மன் பொங்கல் நடைபெறத் தொடங்கிவிட்டது.

சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் கண்ணகி என்னும் பெயர் சிலம்பு கூறல், அம்மன் சிந்து, கோவலன் கூத்து என்பவற்றில் 'கண்ணகை' என்றே இடம் பெறுகின்றது. இது ஒரு கிராமிய வழக்கு. இதனையே நாம் பின்பற்ற வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் மானிடப் பெண் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததால் வானுறையும் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறாள். மானிடப்பெண்ணை அவள் எவ்வளவுதான் உயர்ந்தவளாக இருந்தாலும் தெய்வமாக வணங்கச் சைவசமய மரபு இடந்தராது. கண்ணகை அம்மன் வழிபாடு மக்கள் மத்தியிலே ஆழமாக

வேரூன்றிவிட்டபின் அதற்கு அமைதி காணவேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த அடிப்படையிலேயே 'சிலம்பு கூறல்' முதலான காவியங்கள் தோன்றின. கண்ணகை அம்மன் யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவில்லை. உமாதேவியாரே மாங்கனியில் தங்கிக் குழந்தையாக அவதரித்தாள். பாண்டியன் அரண்மனையிலே மாங்கனியில் அவதரித்த குழந்தையை அவன் சொந்த மகவாகப் பேணுகிறான். இந்தக் குழந்தையால் மன்னனுக்கும் மதுரைக்கும் அழிவு ஏற்படும் எனச் சோதிடர் கூறவே பேழையில் அடைத்துக் கடலில் விடுகிறான். சோழநாட்டு வணிகன் மாநாய்க்கன் கடலில் மிதந்து வந்த பேழையினுள் குழந்தையைக் கண்டவன் அதனை எடுத்துத் தன் மகவாக வளர்க்கிறான்.

வற்றாப்பளைப் பொங்கல் காலத்தில் சிலம்பு கூறலும், அம்மன் சிந்தும் படிக்கப்படுவதை இன்றும் காணலாம். வற்றாப்பளைப் பொங்கல் என அழைக்கப்படும் விழா கிழக்கிலங்கையில் சடங்கு என அழைக்கப் படுகின்றது. சடங்கு ஒருவார காலம் நடைபெறும். வற்றாப்பளைப் பொங்கலின் முன்னோடி நிகழ்ச்சிகள் முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயத்திலே ஒரு வார காலமாக இடம் பெறுகின்றன. இந்த வழக்கம் எப்பொழுது ஏன் ஏற்பட்டது?

இதற்கு விளக்கம் தரும் பாணியில் அம்மன் சிந்துப் பாடல் ஒன்று அமைகிறது

*முந்தித் தடங்கிரியிலே பாண்டியன் மதுரையை*
*முதுகனல் கொளுத்தியே ஒருசிலம் பதனால்*
*பிந்திவந் தங்கொணா மைக்கடவை தனிலும்*
*பேரான முள்ளிய வளைப்பதி உறைந்தாய்*
*தந்திமுகன் கோவிலில் வந்துமடை கண்டு*
*தார்கடல் உப்புத் தண்ணீர் விளக்கேற்றி*
*அந்திப் பொழுதிலே நந்திக் கடற்கரையில்*
*வைகாசித் திங்களில் வந்தமா தாயே.*

இப்பாடலில் வற்றாப்பளைக்குப் போக முன்னர் கண்ணகை அம்மன் முள்ளியவளையில் வந்து தங்கி பொங்கல் மடைகண்டு போவதாக குறிப்பு உண்டு. தந்திமுகன் கோவில் காட்டு விநாயகர் ஆலயத்தைப் குறிக்கும். இங்கேதான் கடல்நீரில் விளக்கேற்றப் பட்டதாகவும் இப்பாடல் கூறுகின்றது.

## *ஆகம நெறிப்பட்ட வழிபாடு :*

வன்னியர் ஆட்சி தோற்றம் பெறுவதற்கு முன்னர் பூசாரியாரே பூசை, பொங்கல் மடை முதலானவற்றைச் செய்தார். பின்னர் பிராமணர் பூசை, பொங்கல் முதலானவற்றைச் செய்யும் முறையும் ஏற்பட்டது. வன்னி அரசர்களே இதனைத் தொடக்கி வைத்தனர் என்பர். இந்தச் சந்தர்ப்பத்தில் வன்னி அரசின் தோற்றம் பற்றி அறிதல் பயனுடையது.

எல்லா வரலாற்று நூல்களும் தென்னிந்தியா விலுள்ள தொண்டை மண்டலத்திலிருந்தே வன்னியர் சமூகம் இலங்கையில் குடியேறியது என்கின்றன. ஆனால் எப்பொழுது இக்குடியேற்றம் நடைபெற்றது. வன்னியர், அல்லது வன்னிபம் என்னும் ஆட்சித் தலைவர்கள் எப்பொழுது தோன்றினர் என்பதில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

வன்னியர் சமூகம் இலங்கையில் குடியேறிய காலம் வையாபாடலின்படி கி. மு. 50 ஆம் ஆண்டாகும் என்கிறார் கலாநிதி க. செ. நடராசா. மட்டக்களப்பு மான்மியத்தின்படி குளக்கோட்டு மன்னன் இலங்கையில் வன்னியரைக் குடியேற்றிய காலம் கி. பி. 100. யாழ்ப்பாண வைபவ மாலை குளக்கோட்டன் காலம் கி. பி. 5ஆம் நூற்றாண்டு என்கிறது.

பேராசிரியர் சி. பத்மநாதன் சோழர் ஆட்சிக் காலத்தில் (10ஆம் 11ஆம் நூற்றாண்டு) வேளைக்காரப் படைக்கு நிவந்தமாக கொடுக்கப்பட்ட படைப்பற்றுக்களே வன்னிப் பற்றுக்களாக உருவாகின என்கிறார். யார் எப்படிக் கூறினாலும் யாழ்ப்பாண அரசு தோற்றம் பெறுவதற்கு முன்பே வன்னிச் சிற்றரசுகள் தோன்றிவிட்டன. போர்த்துக்கீசர் காலத்தில் ஏழு வன்னிப் பற்றுக்கள் அடங்காப்பற்றில் இருந்ததாகக் குறிப்புண்டு. செட்டிகுளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, கருநாவல்பற்று, தென்னமரவடி என்பவையே அப்பற்றுக்கள்.

முள்ளியவளை பனங்காமத்திற்கு அடுத்த பெரியவன்னிமையாக எழுபது கிராமங்களைக் கொண்டதாக விளங்கியது முள்ளியவளை. வன்னியனே பொங்கல் முன்னோடி நிகழ்ச்சிகளைக் காட்டு விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்திருக்கலாம். விநாயகப்

பெருமானை வழிபட்டு எச் செயலையும் தொடங்கும் சைவ மரபிற்கிணங்கவும் முள்ளியவளையில் அம்மன் வீற்றிருந்ததாகக் கூறப்படும் அம்மன் சிந்துப் பாடலை அடியொற்றியும், வற்றாப்பளைப் பொங்கலுக்கு முந்திய ஏழுநாள் நிகழ்ச்சிகளும் காட்டு விநாயகர் ஆலயத்தில் இடம் பெறத் தொடங்கின. கடல்நீரில் விளக்கெரியும் அற்புத நிகழ்ச்சியும் முதலில் காட்டு விநாயகர் ஆலயத்திலேயே இடம் பெறுகின்றது.

ஒரு மக்கள் சமூகத்திடையே பண்டு தொட்டு வழங்கிவரும் வழிபாட்டு மரபுகள் பிறபண்பாட்டுத் தாக்கத்தால் உருமாற்றம் பெறுவது வரலாற்று நியதி. முள்ளியவளை வன்னியனும் ஆகம நெறிப்பட்ட வழிபாட்டு முறையைக் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் புகுத்த முனைந்திருக்க வேண்டும். இதனால் மற்றொரு வன்னிப் பற்றான தென்னமரவாடியிலிருந்து பிராமணரை வரவழைத்து முள்ளியவளையில் குடியிருத்தி வற்றாப்பளைக் கோயில் பூசைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆகம நெறிப்பட்ட பூசைகளும், கிராமிய முறையிலான பொங்கல் மடையும் முரண்பாடு எதுவும் இன்றி வற்றாப்பளையில் ஒருங்கே நிகழ்வது சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கண்ணகி கோயில்களில் இது சாத்தியமாகவில்லை. கண்ணகியைத் தெய்வமாகக் கொள்வதை ஆறுமுக நாவலர் தீவிரமாக எதிர்த்தார். இதனால் கண்ணகை அம்மன் கோவில்கள் இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாகவும், மனோன்மணி அம்மன் கோயிலாகவும் உருமாறின. கிராமிய வழிபாட்டு முறையும் அழிந் தொழிந்து போனது. எனினும் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்த கிராமிய வழிபாட்டினை நாவலரால் துடைக்க முடியவில்லை. யாழ். மக்கள் வற்றாப்பளைக்குத் திரளாக வந்து வழிபடத் தொடங்கினர்.

## *காட்டு விநாயகர் ஆலயம்*

முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயம் அறுநூறு ஆண்டுகட்கு மேற்பட்ட பழமை வாய்ந்ததாகும். இவ்வாலயம் பற்றி கதிரைமலைப் பள்ளிலும், வையாபாடலிலும், அம்மன் சிந்திலும் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

யாழ்ப்பாண அரசனான பரராசசேகரன் முள்ளியவளையில் கோட்டை கட்டி கோயிலொன்றையும் வகுப்பித்தான் என்று வையாபாடல் (16ஆம் நூற்றாண்டு) கூறுகின்றது. ஏற்கனவே வெள்ளைக்கை நாச்சியினால் கொண்டு வரப்பட்ட விநாயகர் விக்கிரகம் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. இவ்வாலயப் புனருத்தாரண வேலைகளைப் பரராசசேகரன் செய்தான் என்றே கொள்ள வேண்டும்.

.............................................

*கந்தமலி தாரிளவல் செகராச சேகரனைக் கருணைகூர*
*இந்த யாழ்ப் பாணத்தில் இருக்க வென்றே சித்திரவே*
*லரையுமீந்து*
*வந்துமுள்ளி மாநகரில் கோட்டையும்நற் சினகரமும்*
*வகுப்பித்தானால்*

என்பது வையாபாடல். சினகரம் – ஆலயம்

"ஊர்மூத்த நயினாரைக் கோவிலினி லுறையவைத்து' என அடுத்த பாடல் தொடர்கிறது. மூத்தநயினார் – காட்டு விநாயகர்.

16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கதிரைமலைப் பள்ளின் கடவுள் வணக்கப்பாடல் காட்டு விநாயகரைக் குறிப்பிடுகின்றது.

*"கந்தமேவு கரிமுகத் தோனே*
*கருணையாகிய சங்கரி மைந்தா*
*முன்பு போலெனை அன்புவைத்தாளும்*
*முள்ளியவளை மூத்த நயிந்தை."*

என்பது அப்பாடல்.

## *பத்த ஞானி*

சாதாரண பூசாரியார்கள் ஒழுங்கு முறையில்லாமல் பொங்கல் மடைகளைச் செய்து வந்தனர். கண்ணகை அம்மன் திருவருளினால் இந்தியாவில் தஞ்சாவூரிலிருந்து பத்தஞானி என்பவரும் அவருடைய சீடரும் வற்றாப்பளைக்கு வந்தனர். தாம் அம்மனின் பக்தன் எனவும், அம்மனின் திருவுளப்படி பொங்கலைச் சிறப்பாகச் செய்ய வந்துள்ளதாகவும் கூறினார். அதற்கான பத்ததியும், சின்னங்களும் தன்னிடம் இருப்பதைக் கூறினார். பத்தஞானி அன்று தொடக்கம் பத்த ஞானியின் பத்ததிப்படியே பொங்கல் நடைபெற்று வருகின்றது. அம்மனின் புனிதச்

சின்னங்களான சிலம்பு, பிரம்பு, அம்மனை, உடுக்கு முதலியனவும். முகபடாம் என்னும் வெள்ளியாலமைந்த அம்மனின் முக அமைப்பும், சித்திரச் சேலைகளும் பத்த ஞானியால் உபகரிக்கப்பட்டன. கும்பத்தில் வெள்ளிமுக அமைப்பைப் பொருத்தி வெள்ளியாலான கைகால் முதலியவற்றை முறைப்படி அமைத்து கண்ணகை அம்மனின் திருவுருவம் அமைக்கப்படும். புனித சின்னங்கள் பூசையில் வைக்கப்படும். இப்புனித சின்னங்கள் அம்மனுக்குப் பூசை புரியும் பிராமணர்கள் தங்களது பாதுகாப்பில் வைத்துப் பூசித்தனர்.

பிராமணரின் இல்லம் முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயத்துக்கு அருகாமையில் இருந்தது. வெள்ளிதோறும் இல்லத்தில் பூசையும் திங்கட் கிழமைகளில் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் பூசையும் நிகழ்ந்து வந்தன. பத்தஞானியும் முள்ளியவளையிலேயே வசித்து வந்தார். இவர் மரணமடைந்ததும் முள்ளியவளை நாவற்காட்டில் இவரது உடல் தகனம் செய்யப்பட்டது. பொங்கல் நடைபெற்ற அடுத்த வெள்ளிக்கிழமை பத்தஞானி பொங்கல் நாவற் காட்டில் இடம்பெறும்.

## *கல்யாண வேலவர்*

காட்டு விநாயகர் ஆலயத்தையொத்த பழமை வாய்ந்தது முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயம். இவ்வாலயம் தற்போதுள்ள ஆலயத்துக்கு மேற்கே சுமார் அரைமைல் தொலைவில் இருந்தது. இதன் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. மக்கள் குடியிருப்பு ஏதோ காரணத்தால் இடம் பெயரவே ஆலயமும் தற்போதிருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. பழைய ஆலயத்தில் தீர்த்தக்கிணறு வெட்டும் முயற்சி நடைபெற்றது. மிக ஆழமாக வெட்டியும் நீர் ஊறவில்லை. மேலும் ஆழமாக்கியபோது மோர் ஊறியதாகக் கூறப்படுகின்றது. இதைச் சற்று மாற்றிக் கிணற்றுள் இருந்தவர் பாதாள உலகில் மோர் கூறி விற்பது கேட்டதாகவும், அப்படிக் கூறிச் சிறிது நேரத்தில் அவர் இறந்து விட்டதாகவும் கூறுவர்.

தற்போதிருக்கும் ஆலயம் சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 1938 ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்திலேயே முதன்முதல் கும்பாபிஷேகம் நடைபெற்று அலங்காரத் திருவிழா நடைபெற்றது கல்யாண வேலவர் ஆலயத்திலேயாகும்.

இதன் பூசகராக இருந்தவர் சுப்பையர் என அழைக்கப்படும் கணேசையர். புராணபடனத்தில் இவருக்கு ஈடுபாடுண்டு. இவரிடம் பயன் சொல்லப் பழகியோர் பலர் இன்னும் பயன் சொல்லி வருகின்றனர்.

பரமசாமி ஐயர் குடும்பத்துக்கும் சுப்பையர் குடும்பத்திற்கும் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலின் உரிமை இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறிமாறி ஆலயத்தை நிர்வகித்தனர். பரமசாமி ஐயரின் வீட்டிலேயே அம்மனின் புனித சின்னங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனால் அவர் இல்லமும் அம்மன் கோவிலாகவே கருதப்பட்டது. இவரது மறைவுக்குப் பின்னர் கோயில் நிர்வாகம் ஐயர்மாரதும் பூசாரியாரதும் கையில் இருந்து ஊர்மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பரிபாலன சபைக்கு மாற்றப்பட்டது. 1956 ஆம் ஆண்டு பரிபாலன சபை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அன்று தொடக்கம் கோயில் அமைப்பும் கிரியைகளும் படிப்படியாக முன்னேறி வருவதைக் காணலாம்.

## *கும்பாபிஷேகம்*

கிராமிய வழிபாட்டு முறையில் கும்பாபிஷே கத்திற்கோ பிராமணருக்கோ இடமில்லை. மக்கள் பண்டு தொட்டு வழங்கி வரும் சமய வழிபாட்டு மரபுகளுக்கே முக்கிய இடமளிக்கப்பட வேண்டும். நாகரிகத்தின் பெயரால் ஆகம நெறிப்பட்டதாக ஆலயத்தை மாற்ற முனையும்போது கிராமிய வழிபாட்டு முறைகள் ஓரம் கட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

## *சக்தி வடிவம்*

கண்ணகி, திரௌபதை முதலிய தெய்வங்கள் இதிகாச பாத்திரங்களாக இருந்தபோதும் பக்தர்கள் சக்தியின் வடிவங்களாகவே உபாசனை செய்து வழிபடுவதால் அவ்வழிபாட்டின் பலா பலன்களைப் பெறுகின்றார்கள். இதனால் இதிகாச, காப்பியக் கதைகளை மீண்டும் மீண்டும் நினைவுறுத்த வேண்டிய அவசியமில்லை. சிலம்பு கூறலின்படி உமாதேவியாரே மாங்கனியில் தோன்றினார் என்பதை ஏற்றுக் கொள்ளும் போது கண்ணகை அம்மனையும் சக்தியின் வடிவமாக ஏற்றுக் கொள்வதே பொருத்தமான அணுகுமுறையாகும்.



# லக்ஷ்மி கடாட்சம்

*- சிவஸ்ரீ நா. நடராஜக் குருக்கள் -*
*முள்ளியவளை.*



லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி மூன்று தேவிகளுமே சக்தியின் வெவ்வேறு அவதாரங்கள்தான்.

சிவனும் சக்தியுமே ஒன்றுதான். சக்திதான் ராமனாக அவதரித்ததாகவும் சிவன் சீதையாக அவதாரம் செய்ததாகவும் சொல்வார்கள்.

பெண்மை – தாய்மை இதற்கு நாம் காட்டும் மதிப்பும் மரியாதையும் தான் நமது சக்தி வழிபாடு.

நம்முடைய ஆதி முதற்கடவுளரான பிரம்மா, விஷ்ணு, சிவன் முறையே நாக்கு, மார்பு, உடம்பின் இடப்பகுதி என்பவற்றில் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி இவர்களை வைத்துக் கொண்டிருப்பது ஒன்றில்லாமல் இன்னொன்று இயங்காது என்கிற தத்துவத்தைத் தெரிவிக்கின்றது.

மஹா என்கிற அடைமொழியே லக்ஷ்மி தேவியின் பெருமையைத் தெளிவாகக் கூறுகிறது.

லக்ஷ்மி என்கிற சொல்லுக்கு அழகு, செல்வம், பெருமை, ராஜகம்பீரம் என்று பொருள் என்கிறது நிகண்டு. 'பளிச்' என்று இருப்பதை 'லக்ஷ்மிகரமாய் இருக்கிறது' என்கிறோம்.

தேவர்களும் அசுரர்களுமாய்ப் பாற்கடலைக் கடைந்த போது அவதாரம் செய்தவள் லக்ஷ்மி. அவளை அப்படியே மார்பில் தரித்துக் கொண்டார், மஹா விஷ்ணு.

லக்ஷ்மி செல்வத்துக்கு அதிபதி. தனமும் தான்யமும் வஸ்திரமும் கனகமும் இந்த உலக வாழ்க்கைக்குத் தேவையான வஸ்த்துக்கள். இதனால் தான் திருவள்ளுவர் சொன்னார்.

*"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு*
*இவ்வுலகம் இல்லாகி யாங்கு"*

ஸ்ரீமஹாலஷ்மி இகவாழ்க்கையை சிறக்கச் செய்கிறாள். தின பூஜா விதிகளில் லக்ஷ்மி பூஜையும் ஒன்று. தீபாவளியை மார்வாடிகள் லக்ஷ்மி பூஜா தினமாகக் கொண்டாடுவார்கள். செல்வம் கொழிக்கத்தானே செய்கிறது அவர்களிடம். ஆதி சங்கரர் பிரம்மச் சாரியாக இருந்து பிட்சை கேட்கப் போன இடத்திலே ஒரு வீட்டில் மகா தரித்திரமாய் இருந்ததால் அந்த வீட்டு அம்மாள் பிரம்மச்சாரிக்கு ஒன்றும் கொடுக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டாள். ஸ்ரீ பகவத் பாதாள் 'கனகதாராஸ்தவம்' பாடி அந்த வீட்டில் பொன்மழை பொழியச் செய்தாராம்.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் பூரணத்வம் பெற தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்ற நான்கையும், தான் சொன்னார்கள். அந்த அர்த்தத்தை, 'பொருளை' அளிப்பவள் தான் மகாலக்ஷ்மி. ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளும், கிரஹஸ்தன் பொருளை நியாயமாக சம்பாதித்து மற்ற ஆசிரமத்திலிருக் கின்றவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதைத்தான்

*"யல்ல பஸே நிஜ கர்மோபாத்தம்*
*விததம் தேந விநோத யசித்தம்"*

என்று சொன்னார்.

மஹாலக்ஷ்மி என்றால் பணத்துக்கு அதிபதி, பணத்தைக் கொடுப்பவள் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. 'பரோ பகரார்த்தம் இதம் சரீரம்' என்பார்கள். நம்முடைய இந்த உடம்பு மட்டுமல்ல; நமக்குக் கிடைக்கும் செல்வம் கூட பிறருக்கு உதவுவதற்குத் தான் பயன் பட வேண்டும். அதனால் தான் மஹா லக்ஷ்மியை ஸ்துதித்த ஆதிசங்கரர் 'ஸம்பத்கராணி' என்ற ஸலோகத்தில் அம்பிகையை மனத்தின் அழுக்கை நீக்கி சுத்தப்படுத்து பவளாகக் கூறுகின்றார்.

மஹாவிஷ்ணுவுக்கு 'புருஷோத்தமன்' என்று பெயர். மனிதர் குலத் தோன்றல் என்று அர்த்தம். அதே போல ஸ்ரீ மஹா லக்ஷ்மி 'உத்தமஸ்திரி' – பெண்களின் திலகம் என்று அழைக்கப்படுகின்றாள்.

அவள் பிறப்பிடம் பாற்கடல். வெண்மை பரிசுத்தத்துக்கும், சத்வ குணத்துக்கும் அடையாளம். செல்வத்துக்கு அதிபதியான லக்ஷ்மி செல்வத்தை அள்ளிக் கொடுப்பாள் என்பது உண்மைதான். ஆனால் செல்வத்துக்கு தானாகச் செல்லும் குணம் தான் உண்டே தவிர, தானாக வரும் குணம் கிடையாது . முயற்சி செய்து பாடு பட்டால் பலன் கைகூடும். பாற் கடலைக் கடைந்ததால் லக்ஷ்மி வந்தாள் என்பது இதைத்தான் குறிப்பிடுகின்றது.

பாற்கடலைக் கடைந்த போது மஹாலக்ஷ்மி அதிலிருந்து வந்ததை பாகவதப் புராணம் சொல்லுகின்றது. இதில் இன்னொரு குறிப்பும் அடங்கியிருக்கிறது. தூய்மையான மனத்துடன் ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டால் தர்ம சிந்தனைகள் ஏற்படும் என்பதுதான் அது. ஏனென்றால் செல்வம் என்பது வெறும் பணம் காசை மட்டும் குறிக்காது. திருவள்ளுவர் கல்விச் செல்வம், கேள்விச் செல்வம் என்றெல்லாம் சொன்னார். புத்தி, ஒழுக்க, தர்மசிந்தனை இவற்றிலும் நிறைவு பெற்றிருப்பவர்தான் உண்மையான செல்வந்தன். பொருட் செல்வம் மட்டும் போதாது அருட் செல்வமும் வேண்டும். அதைத் தருபவள் தான் மஹாலக்ஷ்மி.

மஹாலட்சுமி தாமரை மலர் மேல் வீற்றிருக்கின்றாள். தாமரை, அழகு, புனிதம் இவற்றுக்கு அடையாளம். மஹாலக்ஷ்மியின் கையிலிருந்து பக்தர்களுக்காக சதாசர்வகாலமும் ஸ்வர்ணம் மழையாகப் பொழிந்துகொண்டிருக்கிறது. இதனால் மஹா லக்ஷ்மியின் கையே ஸர்ணஹஸ்தம் ஆகிவிட்டது.

மஹாலக்ஷமிக்கு நான்கு கைகள் இருப்பதாகவும் ஓர் ஐதீகம் உண்டு. ஒரு கைப்பொன் கொழிக்கும் . இன்னொருகை அஞ்சேல் என்று அபயம் அளிக்கும். மற்றைய இரு கைகளும் தாமரைகளை ஏந்தி நிற்கும். தாமரைகள் ஆத்மஞானத்தைக் குறிக்கும்.

மஹாலக்ஷமியின் வாகனம் ஆந்தை. "ஆந்தையே! லட்சுமி கடாட்சத்தால் தோன்றுகின்ற செல்வத்தின் பளபளப்பில் எங்கள் கண் குருடாகி பேராசையும், பாவமும் ஏற்பட்டு விடாமல் எங்களைக் காப்பாற்று"! என்பது ஒரு மொழி. ஆந்தை அறிவைக் குறிக்கும் அதாவது, பெற்ற செல்வத்தை எப்படி செலவு செய்வது என்பது தெரிந்தால் தான் செல்வத்துக்கு பயன்.

அஷ்ட லக்ஷ்மி தோத்திரத்தில் ஆதிலக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வித்யா லக்ஷ்மி, தனலக்ஷ்மி என்று போற்றப்படுகிறாள் மஹாலக்ஷ்மி. செல்வம், படைபலம், வீரம், ஜெயம் எல்லாவற்றையும் தருகிறவள். அவள்... லட்சுமியும், சரஸ்வதியும் வேறல்ல என்பதைத் தெளிவு படுத்துவது போல் வித்தியாலட்சுமியாகவும் இருக்கிறாள்.

அஷ்ட லட்சுமி ஸ்தோத்திரத்தில் 'பார்கவி' என்று இருமுறை லட்சுமியின் பெயர் அழைக்கப் படுகின்றது. பிருகு மகரிஷி, மஹாலட்சுமி தன்மகளாக வரவேண்டுமென்று தவம் இருந்து அவளை மகளாகப் பெற்றதால், மஹாலட்சுமிக்கு பார்கவி (பிருகுவின் மகள்) என்ற பெயர் வந்தது.

பெண்ணைத் தாயாகவும் சஹதர்மிணி (தன் கூட இருந்து பொறுப்புக்களை நிறைவேற்றுபவள்) யாகவும், பெண்ணாகவும் போற்றும் மதம் நமது இந்துமதம். இறைவனை குருவாகவும், சீடனாகவும், காதலனாகவும், காதலியாகவும், தாயாகவும், தந்தையாகவும், பிள்ளையாகவும், பக்திப்பெருக்கினால் மகான்கள் பாடிப்பரவிய தேசத்தில் லட்சுமியைத் தன் மகளாக அடைய பிருகு விரும்பியதில் வியப்பில்லையே!

வீட்டில் லக்ஷ்மி கடாட்க்ஷம் நிறைந்திருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் தான் பெண்குழந்தைகள் பெயரோடு லட்சுமி என்பதைச் சேர்த்து சீதாலக்ஷ்மி, ராமலக்ஷ்மி, அனந்தலக்ஷ்மி என்றெல்லாம் கூப்பிடுகிறார்கள்.

மகாலக்ஷ்மிக்கும் தாமரைப்பூவுக்கும் சொந்தம் அதிகம். அவள் தாமரையில் இருப்பவள்; தாமரையை கையில் வைத்திருப்பவள்; தாமரை போன்ற திருவடிகளை உடையவள்; தாமரை இதழ் போன்ற கண்களை உடையவள்.

*பத்மப்பிரியே பத்மினி பத்ம ஹஸ்தே*
*பத்மாலயே பத்ம தளாயதாட்சி*

என்று அவள் புகழப்படுகிறாள்.

லட்சுமி நிரந்தரமாக தங்கியிருப்பதாகக் கூறப்படும் இடங்கள் ஐந்து, என்று காஞ்சிப் பெரியவர் சொல்லியிருக்கின்றார். "தாமரைப் பூவின் நடுப்பகுதி; யானையின் மத்தகம் ; பசுவின் பின்புறம்; வில்வ இலையின் பின்பக்கம்; சுமங்கலிகளின் வகிடு.

இலட்சுமியை வழிபடுபவர்களுக்கு அன்னம் வஸ்திரம் , தனம், தான்யம் முதலான சம்பத்துக்கள் கிடைக்கப் பெறுவதோடு, கிடைத்த செல்வத்தை நன்கு செலவிடுகிறார் புத்தியும் அதனால் சித்திக்கின்ற முக்தியும் கிடைக்கும்

* * *

## சித்தர்கள் கூறியது

*நீடித்த ஆயுளும், நோயில்லா வாழ்வும் காண மருத்துவ யோக, தியான வழிகளைச் சொன்னவர்கள் சித்தர்கள். உடலை அவர்கள் வெறுக்கவில்லை. தனியே காட்டில் மலைக்குகைகளில் வாழ்ந்தாலும் மானுட சமுத்திரத்தில் அக்கறை கொண்டிருந்தனர். "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்று அறிந்து உடம்பை வளர்க்க உபாயம் சொன்னார்கள்.*





# தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயம்

இ. வரதராசா
தலைவர், ஊற்றங்கரை சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை, தண்ணீரூற்று

*"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"*

வற்றாத நீரூற்றும், சுனைகளும், வளமான வயல்களும், முற்றிய தெங்கும், கமுகும், நிறைந்த இயற்கையழகுச் சூழலில் அமையப் பெற்றதுதான் தண்ணீரூற்றுப்பதி. மாங்குளம் முல்லைத்தீவுப் பிரதான வீதியில் முள்ளியவளையை அடுத்து அமைந்திருப்பது இப்பதி. இங்கே வற்றாத நீரூற்றும் வளம்மிக்க நெல் வயல்களும் சூழப்பெற்றதான இடத்திலே அருள்ஒழுக எழுந்தருளியிருப்பவர் தான் சித்திவிநாயகப் பெருமான். தன்னை நாடிவரும் பக்தர்களுக்கெல்லாம் தீமையகற்றி நன்மை புரிந்து கொண்டிருக்கும் எம் பெருமானை "ஊற்றங்கரைப் பிள்ளையாரப்பா" என உரைப்பவர்கள் செல்லமாகவும் பக்தியுடனும் அழைப்பது வழக்கம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களையும் கொண்டு விளங்குகின்றது இத்தலம்.

| | | |
|---|---|---|
| மூர்த்தி | – | சித்தி விநாயகர் |
| தலம் | – | ஊற்றங்கரை |
| தீர்த்தம் | – | ஊற்றங்கரைத் திருக்குளம் |

இவ்வாலய வரலாறுபற்றி ஆதாரபூர்வமான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் செவிவழிச் செய்திகளையும், கர்ணபரம்பரைக் கதைகளையும் வைத்து ஊகிக்கும் பொழுது இவ்வாலயம் சுமார் முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கொள்ள முடிகிறது. வற்றாப்பளை கண்ணகை அம்பாளுடைய வருடாந்தப் பொங்கலுக்கான தீர்த்தம் கடலில் இருந்து எடுத்து வரும் பொழுது தரிசிக்கும் முதற் பிள்ளையார் ஆலயம் இதுவாகத் தொன்று தொட்டு இருந்து வருவதால், அம்பாளின் ஆலயவரலாற்றுக்கும், ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்திற்கும் அகவை ஒன்றாக இருக்கலாம் எனவும் கருதமுடியும்.

வன்னிப் பெருநிலப் பரப்பினைக் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலேயே ஊற்றங்கரை விநாயகர் வழிபாடு தோன்றியிருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஆதியில் புண்ணிய பூமியாகிய பாரத பூமியிலிருந்து

சித்தர் ஒருவராற் பாய்மரக் கப்பலிற் கொண்டுவரப்பட்ட விநாயகர் விக்கிரகமானது, ஊற்றங்கரைப் பகுதியில் நின்ற வில்வ மரம் ஒன்றின் கீழ் வைத்து அவராலேயே பூஜிக்கப்பட்டு வந்ததாகவும், பின் அச் சித்தரைத் தொடர்ந்து சைவ மரபைச் சேர்ந்தபலர் அவ்விக்கிரகத்தை பூஜித்து வழிபட்டு வந்ததாகவும் அவர்களிற் "குணுகர்" எனும் சைவ அன்பர் ஒருவர் விநாயகரைப் பூஜித்து வழிபடுவதிலே மிகவும் சிரத்தை காட்டினார் எனவும் செவிவழிக்கதைகள் கூறுகின்றன. கால ஓட்டத்திலே இச் சைவ மரபினர் வழிபட்டு வந்த முறைமை மாறி இன்று வரை சிவப்பிராமண குல மரபினரே ஆகம ரீதியான பூஜை முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அருள் மிகு வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கும் இவ்வூற்றங்கரை விநாயகர் ஆலயத்துக்குமிடையே நெருங்கிய பல தொடர்புகள் இருக்கின்றன. வற்றாப்பளை பொங்கலுக்குத் தீர்த்தம் எடுத்து வரப்படும் பொழுது இவ் விநாயகப் பெருமானைத் தரிசித்த பின்னர் தான் அத் தீர்த்தக் குடமானது ஊர்வலமாக எடுத்து வரப்படுவது வழக்கம். அடியார்கள் ஆயிரக்கணக்கானோர் கூடிநின்று அம்பாளுடைய தீர்த்தக் குடத்திற்கு வேப்பிலைக் கும்பம் வைத்து வழிபாடு செய்வார்கள். கோயிற் குருக்களினுடைய விசேட பூஜை தீபாரதனை என்பனவும் புஷ்பாஞ்சலியும் இடம் பெற்ற பின்புதான் மீண்டும் எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். முன்னை முழுமுதற் பெருமானின் திருவருளை வேண்டி எக்காரியத்தையும் ஆரம்பிக்கும் வழக்கம் எமது இந்து சமய மரபில் இருக்கின்றமையால், பொங்கல் நிகழ்வுகளும் இவ்விநாயகப் பெருமானின் அருளாசியுடன் ஆரம்பமாவது வழக்கம். அதுமட்டுமல்ல பொங்கலுக்கு வருகின்ற அடியார்கள் பலரும் இவ் ஊற்றங்கரை நீரூற்றிலே நீராடித் தமது பாவங்களையெல்லாம் கழுவி, எம் பெருமானின் திருவடியையும் வழிபட்டுச் செல்வது இன்றுவரை மரபாகவே இருந்து வருகின்றது.

வற்றாப்பளைப் பொங்கல் நிறைவையொட்டிக் கதிர்காமத்துக்குக் கால் நடையாக யாத்திரை செய்யும் அடியார்கள் ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் பூசையிலும் அன்னதானத்திலும் கலந்து கொண்ட பின்னரே தங்கள் யாத்திரைப் பயணத்தைத் தொடங்குவது வழக்கம். ஆரம்பத்தில் சிறு கொட்டிலாக இருந்த இவ் ஆலயம் அடியார்களின் பெரு முயற்சியாலும் பரிபாலன சபைகளின் பணிகளாலும் இன்றைய கோயிற் குருக்களின் விடா முயற்சியாலும் சிறப்புக்கள் நிறைந்த பெருங் கோயிலாகக் காட்சியளிக்கின்றது. அழகான திருச் சொரூபங்களைக் கொண்ட விமானமுடைய கருவறை முருகன், வைரவர், சண்டேஸ்வரர், ஆகிய பரிவார தெய்வங்களுக்குத் இத்தனித் தனியான திருச்சந்நிதிகள், சுற்று மண்டபங்கள், அழகிய கோபுர வாசல் மணி மண்டபம் தேர்கள், சப்பரம், வாகனங்கள் என்பனவற்றைக் கொண்ட ஆலயமாக இது விளங்கு கின்றது. ஆலய நித்திய நைமித்திய பூசைகள் யாவும் விதிப்படி நிறைவேற்றப்படுகின்றது. தொடர்ந்தும் பல திருப்பணிச் சேவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பல வருடங்களாக தொடர்ந்த போர்ச் சூழலில் நிலைமைகளால் ஆலயம் பல அனர்த்தங்களைச் சந்தித்தாலும் , எம்பிரான் முழு முதற் கடவுள் விநாயகனின் திருவருளோடு கூடிய, அடியார்களின் பெரு முயற்சியால் அவ்வனர்த்தங்களில் இருந்து மீள முடிந்தது.

இங்கு எமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் திருத்தல யாத்திரை செய்து வந்த விநாசித் தம்பிச் சித்தர் என்பவர், ஊற்றங்கரை விநாயகரைத் தரிசித்து இதன் மூர்த்தி, தலம், தீர்த்த மகிமைகளை உணர்ந்து புளகாங்கித மடைந்து "ஒரு காலத்தில் கோயில்" என்று கொண்டாடப்படும் சிதம்பர தலமென இத்திவ்விய தலம் சிறப்புறும், பொலிவு பெறும் என திருவாய் மலர்ந்திருப்பதாக முதியோர் பலர் கூறுவர். விநாசித்தம்பிப் பெரியவர் இறைவன் திருவருளால் நீர்மேல் நடந்து சிதம்பரம் நோக்கிச் சென்றதாகவும் கூறுவர்.

அவரது திருவாக்குக்கமைய படிப்படியாக இவ் ஆலயம் வளர்ச்சி கண்டு வருகின்றது. சித்தி விநாயகரின் திருவருளினால் பெரியவரின் வாக்கும் பலிக்கும் என்ற நம்பிக்கை அடியார்களுக்குண்டு.

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"*





# கண்ணகி வழிபாட்டில் தேசிய ஒருமைப்பாடு

- சுப்பிரமணியம் திருஞானம் -

ஈழ நாட்டின் வடகீழ்ப் பாகத்தில் பரந்த நீண்ட ஒரு பிரதேசம், புவியியல் ரீதியாகவும், வரலாறு கலாசாரம் குறித்தும் ஒரு தனித்துவத்தைப் பேணிக் காத்து வந்துள்ளது. இப் பிரதேசமே வன்னிப்பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் கலாசாரக் கூறுகளில் வெவ்வேறு அம்சங்கள் தனிச் சிறப்புடையன. இத்தகைய அம்சங்களை அவ்வக் காலப்பகுதிகளில் உணரக் கூடிய அல்லது உண்மையை அறியக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்காவிடினும் பிற்காலப் பகுதிகளில், வெவ்வேறு கால கட்டங்களில் உண்மை அறியப்பட்டு போற்றப்பட்டு வருகிறது. இத்தகைய உண்மைகள், வரலாற்று ஆதாரங்கள் உடையனவாகவோ அல்லது அற்றனவாகவோ இருக்கக் கூடும். ஆனால் அத்தகைய அம்சங்களுடன் பிரதேச மக்கள் கொண்டிருந்த தொடர்பும், நம்பிக்கையும், வாழ்க்கை முறையும் ஓர் சமூகவியல் ஆய்வுக்கு அவசியமற்றதாகி விடமாட்டாது. வளமான வன்னிப் பிரதேசத்தில் வடகிழக்குப் பகுதியில் செழிப்பான நிலப்பரப்பையும் வயல்களையும் கொண்ட ஓர் அழகிய கிராமம் வற்றாப்பளையாகும். இச்சிறிய கிராமம் ஈழநாட்டில் பெரும் புகழ் பரப்பி நிற்கிறது. இதற்கு இக்கிராமத்தின் இயற்கையான வனப்பும் பரந்த பரவைக் கடலை நோக்கி அருள் பாலித்து நிற்கும் பத்தினித் தெய்வத்தின் பெருமைகளுமே காரணமாகும்.

வன்னிப் பிரதேசம் ஏறக்குறைய நீண்ட அகன்ற ஓர் தாழ்பிரதேசமாகும். இது இந்து சமுத்திரக் கரையைச் சென்றடைகின்றது. இப்பிரதேசத்தின் கிழக்குக்கரை நீண்ட கரையோரத்தையும் மணற்பரப்புக்களையும், குடாக்களையும் கொண்டு காணப்படுகின்றது. இத்தகைய நிலவமைப்பில் முல்லைத்தீவுப் பட்டினத்தை உள்ளடக்கி உள்வளைந்த குடாவாக பரவைக் கடலான நந்திக்கடல் விளங்குகின்றது. இக்கடலின் மேற்குக் கரையில் முல்லைத்தீவு நகரை எதிர்நோக்கி எழில் பரப்பி நிற்கிறது வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம். இவ்வாலயம் அமைந்திருக்கும் கடற்கரையிலே சேற்று நில ஊற்றுக்கள் வந்து சங்கமிக்கின்றன. இவ்வாலயம் பசுமையான வயல் வெளிகளினாலும் நீர் நிறைந்த நீர்ப்பரப்பினாலும், அழகு பெறுகின்றது. மருதமும் நெய்தலும் இணையும் இப்பிரதேசத்தில் உழவரும், மற்றோரும் மகிழ்ந்து பாடி பத்தினித் தெய்வத்தின் அருளைப் பெற்று வருகின்றனர். இவ்வாலயத்தின் பெருமைக்கு கண்ணகி வழிபாடே காரணமாகும். இவ்வாலயமும் இதுபோன்ற ஏனைய கண்ணகி ஆலயங்களும் தேசிய முக்கியத்தும் பெற்று தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகின்றன.

இத்தகைய கண்ணகி வழிபாட்டின் வரலாற்றையும் அது பற்றி சிலம்பு கூறும் கதையையும் யாவரும் அறிவர். கண்ணகி வழிபாட்டில் காணப்படும் தேசிய ஒருமைப்பாடு பற்றி அறிந்தவர்களும் உணர்ந்தவர்களும் சிலரே ! கண்ணகி வழிபாடு இந்துமத சித்தாந்தத்திற்குப் புறம்பானது என்ற கருத்துக் கொண்டவர்களும் உள்ளனர். இவ்வழிபாட்டின் தத்துவரீதியான விளக்கத்தை விடுத்து இந்திய மக்கள் மத்தியிலும், சிறப்பாக இலங்கை மக்கள் மத்தியிலும் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் கொண்டிருக்கும் ஒருமைப்பாட்டையும் நாம் இருட்டடிப்புச் செய்ய முடியாது.

கண்ணகி வழிபாட்டு முறையானது இலங்கையில் கயவாகு காலத்தில் (கி. பி. 113 – 136) இருந்து ஆரம்பமானது என்பது பொதுவாகக் கூறப்படுகிறது. இத்தகைய வரலாற்று நிகழ்ச்சிக்கும், வற்றாப்பளை போன்ற இடங்களில் கோயில் கொண்டிருக்கும் கண்ணகி அம்மனுக்கு தொடர்புகள் உண்டா என்பது ஒரு சர்ச்சைக்குரியதுமாகும். சிலம்பு கூறல், அம்மன் சிந்து போன்ற ஏட்டுவடிவப் பாடல்கள் இதனை ஒருவாறு தெளிவுபடுத்துகின்றன.

கண்ணகி வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, வழிபாட்டு முறை, பொங்கல் நிகழ்ச்சிகள் ஆகியன குறித்து தமிழ்நாட்டிலும் பல்வேறு கருத்துக்களும் முறைகளும் பின்பற்றப்படுகின்றன. சைவ சித்தாந்த சக்தி வழிபாட்டுடன் இணைந்தும், வேறாகவும் இவை மரபு முறையாக பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரங்கூட நாட்டுப் பாடல்களையும், அம்மானைப் பாடல்களையும் மரபுக் கதைகளையும் அடியொற்றி எழுதப்பட்டதாக இலக்கிய ஆய்வாளர் கூறுவர். நாட்டுப்பாடல்களும் சில மரபுக்கதைகளும் ஈழநாட்டிலும் ஒவ்வொரு கண்ணகி ஆலயங்களிலும் தனித்தன்மை பெற்றுக் காணப்படுகின்றன. ஈழத்தின் கண்ணகி மரபுக் கதைகளும், சிலப்பதிகாரப் படைப்புக்கு உதவியிருக்கக் கூடுமா ? என எண்ண இடமுண்டு. சிலப்பதிகாரக் கதையில் வரும் அம்சங்கள் கண்ணகியின் மரபுக் கதையுடன் சில அம்சங்கள் தொடர்பு பட்டும் வேறுபட்டுங் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் கண்ணகி பற்றிய மரபு கதைகளுக்கும் சக்தி வழிபாட்டிற்கும் ஓர் இறுக்கமான தொடர்பை ஏற்படுத்தவில்லை. எனினும் காலப்போக்கில் மரபு ரீதியான கண்ணகி வழிபாட்டில் நம்பிக்கை கொண்ட மக்கள் அத்தகைய தொடர்பினை ஏற்படுத்த முனைந்து வந்துள்ளனர்.

கண்ணகி வழிபாட்டில் மிகப் பழங்காலந் தொட்டு இந்தியாவில் ஆண்ட பல மன்னர்களும், ஈழ மன்னர்களும், பலமொழி, பல மதமக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் கண்ணகி வழிபாட்டினை ஓர் முக்கியத்துவம் பெற்ற வழிபாடாக, விழாவாக வளர்த்து வந்துள்ளனர். இதனாற்றான் இந்தியாவிலும் இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டில் ஓர் தேசிய ஒருமைப்பாட்டு அம்சம் நிலவுவதை நாம் அவதானிக்க முடிகிறது. இந்தியாவில், சோழ நாட்டில் பிறந்த கண்ணகி, பாண்டி நாட்டில் வாழ்ந்து, சேர நாட்டில் தெய்வமாகி, ஏனைய நாடுகளில் தெய்வமாகப் பிரதிட்டை செய்யப்பட்டு, வணங்கப்படுகிறாள். கண்ணகி ஓர் ஒழுக்க நெறித் தெய்வமாக கருதப்பட்டமையினாலேயே பல மத மக்கள் மத்தியிலும் தேசிய முக்கியத்துவம் பெற முடிந்தது. இந்துக்கள் பெருமளவிற்கு கண்ணகியை சக்தி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி வணங்கி வருகின்றனர்.

ஈழத்தில் கண்ணகி ஆலயங்கள், வடக்கிலிருந்து தெற்குவரை, பெருமளவிற்கு கரையோரங்களில் அமைந்துள்ளன. வடக்குக் கிழக்குப் பாகங்களில் சில ஆலயங்கள் சிறப்புப் பெற்றனவாகவும் விளங்குகின்றன. சிங்கள, தமிழ் மன்னர்கள் கண்ணகிக்கு ஆலயமமைத்து விழாவெடுக்கின்றனர். இதனாற்றான் சிங்கள, தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடு பெருவழக்காக இருந்து வருகின்றது. தமிழ் மக்களிடையே 'கண்ணகி வழிபாடு 'எனவும், 'அம்மன் வழிபாடு ' எனவும் வளர்ச்சி பெற , சிங்கள மக்களிடயே ' பத்தினித் தெய்யோ' என வளர்ச்சி பெற்றது. தமிழில் எவ்வாறு கண்ணகியை தலைவியாகக் கொண்டு இலக்கியங்கள் எழுந்தனவோ அதே போன்று சிங்களத்திலும் கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு பல

இலக்கியங்கள் தோன்றலாயின. 'பத்தினி கத்தாவ', 'பத்தினியாதின்ன' "பத்தினி விழிம" போன்ற பல இலக்கியங்கள் எழுந்தன. சிங்கள மக்கள் மத்தியில் கயவாகு மன்னன் காலத்திலிருந்து , ஆண்டு தோறும் பத்தினி தெய்வத்திற்கு 'பெரஹரா விழா' போன்ற ஒரு விழா எடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் கண்ணகி ஆலயங்களில் வருடமொருமுறை , பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. தமிழ் மக்களிடையே கொடிய தொற்று நோய்களின் காவல் தெய்வமாக கண்ணகி கருதப்பட்டது போன்று சிங்கள மக்களிடையேயும் கருதப்பட்டதுடன், ஈழநாட்டின் காவல் தெய்வமாகவும் கண்ணகி போற்றப்பட்டாள். கண்ணகி ஆலயங்கள் பெருமளவிற்கு இலங்கையின் கரையோரப் பகுதியில், முக்கியமாக எல்லைப் பிரதேசங்களில் அமைக்கப் பட்டிருப்பதனைக் கொண்டு ஓர் காவல் தெய்வமாகக் கருதப்பட்டாள் என்பது தெளிவாகின்றது. இலங்கையில் தெவுந்தர, நீர்கொழும்பு, நடுவப்பிட்டிய, கடுகம்பனை, மினுவாங்கொடை போன்ற பகுதிகளிலும், பழைய இராசதானிகளிலும் பத்தினித் தெய்வத்தின் பழைய கோயில்களை இன்றுங் காணக் கூடிய தாகவுள்ளது. இன்றும் சில கோயில்களில் சிங்கள மக்கள் அம்மானைப் பாடல்களை ஒத்த பாடல்களைப் பாடி வருகின்றனர். இதே போன்று தமிழ் பிரதேசங் களிலுள்ள கண்ணகி ஆலயங்களில், சிலம்பு கூறல், அம்மன் சிந்து போன்றன பொங்கல் காலங்களில் படிக்கப்பட்டு வருகின்றன.

கண்ணகிக்கு கோயில்கள் அமைக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரை, சில முக்கியமான இடங்களில் ஆலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாலயங்கள் அமைக்கப்பட்ட விதம்பற்றி சில மரபுக்கதைகளும் உண்டு. இத்தகைய ஆலயங்களில் வற்றாப்பளை கண்ணகி ஆலயம் சிறப்பு வாய்ந்ததாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மரபு முறையில் இருந்த கண்ணகி வழிபாடானது, சக்தி வழிபாட்டு முறைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மாற்றம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் பெருமளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறுவர். இலங்கையில் ஏனைய பாகங்களை விட மட்டக்களப்புப் பகுதியில் தான் அம்மன் வழிபாடு பெருவழக்காகயிருந்தது, எனவும் இதனாலேயே அப்பகுதிகளில் கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு "நாட்டுப்பாடல்கள் " "கண்ணகி வழக்குரை" போன்ற இலக்கியங்கள் அதிகமாக வளர்ச்சி பெற்றதென்பர். இத்தகைய இலக்கியங்கள் வடபாகத்தில் கோவலன் கதையாகவும், கோவலன் கூத்தாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய அம்சங்கள் பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் , வழிபாட்டு ஒற்றுமையையும், இலக்கிய ஒருமைப்பாட்டினையும் வளர்ந்துள்ளமையை அறிய முடிகிறது.

கண்ணகி வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும், இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்படுத்திய ஒரு சமய இலக்கியத்தாக்கமானது சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சமய இலக்கிய ஒற்றுமையையும் ஒரு மரபு ஒற்றுமையையும் வளர்த்து வந்துள்ளது. மேலும் பிரதேச ரீதியாகச் சில வேறுபாடுகள் இருப்பினும் அவை தேசிய ஒற்றுமையை முதன்மைப்படுத்தியும் அதனைப் பிளவுபடுத்தாது செல்வதையும் கவனிக்க முடிகிறது. இந்த நிலையில் தான் இத்தீவின் சகல பாகங்களிலும் உள்ள கண்ணகி ஆலயங்களில் வழிபாட்டு முறைகள் வழக்கில் இருந்து வருகின்றன. இந்தத் தேசிய முக்கியத்துவம் பெற்ற சமயப் பணி வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்புற இடம்பெற்று வருகிறது. இதனாற்றான் இவ்வாலயம் தேசிய முக்கியத்துவம் பெற்று வருவதுடன் அங்கு நடைபெறும் சமய விழாக்களும் தேசிய முக்கியத்துவம் பெறுகின்றன. ஈழத்தின் சமய வரலாற்றில் கண்ணகி வழிபாட்டிற்கு ஒருதனியிடம் இருப்பின் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும், அதன் மரபுக் கதைகளுக்கும் ஓர் இடம் இருக்கத்தான் செய்யும்.





# வற்றாப்பளைஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம்

- திரு. க. ஜெயவீரசிங்கம் -

எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைப்பட்டினத்துக்கு மேற்குத்திசையில் வற்றாப்பளைக் கிராமம் அமைந்துள்ளது. தென்னஞ் சோலைகள், பசும் வயல்கள்,பனங்கூடல்கள், நந்திக்கடல் என்பன ஒருங்கே அமையப் பெற்ற இந்த அழகிய கிராமத்தின் மேற்குப்புறத்தில் அமைந்திருப்பததான் ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம்.

பழைய வற்றாப்பளை அமைந்திருந்த இடம் தற்போது இந்த ஆலயம் அமைந்துள்ள இடமே என்று இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றார்கள். அதாவது மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியாக இன்று இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதி அன்று இருந்திருக்க வேண்டும். அந்தப்பகுதியும் , இன்று நாவற்காடு என அழைக்கப்படும் பகுதியும் இணைந்து அன்றைய வற்றாப்பளையின் மக்கள் குடியிருப்புப் பகுதிகளாக இருந்தன என்பது இங்குள்ள முதியவர்களின் கருத்து.

ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான எழுத்து மூல ஆதாரங்கள் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை. எனினும் இந்த ஆலயம் உருவானது தொடர்பான கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. அதாவது வற்றாப்பளைக் கிராமத்தில் பிறக்கும் குழந்தைகள் சில மணிநேரத்தில் இறந்து போகும் அவலம் ஒன்று அந்தக்காலத்தில் நிலவியதாகவும், அந்தக் காலப்பகுதியில் வற்றாப்பளைக்கு வந்த ஞானியொருவர் மக்களின் குறையைக் கேட்டு இந்த ஆலயத்தை அமைத்துக் கொடுத்ததாகவும் , அந்த ஆலயம் அமைக்கப்பட்ட பின் அந்த அவலம் நீங்கியதாகவும் , அதனாலேயே இந்த ஆலயத்துக்கு ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம் என்ற பெயர் வழங்குகின்றது என்றும் அந்தக் கர்ண பரம்பரைக் கதை கூறுகின்றது.

ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சுற்று மதில் கூட இருந்தது என்றும் காடு வெட்டுபவர்கள் அதன் அத்திவாரத்தைக் கண்டனர் என்றும் ஒரு செய்தி இக்கிராம மக்களிடையே உலவுகின்றது.

உண்மையில் ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயம் வன்னியின் மிகத்தொன்மையான ஆலயமாக இருப்பதற்கு நிறையவே சாத்தியங்கள் உண்டு. ஏனெனில் வற்றாப்பளையில் மக்கள் குடியிருப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தில் அந்த ஞானி அந்த இடத்துக்கு வந்து, அந்த ஆலயத்தை அமைத்து அங்கே பிள்ளையார் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்திருக்க வேண்டும். இல்லையெனில்

அப்பகுதி மக்கள் சிசு மரண அவலத்தால் இடம் பெயர்ந்திருக்கக்கூடும். எனவே அவ்வாறு நடைபெறாத படியால் இந்த ஆலயத்தின் தோற்றமும் வற்றாப்பளையின் தோற்றமும் மிகக் குறுகிய கால இடைவெளியிலேயே நிகழ்ந்திருத்தல் கூடும். எனினும் ஆவணப்படுத்தப் படக் கூடிய சான்றுகள் என்பவற்றை வன்னியர்களான நாம் கொண்டிருக்காத காரணத்தால் ஒரு அரும் பெரும் வரலாற்றின் பக்கங்களை அறிய முடியாமல் இருக்கின்றோம்.

ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம் பற்றிய விடயம் ஒரு புறமிருக்க அதன் அற்புதங்கள் எண்ணிலடங்காதவை. ஆலயத்தின் "ஓலைத் தட்டி" யைப் பிய்த்தெறிந்த மதங்கொண்ட யானை ஒன்று வயிற்றோட்டத்தால் இறந்ததை இக்கிராம மக்கள் நன்கறிவர். அது மட்டுமல்லாது "நேர்த்திகளை" நிறைவேற்றுபவர் ஞானமூர்த்திப் பிள்ளையார் என்பதும் சகலரும் அறிந்த விடயம்.

வற்றாப்பளைக் கிராமத்துக்குக் கிழக்கில் அம்பாளும், மேற்கில் பிள்ளையாரும் இருந்து அருள் பாலிக்கின்றனர். இன்றும் வற்றாப்பளை விவசாயிகள் வயல் சூடடிப்பு முடிந்ததும் பிள்ளையாருக்குப் பொங்கிப் படைக்கும் வழமையுண்டு.

காட்டின் மத்தியில் அமர்ந்து கருணை மழை பொழியும் பிள்ளையாருக்கு கிராமிய முறைப்படி பூசாரியார் வழிபாடாற்றுவதும் இவ் ஆலயத்தின் இன்னொரு சிறப்பம்சமாகும்.

வற்றாப்பளை மக்கள் கண்ணகை அம்மனை நம்பும் அளவுக்கு ஞானமூர்த்திப் பிள்ளையாரையும் நம்புகிறார்கள் . காட்டின் மத்தியில் எதுவித சலனமுமின்றிப் பிள்ளையார் அமர்ந்திருந்து அருள் பாலிக்கின்றார்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

* * *

## நீண்ட ஆயுளுக்குத் துளசி

*துளசிச் செடி சுற்றிலுமுள்ள விஷக் கிருமிகளைக் கொல்லும். விஷப் பூச்சிகளை விரட்டி யடிக்கும். அத்துடன் நாம் வெளியிடும் கரியமிலவாயுவை உட்கொண்டு நமக்கு வேண்டிய தூய்மையான பிராணவாயுவை அதிக அளவில் வெளியிடுகிறது.*

*துளசியைப் பறித்து சுத்தமாகக் கழுவி தண்ணீரில் குறைந்தது எட்டுமணி நேரம் ஊறவைத்து, பின் கசக்கிப் பிழிந்து எடுத்துவிட்டு, அந்த நீரைப் பருகிவர கல்லீரல், மண்ணீரல் நோய்கள் வராமல் தடுக்கலாம். துளசி தீர்த்தம், மூளைக்குச் சுறுசுறுப்பையும் வலிமையையும் அளிக்கிறது. துளசியைத் தொடர்ந்து சப்பிட்டு வர ஆயுள் நீடிக்கும். வயதானாலும் நரை திரை ஏற்படாது. குழந்தை நோய்கட்கும் அது கைகண்ட மருந்தாகும். துளசிச் சாற்றில் சிறிது கோரோசன் மாத்திரையைக் கரைத்து, குழந்தைகட்குக் கொடுத்து வந்தால் நோய்கள் ஏதுமின்றி நல்ல ஆரோக்கியத்துடன் வளர்ந்து வரும்.*

*தலையில் உண்டாகும் பேன்களுக்குத் துளசி வாசனை அடியோடு பிடிக்காது. துளசி இலையை தலையணை மீது பரப்பி ஒரு வெள்ளைத் துணியால் மூடி அதன்மீது தலை வைத்துப் படுத்துத்தூங்கப் பேன்கள் அனைத்தும் இறக்கத் தொடங்கிவிடும்.*

*மூச்சடைப்பு மூச்சுத் திணறல் சளி, எச்சில் தளும்பு இவைகளுக்குக் துளசிச்சாறு மிகவும் பயன்படும்.*

*துளசி இலை இருதய நோய்க்கு மிகவும் உகந்தது. துளசி இலைச்சாறு ஐந்து துளியுடன் நல்லதேன் இருபதுதுளி சேர்த்துக் கலந்து அத்துடன் சிறிதளவு வெந்நீர் கலந்து காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிட இதய நோய் விரைவில் மட்டுப்படும்.*





# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்
# பனிச்சையாடிய பாடற்சிந்து

*தொகுத்தளித்தவர் . - சி இராசசிங்கம் -*

மேல் நாட்டவராகிய பறங்கிக் காரர்கள் மேன்மை பெற்றிருக்கும் இலங்கையை ஆண்டகாலம். அக்காலத்தில் அவர்கள் அதிகார வெறிபிடித்தவர்களாய் ஆங்காங்குள்ள அருள்மிக்க இந்து மத ஆலயங்களை இடித்துத் தள்ளி தமது சமயஸ்தாபனங்களை நிறுவினர். அவ்வாறவர்கள் செய்யத் தலைப்பட்ட சைவ ஆலயங்கள் பலவற்றுள் அற்புதங்கள் பல நிகழ்ந்தமையால் அவர்கள் அவ்விடங்களை (தக்கவைக்க முடியாமல்) விட்டு அஞ்சியொதுங்கினரென்பது கர்ணபரம்பரை வரலாறுகளாகக் காணக்கிடப்பன.

அவ்வாறருந் தலமாக அனைவராலும் பாராட்டப்படுகின்ற வற்றாப்பளைக் கண்ணகையம்மன் ஆலயத்திலும் முல்லைத்தீவுத் தலைவனாகிய "நெவில்" என்பவன் குதிரையில் வந்தான். வந்தவன்; இத்தெய்வத்தின் அற்புதத்தை நேரில் தனக்குக் காட்டவேண்டுமென்றும், காட்டாதொழிந்தால் கடுந் தண்டனை வழங்குவேனென்றும் பூசாரியாரிடம் கனன்று கூறினான் . அதைக் கேட்ட பூசாரியார் அஞ்சி, நடுங்கி அம்பாளை வேண்டியழுதார். உடனே அம்பாளின் திருவருள் அற்புதமாக வெளிப்பட்டது. அங்கு கோவிலினருகில் செழித்து வளர்ந்து நிமிர்ந்து நின்ற பனிச்சை மரமானது ஆடத்தொடங்கி விட்டது. பறங்கியைத் துரத்தித் துரத்தி பனிச்சங்காயினால் எறியத் தொடங்கி விட்டது. பறங்கித் துரை அம்பாளுக்குப் பணிந்து விட்டான். அவ்வாறு பணிய வைத்த புதுமையைக் கூறலின் பனிச்சையாடிய பாடற் சிந்து எனப் பெயர் பெற்றது. இப்பாடற் தொகுதி,

*சிந்து*

"தெந்தென தெனாதென தெனாதென தெனான
தெனதெந்த னாதெந்த னாதெந்தனான."

*பாடல்*

கருணையுறு சத்தியவள் கண்ணகை யாகிக்
  கருதுமது ரைப்பதியை விட்டிங்கு வந்து
பெருமையுறு வற்றாப் பளைதனி லடைந்தே
  பேசரிய வருள்புரிந் தம்மனு மாகி
அலைபொருவு நந்திக் கடற்கரை யமர்ந்தாள்
  அவனியுள் ளோர்வந்து அவளடி பணிந்தார்.
தலைமைசேர் வற்றாப் பளைதனில் வணங்கி
  தரணியுள் ளோரருள் பெற்றுவரு நாளில்

நல்லதோர் சோமனின் வாரமது தன்னில்
நாடாளு நாவற் பறங்கியாம் வேந்து
சொல்லுமோர் குதிரையின் மீதே வந்து
சோதிமிகு கண்ணகை சேதியறி யாமல்
அம்மனா ராலய வாசலில் நின்று
ஆரடா பூசாரி கேளடா நீயும்
அம்மனென வைத்து நீ பூசமடை செய்தே
ஆக்கிடுந் தெய்வமத னருளேது முண்டோ
ஆடுறாய் பாடுறாய் ஆசாரப் பூசாரி
அம்மனுடை யற்புத மேதேனு முண்டோ
நாடியே யறிவதற் காயிங்கே வந்தேன்
நவிலடா நீயென்று நன்குரைத் திடவே
பூசாரி யாகிய கட்டாடி யுடையார்
புகலுவார் பறங்கிக்கு வித்தார மாக
ஆசார மாகவே யவளடி வணங்கி
அச்சமொடு நின்றவன் தன்னையே பார்த்து
என்னதான் கேட்கிறீ ரெங்கள் ராசாவே
ஏதுபிழை யானாலு மோதிடு மையா
அன்னவா றவரங் கறைந்துமுன் நிற்ப
அறைகுவா னப்போதங் கேயப் பறங்கி
பாரோர் புகழ்ந்திடுங் கோயிலின் தெற்கே
பாங்கரில் நின்றிடு பனிச்சைமர மிதனை
சீராக வேயிங்கு யாவருங் கண்டு
செப்பரிய புதுமையென் றேவணங் கிடவே
ஆட்டுவிப் பாயாகி னுங்களி னம்மன்
அருளுடைய யம்மனென வாதரிப் பேனே
ஆட்டாது விடிலுங்க ளாலயந் தன்னை
அழித்துநின் றலையையும் வாங்கி விடுவேனே
பூனைக்க ணுற்ற பறங்கியுங் கேட்கப்
புகலுவா ரொருவார்த்தை பூசாரி யாரும்
மானைநிகர் மாது கண்ணகையருளி னாலே
மரமதனை யாட்டவொரு தவணை நீர் தாரும்
அடுத்தவரு திங்கட் கிழமைக்கு வாரும்
ஆட்டுவேன் பனிச்சையதை யங்குநீர் பாரும்
எடுத்தின்ன வாறுபூ சாரியா ரோத
ஏகினா னங்கிருந் தேயப் பறங்கி
பொங்குபுகழ் தனையுடைய பூசாரி யாரும்
புலம்பினா ரம்மனின் பாதந் தொழுதே
தங்குமுன் னருளினைச் சோதிக்கி றானே.
தவறாயப் பறங்கியிவ னனியாய மாகும்
எங்கள் மதக்கோயில் எல்லாமிடித்து
ஏளனஞ் செய்தே யெதிர்த்தெமை யடக்கி
தங்கள் மதந்தனை யாக்கிப் பரப்பும்
தவறான பிறசமய பேயனிவனம்மா
அன்னையே அறிவற்ற வனியாயக் காரன்
அரசனெனு மதிகார வெறியே பிடித்தோன்
சொன்னதே செய்வான் சுணங்கான் வணங்கான்
துயர்தீர்த்து எங்களைக் காத்த ருள்வாயே
பூதலப் புகழ்பெருகி பத்தாம் – பளையினில்
புதுமையாய் வந்திட்ட பத்தினித் தாயே
ஆதியே யருளுடைய கண்ணகைத் தாயே
அடிய னென்றனக் கருள்புரியம்மா
பாரோர் புகழவரு பத்தினித்தாயே
பனிச்சைமர மொன்றை நீ யாட்டுவிப் பாயே
சீரே பெருகுமுல் லைத்தீவு தனைவிட்டுத்
திரும்பிவரப் போறானே நாவற் பறங்கி
அவன் கண்கள் காணப் பனிச்சைமர மதனை
ஆட்டவொரு வழிதனைக் காட்டுவாய் தேவி
தவமேவு புகழுடைய கட்டாடி யுடையார்
தஞ்சமுன் கண்ணகை யென்றே துயின்றார்
அன்றிரவி லம்மனார் கனவிலே வந்து
அருள்பெருகு பூசாரி யார்முன்பு தோன்றி
நன்றுநீ யஞ்சாதே மகனேயஞ் சாதே
நானவ னஞ்சமர மாட்டிவைப் பேனே
கதிர்பெருகு திங்கட் கிழமையா மன்று
காலையி லெழுந்துநீ முழுகிக் குளித்து
விதியினொடு செம்பிலே தண்ணீரெடுத்து
விளங்குவேப் பிலைதனைக் கையிற் பிடித்து
வீரமுறு வெள்ளிப் பிரம்பதை யெடுத்து
வேகமாய் மரத்தடியி லேகிநீநிற் பாய்
ஆரமணி நாவற் பறங்கியும் வருவான்
அரியவிப் பனிச்சைதனை யாட்டுமென் பானே
சேரவே செம்பினிற் தண்ணீர் தெளித்துச்
சிறந்தவேப் பிலையமர மதன்மீது சாத்தி
வீரமுறு வெள்ளிப் பிரம்பினாற் தட்ட
வேகமாய்ப் பனிச்சைமர மாடுமென்றாளே
கார்மேவு கருணைசெறி பூசாரி யாரும்
கண்டதோர் கனவதனி னின்றே யெழும்பி
ஆர்த்துவரு நீரதனில் மூழ்கிக் குளித்து
அன்பொடு பறங்கியைக் காத்திருந் தாரே
அந்தநாளானதும் நாவற் பறங்கி
ஆனதோர் குதிரையி லாரோ கணித்து

முந்துபுகழ் முல்லைத் தீவுதனை விட்டே
முடுகிவந் தானவன் சிக்கித் தவிக்க
வந்துமே கோயில்தலை வாசலி லிறங்கி
வாறானே கர்வமுறு நாவற் பறங்கி
உந்தனது அம்மனி னருள்தனைக் காட்டு
உயரிய பனிச்சைமர மதனைநீ யாட்டு
அம்மொழி தனைக் கேட்ட போதுபூ சாரியார்
அம்மனைத் தானே யகத்தில் நினைத்து
செம்புநிறை தீர்த்தமதை மரத்திற் தெளித்து
சீரான வேப்பிலையை யதன்மீது சாத்தி
அண்டபே ரண்டவடி வான வளபிராமி
அம்மனே யீசுவரி சத்திசிவ காமி
கண்கண்ட மாகாளி மாலினி மனோன்மணி
கருதரிய மீனாச்சி திரிசூலி நீயே
அட்டாமா சத்தியா மம்மனே தாயே
அருளுடைக் கண்ணகைத் தேவிகா ரெனவே
கட்டாடி யுடையாருங் கையிற் பிரம்பால்
காய்நிறை பனிச்சைதனை யாடென் றடித்தார்
அங்ஙனம் பனிச்சையதன் கிளைகளை யசைத்து
அவனியுள் ளோரஞ்ச ஓசைமிகு வித்து
தக்கபல கிளைவீசி இலைவீசி நின்று
தாமாக வேயசைந் தாடலுற் றதுவே
குனிந்தும் நிமிர்ந்தம் வளைந்தும் குலுங்கி
குலைகுலைந் திடுகொம்ப ருதறியா டியதே
மனிதரொடு தேவரும் மற்றமுள் ளோரும்
மனமதிர மாருத மொடுங்கவா டினதே
ஆனதோர் பனிச்சைமர மதுதானு மாட
அருளுடைய கட்டாடி யுடையாரு மாட
வானளா வியமர மாடப் பறங்கி
வந்ததே பிழையென்று மனமுங் கலங்கி
ஆட்டமுறு மரமதன் அருகினை யகன்று
அஞ்சியே குதிரையிற் றாவியே குந்தி
ஓட்டம தெடுக்கவே யுன்னினா னப்போது
ஓயாது காயெலா மவன்மீது வீச
நெறிதப்பு மரசழிய முலைவீசி நின்ற
நிமலைகண் ணகையரு ளதனாற் பறங்கி
குறியாக வேகொண்டு காய்களை யெறிந்து
குதக்கப் பறங்கியை மிரட்டப் பனிச்சை
பனிச்சையின் காய்களெறி படவே பறங்கி
பதறினான் கதறினா றெறியோய வில்லை
இனியேது வழியென்று ஏங்கித் தவிக்க

எதிர்நந்தி வெளியிலே குதிரை குதிக்க
குதிரைமீ தேறிய பறங்கி நிலைகுலையப்
குண்டுபோற் காய்களை வீசப் பனிச்சை
அதிவேக முறுகுதிரை அரையளவு நீரில்
ஆனதோர் பறங்கியை முதுகிற் சுமந்து
வாயளவு நீரிலே வாகன குதிரை
வகையாய்ப் பறங்கிதனை முதுகிற் சுமந்து
பாயவே கடலிற் பறங்கியின் குதிரை
பனிச்சையு மெறிந்ததே பலகாத தூரம்
நந்திக் கடலினக் கரைதன்னை நண்ணியும்
நலியாம லேயெறி நடந்ததே யாங்கும்
இந்தவித மெறிவிழ ஏங்கிப் பறங்கி
இனியெனது உயிர் போகுமென்றே மயங்கி
அப்போ குலைப்பனொடு காய்ச்சலு மடுத்தே
அம்மைநோய் பிணிகளுண் டான தவற்கே
தப்பாக வம்மனைச் சோதிக்கச் சென்று
சற்றவள் சீற்றத்துக் கானேனே யின்று
அரற்றிப் பிதற்றியே யழுதான் பறங்கி
ஆரவற் குதவுவா ரம்மனே யன்றி
அரற்றியே கடலினக் கரைதனில் நின்று
அம்மனைத் தோத்திரஞ் செய்தே தொழுதான்
பாவிநான் செய்பிழை பொறுத்தருளு மம்மா
பனிச்சையெறி யாதே பணித்தருளு மம்மா
மேவிநான் செய்தபிழை தாயே பொறுப்பாய்
மேதினி யோர்புகழ் கண்ணகைத் தாயே
ஆதியே யருளுடைய கண்ணகைத் தாயே
அடியே னிழைத்தபிழை நீ பொறுப்பாயே
சேதியறி யாமலே நான் செய்த பிழையை
தேவியே நீயும் பொறுத்தருள் வாயே
சீருடன் நான் நல்ல காணிக்கை யொன்று
செப்பம தாகவே செய்வித்து வாறேன்
பேருடன் பொன்னாலே யவல்மாலை யொன்று
பேசரிய காணிக்கை யாகநான் தாறேன்
அறியாமல் நானிந்தப் பிழைதனைச் செய்தேன்
அம்மணீ யதைமன்னித் தருள்தேவி யென்று
நெறியாக நின்றே பறங்கியும் வணங்க
நேசமிகு மம்மனுந் தான்மன திரங்கி
வீசுகாய் காச்சலொடு அம்மைநோய் பிணியும்
விலக்கியருள் செய்யப் பறங்கியு முணர்ந்து
ஈசுவரி கண்ணகை யருள் தேவி யவளால்
எல்லாப் பிணிகளு மில்லையா யினவே.

பாரோச்சு பறங்கியவன் பரிவாரஞ் சூழ
பகரறிய முல்லையந் தீவுதனை விட்டே
சீராக வேயிருகை சிரசிற் குவித்து
செப்பரிய வவல்மாலை அணியாடை கொண்டு
இப்புவியிற் கண்ணகையை ஏந்தியே போற்ற
இருகால்கள் நிலம்பதிய வருகிறான் துரையே
அப்போ தவல்மாலை சாற்றிப் பணிந்து
அம்மையே காரென்று ஓலமிட் டானே

கோனாடர் நாரி யுனக்கோல மோலம்
கோவலன் பாரி யுனக்கோல மோலம்
தேனார் மொழிச்சி யுனக்கோல மோலம்
செட்டிச்சி யம்மை யுனைக்கோல மோலம்
மானாகர் மகளே யுனக்கோல மோலம்
மாசாத்தர் மருகி யுனக்கோல மோலம்
கானார் குழலே யுனக்கோல மோலம்
கண்ணகைத் தாயே யுனக்கோல மோலம்

*முற்றும்*

❋ ❋ ❋

# தருப்பை

*நம்முன்னோர்கள் மங்கலம் அமங்கலம் என இரு வகைப்பட்ட வைதிகச சடங்குகளிலும் தருப்பை என்ற புல்லைச் சிறப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள். தருப்பை மூன்று தோஷங்களைச் சமப்படுத்தும் அக்கினி போன்றது; உஷ்ண வீர்யம் உடையது; அதி வேகமுடையது; நீரைச் சுத்தப்படுத்த வல்லது; உலோகங்களின் அழுக்கைப் போக்கடிக்கக் கூடியது; தேவர்களுக்கும் பிதுர்களுக்கும் உகந்ததாயும் அமைந்தது; இதை அக்கினி சர்பம் என்று வடநூல் அழைக்கும்.*

*தேவாலயங்களில் கும்பாபிஷேக நேரங்களில் தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி இவைகளைப் பயன்படுத்த வேண்டிய இடங்களில் தருப்பைக் கயிற்றைப் பயன்படுத்துகிறார்கள்.*

*வைதிகச் சடங்குகள் செய்யும்போது 'பவித்தரம்' என்ற பெயருடன் தருப்பையை சுண்டுவிரலுக்கு அடுத்த விரலான பவித்திர விரலில் மோதிரம் போல் அணிந்து கொள்வார்கள். அவ்விரலில் கப நாடி ஓடுவதால், அந்த இடத்தில் தருப்பையை அணிவதனால் கபசுத்தி ஏபடுகிறது. இப்புல்லில் காரமும் புளிப்பும் இருப்பதால் தான் செப்பு முதலிய உலோகத்தாலான விக்கிரகங்களை இந்தத் தருப்பைப் புல்லின் சாம்பலால் தேய்க்க வேண்டும் எனவும் வறுவர். அதனால் அவ்விக்கிரகங்கள் பல நாள் கெடாமல் இருக்குமாம். மந்திர ஆற்றலும் குறையாதாம். இந்தப் பூண்டு, தண்ணீர் இல்லாவிட்டாலும் வாடாது; நீரிலேயே தோய்ந்திருந்தாலும் அழுகாது: இதை அமிர்த வீரியம் என்று சொல்வார்கள். இது உலர்ந்து போயினும் வீரியம் குன்றுவதில்லை. சூரிய கிரகணம் ஏற்படும்போது இவைகளில் வீரியம் அதிகமாகும். இப்புல்பட்ட நீரைத் தெளித்த இடத்தில் தொற்று நோய் பரவாது.*





# மண்ணக மாதர்க்கு அணி

- திருமதி புவனா ஐயம்பிள்ளை -

இயக்கம் நிகழ்வதற்குச் சக்தி வேண்டும். சக்தியின்றேல் இயக்கமில்லை. ஆகவேதான் சக்தியைத் தெய்வமாகக் கொண்டனர். தோன்றும் கருவைத் தன்னுள்ளே கொண்டு தோற்றத்துக்கும் காரணமாயிருப்பது தாய்மை – பெண்மை. எனவே சக்திக்கு பெண்ணுருத் தந்தனர். போற்றி வந்தனர்; தாய்மையைப் போற்றாத நாடில்லை; மதமில்லை இத்தகைய உயர்ந்த பெண்மையை, கற்பின் திண்மையைத் தமிழ் மக்களும் போற்றினர். உரைசால் பத்தினியாக விளங்கியோருக்குக் கோயில் அமைத்து வழிபாடுஞ் செய்தனர். துரோபதையம்மன் கோயில், கண்ணகியம்மன் கோயில், சீதையம்மன் கோயில் போன்றன இன்றும் ஈழத்திலும், தமிழகத்திலும் இருப்பதனைக் காணமுடிகின்றது. இவற்றுள் கண்ணகி வழிபாடு தமிழர் வாழுமிடமெல்லாம் பரந்து செறிந்துள்ளது. கண்ணகி வழிபாடுள்ள இடமெங்கும் கண்ணகி கதை பேசப்படுகின்றது; பேணப்படுகின்றது. இளங்கோவடிகள் தமது அறிவோடு குழைத்து உலகுக்குப் படைத்த அமுதம் சிலப்பதிகாரம். அவர் தரும் காட்சி வழிச் சென்று கண்ணகியின் இயல்பைக் காண்போம்.

### அறக் கண்ணகி

செல்வச் சிறப்பின் செழுமையில் வளர்ந்த கண்ணகி, செல்வன் 'கோவலனுக்கு வாழ்க்கைத் துணையாக அமையப் பெறுகிறாள். "காதலற் பிரியாமல் கலவுக்கை நெகிழாமல் தீதறுக'' எனப் பெரியோரின் ஆசியுடன் இல்லறம் தொடங்குகின்றது. தீராக் காதல்'' கொண்ட கோவலனும் கண்ணகியும் செம்மையறம் போற்றி இல்லறம் நடாத்துகின்றனர். மாதவியென்னும் ஆடற்கலையரசியின் உருவில் ஊழ்வினை சூழ்கின்றது. கலையுள்ளம் நிறையப் பெற்ற கோவலன் உள்ளம் ஈர்க்கப்படுகின்றது. மாதவியின் இல்லம் கோவலனின் கலைக்கூடமாகி விடுகின்றது. காதலனின் பிரிவு கண்ணகியின் உள்ளத்தை வருத்துகின்றது. ஆனால் சாதாரண பெண்ணாக, சீற்றத்துக் காட்பட்டவளாகத் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. கணவனின் மனநிறைவே தன் வாழ்வு என்று கருதி வாழ்கிறாள். பெருஞ் செல்வம் அழிகிறது. "விடுதலறியா விருப்புடன்'' மாதவியோடு மகிழ்ந்திருந்த கோவலனை மீண்டும் பிடர் பிடித்துந்துகிறது விதி. மாதவிக்கும் கோவலனுக்கும் பிணக்கு முற்றியது. மாதவி மீது கொண்ட விருப்பிலிருந்து விடுதலறிந்தான். கண்ணகி இல்லம் திரும்புகிறான். சிறிதும் முகம் கோணாது உளம்நிறைந்து வரவேற்கும் பண்புடை இல்லத்தரசியாக விளங்குகிறாள் கண்ணகி. கோவலன் கழிவிரக்கங் கொண்டு,

*"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி*
*குலம் தருவான் பொருட் குன்றம் தொலைந்த*
*இலம்பாடு நாணுத் தரும் ................"*

என்று வருந்தி நிற்கும் கோவலன் முன் "சிலம்புள கொண்மின்" என்று தனது காற்சிலம்பைக் கழற்றிக் கொடுக்கிறாள் கண்ணகி. சாதாரண பெண்கள் யாராலும் செய்ய இயலாத பெரும் செயல் இது. பொன்னோடும் மணியோடும் புகழ் பூத்த திருவோடும் மென்மை குறையாமல் வளர்ந்தவள், குன்றத்தனைய நிதியழிந்து, குலத்தினது அணியழிந்து, நன்றாக வாழ்ந்திடவும் முடியாது நலிவடைந்து வாடுகின்ற போதினிலும் மனத்தாலும் கோணாது, கேளா திருக்கையிலும் கோவலனுக்குச் சிலம்பளித்த உயரிய பண்பும் மலையனைய துயருறினும் மங்கல மாட்சியுடைப் பெருந்தகையாய்க் காட்சி தருகிறாள் இல்லறத்தின் பெருமைக்கு இலக்கணமாய் வந்துதித்த கண்ணகி.

இதுமட்டுமன்றிக் கோவலன் மாதவி வீடே கதியென இருந்த நேரத்தில் அவனது உறவினர்கள் இல்லம் வரும்போதும் அகத்துள துயரினை வெளிக்காட்டாது இன்முகங்காட்டி உபசரித்தனுப் பினாள். தன் கணவன் விடும் தவறினைக் காட்டுவதன் மூலம் குடும்பப் பண்பு தகர்வதை அவள் விரும்பவில்லை. கோவலன் சிலம்பினைக் கொண்டு வாணிகஞ் செய்யப் புறப்படும்போது கண்ணகியையும் உடனழைத்துச் செல்கிறான். காலினிற் பரற் கற்கள் உறுத்துகின்றன. முட்கள் மென்மலர்ப் பாதத்தைப் பதம் பார்க்கின்றன. கணவனுடன் செல்லும் ஆவலில் அவற்றை மறந்து செல்கிறாள். இவ்வாறு சென்றவர்கள் மாதரி வீட்டில் தங்குகின்றனர். சமையல் செய்து பக்குவமாகக் கணவனுக்குப் படைக்கின்றாள். அவன் உணவு படைக்கும் பாங்கு, பணி செய்யும் பண்பு கோவலனின் மனதைக் குடைகின்றன. இத்தகைய பெருமை யினாளை எத்தனை காலம் பிரிந்திருந்தே னென்று வருந்துகிறான். உள்ளம் அழுகின்றது; அவ்வுள்ளத்தின் அடியிலிருந்து,

*"வழு எனும் பாரேன்; மாநகர் மருங்கு ஈண்டு*
*எழுக என எழுந்தாய்; என் செய்தனை ......."*

என்னும் வார்த்தைகள் வெளிக்கிளம்புகின்றன. கணவன் உணவருந்திக் கொண்டிருக்கிறான்; விட்ட தவறையுணர்ந்து உள்ளம் கசிகின்றான்; இந்த உருக்கம், கசிவு உள்ள நேரத்தில், தான் பதிய வேண்டிய கருத்துக்களை எளிதாகப் பதிக்க வேண்டுமென எண்ணுகின்றாள். அவனது குறிப்புக்குப் பதிலாக.

*"போற்றா ஒழுக்கம் புரிந்தீர்; யாவதும்*
*மாற்றா உள்ள வாழ்க்கையேன்! ஆதலின்*
*ஏற்றெழுந்தனன் யான் .........."*

என்று குறிப்பாக அவனது போற்றா ஒழுக்கத் தவறை எடுத்து இடித்துரைக்கின்றாள்.

## *மறக் கண்ணகி*

இளமையில் செல்வத்தின் செழுமை, கவலையின் நிழல் கூடப் படியாத வாழ்வு, இல்லறத் தொடக்கத்தில் இனிமையான காதல் இன்பம், இடையிலே காதற் கணவன் பரத்தையாற் பிரிவாற் கொண்ட துயரம், இத்துயரத்துள்ளும் நீறு பூத்த நெருப்பனைய வெளிக்காட்டாத் தன்மை ஆகியவற்றோடு விளங்கியவள் கண்ணகி. அமைதிக்கு இருப்பிடமாய்ப் பெண்மைக்குப் பிறப்பிடமாய் விளங்கிய பெருந்தகை அவள். காலம் ஓடுகிறது; சிலம்பு விற்கச் சென்ற கோவலனின் மரணச் செய்தி அறிகிறாள். மனம் பதை பதைப்பையும் வெளிக்காட்டுகிறாள்.

*"பொங்கி எழுந்தாள்; விழுந்தாள் பொழிகதிர்த்*
*திங்கள் முகிலொடுஞ் சேணிலம் கொண்டெனச்*
*செங்கண் சிவப்ப அழுதாள் ............"*

தெளிந்த நீரோடை போன்றிருந்த வாழ்வில் துன்பப் புயல் வீசியது. கொலைக்களம் வருகிறாள். கோவலனைக் காணுகிறாள், காலையிலே தான் தழுவி விடைகொடுத்தனுப்பிய கணவன் மாலையிலே குருதி வெள்ளத்திலே மண் தழுவிக் கிடக்கின்ற காட்சியைக் காணுகின்றாள். அழுது சென்று அவனுடல் தழுவுகின்றாள்; அரற்றுகின்றாள். கோவலன் உயிர் பெற்றெழுகிறான்; கவலையடையாது பூமியில் இருப்பாயாக எனக்கூறி மீண்டும் மீளாத் துயிலில் ஆழ்கிறான். கண்ணகி இருவிழி நீர் சோரப் பெருந் துயருறுகின்றாள். தவறிழைத்தது மன்னன்; தண்டிக்கப்பட்டது கணவன்; கள்வனின் மனைவி யென்னும் பழிச் சொல் கிடைத்தது தனக்கு; இந்த நிலையை ஏற்பதா? அவள் சிந்தனை துயரக் கடலில் இருந்த உள்ளத்தை தவறிழைத்த மன்னன் மீது சினப்புயலாக மாற்றி விடுகிறது. பாயும் வேங்கையாகச் சீறி எழுகிறாள்;

*"மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப*
*உண்பதோர் வினைகாண்; ஆ இது"*

என எண்ணுகிறாள்.

"காய் சினத்தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்" என்று வஞ்சினம் கூறி மன்னன் அரண்மனை வாசல் வந்தடைகிறாள். வாயிற் காவலனைப் பார்த்து;

*"அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து*
*இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!......*

என்று விளித்துச் சிலம்பு ஏந்திய கையள்; கணவனை இழந்தவள்; வாசலிலுள்ளாள் என அரசனுக்குக் கூறுமாறுரைக்கின்றாள். இங்கு கண்ணகியின் சீற்றத்தையும், அவளது உரையின் சால்பையும் உணர முடிகின்றது. கோவலன் கள்வனென்று எவ்வித சான்றையும் ஆராயாமல் பொற் கொல்லன் சொற் கேட்டு வழங்கப்பட்டது மன்னவன் தீர்ப்பு. தன் கணவனிடம் தானே தன் சிலம்பைக் கொடுத்தது; தன் கணவன் கள்வனா என்று சூரியனை நோக்கிக் கேட்டபோது உன் கணவன் கள்வனல்லன்; "ஒள்ளெரியுண்ணும் இவ்வூர்" எனக் கூறிய வாக்கு; கோவலன் உயிர் பெற்றுத் தன்னோடு கதைத்தமை போன்ற ஏதுக்களின் மீது "இறை முறை பிழைத்தோன்" எனக் கண்ணகியளித்த தீர்ப்பு, இவ்விருவகைத் தீர்ப்பு அரண்மனையிலே மோதுகின்றன.

"கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என மனனன் சாதிக்கின்றான். கள்வன் தானா என்பதை ஆராயாமல் தீர்ப்புக் கூறி விட்டாய் என்பது காட்ட "தேரா மன்னா" என்று அழைக்கின்றாள். சான்றுப் பொருளான கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பு உடைக்கப்படுகிறது. உள்ளே கண்ணகி கூறிய மணி தெறிக்கின்றது; கண்ணகியின் தீர்ப்பு வென்று விட்டது. மன்னனின் தீர்ப்பு தோற்றுவிட்டது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகிறது; தெய்வத்தின் தீர்ப்பு வழங்கப்படுகிறது; மன்னவன் உயிர் நீங்குகிறது. பாண்டியன் மனைவியும் உடன் உயிர் துறக்கின்றாள்.

தனக்கு ஏற்பட்ட இன்னலெல்லாம் பொறுத்தவள்; பிறர்க்குக் காட்டாமல் மறைத்தவள்; கணவன் கொலை செய்யப்பட்டமையறிந்ததும் பொங்கி எழுந்தாள்; தனது கணவன் என்பதால் மட்டுமன்றி, நீதி கொலை செய்யப்பட்டு விட்டது; அறம் பிறழ்ந்து விட்டது; தன் கணவன் மீது வீணான பழிச் சொல் வந்து விட்டது; உண்மையான பத்தினியாகத் தானிருந்தும், கணவனைப் பழிகாரனென்று வீணாக உலக மக்கள் தூற்றப்பார்த்துக் கொண்டிருப்பதா? தவறிழைத்தவன் சுகமாக இருக்க ஒன்றுமறியாத, தான் துன்பத்தில் உழல்வதா? கணவன் பெயர் காலமெல்லாம் கள்வனென்ற பழிச் சொல்லுடன் நிலைக்கவா? இதற்கெல்லாம் காரணம் மன்னவனல்லவா? ஆகவே, அவன்மீது சீறிய கண்ணகியாகத் தோற்றினாள்; மறக்கண்ணகியானாள்; தெய்வ நீதி நிலைத்தது; கூடலான் கூடாயினான். தவறான தீர்ப்பினால் வளைந்த செங்கோலும் நிமிர்ந்தது.


ஆயினும் கண்ணகியின் சீற்றம் அடங்கவில்லை. ஒள்ளெரியுண்ணும் இவ்வூர், என்ற அசரீரிவாக்கும் அவளுக்கு அடிக்கடி செவிகளில் ஒலித்தது. "ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்" என வஞ்சினம் கூறி அரண்மனை நீங்கினாள். தனது இடது முலையைத் திருகி யெறிந்தாள்; "தீயோர் பால் செல்க" எனத் தீக்கடவுளுக்கு ஆணையிட்டாள்; மதுரை மாநகர் எரியுண்டது. "கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான்" என்று கூறிச் சென்றாள்.

## *தெய்வக் கண்ணகி*

மதுராபதித் தெய்வம் கண்ணகி முன் காட்சியளிக்கின்றது. கண்ணகியின் பழைய வரலாறும், கோவலன் முன்பு செய்த பழியும், பதினான்கு நாட்களுக்குப் பின்னர் மீண்டும் கோவலனைத் தேவ உருவில் கண்டு சேர்வாய் என்று கூறிச் செல்கின்றது. தீயையும் அணைக்கின்றது. மதுரையின் தீயும் அணைந்தது. கண்ணகியின் சினத்தீயும் தணிந்தது; சீறிய கண்ணகி சினம் ஆறிய கண்ணகியாக மாறுகிறாள். மதுரை நகரின் மேற்கு வாயிலூடாக வெளிச் செல்கிறாள். நீண்ட தூரம் சென்ற பின், முருகன் கோயில் கொண்டருளிய நெடுவேள் குன்றத்தில், வேங்கை மர நிழலிலே பதினான்கு நாட்கள் கோவலனை எண்ணி அழுது கொண்டேயிருந்தாள். பதினான்காவது நாள் கோவலன் தோன்றினான்; இருவரும் வான ஊர்தியில் வானுலகம் புக்கனர், விண்ணவர் வாழ்த்தினர்; மண்ணவர் போற்றினர்.

*தெய்வம் தொழாஅள், கொழுநற் தொழுவாளைத்*
*தெய்வம் தொழுந்தகைமை திண்ணியதால் – தெய்வமாய்*
*மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி*
*விண்ணக மாதர்க்கு விருந்து.*

ஆலயத்திலே
அழகாகச் செதுக்கப்பட்டிருக்கும்
அம்பாளின் வரலாற்றுச் சம்பவங்கள்



கோவலன் கண்ணகி
திருமணக் காட்சி.



கோவலன் கண்ணகி இருவரும்
கவுந்தி அடிகளுடன்
மதுரை மாநகர் செல்லும் காட்சி.




கோவலனிடம் கண்ணகி தன்னுடைய
காற்சிலம்பைக் கொடுத்து விற்றுவருமாறு
கூறுதல்.




கோவலனைப் பொற் கொல்லன்
அழைத்துச் செல்லுதல்




கண்ணகி வழக்குரைத்தல்.



கண்ணகி சிலம்பு உடைத்தல்.



கண்ணகி கொலையுண்ட கோவலனின்
உடலைக் கண்டபோது அவ்வுடல் எழுந்திருந்து
கண்ணகிக்கு உண்மையையும்
நடந்தவற்றையும் விளக்குதல்




கண்ணகி தர்ம தேவதையை காணுதலும்
அருள் பெறுதலும்

"பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கை விட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர் என்று
காய்த்திய பொற்றொடி ஏவ
புகை அழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்"


- சிலப்பதிகாரம்



கண்ணகி சீற்றம் கொள்ளுதலும்
மதுரையை தீக்கரையாக்குதலும்



சேரன், செங்குட்டுவன்
பத்தினி தெய்வத்திற்கு
சிலை எடுத்தல்.



பத்தினி தெய்வத்தின் வரலாற்றை சீதலைச் சாத்தனார்
இளங்கோ அடிகளுக்குக் கூற இளங்கோ அடிகள்
அதனைக் காவியமாகப் பாடுதல்.
அதுவே சிலப்பதிகாரக் கதை.

கண்ணகித் தாயே போற்றி
கருணையின் கடலே போற்றி
மண்ணில் வந் தாப்ப னையில்
மருவியே புரைவாய் போற்றி
எண்ணெயாய்க் கடலின் நீரை
எரித்துநல் வருள்வாய் போற்றி
பண்ணுமா தேவிநீயே
பாரினில் வந்தாய் போற்றி.



சிலம்புச் செல்வி
கண்ணகி அம்பாளுடைய
அருட் திருவடிவம்.





# வற்றாப்பளைக் கண்ணகை அம்மனும், கோவலன் கண்ணகி கூத்தும்

## ஒரு வரலாற்றாய்வு

- அருணா செல்லத்துரை -

இலங்கையின் வடபகுதியில் உள்ள அடங்காப்பற்று வன்னிப்பிரதேசத்தில் பழமையும் தொன்மையும் வாய்ந்த ஆலயங்களுள் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயத்தின் ஆரம்ப காலம் சிலப்பதிகார காலத்தை யொட்டியது என்பது வரலாறு. இந்தியாவில் கண்ணகி வாழ்ந்த காலத்தில் பாண்டி நாட்டில் அரசனுக்கு எதிராக வழக்காடி மதுரையை எரித்த பின்னர் அவளின் கோபாவேசம் அடங்குவதற்காக, இலங்கையின் கரையோரமாக வருகை தந்து பல இடங்களில் அமர்ந்திருந்து பத்தாவது இடமாக வற்றாப்பளை நந்திக்கடல் வெளியில் இடைச்சிறுவர்களுக்கு காட்சி தந்து, அவர்களுடைய பொங்கலை ஏற்றுக் கொண்டாள். பின்னர் ஒவ்வொரு வைகாசி விசாகத்திற்கும் தான் அங்கு வருவதாகக் கூறி மறைந்தார் என்பது ஐதீகம். அதையொட்டி ஒவ்வொரு வைகாசி விசாகத்தன்றும் பக்தர்கள் பெருந்தொகையாகக் கூடிப் பொங்கல் பொங்கிப் படைத்து அம்மன் அருளைப் பெற்று ஏகுகிறார்கள்.

இங்கு ஆரம்பத்தில் கிராமிய வழிபாட்டு முறையே பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் வடபகுதியில் ஏற்பட்ட சமயப் புரட்சி காரணமாக பெருந்தெய்வ வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றது. அண்மைக் காலத்தில் இங்கும் பெருந்தெய்வ வழிபாடு ஆரம்பிக்கப் பட்டதினால் சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய கிராமிய வழிபாட்டு முறைகளும், பெருந்தெய்வ வழிபாட்டிற்குரிய சீரிய முறைகளும் இணைக்கப்பட்ட கிரியா முறைகளுடன் கண்ணகை அம்மனுக்குப் பொங்கல் பொங்கி படைக்கப்படுகிறது. கண்ணகிக்கு பொங்கல் பொங்கிப் படைத்து அவளின் அருளைப் பெற்ற விரும்பும் அநேக அடியார்கள வைகாசி விசாகத்தன்று இங்கு கூடுகிறார்கள். இவர்களும் தாமும் பொங்கல் பொங்கி கண்ணகிக்குப் படைத்து அவளின் அருளை வேண்டி நிற்கின்றனர். கண்ணகி தனது கோபாவேசத்தைக் குறைப்பதற்காக கரைப்பாதையாக கதிர்காமம் சென்றாள் என்பதை அடையாளப்படுத்து வதற்காக பொங்கல் நடந்த அடுத்த நாட்காலை பக்தர்கள் கதிர்காமத்திற்கான பாத யாத்திரையை இங்கிருந்து ஆரம்பிக்கின்றனர்.

தொன்மை மிக்கதும் பிரசித்திபெற்றதுமான இந்த ஆலயத்தின் வரலாற்றை எவ்வாறு ஆங்கிலேயர்கள் குறித்து வைத்துள்ளனர் என்பதை நோக்குவதே இந்தக் கட்டுரை. வன்னி வரலாற்றை குறித்து வைத்துள்ள ஆங்கில நூல்களில் திரு.ஜே.பி.லூயிஸ் அவர்கள் தொகுத்துள்ள ''மனுவல் ஒவ் த வன்னி டிஸ்றிக்ஸ்''

குறிப்பிடத்தக்கது. அதிலிருந்து தொகுக்கப்படும் சில தகவல்கள் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் தொன்மையை எடுத்துக் காட்ட உதவும்.'.

**வற்றாப்பளை:**

நந்திக்கடலின் மேற்கு முனையில் தண்ணீரூற்றிலிருந்து இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவில் வற்றாப்பளை இருக்கிறது. இங்கு கண்ணகை அம்மனுக்கான வருடாந்தப் பொங்கல் இடம் பெறுவது வழக்கம். (ஜேபிஎல்.பக்.61)

Vattappalai, on the western shore of the Nantikadal, a mile or two from Thanniyuttu, is celebrated for its temple of Kannakai Amman and the annual festival there. (JPL.p.61.)

வன்னியில் உள்ள இடங்களின் பெயர்களைப்பற்றி ஜே.பி.லூயிஸ் குறிப்பிடும்போது வற்றாப்பளை என்ற பெயர் வந்ததற்கான காரணத்தை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

வற்றாப்பளை என்றால் ஒருபோதும் நீர் வற்றாத இடமாகும்.
Vattappalai : A place where the water never dries up (Vatta = Dryup) (JPL)

## நந்திக்கடல்

யாழ்ப்பாண வைபவமாலையில் கல்வெட்டு என்ற பகுதியிலே அடங்காப்பற்றுப் பற்றிய வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைபமாலையை நியாயவாதி திரு.சி.பிறிற்றோ அவர்கள் 1879 ம் ஆண்டு ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்துள்ளார். தமிழ் மூலப்பிரதி கிடைக்காது போனமையால் ஆங்கிலப் பிரதியை ஆதாரமாக வைத்தே யாழ்ப்பாண வைபவமாலை பதிப்புகள் பின்னர் வெளியிடப் பட்டுள்ளன. ஆங்கில மொழி பெயர்ப்பின் கல்வெட்டுப் பகுதியிலுள்ள விபரங்களே வையாபாடலிலும் உள்ளன. திரு.பிறிற்றோ மொழிபெயர்த்த கல்வெட்டு விபரங்களை திரு.ஜே.பி.லூயிஸ் அவர்கள் வன்னிபற்றிய வரலாற்றிற்கு ஆதாரமக்கியுள்ளார்.

கல்வெட்டு வரலாற்றின்படி வன்னியர்கள் பனங்காமத்தில் ஆட்சி செய்த காலத்தில் முல்லைத்தீவுப் பிரதேசத்தை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வரமுடியாமல் இருந்தனர். இதனால் வன்னியர்கள் தமது ஆட்சியை முல்லைத்தீவுப் பிரதேசத்தில் பலப்படுத்து வதற்காக தூதுவர்கள் மூலம் உதவிகோரி செய்தியொன்றை தென்னிந்தியாவிற்கு அனுப்பினர்.

'இந்தத் தகவல் முதலில் திருச்சிராப் பள்ளியை சென்றடைகிறது. அங்கிருந்து வரசிங்க ஆராய்ச்சி என்பவர் முல்லை-மலனார், சரகு-மலனார், சிவ்கை-மலனார் ஆகியோர் உட்பட்ட குழுவினருடன் முள்ளியவளை வந்து சேர்ந்தார். முள்ளியவளையில் தாமரைக்குளம் உட்பட பல குளங்களைக் கட்டுவதற்குச் சேவைகளை வழங்கி அங்கு வாழ்ந்து வந்தனர். வரசிங்க ஆராய்ச்சியினுடைய மகன் நந்தி என்பவராகும். அவருக்கு ஏழு பெண் பிள்ளைகள் இருந்தனர். ஏழுபேரும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டு அறுபது புனித கிணறுகளில் புனித நீராடி கன்னிப் பெண்களாகவே வாழ்ந்தனர். இந்த ஏழு வன்னிய கற்புடைப் பெண்களை தெய்வங்களாக மதித்து இப்பிரதேச மக்கள் வழிபட்டனர். இவர்களுக்காக மன்னாகண்டலில் ஏழு கோயில்கள் கட்டப்பட்டன. இது கன்னியா கோயில் என அழைக்கப்பட்டது.' சந்தேகத் துக்கிடமின்றி நந்தி என்வருக்குப் பின்னரே இந்த ஏரி 'நந்திக்கடல்' என்ற பெயரைப் பெற்றுள்ளது. (ஜேபிஎல் - 1895. பக்கம் 12,13.)

இந்தச் சிதைவுகளை "கன்னியா கோவில்" என பிரதேச மக்கள் அழைக்கின்றனர். இங்குள்ள ஏழு கோயில்களிலும் வன்னியின் புனித தலைமைப் பெண்களே வழிபடப்படுகின்றனர். கல்வெட்டில் குறிக்கப்படும் நந்தியின் ஏழு கன்னிப் பெண்களையே இது குறிக்கின்றது. குறிப்பு ஜூன் 26, 1890. (ஜேபிஎல். பக்.309.)

On the arrival of the messengers, Varasinka Arachchi in company with Mullai-malanar, Saraku-Malanar, Sivhai-malanar, &c., left Trichnopoly, came to Mulliyavalai, rendered services to built the tank called Tamaraikkulam, as well as some other tanks, and lived there. Nanti, son

of Varasinka Arachchi, had seven daughters; they were chaste women; they sank sixty wells worshipped Siva and lived justly.

The seven temple at Mannakandal in the neighbourhood, called by the people Kanyakovil, " because there were seven Vanniyan virgin chieftainesses," probably commemorate the seven daughters of Nanti.

The Nantikadal lagoon, "Sea of Nanti," is no doubt called after him.( JPL-1895.p.12,13.)
The people call these ruins Kanniya-Kovil, because there are seven temples, and they say there were seven Vanniyan virgin Chieftainesses.

These were probably the seven daughters of Nanti who are referred to in the Kalveddu Diary of June 26, 1890. (JPL.p.309)

இதன் மூலம் அக்காலத்தில் இங்கு சிவ வழிபாடு முக்கிய இடத்தைப் பிடித்திருந்திருக்கிறது என்பதும், நந்திக்கடல் இருந்தமையும் தெளிவாகிறது. கண்ணகி இடைச்சிறுவர்களுக்கு நந்திக் கடற்கரையில் காட்சி தந்தாள் என்ற வரலாற்றுப் பாடல்களும் இதற்கு ஆதாரமாகின்றன.

**வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில். :**

வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல் பற்றி 1839 ம் ஆண்டு "திரு டைக்" என்ற ஆங்கிலேயர் எழுதிய குறிப்பு ஒன்று முக்கியம் வாய்ந்ததாகும். இதனை ஜே.பி.லூயிஸ் தனது நூலில் ஆதாரமாக்கியுள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து சில மைல் தொலைவில் உள்ள வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் இந்துக்களின மிகவும் சிறப்பு வாய்ந்த விழாவாகும். கண்ணகி மதுரையில் இருந்த ஒரு தலைவனின் மகளாகும். அவளுடைய கற்பின் மகிமையாலும் அதீத சக்திகளாலும் வணக்கத்துக்குரியவளானாள். இந்திய மன்னர்களின் ஆக்கிரமிப்பின் பின்னர் அவள் தனது முக்கிய வழிபாட்டிடத்தை வன்னிக்கு மாற்றிக் கொண்டாள். செட்டி இனத்தின் வழிபாட்டிற்குரியவள். பெரியஅம்மை மற்றும் சின்னமுத்து போன்றவற்றை சுகப்படுத்தும் சக்தி கொண்டவள்.

இந்தக் கோயிலுக்கான விழா மே மாத முடிவில் அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில் நடைபெறுவது வழக்கம். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வர். வடமத்திய மாகாணத்திலிருந்து வரும் அநேக சிங்களவர்கள் இந்த விழாவில் பங்குபற்றுவர்.

நுவரகலாவியவின் (அனுராதபுரம்) கிழக்குப் பிரிவிற்குப் பொறுப்பாக இருக்கும் "ரட்டேமகத்தையா" என்றழைக்கப்படும் "தாமரைவெவ" வன்னியன் சுமார் 100க்கும் மேற்பட்ட சிங்களவர்களுடன் வற்றாப்பளைக் கோவிலுக்குச் சென்று பொங்கலில் கலந்து கொண்டான். இவர்கள் பதவில் மற்றும் வெடிவைத்தகல்லுப் பகுதியினூடாக இங்கு வந்துள்ளனர். (குறிப்பு திரு.டைக்,மே .28.1839)

The chief Hindu festival is at the Vattappalai temple of Kannakai Amman, a few miles from Mullaitivu. Kannakai was the daughter of a Madura Chief, who became celebrated on account of her sanctity and miraculous powers, and who for a time made the Vanni her headquarters soon after it was colonized from India. She is the patron especially of the Chetty caste, and is supposed to have power over smallpox.

This festival takes place at the end of May or beginning of June, and is attended by thousands of people, many of them Sinhalese from the North-Central Province.

"The Tamarawewa Vanniya, now Ratemahatmaya of the eastern division of Nuwarakalawiya, with about 100 Sinhalese, attended the temple ceremony at Vaddappalai. They came by Padavil and Vedivaittakallu. (Diary of Mr.Dyke, May 28,1839) (JPL.p.265)

தொன்மை வாய்ந்த இந்த ஆலயத்தின் முன்றலில் கண்ணகி கோவலன் வரலாறு கோவலன் கூத்தாக வருடாந்தம் ஆடப்பட்டு வருகிறது. அடங்காப்பற்றுப பற்றியும் அங்கு பரவியிருந்த கலைகள் பற்றியும் சில ஆய்வுத் தரவுகள்.

***அடங்காப்பற்று வன்னி :***

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கை-இந்திய உறவுகள் மிகவும் பலமாக இருந்தன. தென்னிந்தியாவிற்கு மிகவும் அண்மையில் இலங்கை இருந்தமை இதற்கு ஒரு காரணமாகும். தென்னிந்தியாவின் கிழக்கு, மேற்குக் கரைகளில் இருந்து இலங்கையின் கிழக்கு மற்றும் மேற்குக் கரைகளுக்கு வந்து செல்வது சதாரண நிகழ்வுகளாகும்.

அடங்காப்பற்றின் மேற்குக் கரையில் அரிப்பு, மன்னார், மாந்தை, விடத்தல் தீவு ஆகியன முக்கிய இறங்கு துறைகளாக இருந்துள்ளன. அடங்காப்பற்றின் கிழக்குக் கரையில் முல்லைத்தீவு, அளம்பில் செம்மலை, தென்னமரவடி போன்ற இடங்கள் இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கான இறங்கு துறைகளாக இருந்தன.

அடங்காப்பற்றின் கிழக்குக் கரையில் முல்லைத்தீவு அளம்பில் செம்மலை தென்னமரவடி ஆகிய இடங்களுக்கு வந்த இந்தியர்கள் காஞ்சூரமோட்டை, குருந்தனூர் மலை, ஒதியமலை, அரியாமடு, ரூவன்மடு வழியாக அனுராதபுரம் சென்றுள்ளனர். பௌத்த மதம் ஆரம்பித்த காலத்தில் இவர்கள் சென்ற வீதிகளில் எல்லாம் பௌத்த மடலாயங்கள் கட்டப்பட்டன. குருந்தனூர் என்ற மலைப்பகுதி பியங்கல என அழைக்கப்பட்டது. புத்தர் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தபோது இங்கு வந்து சென்றதாக ஆங்கிலேய ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பௌத்த பிக்குமாரின் தியான மடாலயம் ஒன்று இங்கிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பௌத்தர்கள் எனக் கூறினாலும் இவர்கள் அனைவரும் தமிழ் பௌத்தர்கள் என்பதற்கு இங்குள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் சான்று பகருகின்றன.

இங்கிருந்த இந்து ஆலயங்கள் பல பௌத்த மதப் பரம்பலின்போது இடிக்கப்பட்டு பௌத்த மடாலயங்கள் கட்டப்பட்டமையும், பௌத்த மடாலயங்களுக்கு மேல் இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டதும் மாறி மாறி நிகழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. கண்ணகி வரலாற்றைக் கூறும் சிலப்பதிகாரத்தின் கதாபாத்திரங்களான மாதவி, மற்றும் மணிமேகலை ஆகியோர் பௌத்த துறவிகளாக மாறியிருந்தமையும், வைகாசி விசாக தினத்தன்று பௌத்த சமயத்தினர் வெசாக் பண்டிகை கொண்டாடுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலத்தில் இலங்கையில் சிங்களப்பிரதேசங்கள் கோறளைகள் எனவும், தமிழ்ப் பிரதேசங்கள் பற்றுக்கள் எனவும் பிரிக்கப்பட்டு ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. மன்னராட்சி இடம்பெற்ற காலத்தில் இலங்கையின் வடபகுதி, யாழ்ப்பாண இராச்சியம், அனுராதபுர இராஜதானி என்று பிரிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு இராஜதானிகளுக்கும் அடங்காத ஒரு பிரதேசமாக இருந்த பிரிவிற்கு 'அடங்காப்பற்று' என்று பெயரிட்டனர். இதன் எல்லைகள் வடக்கே ஆனையிறவு பரவைக்கடலும், தெற்கே நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே முல்லைத்தீவுப் பெருங்கடலும், மேற்கே மன்னார்க் கடலுமாகும்.

அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் இராவணன் பரம்பரையினரான சைவசமய சிவபக்தர்களும், வேடர்களும் வாழ்ந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. மன்னாரில் திருக்கேதீஸ்வர ஆலயம், திருகோணமலையில் திருக்கோணேஸ்வர ஆலயம் போன்ற பாடல் பெற்ற தலங்களும், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் கோவில், பனங்காமம் பஞ்சலிங்க சிவன் கோயில், வவுனிக்குளம் சிவன்கோவில் மற்றும் ஏனைய பல சிவன் கோவில்களும் இதற்கு சான்று பகருகின்றன.

17ம் 18ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, புயல், வரட்சி போன்ற இயற்கை அழிவுகளாலும், கோதாரி-கொள்ளை, மலேரியா போன்ற நோய்களுக்குப் பயந்தும், மக்கள் குடிபெயர்ந்திருந்த காரணத்தினால், அடங்காப்பற்றின் கூடுதலான

பிரதேசங்கள் காடுகளாகியிருந்தன. இதனால் வேறு பிரதேசங்களில் இருந்து வந்த அண்மைக்கால ஆய்வாளர்கள் அடங்காப்பற்றின் கிழக்குக் கரையோரப் பிரதேசத்தின் உட்பிரிவுகளை நெருங்க முடியாதிருந்தது. இதனால் இப்பிரதேசம் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெறவில்லை. பாடல் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயம் மன்னார்ப் பிரதேசத்தில் இருந்ததினால் மாந்தை (மாதோட்டம்) பற்றிப் பல ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன.

ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் அடங்காப் பற்றுப் பிரதேசம்பற்றிய பல தகவல்களைத் தந்துள்ளன. 1811ல் பண்டாரவன்னியன் உயிரிழந்த பின்னர் அடங்காப்பற்று-வன்னிப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றிய ஆங்கிலேயர் இப்பிரதேசத்தில் ஆய்வுகளை நடத்தி குறிப்புகளைத் தந்துள்ளனர். ஆங்கிலேயரின் ஆய்வுகளின் மூலம் இந்தப் பிரதேசத்தில் கிறிஸ்துவிற்கு முன், கிறிஸ்துவிற்குப் பின்னர், இடம் பெற்ற நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இதற்கும் 1895 ல் ஜே.பி.லூயிஸ் எழுதி வெளியிட்டஷமனுவல் ஒவ் த வன்னி டிஸ்றிக்ஸ்" என்ற நூலே ஆதாரமாக உள்ளது.

### அடங்காப்பற்று வன்னியின் கலைகள்:

அடங்காப்பற்றுப் பிரதேசத்தின் ஆய்வுக்கான முக்கிய ஆவணங்களாக இருப்பவை, பாரிய குளங்களும், பெரிய கற்குகைகளும் குன்றுகளுமாகும்.. வவுனிக்குளம், பதவியாக் குளம், பாவற்குளம், ஈறற்பெரியகுளம், தண்ணிமுறிப்புக் குளம், பண்டாரக்குளம், கணுக் கேணி, பெரியகுளம், மாமடு ஓலுமடு, கனகராயன்குளம், விளான்குளம் (வவுனியன்-விளான் குளம்) போன்ற பெரிய குளங்கள் உட்பட சுமார் 730 க்கும் மேற்பட்ட குளங்கள் வவுனியா முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இருக்கின்றன.

திரு.பார்க்கர், திரு வவுலர், திரு.நெவில் ஆகிய ஆங்கிலேய நிர்வாகிகள் குளங்களைப் பற்றியும், கல்வெட்டுக்களைப்பற்றியும், குருந்தனூர் மலை, கும்பகன்னன் குன்று ஆகியவற்றைப் பற்றியும் முக்கிய குறிப்புக்களைத் தந்துள்ளனர். சில குளங்கள் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்டவையெனவும், வேறு சில கி.பி. முதலாம் இரண்டாம் மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் குளங்களின் கீழ் விவசாயத்தை தமது தொழிலாகக் கொண்டவர்கள் வாழ்ந்துள்ளனர். இதனால் வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் அடங்காப்பற்றின் கலைகள் விவசாயத்தோடு சம்பந்தப்பட்டவையாகவே இருந்திருக்கிறது.தென்னிந்திய ஆக்கிரமிப்பின் பின்னர் அங்கிருந்த கலை வடிவங்களும் இங்கு பரம்பியிருக்கின்றன.

அடங்காப்பற்று வன்னியின் கலை வடிவங்களை இரண்டு பெரும்பிரிவு களாகப் பிரிக்கலாம்

1. விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட கிராமியக் கலைகள்
2. தென்னிந்திய ஆதிக்கமும் பின்னர் தோற்றிய கலைகளும்

### விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட கிராமியக் கலைகள் :

மனிதனின் பிறப்போடு கலையுணர்வும் பிறந்து விட்டது. தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை, தாயின் இருதயத் துடிப்பில் வரும் ஓசையை உணரத் தொடங்கு கின்றது. குழந்தை பிறந்ததும் ஓ..ஓ. என்று ஓசையில் தாய் ஆரம்பிக்கும் தாலாட்டுக்கு ஓசை நயச் சொற்கள் சேர்க்கப்பட்டு ஆராரோ ஆரிவரோ என்று பாடப்படுகின்றது. பின்னர் குழந்தையின் வளர்ச்சியையொட்டி தாயாரின் கற்பனை வளத்திற்கேற்ப சொற்கட்டுகள் சேர்க்கப்பட்டு தாலாட்டுப் பாடப்படுகிறது.

மனிதனின் வளர்ச்சியோடு சேர்த்து ஒவ்வொரு பருவத்திலும் பாடல்கள் பாடப்படுகின்றன. பிள்ளைகள் வளரத் தொடங்கியதும் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' என்றும், விடலைப்பருவம் அடைந்ததும் விளையாட்டுக்களோடு சம்பந்தப்பட்டஷசடுகுடு சடுகுடு', ஷதெந்தனத் தெனா' என்ற ஊஞ்சல் தருக்களுடன் கூடிய பாடல்களும் மற்றும் கும்மி, கோலாட்டம் போன்ற ஆட்டங்களையும் குறிப்பிடலாம். வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள் மிருகங்களைப் போலக் குரல் எழுப்பவும், வேட்டையாடலைத் தெளிவுபடுத்த ஓசைகளை எழுப்பி ஒலிபரப்பும் முறையிலும் கை தேர்ந்தவர்கள்.

மனிதர்கள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்ததும் அதனோடு சம்பந்தப்படுத்தி பாடல்களைப் பாடத் தொடங்கினார்கள். நிலத்தைப் பண்படுத்தும் போது மழையை வேண்டியும், களை பிடுங்கும்போது களைப்புத் தீரவும் பாடல்களைப் பாடினார்கள். காவல் செய்யும் போது துணைக்காக கடவுளை வேண்டினார்கள். நெல் விளைந்ததும் பரத்தை போட்டு அருவி வெட்டும் போது அருவி வெட்டுப் பாடல், உப்பட்டிகளைச் சேர்க்கும்போது குருவிகளைத் துரத்த சூ.. சூ.. என்று ஓசையெழுப்பி ஓர் பாடல், மாட்டினால் சூடடிக்கும்போது மாடுகளை வளைக்க ஓர் பாடல், காலையில் முகப்பொலியைப் பிரித்து கூரனை (நல்ல நெல் மணிகள்) எடுக்கத் தூற்றும் போது அதற்கும் ஒரு பாடல். வழங்கிய சேவைகளுக்காக விவசாயிடம் தமது பங்குகளைப் பெற்றுச் செல்ல வரும் குடியானவர்கள் விவசாயியை வாழ்த்திப்பாடும் பாடல் எனச் சகல சந்தர்ப்பங்களிலும் தொழிற்பாடல்கள் இடம்பெற்று ள்ளன.

அறுவடை முடிந்து விளைச்சல் வீடு வந்து சேர்ந்ததும் விவசாயிகளினதும், அவனை அண்டி வாழும் ஏனைய குடியானவர்களினதும் வசந்த காலம் ஆரம்பிக்கின்றது. அடங்காப்பற்றில் மலைகளில் இருந்து ஊற்றெடுத்துப் பாயும் பெருநதிகள் இல்லாத காரணத்தால் பருவகால மழையை நம்பி இரண்டு போகங்கள் செய்வதே வழக்கம். ஆகவே அடுத்த போகம் ஆரம்பிக்கும்வரை உள்ள இடைப்பட்ட காலம், விவசாயி களுக்கும் ஏனையோருக்கும் ஒரு வசந்த காலமாகும்.

இக்காலத்துள் தெய்வங்களை வழிபடுவதற்கான பல தினங்கள் அனுஷ்டிக்கப் படுகின்றன. இவற்றுள் சூரியனுக்கு நன்றி கூறத் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், குளக்கட்டுப் பிள்ளையாருக்கு நிறைமணி போடல், காவல் தெய்வங்களான ஐயன், வைரவர் போன்ற தெய்வங்களுக்கு மடைபோடுதல், பிள்ளையார் கதை படித்தல், பாரதப்படிப்பு திருவிழாக்கள், வேட்டைத் திருவிழா, சூரன்போர் போன்ற பல சமய வைபவங்கள் இடம் பெறுவது வழக்கம். வசந்தகாலத்தோடு சம்பந்தப்பட்ட ஆட்டங்களாக மாடுபிடிச் சண்டை (ஆநிரை கவர்தல்), குடமூதல், வேதாள ஆட்டம், வசந்தனாட்டம், மகிடி போன்றவற்றைக் கூறலாம்.

இவை சம்பந்தமான ஏராளமான பாடல்கள், வாய் வழியாக வந்து மறைந்து கொண்டிருக் கின்றன. அவை எழுத்துருப் பெறவேண்டும்.

**தென்னிந்திய ஆதிக்கமும், பின்னர் தோற்றிய கலைகளும் :**

தென்னிந்திய படையெடுப்புகளின்போது வன்னியர்கள் இலங்கைக்கு வந்தனர். ஆரம்ப காலத்தில் வந்த வன்னியர்கள் இலங்கையின் தென்பகுதிகளில் நிலை கொண்டனர். குளக்கோட்டன் காலத்தில் வந்த வன்னியர்கள் இலங்கையின் வடபகுதி யிலும், கிழக்குக் கரையிலும் குடியேற்றப்பட்டனர். வன்னியர்கள் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களிலும், சிங்களப் பிரதேசங்களிலும் ஆட்சி அதிகாரிகளாக இருந்துள்ளனர். குளக்கோட்டு மன்னனின் பரம்பரையினரால் ஆட்சி அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட வன்னியர்கள் அடங்காத பிரதேசமான அடங்காப்பற்றிற்கு வந்து பனங்காமத்தில் நிர்வாகம் நடத்தினர். இவர்கள் அரசனுக்கு ஊழியம் செய்பவர்களாக மட்டுமே இருந்தனர்.

எந்த ஆட்சிக்கும் அடங்காத பூர்வீகக் குடிகள் வாழ்ந்த அடங்காப்பற்றுக்கு வந்த வன்னியர்கள் பூர்வீகக் குடிகளான இராவணன் பரம்பரையைச் சேர்ந்த சிவபக்தர் களுடனும், வேடர்களுடனும், சேர்ந்து கொண்டனர். எதற்கும் அடங்காத பூர்வீகக் குடிகளின் உணர்வுகள் இங்கு வந்து சேர்ந்த வன்னியர்களுக்கும் வந்ததில் வியப்பில்லை.

வன்னியர்களும் அவர்களின் அழைப்பை யேற்று வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய மாப்பாண வேளாளர்களும், ஏனைய வேளாளர்களும், மற்றைய குடியினரும் வந்தாரை வரவேற்று வாழவைக்கும் அடங்காப்பற்றின் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளை அடக்கி ஆக்கிரமிப்புச் செய்த இடங்களுக்குத் தம்மை சிற்றரசர்க ளாக்கிக் கொண்டனர்.

விவசாயம் செழித்தோங்கி இருந்தமையே வன்னியர்கள் அடங்காபபற்றுப் பிரதேசத்திற்கு வருவதற்குக் காரணமாகும். ஏனெனில் விவசாயம் செய்து அதன் வருமானத்தைச் சிவன் கோயில்களுக்குக் கொடுத்து அவற்றைப் பராமரிக்க வேண்டு மென்பதே

அரசர்களுடைய கட்டளைகளாக இருந்தன. இதனால் அரசர்களுக்குத் திறை செலுத்துவதே வன்னியர் களது முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆரம்ப காலத்தில் அடங்காப்பற்றுப் பிரதேசத்தின் கலை வடிவங்கள் விவசாயத் தோடு சம்பந்தப்பட்டதாகவும், தென்னிந்திய படையெடுப்புகளின் பின்னர் அவை மாறுபட்ட சமய வழிபாட்டு முறைகளோடு தொடர்புடையதாகவும் இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

***சமயச் சடங்குகளும் – கலைகளும் :***

சிவன் வழிபாடு மேலோங்கியிருந்த அடங்காப்பற்றில், தென்னிந்திய படையெடுப்பு களின் பின்னர் பலவித வழிபாட்டு முறைகள் அறிமுகமாகின. கண்ணகி வழிபாடு ஆரம்பித்ததும் அவளின் வரலாற்றைப் படிப்பது முக்கிய இடம் பெற்றது. இது சிலம்பு கூறல் படிப்பு என அழைக்கப்பட்டது. கண்ணகி மதுரையை எரித்த பின்னர் இலங்கை வந்து தனது கோபாவேசத்தை தணித்துக் கொள்ள பத்து இடங்களில் தரித்துச் சென்றதாகவும் பத்தாவது இடமே வற்றாப்பளையெனவும், இங்கிருந்து கரைப்பாதையாக கதிர்காமம் சென்றாள் என்ற நம்பிக்கையையும், கண்ணகித் தெய்வம் சின்னமுத்து, கொப்பளிப்பான் அம்மை போன்ற சூட்டு வருத்தங்களைத் தீர்க்கும் சக்தி படைத்தவள் என்ற பக்தி உணர்வையும் மேலும் அதிகரிக்க இந்தச் சிலம்பு கூறல் படிப்பு இப்பிரதேச மக்களுக்கு உதவியிருக்கிறது.

கண்ணகிக்குக் கிராமிய வழக்கப்படி பொங்கல் வளந்து நேரும்போது பூசாரியார் பறை முழங்க ஆடும் ஆட்டம் பல வகையான தாளக்கட்டுக்களுடன் கூடியது. இந்த ஆட்ட முறையும் தாளக்கட்டும் வேறுபல கலைவடிவங்களிலும் காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் சேரன் செங்குட்டுவன் ஆட்சியின் போது கண்ணகி வழிபாடு ஆரம்பிக்கப் பட்டது. கி. பி. நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கயவாகு மன்னன் இந்தியாவிலிருந்த கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினான் என வரலாறுகள் சுட்டுகின்றன. பத்தினித் தெய்வமான கண்ணகியின் சிலை, இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட போது பத்தாவது இடமாக வற்றாப்பளையில் வைக்கப்பட்டதாகவும் கருத்துக்களும் முன்வைக்கப் பட்டுள்ளன. கௌதம புத்தரின் புனித தந்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போது பல இடங்களில் வைக்கப்பட்டு தரிசிக்கப்பட்டது என்ற வரலாற்றுப் பாரம்பரியத்தை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

எந்தப் பிரபலமான ஊடகம் மக்களை இலகுவாகச் சென்றடைகின்றதோ அந்த ஊடகத்தைப் பயன்படுத்துவது கொள்கை பரப்பாளர்களின் நோக்கமாகும். அடங்காப்பற்றுப் பிரதேச மக்கள் சிவபக்தியுள்ளவர்கள் என்ற காரணத்தினால் இங்கு பிரபலமாக இருந்த ஆட்டக் கூத்து முறையை, கண்ணகி வழிபாட்டினைப் பரப்பும் ஒரு உத்தியாக பயன் படுத்தியிருக்கலாம். அல்லது இந்தியாவில் பிரபலம் பெற்றிருந்த கூத்து முறையை இதற்கென இங்கு அறிமுகப்படுத்தியும் இருக்கலாம். ஏனெனில் மானுடப் பெண் ஒருவரை வழிபாட்டிற் குரியவராக்குவதற்கு பலவித எதிர்ப்புகள் தொன்று தொட்டு கிளர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் முல்லைத்தீவிற்கு அண்மையிலுள்ள அளம்பில் செம்மலைப் பகுதிகளில் இறங்கி அனுராதபுரம் சென்றதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இதனால் இந்தியாவிலிருந்த பலவித கூத்து முறைகள் இங்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருந்திருக்கிறது.

❋ ❋ ❋





# சக்தி தத்துவம்

-பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி-

"அருளது சக்தியாகும் அரன்தனக் கருளையன்றி
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றி சக்தியில்லை"

என்பது சைவ சித்தாந்த உண்மை. சிவம் அரியது. சக்தி எளியது. அருமையின் அழகு சிவமானால் எளிமையின் அழகு சக்தியாக மிளிர்கிறது. சிவம் என்ற பதத்திலேயே இரண்டு நிலையும் ஒடுங்கியிருக்கிறது. சி.அரிய பொருள். வ– எளிய அருள். எனவே தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி பின்னமிலானாக விளங்குபவன் எங்கள் பிரான். அவனுடன் அவன் கொண்ட தொடர்பு அற்புதமானது. அவன் என்றுமே பிரமச்சாரி. அவளும் என்றுமே கன்னி; அதுமாத்திரமல்ல, தாயாய், மகளாய் , தாரமாய் விளங்கும் தயாபரி எங்கள் அன்னை.

*"வாயும் மனமும் கடந்த மனோன்மணி*
*பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை*
*ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்*
*தாயும் மகளும் தாரமும் ஆகும்"*

என்பது திருமந்திரம்

அம்பிகையின் சக்தி பேராற்றலுடையது. சொல்லரிய வேகமும் தீவிரமும் அன்னையின் அருளிலிருந்து வெளிப்படுகின்ற தடைகளைத் தகர்த்தெறிபவள் அவள். ஒரு நூற்றாண்டில் முடிவதை ஒரு கணத்தில் முடித்து விடுவாள். பாரதியின் வாக்கிலே பார்ப்போமானால்,

*"எடுத்த காரியம் யாவினும் வெற்றி*
*எங்கு நோக்கிலும் வெற்றி மற்றாங்கே*
*விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி*
*வேண்டினோர்க்கு அருள் செய்யும் அன்னை"*

என்பது தொனிக்கிறது. எல்லாம் வல்ல பரம் பொருளின் இயங்கும் தன்மையாகிய சக்தி, பல பல நாமத்தோடும் வடிவத்தோடும் அன்பர்களுக்குக் காட்சி கொடுக்கின்றது. மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, சிவகாமி, காளி, துர்க்கை, அபிராமி, கண்ணகி என்பனவெல்லாம் அன்னையின் அடியார்கள் அழைத்து வழிபடும் அற்புத நாமங்கள். வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஈழத்து சைவ மக்களின் உள்ளத்தில் குடிகொண்ட

தேவி. அங்கு நடைபெறும் வைகாசிப் பொங்கல் விழா சரித்திரச் சான்றுள்ள பெருவிழா. அன்னையின் அருளாலும் அன்பர்களின் ஆதரவாலும் இன்று அவ்வாலயம் மேலும் பெருஞ் சிறப்புடன் மிளிர்கின்றது. அன்னையின் கருணையைப் பக்தர்கள் பருகிக் கொள்ள ஒரு கருணைமலர் அருட்தேன் துளிக்க வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும்.

அம்பாளுடைய உபாசனை சிரேஷ்டமும் இரகசியமும் வாய்ந்தது. அதனைக் குரு மூலமாக அறிந்து தெளிந்து பின்பற்றுவோருக்கு இவ்வுலகில் கிடைக்கக் கூடாத பேறுகள் இல்லை. எவனொருவனுக்குக் கடைசி ஜென்மம் வந்து சேருகிறதோ அப்பொழுதுதான் இப்பேறு வந்து கிடைக்குமென்று சொல்வர். ஆகவே அம்பாள் தொண்டிலே ஈடுபடுபவர்களுடைய பூர்வ புண்ணியம் அளப்பரியது. அதனை நன்கு தெரிந்து பணி புரிதல் நம் கடனன்றோ.

"கண்ணிய துன்புகழ் கற்றதுன் நாமம் கசிந்துபக்தி
பண்ணிய துன்றன் பதாம் புயத்தில் பகலிரவாய்
நண்ணியது நின்னை நயந்தோரவயத்து நான்முன்செய்த
புண்ணியமேது என்னம்மே புவியேளையும்
பூத்தவளே"

❋ ❋ ❋



# மகா சிவராத்திரி

மகாசிவராத்திரியன்று ஒவ்வொருவரும் காலையில் ஸ்நானம் செய்து விட்டுத் தங்கள் சமீபத்தில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்று கோபுரத் துவாரத்தின் வெளியில் வடக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு வில்வதன தீர்த்தத்தினால் மூன்று முறை புராக்ஷணம் செய்து கொண்டு "சிவ என்னும் திருநாமத்தை மூன்று முறை மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும். அன்று தொடக்கம் தனது வாழ்நாள் முழுவதும் இந்த நாம ஜபத்தைத் தினமும் உச்சரிப்பதைத் தமது ஜென்ம விரதமாகக் கொள்ள வேண்டும்"





# வற்றாப்பளைக் கண்ணகை அம்மனின்
# வரலாற்று வணக்கப் பாக்கள்

- சோதிடர் ச. இராமலிங்கம் -

1. ஆதிசிவ சத்திபல வொன்றாய் நின்றாய்
அண்டபகி ரண்டங்க ளாகி நின்றாய்
சோதிசேர் கோள்களொடு மீனு மானாய்
சொல்லொணாப் பல்சீவ ராசி யானாய்
பாதியாய் நாதனொடு நாரி யானாய்
பலசத்தி வணக்கத்தி லொன்றா யுற்றா
யோதியுனை வணங்கக்கண் ணகையு மாகி
யுயர்வற்றாப் பளைதன்னி லுற்றாய் தாயே !

2. உம்பரொடு முனிவருனை வணங்கி நாளும்
உயர்வுற்றுன் னருள்பெற்றே யுய்ய நீயு
மிம்பருறு மாந்தருளத் துதித்து நல்ல
வின்னருளை யூட்டவெனப் பரிவு பூண்டு
தும்பையணி துணைவரினை பிரியா தென்றுந்
தூயநகை மணியணிகண் ணகையு மாகி
வம்புமலர் நிறைநந்திக் கடற்க ரையில்
வாகாகக் கோயில்குடி கொண்டாய் தாயே !

3. தடுக்குற்ற குழந்தையுனை யுணரா ரேனுந்
தள்ளிநீ வையாமற் கூடி நின்று
எடுக்கியுலாக் காட்டல்போ லுணர்வை யூட்டி
யினியகண் ணகைகாட்டி நகையு மூட்டி
அடுத்தருளுஞ் செயல் போன்றே யாகி மாந்தர்க்
கறிவுபல வுணவணிகள் யாவு மீய்ந்தே
தொடுகும்ப மடலிங்கத் துதியி நின்று
தொழவற்றாப் பளைதன்னி லுற்றாய் தாயே !

4. தானான வருட்சத்தி யானாய் நீயே
தங்குநவ சத்திகளு மானாய் நீயே
கோனாரைப் பிரியாத குணத்தி யானாய்
குறித்தபல சத்திகளு மானாய் நீயே
யூனான வுடற்குருதி யானாய் நீயே
யுன்னடிக்கீ ழான்மாவைச் சேர்ப்பாய் நீயே
தானாகத் தேடாரை யாள வென்றே
சார்வற்றாப் பளைவந்த தாயும் நீயே.

5. நெடுங்காலப் புராணமொழி நீர்மை யாலே
நிறையன்பு மிடைச்சிறுவர் மாட்டுப் போலும்
திடஞ்சேருஞ் சிலப்பதி கார்ந் தன்னிற்
சேர்கதைதான் பிறப்பிறப்பின் மட்டே யாகும்
குடமுனியி னறிவுபுக ழேந்தி சொன்ன
கோவலனார் நற்கதையின் சார மோரில்
தடுப்பான காளிக்கு விளக்கெ ரித்தான்
தலைவெட்டி பாண்டியன்சேய் காளியென்றும்

6. காளியொரு சூதமதில் வடுவாய்த் தோன்றி
கனிந்தபழப் பாதிகண்ண கையு மாகி
கோளிமன்னன் மனைதன்னில் வளரு முன்னே
கோவலனாய் வாணிபனைத் தான்ச மைத்தே
மீளியிலாக் கொடுங்கோனை மதுரை யோடு
மிகவெரித்தே கண்ணகையாந் தெய்வ மாகி
ஊளியூழி காலமுறு தேவி போலே
யுயரருளை யாவற்கு மீய்வ தாமே !

7. சிறுபேதத் திதையொத்தே கதிர்வேற் பிள்ளை
செய்யதமிழ்ப் பேரறிஞன் தேவி யன்பன்
உறுமொற்றைச் சிலம்புடனே முழுமாங் கனியி
லுற்றதெனக் சிலம்புகூறற் காப்பி யத்தை
நிறுக்கிற்புக ழேந்தியுரை நேர்வ தாலும்
நீசன்காண் தனந்திருக் யெரித்த தாலும்
பெறுபலன்க லன்றுமுத லின்று மட்டும்
பெரும்புலனாய்ச் செவிகண்கள் களிப்ப தாலும்.

8. முனிமொழியும் முதுமொழியு முலகம் மட்டும்
மூதுலக வழக்காகி நிற்ற லாலும்
கனிவுதரு கணவனுடன் கண்ண கையும்
கற்பரசாய் வாழ்ந்தவுரை யொப்ப தல்ல
இனி தொப்பில் அருந்ததியா மாதி யோரை
இறைஞ்சாமல் விட்டபெரு மேத மாகு
நுனித்தாயிற் கண்ணகைமுன் னெழுந்த தேவி
நோற்பிலிங்க மாயின்று மருள்கின் றாளே.

வேறு


9. உலகத்து மக்க ளுயர்வுற்று மிக்க
மகிழ்வாகி வாழ வுதவிப்
பெலமுற்ற நோயின் கருவற்றுத் தேகத்
திடம்பெற்று நாளும் சுகமே
நிலமெத்து செல்வம் முதலொத்த தந்திங்
கெமைநித்த மாளுங் கடனாய்
வலமுற்ற வற்றாப் பளைகோயில் கொண்ட
முதலம்மை யாங்கண் ணகையே !

வேறு

10. சீருலகம் மேலோங்க வைப்பாய் அம்மா
செந்தமிழ்நற் சைவமொடு சிறக்க நன்று
ஏருழவர் கல்விநிலை யிதமா யேற
வெவ்வுயிருந் தன்னுயிர்போன் மன்னி வாழ
பேருலவு தெய்வவழி பாடே யென்றும்
பிசகாம னன்னெறியில் நடக்க நாளும்
பாருலவு சீவனையுங் கார்க்க வற்றாப்
பளையுறையுங் கண்ணகையே போற்றி போற்றி.

சுபம்.

❋ ❋ ❋







# வற்றாப்பளைக்கு கண்ணகை அம்மன் வருகை தந்த வரலாறு

# “சிலம்பு கூறல்”

காவியத்தின் பாடல்கள் பின்வருமாறு கூறுகின்றன.

*............ வலங்கொள் வென்றி வேல் விழியார்*

..............................................................

01. மேவியங்கே கன்று காலி
மேய்த்துவரும் பிள்ளைகள் தான்
தாவுசிறு விளையாட்டில்
தாங்களொரு கோயில் கட்டி
ஆவி பொங்கல் மடை பரப்பி
அங்கு பூசை செய்யுமளவில்
தேவியங்கே சமயமதில்
சேர்ந்து வெளித் தோன்றினளே.

02. தோன்றினளே வைகாசிச்
சூழ் விசாகம் பூரணையில்
கான்று திங்கள் வாரமதிற்
கனபொடியள் பூசை தனில்
தாண்டு மெங்கள் தற்பரியாள்
தற்சொரூபத் தோடெழுந்து
ஆண்டு மந்தப் பிள்ளைகள் தன்
அணி விழிக்குத் தோன்றினளே.

03. தோற்றுமந்த வேளையிலே
சூழ்பிள்ளைகள் தான் பார்க்க
சாற்று பஞ்சின் நிறை நரையும்
தளர்ந்து பல்லு மில்லாமல்
போற்றுமொரு கிழவியைப் போல்
பொன்னுருவ மாய் விளங்க
ஆற்றுமெங்கள் மாதாவே
ஆருரையென் றறைந்தனரே.

04. அறைந்திடுமவ் வளவு தன்னில்
ஆச்சியரு மேது சொல்வார்
உறைந்திடல் நான் சோழநகர்
உற்று வந்தேன் கதிர்காமம்
மறைந்திடு நீர்பூசை செய்யும்
வகையுரையு மென்றனளே
திறஞ்சேர்மன துடையவர்கள்
செப்பிடுமம் மொழிகேட்டு.

05. கேட்டருள்வாய் ஆச்சியரே
கிருபையில்லா விளையாட்டு
மாட்டிடையர் பிள்ளைகள் யாம்
வகுத்த பொங்கலென வுரைத்தார்
சூட்டுமந்த மொழிகேட்டு
தோகை நல்லாள் விளக்கேற்றி
மீட்டுமிந்தப் பூசை தன்னை
விளங்கச் செய்யு மென்றனளே.

06. என்று சொல்ல எண்ணையில்லை
என மொழியும் வேளையிலே
நன்று நந்திக்கடல் தனிலே
நாட்டுமுப்பு நீரள்ளி
கொண்டுவந்து விளக்கேற்றிக்
கொள்ளுமென்று சொன்னாளே
அன்று மகிழ்ந்தவர்களுந் நீர்
அள்ளிக் கொண்டு மீண்டனரே.


07. மீண்டு வந்தந் நீர்தனிலே
விளக்கெரிந்த புதுமைகண்டு
ஆண்டவளிங் கிவளெனவே
அடிபணிந்து தொழுதனரே
தாண்டவளும் பிள்ளைகளைத்
தான் மகிழ்ந்து பார்த்தருளி
ஈண்டுமக்கோர் மொழியுரைப்பேன்
இரகசிய மென மொழிந்தாள்.

08. மொழிந்திடக்கேள் கண்ணகையாம்
உற்ற எந்தன் திருநாமம்
தொழுந் தகுமிப் பரிசெனவே
துய்யவிந்த மாதமதில்
கழிந்த மதி வாரமதிற்
கதிர் செறிந்த பூரணையில்
எழுந்த வண்ணக் கும்பமதில்
என்று மென்னைப் பூசை செய்தால்.

09. செய்திடுகில் வந்திடுவேன்
தெண்டனிட்டோ ரெல்லோர்க்கும்
உய்த்திடு நல்வரங் கொடுப்பேன்
உற்றமுத்தி சேர்த்திடுவேன்
மெய்யி தென்றங் குரைத்தருள
வேண்டுமந்தப் பிள்ளைகள் தான்
எய்திடு மிங்கெமையடிமை
இட்டரு ளென்றே பணிந்தார்.

10. பணிந்த வந்தப் பிள்ளைகட்குப்
பாக்கியமுங் கீர்த்திகளும்
துணிந்த நல்ல மனைமகிழ்வும்
சொற்பெரிய பிள்ளைகளும்
அணிந்த வெந்தன் பேருரைத்தால்
ஆகும்பிணி போகுமென்று
தணிந்த நல்ல வரமளித்துத்
தற்பரியாள் மறைந்தனளே.

* * *







# வேதாங்கள்

- அமரர் : பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் -

வேதங்கள் அபௌருஷேயங்கள். மனிதர்களால் ஆக்கப்படாதவை. வேதங்கள் தெய்வீகமானவை. வேதங்களில் எல்லாக் கருத்துக்களுக்கும் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை முழுதும் மக்கள் கருத்துக்குப் புலனாகாது மறைந்து இருப்பன. இதனால் தான் தமிழில் 'மறை' என்ற சொல் வேதத்தை உணர்த்துகிறது போலும்.

ஆச்சார்ய சுவாமிகள் வேதங்களை மறையாகவே இருக்க வேண்டும் என்றும் அவை மறைவாக இல்லாது வெளிக்கொணரப்பட்டால் வேதங்களிலிருந்து கிளைத்தெழுந்த சகல நூல்களும் அழிந்துவிடும் என உணர்த்தியுள்ளார். வேதங்கள் மரத்தின் வேரை நிகர்ப்பன. வேர் நிலத்துள் மறைந்திருக்கும் வரை மரத்திற்கும், மரத்தில் உள்ள கிளைகளுக்கும், அதில் மலர்ந்த பூக்களுக்கும், பின் காய் கனிகளுக்கும் பாதுகாப்புண்டு. வேரை நிலத்தினுள் மறைக்காதவாறு வெளிக்கொணர முனைந்தால் மரமும்பட்டு, அதன் இதர பகுதிகளும் அழிந்து போய்விடும். வேதங்களை மரத்தின் வேருக்கும் இதிகாச புராணங்களை அதன் கொம்புகளுக்கும், அதில் மலர்ந்து வரும் மலர், காய், கனிகளுக்குச் சமய தத்துவ நூல்களையும் ஒப்பிட்டுக் காணும் சிந்தனை சிந்தித்தற்குரியது. வேர் மறைந்த நிலையில் காத்துப் பேணப்பட்டால் மரத்தின் இதர பாகங்களும் அழியாது வெளியே பிரகாசித்து எல்லோருக்கும் பயன்படும்.

வேதத்திற்கு 'பிரமம்' என்று மறுபெயருண்டு. அந்தப் பிரமமாகிய வேதத்தை ஓதும் முன்னரும், பின்னரும் பிரணவம் எனப்படும் ஒலியை உச்சரித்தல் வேண்டும். இவ்வாறு ஓதுவதனால் ஓதப்படும் வேதம் பாதுகாப்புப் பெற்றதாய் சிதைந்து விடாது முழுமையாகப் பேணப்படும். இம்மரபை ஒட்டிப் போலும் வேதங்களை நிகர்க்கும் தேவாரங்களை திருமுறைகளை ஓதும் முன்னரும் பின்னரும் 'திருச்சிற்றம்பலம்' என ஒலிக்கும் மரபு தமிழ் நாட்டில் தோன்றலாயிற்று.

"ஓம்" என்ற பிரணவம் பெரும் பொருள் உடையது. அதை விரித்து விளக்க வேதங்களின் இறுதிப் பகுதியான உபநிடதங்களே முயன்றுள்ளன. 'ஓம்' என்பதே பிரம்மம். (ஓமித்யேகாக்ஷரம் பிரம்ம) என கடோபநிடதம் உரைக்கின்றது. 'ஓம்' என்பது அகரம், உகரம், மகரம் ஆகிய இவற்றின் ஒன்றிணைப்பு. இம்மூன்று எழுத்துக்களும் மூன்று வேதங்களின் சாரமாக அமைந்து மெய்ப்பொருளை உணர்த்தி நிற்பன. மேலும் ஒரு பெருஞ்சிறப்பு இப் பிரணவத்திற்கு உண்டு. அ+உ+ம் என்ற மூன்றும் இணையும்

பொழுது 'அ' என்பது வாயை அங்காத்தலையும், 'ம்' என்பது ஒலிகளை எழுப்பிய பின் வாயை மூடுவதையும் சுட்டி 'ஓம்' என்பது உலகத்தில் எல்லா மொழிகளிலும் எழுப்பப்படும் எல்லா வகை ஓசைகளையும் உள்ளடக்கி நிற்பனவாகக் காணப்படுவதால் 'ஓம்' சப்தம் பிரபஞ்சம் அனைத்தையும் சுட்டும் சிறப்பு வாய்ந்தது என்று விளக்கம் கூறலாம்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த அரும் பொருள்களை உணர்த்தி நிற்கும் வேதங்கள் எழுத்தில் பொறிக்கப்படாது வாயால் ஓதப்படும் மரபை உடையது. இரு பிறப்பாளர்களுக்கு உபநயனம் என்ற சம்ஸ் காரத்தினால் தகுதி ஏற்படுத்தப்படுகின்றது. அத்தகுதியின் பெறுபேறாக வேதம் ஓதப்படுகின்றது. 'உப' என்றால் சமீபம் எனவும் 'நயனம்' என்றால் அழைத்துச் செல்லுதலையும் உணர்த்தி 'உபநயனம்' என்ற சொல் வேதங்களுக்கு அருகாக அழைத்துச் செல்லுதல் என்ற பொருள்படும். வேதங்களின் சாரமான காயத்திரி மந்திரத்தை உபதேசித்து வேதங்கள் முழுவதையும் ஓதும் தகுதியை அம் மாணவன் பெறுகின்றான் 12 ஆண்டுகள் முழுமையாக ஈடுபட்டு வேதம் முழுவதையும் ஓதப் பயிலுகின்றான்.

உபநயனம் ஆகி பிரமசரிய வாழ்க்கை நடத்துபவர்கள் வாழ்க்கையின் தொடக்கமாகிய பிரம்மசரிய நிலையில் வேதங்களை ஓதுதல் அவசியம். வேதங்களை ஓதாது விடுபவர்களுக்கு உபநயன சம்ஸ்காரம் செய்வதில் அர்த்தம் எதுவும் இல்லை. உபநயன சம்ஸ்காரம் பெற்றவர்கள் முடிந்தவரை வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியமான வேத மந்திரங்களையாவது முறைப்படி ஓதுதல் வேண்டும்.

*"துஷ்டர் சப்த: ஸ்வரதோ வர்ணதோ வா*
*.... ..... ..... ..... ..... ந ததர்த்தமாஹ"*

என்ற மகாபாஷ்ய வாக்கியப்படி சொல் பழுதாகிய நிலையில் பிரயோகம் பெற்றால் உணர்த்த வந்த கருத்தை உணர்த்தாது பிரயோகிக்கப்பட்டதாகும். ஒரு சொல் எழுத்துக்களின் வர்ணங்களாலும் ஸ்வரங்களாலும் பழுதடையும் வாய்ப்பு உண்டு. உரிய ஆசாரியரை நாடி இவ்விருவகையான தோஷங்களும் நேராவண்ணம் அக்ஷர சுத்தமாகவும் ஸ்வர சுத்தமாகவும் வேதங்கள் ஓதல் அவசியம். வேதங்களை ஓதத் தகுதி பெற்றவன் ஓதாதிருப்பது பெருந்தவறு.

*"ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்"*
*"ஸ்வாத்யாயான் மா ப்ரமதிதவ்யம்"*

* * *



குமுழமுனை

# கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார்



- சி. தெய்வேந்திரம்பிள்ளை-

இலங்கையின் வடபாகத்தில் வவுனியா மாவட்டத்திலே முல்லைத்தீவிலிருந்து பத்துக் கல் தொலைவில் தண்ணீரூற்றை வடக்கெல்லையாகவும், ஆண்டாங்குளத்தை தெற்கெல்லையாகவும், அளம்பிலை கிழக்கெல்லையாகவும், தண்ணிமுறிப்பை மேற்கெல்லையாகவுங் கொண்ட கிராமம் குமுழமுனையாகும். வளம்மிகு பதியாம் ; குமுழமுனையின் தென்திசையில் தண்ணிமுறிப்புப் பாதையில் அமைந்திருப்பது தான் கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் தலமென்பதாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால்வகைப் பிரதேசங்களும் அமையப் பெற்றுள்ள அழகியதோர் சூழலில் இத்தலம் அமைந்துள்ளது. மூர்த்திச் சிறப்புக் கீர்த்தி வாய்ந்தது. தலச்சிறப்போ வரலாற்றுப் பெருமை மிக்கது. தீர்த்தச் சிறப்பும் தீராத நோய் தீர்க்குந் தீரம் நிறைந்தது.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் எனப் பெயர் வந்தமைக்குரிய காரணத்தை முதற்கண் ஆராய்வது சாலப்பொருத்தமானதேயாம். இன்றும் கொட்டுக்கிணற்று வயலென அழைக்கப்படும் வயலொன்று குமுழமுனையில் காணப்படுகிறது. அவ்வயலில்தான் இப்பிள்ளையார் முதலில் காணப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் இருக்கின்றனவே தவிர வரலாற்றுச் சான்றுகள் எதுவும் கிடையாது.

பழங்கால மக்கள் வயலோரங்களில் சிறிய “பூவல் ” என்று அழைக்கப்படும் நீரூற்றுக்களைத் தோண்டி அதனைப் பயன்படுத்தி வந்தனர். அந்தப் பூவல் இடிந்து அழிந்து போகாவண்ணம் பெரிய மரக்கொட்டுகளைக் குடைந்து அதனைப் பூவலில் பொருத்தியிருப்பர். இத்தகையதொரு இடமே பிற்காலத்தில் கொட்டுக் கிணறு வயலென அழைக்கப்படலாயிற்றென்றுங் கூறுவர். இவ்வயல் ஆண்டாங்குளம் அளம்பில் சந்திக்கருகாமையில் நாயாற்றுத் தொடுகடலின் மருங்கே அமைந்துள்ளது. இது நல்லதம்பி உடையார் என்பவருடைய பரம்பரையினருக்குச் சொந்தமானது.

இப்பிள்ளையாரின் வரலாற்றை ஓரளவு அறிய உதவுவது “கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கும்மிகள்” என்பதாகும். இக்கும்மிகள் யாரால்? எக்காலத்தில் பாடப்பட்டதென்பதை அறிய முடியவில்லை. இக்கும்மிகளிலிருந்தும், முதியோர் கதைகளில் இருந்து திரட்டியவைகளையும், வேறு பல சான்றுகளையும் கொண்டு இவ்வரலாற்றைக் கூற முற்படுகிறேன்.

பாரத கண்டத்திலேயிருந்து பட்டாணி ஒருவன் மூன்று விநாயக விக்கிரகங்களைக் கருவாடு ஏற்றிவந்த படகிலே இலங்கைத் தீவுக்குக் கொண்டு வந்தான். இத்தீவில் அமைந்திருக்கும் ஊரான மட்டக்களப்பிலே நல்ல விலைக்கு அவற்றை விற்க வேண்டுமென்பது அவனது விருப்பமாகும்.

கருவாட்டு மச்சத்தின் நாற்றத்தைச் சகிக்காமல் இம்மூன்று விக்கிரகங்களும் செம்மலைக் கடலிலே குதித்து விட்டன.

இவற்றிலே ஒன்று குமுழமுனையில் அமைந்திருக்கும் கொட்டுக் கிணற்று வயலிலும், மற்றது கொக்குத் தொடுவாயின் அந்தமாக விளங்கும் கோட்டகக் கேணியிலும், மூன்றாவது விக்கிரகம் தென்னமரவடியில் அமைந்துள்ள அமரிவயல் என்னும் இடத்திலுமாகச் சென்று ஒளித்துக் கொண்டனவாம்.

கொட்டுக்கிணற்று வயலைச் சென்றடைந்த பிள்ளையார் அவ்வயலில் மருதமரத்தின் கீழே அமைந்திருந்த நெற்களத்தை அடைந்தது. அங்கே உழவர்கள் சூடுமிதித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் தூற்றாப் பொலியினுள்ளே இவர் ஒளித்திருந்து கொண்டார்.

மூன்று நாட்களாக அவர்களும் அந்தப் பொலியைத் தூற்றினார்கள். பொலி குறைவதைவிடக் கூடிக் கூடிக் கொண்டே சென்றதாம். பொலி தூற்றிய களைப்பினாலே அவர்கள் அயர்ந்து தூங்கி விட்டார்கள்.

அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த சமயத்தில் கள எசமானனுடைய கனவிலே எம்பெருமான் தோன்றித்தான் வந்தடைந்த விதத்தைக்கூறி நாளைய தினம் பட்டாணியொருவன் என்னைத்தேடி வருவான். அவனிடம் நெல்லினுள் உள்ள கல்லைத் தவிர வேறு கல்லே கிடையாதென்று கூறும்படி கூறினால் அவன் போய்விடுவானென்றும் அதன் பின் தன்னை வெளியே வைத்து வழிபடும்படியும் கூறி மறைந்தாராம்.

நித்திரை நீத்தெழுந்த கள எசமான் மற்றெல்லார்க்கும் இதைக் கூறவே எல்லோரும் அது உண்மைதானா என்று பார்த்துக் தெளிந்து கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் இருக்கையில் பட்டாணி யொருவன் அவ்விடம் வந்தான் . அவன் தம்பிமாரே! இவ்விடத்தில் ஒரு கல்லு வந்ததுண்டா? உண்மையைக் கூறினால் உங்களுக்கு நான் நன்மை பல செய்திடுவேன் என்று நவின்று நின்றான். அவர்களோ இல்லையென மறுத்துச் சத்தியஞ் செய்து விட்டனர். பட்டாணி ஏமாற்றத்துடன் திரும்பினான்.

பட்டாணி சென்றுவிட்டதால் பயம் நீங்கிய உழவர்கள் பக்குவமாகப் பிள்ளையாரை வைத்துப் பூஜித்தனர். பல வளமும் சிறந்து பார் புகழுங் கீர்த்தியில் விளங்கிய குமுழமுனையில் ஏதோ அதிசயமிருக்கின்ற தென்பது எங்கும் பேச்சாகி விட்டது, எங்கோ இருந்த பட்டாணியின் காதிலும் எட்டாமலில்லை. எட்டவே குதிரை மீதிவர்ந் தோடிக் குமுழமுனைக்குப் பட்டாணி வந்து சேர்ந்தான்..

நேரே பிள்ளையார் இருக்குமிடத்தை அடைந்தான். பிள்ளையாரைத் தரும்படி கெஞ்சினான். அவ்வூர் மக்கள் மறுத்து விட்டனர். வாதாடினான்; பலிக்கவில்லை; தான் வைத்திருந்த வாளினால் பிள்ளையாரின் தலையை வெட்டினான். வெட்டுப் படவில்லை. ஓங்கி ஓங்கி இருமுறை வெட்டினான். கண்டந்துண்டமாகியது. கருங்கல் சிலைக்கு உயிர் வந்துவிட்டதா? என்ன அதிசயம். இரத்தம் பீறிடத் தொடங்கியது. ஆத்திரந் தீர்ந்த பட்டாணி இனி விக்கிரகத்துக்குப் பெறுமதியில்லை என்பதை நிச்சயித்துக் கொண்டு திருகோணமலையை நோக்கிக் குதிரையிலோடினான்.

போகின்ற பொழுது ஆண்டாங்குளத்திற்கும் குமுழமுனைக்குமிடையிலே அமைந்திருக்கும் "திமிர் எடுத்த வாய்க்காலென்னும்" இடத்தில் குதிரையின் வாயிலிருந்தும் பட்டாணியின் வாய், மூக்கு என்பவற்றிலிருந்தும் இரத்தம் பீறிட இரு உருவங்களும் வீழ்ந்திறந்தனவாம். இன்றும் இவ்விடம் இதன் காரணமாகத் 'திமிர் எடுத்த வாய்க்காலென' அழைக்கப்படுகின்றது.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையாரைப் பட்டாணி சந்திப்பதற்கு முன்னர் கோட்டகக் கேணிப் பிள்ளையாரின் கையைத் துண்டித்து விட்டும், அமரி

வயல் பிள்ளையாரின் முதுகிலே பாதரட்சையினால் மிதித்துக்கூனச் செய்துவிட்டும் வந்ததாகக் கூறுவர். இன்றும் அவ்விரு பிள்ளையார்களினதும் அங்கங்களில் அத்தகைய அடையாளங்களைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் இன்றும் தலைவெட்டிப் பிள்ளையாராகவே காட்சியளிக்கின்றார். இதனால் இவர் "தலைவெட்டிப் பிளையாரெனவும்" அழைக்கப்படுகின்றார். தலையை இருமுறை வெட்டியமைக்கான அடையாளங்களை இன்றும் காணலாம்.

அத்தோடு வெட்டப்பட்ட தலையினை மக்கள் பொருத்திவைக்க முயன்றனர். முடியவில்லை. காரணம் இயற்கையான எழிலைப் பெறமுடியவில்லை. இதனால் இத்தகைய இத்தலத்தின் பின்புறம் அமைந்துள்ள இத்திமரப் பொந்தினிலே இட்டார்கள்.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையாருக்குக் கோவில்கள் பலப்பல சுவர்களோடு கட்டப்பட்டன. அனைத்தும் யானையினால் அழிக்கப்பட்டன. காடு நிறைந்த காரணமென்பதைவிட இக்கடவுளரின் விருப்பத்தின் பேரிலேயே இது நடைபெற்றதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. அன்பர்களே நான் பலர்காண, வெட்ட வெளியில்தான் இருக்க விரும்புகிறேன். என்று இவர்களது கனவில் கூறியதாகவும் செய்திகளுள்ளன.

ஆலயத்தின் பின்புறத்திலே அழகியதொரு மலை அமைந்திருக்கின்றது. அம்மலையின் உச்சியிலே முருகன் ஆலயம் ஒன்று இருக்கின்றது. அத்தோடு மிகப்பழங்காலத்திலே சிறப்புற்று விளங்கியதோர் நாகரிக சமுதாயத்தின் தடயங்களாக சிலைகள், செம்மண் ஓடுகள், கருங்கற்குடைவுகள், செங்கட்டிகள் பல இருக்கின்றன. இவ்விடம் வரலாற்று ஆய்வுக் குரியதாகும். இம்லையின் அடர்ந்த காடும், மலையின் அடிவாரத்திலே மருதவள நீரூற்றுக் கேணி ஒன்றும் கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் தலத்தின் ஒரு புறத்திலும் , மறுபுறத்தில் விலங்குகள் நீரருந்துங் குளமொன்றும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றது. இதன் அயலில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வயல்வெளி அமைந்திருக்கின்றது. வயலைக்கடந்து நாயாற்றுத் தொடுகடல் அமைந்திருக்கின்றது. இவ்வாலய அமைப்பைக் கண்டு வியக்காதவரிலர்.

எப்பொழுதும் இவ்வாலயத்தின் மணியோசை கேட்டவண்ணமே இருக்கும். முறிகண்டிப் பிள்ளையார், சங்கமாங்கந்தைப் பிள்ளையார் போன்ற அரியதலங்களோடு ஒப்பிடத்தக்கதொரு தலம் இது வென்றால் மிகையாகாது. வெள்ளிக்கிழமைகளில் இத்தலம் விசேஷம் பெறுகின்றது. தண்ணி முறிப்பில் விவசாயஞ் செய்கின்ற மக்கள் அனைவரும் மதவேறுபாடின்றி வழிபடும் தெய்வமாக இவர் விளங்குகின்றார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் (1975) ஆண்டிலே ஸ்ரீ விக்கினேஸ்வரா நாடகக் கலாமன்றத்தினர் நாடகத்தின் மூலம் நிதி சேர்த்து இவ்வாலயத்தைப் புதுப்பிக்க முனைந்தனர். அவர்களால் ஊரில் உள்ள பெரியவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட திருப்பணிச் சபை நல்ல தொண்டு செய்து வருகின்றது. அரைச்சுவர் எழுப்பப்பட்டு கம்பிவலை அடித்துக்கதவு பூட்டப்பட்டு அச்சறுக்கையாக அமைக்கப்பட்ட கட்டிடம் இப்பிள்ளையாரைக் குரங்கு, நாய் போன்ற விலங்குகளின் தொல்லைகளிலுருந்து விடுவித்துள்ளது. ஆண்டுதோறும் சித்திரை வருடப் பிறப்பிலன்று நல்லதொரு திருவிழா எடுக்கப் படுகின்றது. இவ்வாலயத்தின் பிரதம பரிபாலகர்களாக விளங்கும் உயர் திரு. பொ. கணபதிப்பிள்ளை, வ.சுப்பிரமணியம் என்பவர்களது அயராத முயற்சியினால் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக ஆலயம் வளர்ந்து வருகின்றதெனலாம்.

❊ ❊ ❊





# தக்ஷிணாமூர்த்திப் பெருமானின் தனிப் பெருங்கருணை

- சிவஸ்ரீ. பூரண தியாகராஜக்குருக்கள் - B. A. Hons (Cey)
(அண்ணாமலை சர்வகலாசாலை)

இறைவன் "இப்படியன் இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவனென்று எழுதிக்காட்ட இயலாதவன், விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய் எங்கும் வியாபித்திருப்பவன், ஐயாவென ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்," என்று தத்துவ ஞானிகளாலும், சமயாசாரியர்களாலும், பலவாறு போற்றப்படுகின்றான். ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இப்பாரெங்கும் பரந்து நின்று பொலிகின்ற நிர்மலப் பரம்பொருள் இறைவன். இவ்விறைவனை, "அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ" என்று உறவு கொண்டாடி அதற்கு ஊர் பேர் கொடுத்து வழிபடுகின்றனர் மக்கள். அவ்விறைவனும் அடியார்கள் மீது கொண்ட தனிப் பெருங்கருணை காரணமாக அவர்களின் மனப்பரிபக்குவ நிலைகளுக்கேற்பப் பல உருவத்திருமேனிகளைக் கொண்டு அவர்களைத் தடுத்தாட்கொள்கின்றான். அத்தகைய திருவுருவங்களில் தக்ஷிணாமூர்த்தியும் ஒன்றாகும். தக்ஷிணாமூர்த்தி என்றால் தென்றிசை நோக்கியிருந்தருள் புரியும் பெருமான் என்பது பொருள். இது சிவபிரானின் குருமூர்த்தமேயாகும். தக்ஷிணாமூர்த்தியினுடைய உருவம் ஞான தக்ஷிணாமூர்த்தி, யோக தக்ஷிணாமூர்த்தி, வீணாதர தக்ஷிணாமூர்த்தி, வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தி என நான்கு வகைப்படும். ஞான உபதேசம் செய்யும் நிலை ஞான தக்ஷிணாமூர்த்தம் எனவும் யோகத்தில் அமர்ந்திருக்கும் நிலை யோக தக்ஷிணாமூர்த்தம் எனவும், நாத இசையினை உபதேசிக்கும் போது வீணாதர தக்ஷிணாமூர்த்தம் எனவும் விரிவுரை செய்யும் நிலை வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தம் என்றும் கூறப்படும். ஞான தக்ஷிணாமூர்த்தி அட்சமாலை உற்பலமலர் வரதகரம் அல்லது தொங்கவிட்டகை. ஞான முத்திரையுடனும், யோக தக்ஷிணாமூர்த்தி மூன்று விதமாக அமையும். யோக முத்திரை அட்சமாலை அல்லது கமண்டலம், யோகநிலையில் வைத்தகரம், தாமரை ஆகியவற்றுடனும், அல்லது மான், மழு மலைமீதூன்றியகை ஆகியவற்றுடன் இரு கால்களை மடித்தும், இரு கால்களை மாறுபடவைத்து குந்தியிருந்தபடி யோகபட்டம் தரித்த நிலையிலும் காணலாம். வீணாதர தக்ஷிணாமூர்த்தம் வீணை தாங்கியவாறு வீணையின் மேற்பகுதியில் இடது கரம் பொருந்த, கீழ்ப்பகுதியில் இடது கை விரல் மீட்டியவாறும் மற்றைய இருகரம் அட்சமாலை புத்தகம் ஆகியவற்றுடனும் அமையும். வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தம் இடது முன்கை வரதகரம் அல்லது நீட்டித் தொங்கவிட்ட நிலையிலும், வலது முன்கை சின் முத்திரை காட்டியவாறும் பின்கைகள் அக்கினி அல்லது சர்ப்பம், அட்சமாலை தாங்கியவாறு இடது காலை மடித்து வலது காலில் பதிய வலது கால் தொங்கவிட்டபடி முயலகனை மிதித்தவாறு காணப்படும். ஆலயங்களிலெல்லாம் பெரும்பாலும் தெற்குப் பக்கத்திலுள்ள கோஷ்ட (மாட)த்தில் அல்லது அதன் முன் அமைந்த சிறு மண்டபத்தில் இந்த நிலையுருவமே பெரும்பாலும் அமைந்திருப்பதனை நாம் கண்டு

தரிசிக்கலாம். தக்ஷிணாமூர்த்திப் பெருமானின் பேதங்கள் உருவ அமைப்புக்களையிட்டு பல தியான சுலோகங்களும், காரணாகமம், ஆயாதி சிற்பநூல்களும் விளக்கமாக கூறிப்போற்றுகின்றன.

முன்னொரு காலத்திலே சிவபிரானிடம் வேதம், புராணம், இதிகாசம் முதலிய சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனும் நான்கு முனிவர்களும் கைலை மலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி "பெருமானே! முன்னர் தேவரீர் உபதேசித்த வேதங்களை நன்கு கற்றுணர்ந்தோம். ஆயினும் அவ்வேதங்கள் பரந்த சமுத்திரம்போல் பொருட் செறிவுமிக்கன. அவற்றை உய்த்துணர முடியவில்லை. இருட்காலத்தில் பெருங்காற்றினாலலைக்கப்பட்ட ஓடம்போல மனம் நிலைப்படாமல் அங்குமிங்குமாகப் பல பொருட்டுறைகள் அலைக்க, உண்மைப் பொருளான ஞானம் கைவரப் பெறாமல் இளைப்படைந்தோம். மனம் அமைதியுறவில்லை. ஆதலின் அந்த இளைப்பாகிய மயக்கம் தீர்ந்து மனமடங்கத் தேவரீர்! ஞான பாதத்தை எங்களுக்கு உபதேசித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அதைக்கேட்ட சிவபிரான் கைலயங்கிரியின் தென் பாகத்தமைந்த கல்லால விருக்ஷ நிழலில் மிக்க இளமை வாய்ந்த திருமேனியோடு மானும் மழுவுந்தாங்கிய இருதிருக்கரங்களோடு மார்பகத்திற் பொருந்திய திருக்கரம், சின்முத்திரை காட்டும் திருக்கரமுமாக நான்கு திருக்கரங்களுடன் இடது திருவடியை மடித்து வலது திருவடியைத் தொங்கவிட்டுத் தெற்கு முகமாக தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்தார். பெருவிரலுடன் சுட்டுவிரலைச் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் நீட்டி சின் முத்திரை காட்டி ஒரு கணப்பொழுது ஒரு செயலுமின்றி மௌனியாக அமர்ந்தருளினார். ஞான பாதத்தை வாயால் உபதேசிக்க இயலாது மௌனமாயிருந்து தம்மைத் தியானித்தலே ஞானம் என்று விளங்க வைத்தார்.

உலகில் குரு வயது முதிர்ந்தவராயும் சீடர்கள் இளையோராயுமிருப்பதே இயற்கை. ஆனால் இங்கு குரு மிக்க இளைஞர். சீடர்களோவெனில் முதியோர். மேலும் குரு மௌனமாக இருக்கின்றார். சீடர்கள் சந்தேகம் தீரப்பெற்றார்கள். இதுபெரும் ஆச்சரியமில்லையோ! இதனையே

*"சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தாஸ் சிஷ்யா: குருர்யுவா!*
*குரோஸ்து மௌநம் வ்யாக்யாநம் சிஷ்யாஸ்து சின்ன சம்சயா:!!"*

என்ற சுலோகம் அருமையாக விளக்குகின்றது.

மேலும், இவர் ஏன் ஆலமரத்தின் கீழ் இருக்க வேண்டும்? என்பதன் தத்துவத்தைச் சிறிது நோக்குவோம். ஒரு மிகச் சிறிய வித்திலிருந்தே பெரும் ஆலமரந்தோன்றி அடைந்தவர். கட்கெல்லாம் (தன்னை நாடிவரும் எண்ணற்ற மக்கட்கெல்லாம்) நிழல் தருகின்றது. அதுபோலவே குரு சீடனிடம் நடுகின்ற உபதேசமாகின்ற சிறு வித்திலிருந்துதான் அறிவு விருட்சம் தோன்றி உலகோருக்கு உபயோகமாகின்றது. மந்திர மொழிகள் மூலம் குரு உபதேசிக்கும் வேளை, அவர் நாட்டும் விதையினை "பீஜாக்ஷரம்" என்கின்றோம். ஆலமரம் தனது விழுதுகளையூன்றி வைத்தே பெருமரமாவதுபோல, அறிவும் பக்குவர்களின் உள்ளத்தில் விழுது ஊன்றிதானே பெருகிப் பிரமாண்டமாகும். இவ்வுண்மையினை உணர்த்தவே மற்றைய மரங்களைவிட்டு ஆலமரத்தின் கீழிருந்து உபதேசித்ததாகப் பாவித்தனர். மேலும் உண்மை ஞானம் அழிவற்றது. மூப்பற்றது. ஆகவேதான் இளம் பிராயத்தினர் தக்ஷிணாமூர்த்தி எனவும் போற்றினர். தக்ஷிணாமூர்த்தி என்றால் தெற்கு முகமாக இருக்கும் கடவுள் என்பது பொருள். தெற்கு யமனுடைய திக்கு. அஞ்ஞானம் நீங்கி யம பயம் நீங்கி இஷ்ட சித்திகளைப் பெறவேண்டிய நல்ல உபதேசங்களை உபதேசிக்க உரிய திக்குமாகும். நடராஜப் பெருமானும் அடியார்களின் பாவங்களை நீக்கி, இஷ்ட சித்திகளை, விரும்பிய பேறுகளைக் கொடுக்க தெற்கு முகவாகவே நின்று நர்த்தனஞ் செய்யவில்லையா! இதுபோலவே பகவான் ஞானாசிரியனாக வந்து மாணிக்க வாசகருக்குத் தெற்கு முகமாகவேயிருந்து உபதேசஞ் செய்தனர். "வாயுபதேசத்தாற் பயனில்லை. உண்மை ஞானத்தை உள்நோக்கியே உணரவேண்டும் என்ற உண்மையினை உணர்த்தவே "மௌன குரு" என்றும் போற்றினார்கள். "ஊரிலான் குணங்குறியிலான்" ஒரு முன்னிலான் வரல் போக்கிலான் ஆகிய ஞானமூர்த்தி தானேயென்பதையும், தம்மைத் தியானித்தால் ஞானம் விருத்தியாகும்

என்பதையும் விளக்குமுகமாகவே தம் ஒரு திருக்கரத்தை மார்பில் வைத்து ஞான முத்திரை சின் முத்திரை காண்பித்தார் என்றும் கொள்ளலாம்.

மேலும், "நமது கையிலே உள்ள ஐந்து விரல்களில் பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் ஆன்மாவையும், ஏனைய விரல்கள் மூன்றும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் குறிக்கின்றன எனலாம். சாதாரணமாக கையிலே பெருவிரல் தனித்தே (ஏனைய விரல்களோடு சேராமல்) நிற்கின்றதல்லவா! ஆனால் சுட்டுவிரல் ஏனைய விரல்களோடு சேர்ந்தே இருக்கும். இறைவன் மலங்களுக்கப்பாற்பட்டவன். பெருவிரல் தனித்து நின்றாலும், அது ஏனைய விரல்களோடு சேர்ந்து தொழிற்படாதவிடத்து எந்த ஒரு வேலையினையும் செய்யவே இயலாது. எனவே ஆன்மா எந்தவொரு காரியத்தைச் செய்யும் வேளையிலும் இறைவன் உறுதுணையாக மறைபொருளாயிருந்து சாட்சியாக விளங்குகின்றான் என்பதனை உணரலாம். ஆன்மாவானது பாச சம்பந்தமுடையதாக (மலங்களோடிணைந்து) இருக்கும்போது நல்வினை, தீவினைகளைச் செய்து அதன் பயனாக இன்ப துன்பங்களை நுகரும். அது பதியோடு அதாவது இறைவனோடு சேர்ந்து விட்டால், பாசம் அதனைவிட்டு அகன்றுவிடும். ஆன்மா முக்தி (விடுதலை) பெற வேண்டுமானால், பாசங்களிலிருந்து விடுபட்டு (அவற்றை விலத்திவிட்டு) பதியோடு சேர வேண்டும்" என்ற சிறந்த தத்துவமே அம்முத்திரை உணர்த்துகின்ற பொருள்" எனச் சின்முத்திரை மூலம் தெளிவாகக் காட்டியருளினார் என்பதனையும் நாம் உய்த்து உணரலாம்.

கல்விக்கு அதிபதி வாக்கின் செல்வியான சரஸ்வதீ (ஸ்திரீ உருவமாக) வீணை, ஞான புத்தகம், படிக அட்சமாலை தாங்கிக் காட்சி தருவதுபோல் தக்ஷிணாமூர்த்தியும் (ஆண்ரூபமாக) வீணை, புத்தகம், அட்சமாலை தாங்கி மௌனகுருவாகி சின் முத்திரையினால் மன அடக்கம், ஞானம் ஆகியவற்றை உபதேசித்தருளினார் என்பதும் கருதற்பாலது.

மேலும் முயலகன் ஆணவ மாயாரூபியாதலால் அந்த ஆணவ (உலக) மாயையை மிதித்து அடக்கி ஞானத்தை உபதேசித்தார் என்பதனை முயலகனை மிதித்த பாவனை உணர்த்துகின்றது. உண்மை ஞானம் அழிவற்றது. மூப்பில்லாதது. ஆகவே என்றும் இளம்பராயத்தினர் தக்ஷிணாமூர்த்தி எனப்போற்றினர்.

*"மௌன வ்யாக்யா ப்ரகடித பரப்ரும்ஹதத்வம் யுவாநம்*
*வர்ஷிஷ்டாந்தே வஸத்ருஷிகணைர் ஆவ்ருதம் ப்ருமஹநிஷ்டை:!*
*ஆசார்யேந்த்ரம் கரகலித சின்முத்ரம் ஆநந்த மூர்த்திம்*
*ஸ்வாத்மாராமம் முதிதவதநம் தக்ஷிணாமூர்த்திமீதே!!"*

பொருள் : – 'மௌனம்' எனும் விரிவுரை மூலம் பரபிரம்மத்தின் உண்மையினை வெளியிட்டருளியவரும், இளையரும், அருகினில் அமர்ந்துள்ள (சீடர்களான), பிரம்மத்தில் மூழ்கியுள்ள, முனிவர் கூட்டத்தினால் சூழப்பட்டவரும், குருவரர்களிற் சிறந்தவரும் (தலைவரும்), கையில் சின்முத்திரை காட்டி வீற்றிருப்பவரும், ஆனந்த உருவினரும், தன்னில்தானே இன்புறுகின்றவரும் மலர்ந்த முகத்தினருமான, தக்ஷிணாமூர்த்திப் பெருமானை வணங்குகின்றேன்.

*"வடவிடபி ஸமீபே பூமிபாகே நிஷண்ணம்*
*சகல முநி ஜநாநாம் ஞானதாதாரம் ஆராத்!*
*த்ரிபுவந குருமீசம் தக்ஷிணாமூர்த்தி தேவம்*
*ஜநந மரண துக்கச்சேத தக்ஷம் நமாமி!!"*

ஆலமரத்தினருகே பூமியின் மீது அமர்ந்திருப்பவரும், அருகினிலுள்ள முனிவர்கட் கெல்லாம் ஞானத்தையருள்பாலிப்பவரும், மூவுலகினும் குருவும், பிறப்பிறப்பெனும் பெரும்பணியை அழிப்பதில் வல்லவருமான தக்ஷிணாமூர்த்திப் பெருமானை வணங்குகின்றேன்.

*"குரவே ஸர்வ லோகநாம் பிஷஜே பவரோகிணாம்!*
*நிதயே ஸர்வ வித்யாநாம் தக்ஷிணாமூர்த்தயே நம:!!"*

உலகினுக்கெல்லாம் குருவும், பிறவிப்பிணி போக்கும் மருத்துவரும் சகல கலைகளுக்கும் நிதியானவருமான தக்ஷிணாமூர்த்திக்கு வணக்கம் எனவும்,

*"பண்டு நால்வருக்கற முரைத்தருளிப் பல்லுலகிலுயிர் வாழ்க்கை*
*கண்ட நாதனார் கடலிடங்கை தொழக் காதலித்துறை கோயில்*
*வண்டு பண்செயு மாமலர்ப்பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்*
*தொண்டர் நாடொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே"*

(சம்பந்தர்)

*"ஆலத்தார் நிழலில்லற நால்வர்க்கும்*
*கோலத்தாலுரை செய்தவன்......"* (அப்பர்)

*"அருந்தவர்க்காலில் கீழறமுதலா நான்கினையும்*
*இருந்தவர்க் கருளுமது எனக்கறிய இயம்பே"*
(மாணிக்கவாசகர்)

*"கல்லாலின் புடையமந்து நான்மறை யாறங்க*
*முதற்கற்ற கேள்வி*
*வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த*
*பூரணமாய் மறைக்கப்பாலாய்*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல்*
*நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்"*
(திருவிளையாடற் புராணம்)

*"கல்லாலின் நிழல் மலைவில்லார்"*
*(மலைவில்லார்=மேருமலையினை வில்லாக உடையவர்,*
*மலைவு+இல்லார்=மயக்கமற்றவர்என்றும்பொருள்)*
(சிவஞானபோதம்)

இவ்வாறெல்லாம் சம்ஸ்கிருதத்தில் ஆதி சங்கரர் முதலியோராலும் தமிழில் சமய குரவர்களாலும், திருவிளையாடற் புராணம் முதலாம் புராணங்களிலும் சிவஞானபோதம் முதலியவற்றிலும் பலவாறு போற்றியேத்தப்பட்ட, தத்துரூபனாக விளங்குகின்ற தக்ஷிணாமூர்த்திப் பெருமானை நாம் திரிகரண சுத்தியுடன் மனதார நாடேறும் வணங்கி வருவோமானால் அஞ்ஞானமாகிய இருள்களையும், உண்மை ஞானம் கிட்டும், பூரணமான ஆனந்தப் பெருவாழ்வு பெற்று வாழலாமென்பதிற் சிறிதேனுமையமில்லை.

*"லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து"*
*"உலக மாந்தரனைவரும் இன்புற்று வாழ்க"*

சுபம்

❋ ❋ ❋

## ஊர்மிளை என்பவள் யார் தெரியுமா?

மிதிலையை ஆண்ட ஜனக மகாராஜாவின் தத்துப் புத்திரி "ஊர்மிளை" சீதையின் சகோதரி. இலக்குவனின் மனைவி. இராமனுக்குச் சேவை செய்வதற்காக பதினான்கு வருடங்கள் இலக்குவன் வனவாசம் சென்ற பொழுது, பதினான்கு ஆண்டுகள் நித்திரையின்றி மானசீக பக்தி சேவை செய்த உயர்ந்த பதிவிரதை ஊர்மிளை. சீதைக்கு நிகரான உத்தமி இவள்.



# பழந்தமிழர் பண்பாடு பேணும் வன்னி நாடு

- அநு. வை. நாகராஜன் -



மானுடவியலாளர்களும் (ANTHROPOLOGISTS) தொல்லியலாளர்களும் (ARCHEOLOGISTS) இலக்கிய நோக்கர்களும் ( LITERARY COMMENDATORS) மனிதனின் உள்ளுணர்வினை (INTUITION) முன்வைத்தே தமது கருத்தைக் கூறுகின்றனர். இவ்வுணர்வே மானுடத்தின் விழிப்புக்கும் வளர்ச்சிக்கும் முதற் காரணியாக விளங்குகிறது. இதன் வழியில், காதலும் வீரமும் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளாக உள்ளன. காதல் லௌகிக வாழ்வோடு வெளிப்பட, வீரம் லௌகிகத்தோடும் ஆன்மீகத்தோடும் இணைந்து நிற்கிறது. நடைமுறை வாழ்வில் வீரம், வலுவான வினை செய்கிறது. அதுவே, ஆன்மீக நிலையில் வணக்கத்துக்குரிய மானதக் கருத்தியலுக்கும் (INTUTIONAL CONCEPTS) வித்தாகிறது.

உலகெங்கும் தோன்றிய ஆன்மீக நெறிகளுக்கும் அதுவே மூலவேர். இவ்வூற்றில் முகிழ்த்தவையே நாம் அன்றாடம் அநுசரிக்கும் சமய நம்பிக்கைகள் – சடங்குகள் – சம்பிரதாயங்கள் – ஆசாரங்கள் – கட்டுக் கோப்புகள் எனப்படும் நடைமுறைச் செயற்பாடுகளாம். இந்நிலையில், சமய நம்பிக்கையின் மூலத்தையும் இங்கு சிந்திக்க வேண்டியுள்ளது. உயிரனைத்துக்கும் இன்றியமையாது தேவைப்படுவது பாதுகாப்பு ஒன்றே எனின் அது மிகையாகாது. வலு குறைந்தோர், வலு மிகுந்தோரிடம் இருந்து பாதுகாப்பு வேண்டப்படும். அதனால், பெருவலு மிகுந்தோரின் தயவு – தாட்சண்யம் – பரிவு – அரவணைப்பு என்பன எப்பொழுதும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. அத்தகையோரின் அநுசரணைக்காக அவரை அண்டி, வழிபடும் நிலையும் ஏற்படுகிறது. இவ்வழிபாடே, நாளடைவில் வீரவணக்கம் ஆகவும் மக்கள் சமூகத்தில் உருவாகிறது.

தெளிந்த அறிவு இல்லா நிலையில், மாநுட ஜீவன் தனது உள்ளுணர்வினை முன்னிருத்தி, அதன் வழியில் தலையெடுத்தது. பகுத்தறிவுக்கு இடமில்லா இடத்தில், அவ்வுணர்வில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என நம்பும் நிலையேற்படும். அந் நம்பிக்கையில் பல தரப்பட்ட கருத்தியல்கள் முகிழ்க்கும்.

வீர வணக்கத்திற் காலூன்றிய நம்பிக்கை, நாளடைவில் சமய நம்பிக்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் அதுவே காலாயிற்று. இவ்வீர வணக்கத்தில் முளை கொண்ட நம்பிக்கைகள், செம்மையான தளத்தில் வேரோடி, தனித்துவமான

மார்க்கங்கள் எனவும், அவற்றுக்கெனப் கட்டுக்கோப்புகளும் கோட்பாடுகளும் கொண்ட நன்னெறிகள் எனவும் மனித மனங்களில் தலையெடுத்தன. இன்று அவை, பல்வேறு வடிவங்களில் நிலை கொண்டும் நிலவுகின்றன. இவை, சமய வரலாற்றின் பரிணாம வளர்ச்சியின்பாற்படுவன என்பர்.

இதன் கண்ணோட்டத்தில், தமிழரின் சமய நம்பிக்கையை நோக்குமிடத்து, அதன் தொன்மை புலப்படும். பண்டுதொட்டு தமிழர் வாழ்வில், சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என இரு வழிபாட்டு முறைமைகள் இருந்து வருகின்றன.

இதில் –

சிறுதெய்வ வழிபாடே தமிழரின் முதல் வழிபாடாகும். இயற்கையுடன் இணைந்து, நாகரிகம் முதிரா நிலையில், வழிவழியாக, பல தலைமுறைகளைக் கண்டதே அதுவாகும். அதாவது – இயற்கையில் உள்ள வான், மலை, மழை, தீ, வளி எனும் பஞ்ச பூதங்களையும்; பாம்பு, வேழம், மரம், செடி, கொடி போன்ற சலன – அசலன உருக்களையும் தமிழர் தமது வழிபடு தெய்வங்களாகக் கொண்டனர் என்பதாம்.

பின்னாளில் – பிற மத இனத் தொடர்புகள் இணைய, நாகரிகம் முதிர்ந்த நிலையில் மெய்ஞ்ஞான கருத்தியல்கள் தமிழர் வாழ்வியலிலும் விரிந்தன. அந்நிலையில், பழந்தமிழர் வாழ்வில், பெருந் தெய்வ வழிபாடுகள் (தத்துவார்த்த வழிபாடுகள்) இடம் பெற்றன என ஆய்வாளர்கள் தமது சான்று ஆதாரங்களுடன் கூறுவர்.

இந்நிலையில் – இம்மை, மறுமை போன்ற பிறப்பு, இறப்பு பற்றிய சிந்தனைக் கருத்தியல்களும்; பாவம், புண்ணியம் போன்ற நன்னெறிக் கருத்தியல்களும் கொண்ட தத்துவார்த்த மெய்ஞ்ஞான விழிப்பும் தமிழர் வாழ்வியலில் முகிழ்த்தன.

மெய்ஞ்ஞானம் உணர்த்தும் மதங்களுள் மிகவுந் தொன்மை வாய்ந்தது இந்துமதம். இதன் பரம்பல் இந்து நதி தீரத்து ஆதிமக்கட் குழுமதத்தினின்று ஆரம்பித்திருக்கிறது என ஆய்வாளர் கூறுவர். இதனை நிரூபிக்கப் பல அக – புறச் சான்றாதாரங்களைத் தொல்லியலாளர்களும் முன் வைக்கின்றனர். இவர்தம் கூற்றுப்படி இந்து நதித் கரையில் வாழ்ந்த ஒஸ்ரலொயிற் (OSTERLOID) எனும் ஆதி மக்கட் குழுமத்தினர் பேசியமொழி ஒஸ்ரிக் (OSTRIC) என்றும்; அவர் வாழ்வியலில் அநுட்டிக்கப் பெற்ற வழிபாடு, சிறுதெய்வ (இயற்கை) வழிபாடு என்றுங் கூறுவர். ஒஸ்ரலொயிற் குழுமத்தினரின் வழித்தோன்றல்களே திராவிடராம். அவர்கள் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப, காலப்போக்கில் நாகரிகமுற்ற மூத்த குடியினராகினர். இவர் இரத்த வழித் தோன்றலர்களுள் ஒருவரே இன்றைய தமிழர்.

அவ்வழியில் வந்த இம்மூத்த குடியினர் ஆதியிற் கைக்கொண்ட இயற்கை (சிறுதெய்வ) வழிபாட்டின் சுவடுகள், தமிழர் வாழ்விடங்களில் இன்றும் பழைமை பேணி நின்று நிலவுகின்றன. குறிப்பாக – தென்னாசியாவில், இந்தியா – இந்தோனேசியா – இலங்கை – சயாம் – மலேசியா போன்ற பழம் பெருமை மிக்க நாடுகளில் வேரூன்றி, பக்தி சிரத்தையுடன் விளங்குகிறது. இலங்கையில் குறிப்பாக ஆதிக் குடிகள் வாழ்ந்த வன்னிப் பெரு நிலத்தில் காடும் காடு சார்ந்த முல்லையிலும், வயலும் வயல் சார்ந்த கழனியிலும் அன்று அநுசரித்த சிறுதெய்வ வழிபாடுகள் பழமை பேணி, சடங்கு சம்பிரதாயங்களுடன் இன்றும் பக்தி பூர்வமாக நின்று நிலவுகின்றன.

இப்பிரதேசங்களின் புராதன வரலாற்றோடு சிறு தெய்வங்களான ஐயனார், அண்ணன்மார், வதனமார், சப்த கன்னியர், காளி, துர்க்கை போன்ற வீரதீர – காவல் தெய்வங்களின் சிறப்பான வழிபாடுகள் நடை பெறுகின்றன. இத்தெய்வங்களின் ஆலயங்கள், வழிபாடு பற்றிய தகவல்கள், புராணங்கள், ஐதீகக் கதைகள், தலபுராணங்கள் மூலமாகவும், செவி வழியாகவும், பழம் ஏடுகள் வாயிலாகவும் அறிய வந்துள்ளன. வன்னிப் பிரதேசத்து முல்லை மாவட்டத்தில், வற்றாப்பளை எனும் பழம் பதியிற் கோயில் கொண்டிருக்கும் வற்றாப்பளை அம்மன் ஆலயம் அவற்றுட் சிறப்பாகக் கூறப் பெறும். அதேபோல், புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையில் உள்ள மன்னகண்டல் எனும் இடத்தில் சப்த கன்னியர்க்குப் பழங் காலத்தில் ஆலயம் ஒன்று இருந்துள்ளது. இன்று, இவ்வாலயம் அழிபாடுகளுள் மூழ்கிக் கிடக்கிறது. இவ்வழிபாடுகளை அகழ்ந்த பொழுது, அக்கோயிலின் தலபுராண வரலாறும் பிறவும்

தெரியவந்தன. இன்றும் இவ்வாலயச் சப்த கன்னியர் தோத்திரம், செவி வழியாக மட்டுமன்றி ஏட்டுச் சுவடிகள் வழியாகவும் இப்பகுதி மூத்தோர் வாயிலாகப் பாடப்பெற்று வருகிறது. அத் தோத்திரப் பாடல்களில் ஒருபாடல் பின்வருமாறு செய்தி தருகிறது.

*மங்கை அபிராமி மகேஸ்வரி கௌமாரி*
*நங்கைநா ராயணியாம் நாதனொடு – தங்கிமன்னுள்*
*வாதாடுங் காளிவராகி யிந்திராணி யிவர்*
*பாதார விந்தம் பணி.*

இந்தியாவில் சக்தி பீடங்கள் தோன்றிய காலத்துக்கு முன்னும் பின்னும், இலங்கையில் அம்மன் ஆலயங்கள் பல தோன்றியுள்ளன. இவை பெரும்பாலும் கிராம மட்டத்தில், பழம் பெரும் நம்பிக்கைகள் – ஐதிகக் கதைகள் – தல புராணங்கள் என்பன கொண்டு மடை, குளுத்தி – பொங்கல் போன்ற சடங்கு சம்பிரதாயங்களை முன் வைத்து வழிபடப் பெறுகின்றன. இக்கிராமிய வழிபாடுகள் பெரும்பாலும், ஆகம விதிகளையோ, மந்திர ஜபதபங்களையோ கொண்ட நியமங்களையோ கொண்டவையாக இருப்பதில்லை.

இந்த வகையில் எழுந்த சிறு தெய்வ ஆலயங்கள் ஈழத்தில் குறிப்பாக – வன்னியிலும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்திலும் பரக்கக் காணலாம். நாகபூஷணி அம்மன், வீரமாகாளி அம்மன், கண்ணகி அம்மன், முத்துமாரி அம்மன், துர்க்கை அம்மன் எனும் பல பெயர் கொண்டு இங்கெல்லாம் சக்தி வழிபாடுகள் உள்ளன. இவற்றுள், வன்னி மாவட்டத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் மிகவும் பழம் பெருமை கொண்டு விளங்குகிறது. இங்கு கோயில் கொண்டு இருக்கும் அம்மனை, கண்ணகித் தெய்வம் என்றும் நம்பப் பெறுகிறது.

தமிழரின் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகித் தெய்வத்தோடு தொடர்புபடுத்தி, வற்றாப்பளை அம்மன் அன்று தொட்டு வழிபடப் பெறுகிறாள். இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி 'சிலம்பு கூறல்' எனும் ஏட்டுப் பிரதியில் உள்ள காப்பியமும், 'அம்மன் சிந்து', 'வற்றாப்பளை கண்ணகி வரலாற்றுச் சிந்து', 'பன்னிச்சையாடிய சிந்து' என்பவற்றில் விரிவாகக் கூறப்பெறுகிறது.

அதன்படி அங்குள்ள நந்திக் கடற்கரை வெளியில் மாடு மேய்த்த சிறுவருக்கு அம்மன், மூதாட்டி உருவில் வந்து காட்சி தந்து, அற்புதமும் அருளும் தந்தாள் எனக் கூறப்படுகிறது. அத்துடன், அவள் அருட் கடாக்ஷத்தில் கடல் நீரால் விளக்கெரிய வைத்த அற்புதமும் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் தல புராணமாகக் கூறப்பெறுகிறது. சிலப்பதிகாரக் கண்ணகி மதுரையை எரியூட்டியதன் பின், சேர நாட்டின் மலைக் குன்றொன்றின் மீதமர்ந்து வானுலகு ஏகியதாகக் கூற, வற்றாப்பளை அம்மன் சிந்துக் காவியம் கூறும் கண்ணகி மதுரையைத் தீ மூட்டிய பின், சினந்தணிய வற்றாப்பளையில் மூதாட்டியாக வந்தமர்ந்து சினந் தணிந்ததோடு மக்களுக்குக் காவல் தெய்வம் ஆனாள் என்றும் கூறுகிறது.

கதை முடிவுகள் எவ்விதம் இருந்த போதிலும், சக்தியின் கடாக்ஷம் மக்களுக்குக் கற்பின் மாண்பினை உணர்த்தி, தெய்வமாகக் காவல் செய்கிறது.

இவ்வழிபாடு, பண்டைய தமிழரின் பண்பாட்டுக் கோலத்தையும் தொன்மையையும் சமய நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

❋ ❋ ❋

*உசாத்துணைக்கு உதவியவை :*


01. இலங்கையில் தொல்லியல் ஆய்வும் – திராவிடக் கலாசாரமும் – த. குணபாலசிங்கம் – 1988 – மட்டக்களப்பு.
02. சிந்தனை – யாழ். பல்கலைக்கழக வெளியீடு – ஆடி 1983.
03. The History and culture of Indian people by Majumdar.
04. Ceylon Journal of Science Vol:II, December 1933.
05. Archaelogical Survey - Annual Report - 1957.
06. A short History of Hindusim in Ceylon by C. S. Nawaratnam - 1964.
07. Hinduism in Ceylon by Rev. James Cartman - 1957.





# கண்ணன் தூது சென்றது ஏன் ?

*- ஸ்ரீ வத்ஸ ஜெயராம சர்மா -*

பாண்டவர்கள், கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பிறகு பன்னிரண்டு வருட வனவாசமும், ஒரு வருட அஞ்ஞானவாசத்தையும் முடித்து விட்டு, தங்கள் ராஜ்ஜியத்தை வேண்டி முதலில் விராட மன்னரின் அரச புரோகிதரை திருதராஷ்டிரனிடம் தூது அனுப்பினார்கள். அந்த அரச புரோகிதரிடம் துரியோதனன் இந்திரப் பிரஸ்தத்தைத் திருப்பித் தரமுடியாது என்றும், பாண்டவர்கள் மீண்டும் வனவாசத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், கூறி அனுப்பி விடுகின்றான். பின்னர் திருதராட்டிரன் அவனது தேரோட்டியான சஞ்சயனை பாண்டவர்களிடம் தூதாக அனுப்பி, பாண்டவர்களை உபப் லவ்யத்திலேயே கடைசி வரையில் சுகமாகத் தங்கியிருக்கும்படி கூறி அனுப்பி வைக்கிறார். சஞ்சயன் உபப்லவ்யத்திற்கு வந்து கிருஷ்ணன் முன்னிலையில் பாண்டவர்களிடம் இச்செய்தியைக் கூறி விடுகிறான். அப்போது சஞ்சயன் கிருஷ்ணனின் தேஜஸைக் கண்டு வியந்து, கண்ணனைக் கடவுள் என்று உணர்ந்து கொள்கிறான். ஸ்ரீ கிருஷ்ணன் அவனிடம், இந்திரப்பிரஸ்தத்தைத் திருதராட்டிரன் பாண்டவர்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்றும், இல்லாவிட்டால் போரைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்து அனுப்புகிறான். சஞ்சயன் திரும்பி வந்து திருதராட்டிரனிடம் நடந்தவற்றைக் கூறி, போரைத் தவிர்க்குமாறு கூறுகிறான். மேலும் அவன், திருதராட்டிரனிடம் கண்ணனின் பெருமைகளைப் பற்றியும், அவருடைய தேஜஸைப் பற்றியும் எடுத்துக்கூறி, கண்ணன் சாதாரண மனிதன் அல்ல என்றும், அவர் சாட்சாத் ஸ்ரீமன் நாராயணனே என்றும், அவரை ஒருமுறை கண்ணால் கண்டு விட்டால் செய்த பாவங்கள் அனைத்தும், சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து விடும் என்றும் கூறுகிறான். சஞ்சயன் கண்ணனின் பெருமைகளையும், தேஜஸைப் பற்றியும் கூறக்கூற திருதராட்டிரன் மனம் உருகி அவரையும் அறியாமல், கண்ணன் இருக்கும் திக்கை நோக்கி கைகூப்பி வணங்கி, "கண்ணா ! இந்தக் குருடன் ஒருமுறையாவது உன் சுந்தர எழிலைக் கண்ணால் காண வேண்டும்; அதற்கு ஒரு வரமருள்வாய்" என்று கூறி நெகிழ்ந்து போகிறார்.

உடனே கண்ணன் தன் திவ்ய தரிசனத்தைக் காண்பிக்கத் திருவுளம் கொண்டான்.

ஆம் ! அதற்காகத்தான் கண்ணன் தூதே ஏற்பட்டது. கண்ணன் சமாதானத்தை நாடி தூது போனான். ஆனால் அது போரில் முடிந்தது. அதனால் அவன் தூது வெற்றி பெறவில்லை என்று கூறலாம். அவன் நினைத்தால் அதை வெற்றிகரமாக நடத்தியிருக்க

முடியும். அவனுடைய தூதனின் காரியமே வெற்றிகரமாக நடந்திருக்கும் போது அவனால் நடத்த முடியாதா என்ன? ஆம் ! இராமாவதாரத்தில் அவனுடைய தூதனான ஆஞ்சனேயனின் தூது வெற்றிகரமாக ஈடேறவில்லையா? அப்படியிருக்கும்போது அவனால் முடியதா என்ன ?

ஆனால் அவன் வந்த காரணம் அதுவல்லவே !

திருதராஷ்டிரனுக்கு தன் திவ்ய தரிசனத்தைக் காண்பிக்க அல்லவா அவன் வந்தான் ! அதற்கு தூது ஒரு காரணம் அவ்வளவுதான் !


அரச சபையில் துரியோதனன் பாண்டவர்களுக்கு ஊசிமுனை அளவுகூட இடம்தரமுடியாது என்று கூறி கண்ணனையும் இழித்துப் பேசுகிறான். உடனே கண்ணன் கோபம் கொண்டது போல் விஸ்வரூபக் காட்சி அளிக்கிறான். அப்போது சட்டென்று திருதராட்டிரனுக்கு கண் பார்வை தோன்றிட கண்ணனின் திவ்ய சொரூபத்தைக் கண்டு வணங்குகிறார். உடனே அவர் கண்ணனிடம் "உன்னைக் கண்ட பிறகு உலகில் காண வேண்டியது ஒன்றும் இல்லை. உன்னைக் கண்டது ஒன்றே போதும். நான் பிறவி எடுத்ததன் பலனை அடைந்து விட்டேன். ஆகையால் மீண்டும் என்னைக் குருடனாகவே மாற்றிவிடு" என்று இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். அதன்படி மீண்டும் அவர் கண்பார்வை இழக்கிறார்.

கண்ணன் தூது வந்த இரகசியமே திருதராட்டிரனுக்குத் தன் திவ்ய சொரூபத்தைக் காட்ட வேண்டும் என்பதுதான்! அதற்கு ஒரு காரணமாய் அமைந்தது சமாதானத் தூது!

ஒருவன் எவ்வளவு பாவியானாலும் தன்னை உள்ளன்போடு ஒருமுறை அழைத்தால் அவர்களுக்காக ஓடி வருவான் பரந்தாமன் என்பதை நிரூபிப்பதற்காகவே இந்தத் தூது அமைந்தது.

*நன்றி – ஞானபூமி*

❊ ❊ ❊







# சமயம் + விஞ்ஞானம் = மனிதப்பண்பு

- செ. சிவராசா -

எத்திசை பார்ப்பினும் விஞ்ஞானத்தின் விந்தைமிகு படைப்புக்களைக் கண்ணுறும் மக்கள் அதன் மகத்துவத்தை அறிந்த பின்னர் அதுவே உலகினை ஆட்டிப் படைக்கும் ஒரேயொரு கருவி என்று எண்ணுவதில் வியப்பில்லைதான். ஆயினும், உலகம் முழுதும் தம் கைக்குள் என்று வீறாப்புப் பேசும் விஞ்ஞானிகள் மாட்டுதான் உலகம் அடங்கியதா? அல்லது அதற்கும் வரையறையின்றிய வேறு காரணிகளாலும் உலகம் கட்டுப்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்விக்கு விடைகாண முயன்றபோது சமயம் என்ற கருப்பொருளும் கண்முன்னே வந்து நிற்பதை நாம் உணர முடிகின்றது.

எண்ணற்ற சிந்தனையாளர்களும், கருத்துவாதிகளும், விஞ்ஞானிகளும் வாதிட்ட சமய, விஞ்ஞானக் கருத்து வேறுபாடுகளை அவற்றின் தொடர்பு பற்றி, அவற்றின் முக்கியத்துவம் பற்றி நாம் பேசவிழைவதால் எமக்கும் தெளிவான ஒரு நல்ல முடிவு கிடைக்குமாயின் அதன் பயனோ அளப்பரியது. மூட நம்பிக்கைகளையும், குருட்டுப் பிடிவாதங்களையும் மக்கள் கைவிட வேண்டுமாயின் மக்களிடையே விஞ்ஞான மனப்பான்மை வளர வேண்டும் என்று கருதுகின்றனர் விஞ்ஞானிகள். உள்ளதை உள்ளவாறு கூறும் விஞ்ஞானிகளே மக்களில் மேம்பட்டவரென்பது பலர் கருத்து. உலகம் முழுவதும் தமது கைக்குள்தான் என்று கூறும் விஞ்ஞானிகள் சமயம் என்பது விஞ்ஞானத்துக்கு முரண்பட்டதென்றும், அது மக்களிடையே மூடநம்பிக்கைகளை வளர்ப்பதனால் அதனைக் கற்றலே பாவம் என்றும் கூறுவதில்தான் எவ்வளவு உண்மையிருக்குமோ.

நாம் ஈட்டும் அறிவு இருவகைப்பட்டது. மூளையின் வாயிலாக அறியும் அறிவு ஒன்று. உள்ளத்தின் வாயிலாக அறியும் அறிவு இன்னொன்று. மூளையினால் ஈட்டப்படுவதை அறிவியல் என்றும் உள்ளத்தினால் ஈட்டப்படுவதை உணர்வியல் என்றும் கூறுகின்றோம். பௌதிகம், இரசாயனம் முதலிய விஞ்ஞானக் கலைகளோடு தத்துவம், அறிவியலின்பாற்பட்ட இசை, நடனம் முதலிய கவின்கலைகளும், சமயமும் உளவியலின் பாற்படும். இவ்வுலகம் எவற்றால் ஆனது, அதன் இயக்கம் எத்தகையது என்ற கேள்விகட்கு விளக்கந்தர முற்படுகின்றது விஞ்ஞானம். பருப்பொருளான உலகை உள்ளதை உள்ளபடியே வைத்து ஆராய்வதே விஞ்ஞானம். பொருள்களின் வடிவம், அமைப்பு, சிறப்பியல்பு, தொடர்பு முதலியவற்றைத் தனித்தனியே ஆராய்ந்து அவற்றின் தனித்தனி உண்மைகளை ஒருங்குசேரத் தொடர்போடு இணைத்து முழுமையைக் காண

முயலும் விஞ்ஞானம் மனிதனின் உள்ளத்தில் எழும் வினாக்கட்கு முழுமையான விளக்கம் தருமோ என்றால் இல்லை. வகுத்துக் கண்டவற்றைத் தொகுத்துக் கூறலும், குழப்பமாய்த் தோன்றுவனவற்றிற்கு ஒழுங்கு காட்டியும் வருகின்றது விஞ்ஞானம். எனவே சுருங்கக் கூறின், விஞ்ஞானத்தின் நோக்கம், பலபட்டுக்கிடக்கும் பொருள்கட்கு ஓர் ஒழுங்கு முறையான பகுத்தறிவுக் கொத்த விளக்கந்தருதலே எனலாம். இவ்விளக்கம் பௌதிக விதிகட்கும், காரணகாரிய நியதிகட்கும் இணங்கப் பொருட்களின் இயல்பு, தோற்றம், வரன்முறை ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும்.

இவ்வாறு பொருட்களைப் புறநோக்காக ஆராய்ந்து அவற்றைக் காரண காரிய முறையிற் றொடர்புபடுத்தி, ஒழுங்கான ஒரு விளக்கத்தைக் கூறுவதோடு மட்டும் விஞ்ஞானம் நின்றுவிடுகின்றது. இவ்விளக்கத்துக்குப் பின் நிகழ்வதை விஞ்ஞானம் எவ்வகையிலும் விளக்கவில்லை. இவ்விளக்கத்தின் முடிவாக நாம் மனிதனை இதயமற்ற ஓர் இயந்திரமாகக் கருத இடமுண்டேயொழிய உணர்ச்சியுடைய ஓர் ஆன்மாவாக் கருத இடமில்லை. காரணம் விளங்காத இயற்கையின் சக்திகளில் இருந்து தோன்றும் பௌதிக இரசாயன இயக்கங்களின் சேர்க்கையாக மனிதன் தோன்றுவான். அவ்வாறே இவ்வுலகமும் ஆராய்ந்து வகையீடு செய்து காரணம் காணவேண்டிய எண்ணிறந்த தோற்றங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் கூட்டாகவே தோன்றும். ஆனால் நாம் இந்த விஞ்ஞான விளக்கத்தோடு மட்டும் திருப்தியடைந்து விடுவதில்லை. மனிதனை வெறும் இயந்திரமாகக் கருதினால் விஞ்ஞானவிளக்கம் போதுமானது. உணர்ச்சிமிக்க மனிதனை வரையறுக்க விஞ்ஞானத்தால் எத்துணை தானும் முடியாது. உணர்ச்சியை ஒதுக்கும் விஞ்ஞானத்தில், முழுமையில்லை என்று கூறினால் அது பொருத்தம் என்றே படும். இங்குதான் சமயம் தனது இடத்தைப் பிடித்துக் கொள்கின்றது.

பொருட்கள் எல்லாம் தம்மளவில் எவ்வாறு இருக்கின்றன என்பதை ஆராய்வதால் வாழ்க்கை அமைந்துவிடாது. அவை மனிதனின் உணர்ச்சிகளோடு எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என்ற கேள்விகட்கு விடைகாண முயல்வதிலேயே எமது நாட்டம் செல்வது கண்கூடு. இதனாலேயே விஞ்ஞானம் பகுத்தறிவுக் கொத்த விளக்கம் தந்துவிட்ட போதிலும் நாம் அவற்றின் அழகிலும், மர்மத்திலும் ஈடுபடுகின்றோம். எத்தகைய விஞ்ஞானமும் இந்த ஈடுபாட்டை அழித்துவிட முடியாது. இவ்வழிபாட்டின் வழியில் தான் கவிதை, கவின்கலை, சமயம் போன்ற உணர்வியல் கல்விகள் தோன்றியன எனலாம்.

பொதுவாகச் சமயம் கூறும் உண்மைகளை நிறுவக்கூடிய தன்மை இல்லாத காரணத்தால் அது மக்களிடம் அறியாமையையும் பிடிவாதத்தையும் வளர்க்கும் என்றனர் விஞ்ஞானிகள். கற்பனையாகவும் கடவுள் கூற்றாகவும் சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அமைத்து, அதனைப் பொதுமக்கள் அப்படியே நம்ப வேண்டும் என்ற நிலைகாரணமாகவே சமயத்தைத் தூக்கியெறிந்து பேசுகின்றனர் விஞ்ஞானம் காட்டும் விற்பன்னர்கள். விஞ்ஞானிகளின் பிரதிநிதியான பேத்திராந்து இறசல் (Bertrand Russel) என்பவர் கூறுவதை அவதானிப்போம்.

"அறியாமை என்னும் அடிப்படையிற் கடவுட் கொள்கை என்னும் மாளிகையைக் கட்டியெழுப்புவது மூடத்தனமாகும்; அது கணப்பொழுதே நிலைத்திருக்க முடியும்; இதனால் விளையும் விளைவுகள் நிச்சயம் கேடானவை; ஏனெனில், அவை புதிய உண்மைகள் இனிமேற் கண்டுபிடிக்கப்பட மாட்டாவென மக்களை நம்பச் செய்கின்றனவாதலின் என்க – Scientific Outlook.

எமது அறிவுப் பரப்பில் எத்தனையோ விடயங்கள் விஞ்ஞானத்தினால் விளக்கம் கூற முடியாத நிலையில் இருக்கின்றன. விஞ்ஞானம் அவற்றிற்கு விளக்கம் இனிமேல் கூறுமா என்பது சந்தேகமே. அப்படியாயின் எவற்றிற்கும் விளக்கம் கோரும் எமது மனத்திற்கு விஞ்ஞானம் ஏமாற்றத்தையே அளிக்கும் என்பதில் ஐயமில்லை. சமயவாதிகள் இவ் வெற்றிடங்களைத் தமது கற்பனா சக்தியால் நிரப்பி விடுவதில் நிறைவு பெறுகின்றனர். இயற்கையின் சக்திகளை மனிதன் வென்றுவிட்டான். ஏறக்குறைய வாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் விஞ்ஞானம் ஆராய்ந்து விட்டது. தொழிற்கருவிகள் படைக் கருவிகள்

மனிதன் கையில் தவழ்கின்றன. ஆனால் விடுபட்ட இடத்தை நிரப்ப முடியாமல், ஏன் என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் எம்மை அறியாமை இருளில் கைவிட்டு விடுவதால் விஞ்ஞானம் சமயவாதிகளின் கண்டனத்துக் குள்ளாகின்றது.

விஞ்ஞானம் கடவுளை விழுங்கி விடுகின்றது. கடவுளின் இடத்தில் வேறொன்றையும் வைக்கவில்லை. பகுத்தறிவுக்கு ஒத்த ஒரு புதிய உலகுக்கு மக்களை அழைத்துச் செல்ல முற்பட்டுவிட்டது விஞ்ஞானம். ஆனால் நம்பிக்கையோ, குறிக்கோளோ இல்லாமல் குழப்பமான ஒரு கொள்கையையே அது மனிதனுக்குத் தந்துள்ளது. கடவுள் என்னும் பரம் பொருளையும் அவரின் அருளாட்சியையும் புகுத்தி விட்டால் உலகில் எல்லாவற்றிற்கும் நல்ல விளக்கம் ஏற்பட்டுவிடும். இக்குறைபாடுகளை நோக்காது விஞ்ஞானிகள் விஞ்ஞானத்திற்கு முதலிடம் கொடுத்து வீம்பு பேசுகின்றனர் எனக் கண்டிப்பர் சமயவாதிகள்.

விஞ்ஞானிகள், சமயவாதிகள் இருவரும் சண்டையிட்டுக் கொள்வதனால் ஈற்றில் எந்தவித உண்மையும் அறிய முடியாதென்பர் ஒருசாரார். இவை இரண்டையும் இணைக்கும் ஒரு புத்தியக்கம் தோன்றியுள்ளது' இதனை அறிவியல் சார்ந்த மனிதப் பண்பு (Scientific Humanism) என்பர். விஞ்ஞான மனப்பான்மை வளர்ந்து வருவதனால், பகுத்தறிவுக்கு ஒவ்வாத கட்டுப்பாடுகளையும் விஞ்ஞானத்துக்கு முரணான சம்பவங்களையும் சமயம் போதிப்பது தவறு என்பது இவ்வியக்கத்தினர் கொள்கை. மனிதனின் துன்பங்களைக் காரணம் கூறமுடியாத கடவுளின் திட்டத்தில் அமைத்துக் காட்டுவதை விட்டு மனிதன் தன்னுடைய பொறுப்புக்களைத் தானே உணர்ந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிற் சமயத்தை மாற்றியமைத்தல் வேண்டும் என இவர்கள் கூறுவர். இவ்விடயம் பற்றி பேரறிஞர் ஜூலியன் ஹக்ஸ்லி (Dr. Julian Huxley) என்பவர் கூறுவதை ஈண்டு ஆராய்வோம்.

'மனிதப் பற்றுள்ளவர் விஞ்ஞான நெறியை எவ்வளவு பின்பற்றுபவராக இருப்பினும், வாழ்க்கையில் ஒருவிதமான சமய மனப்பான்மையுடையவராக இருக்கலாம். மனித அறிவுக்கு அப்பாற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை எனக்கருதும் இலட்சியங்களை அவர் கொண்டிருக்கலாம். உண்மையான மதப்பற்றோடு கடைப்பிடிக்கும் உயர்ந்த நோக்கங்களையும் கொண்டிருக்கலாம். சமயக் கொள்கைகள் கோட்பாடுகள் என்பவற்றிற்கு நிகராக, தமது நம்பிக்கைகட்கும் ஆளுமைக்கும் (Personality) ஆதாரமாக ஓர் அறிவுச்சட்டத்தை அவர் கொண்டிருத்தல் வேண்டும். மனித நாகரிகம், மனித மதிப்பு, அழகு, காதல், நுகர்ச்சி உள்ளமைதி, இணக்கம், பெருந்தன்மையான பேச்சு இவையெல்லாம் தம்மளவிலே தனிமதிப்புடையது என்பது அவருக்கு நன்கு தெரியும்" – Humanism -

சமயமானது மக்களிடையே காணப்படும் மற்றைய செயற்பண்புகளைப் போன்று ஒரு செயற்பண்பு எனக் கருதுகின்றனர் இன்னொரு சாரார். எனவே அது தேவையா தேவையில்லையா என வாதிப்பதையொத்தது அது.

"உளவியல், மானிடவியல் ஆகிய துறைகளில் நிகழ்த்திய ஆராய்ச்சிகளின் பயனாக சமயம் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டதொன்றன்று என்பதும், அது மக்கள் இயற்கையில் அமைந்த செயற்பண்பு என்பதும் தெளிவாகின்றது. அது சிலவேளைகளில் தனி மனிதனின் அல்லது சமூகத்தின் முன்னேற்றத்தைத் தடைசெய்வதாகவும் இருக்கின்றது. இவ்வாறு இது விசித்திரமானதும் சிக்கலானதுமான ஒரு மனித வியற்கையாக உள்ளது. போர், காதல் என்பனவற்றையோ, சட்டம், இலக்கியம் என்பவற்றையோ ஒப்ப மனிதவியற்கையில் அமைந்துள்ள இச்செயற்பண்பு அவற்றிலும் பார்க்க எவ்வகையிலும் வேறானது அன்று"

என ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) என்பவர் தமது நூலில் சமயம் செயற்பண்பு என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

மேற்கூறிய காரணங்களைவிட மனிதன் வாழும் சூழலும் அவனது சமயப்பற்றைக் கட்டியெழுப்ப உதவும் போலவும் தோன்றுகின்றது. சில சூழ்நிலை சமயப்பற்றை ஊட்டிவளர்க்க உதவும். மற்றச் சூழ்நிலை சமயத்தைப் பற்றிச் சிந்திக்கவே அவனுக்கு அவகாசம் அளிப்பதில்லை. உதாரணமாக நாட்டுப்புற வாழ்க்கையும்

விவசாயத் தொழிலும் ஒருவனுக்குத் தெய்வ நம்பிக்கையை இலகுவில் ஊட்டும். அவனுக்குச் சமயம் வாழ்வதொன்றாகவும் மெய்யானதொன்றாகவும் இருக்கின்றது. ஆனால் நகர வாழ்க்கை இதற்கு எதிர்மாறாகவே இருக்கின்றது. சமுதாய அமைப்பினால் குழப்பப்பட்ட நிலையில் அதில் சுழன்று திரியும் நகர மனிதன் இயற்கையோடு தொடர்புபட நேரம் கிடையாமல் உள்ளபோது சமயம் பற்றிச் சிந்திக்க ஒரு சிறிதும் அவகாசம் கிடைப்பதில்லை. அவனது தொடர்பு முழுக்க மனித இயற்கையோடேயே அமைகின்றது.

"எமது அறிவுக்கு எட்டாத, எம்மால் எவ்வகையிலும் விளக்கங் கொடுக்க முடியாத அந்த மறைபொருளோ மிகவழகிய பொருளாக உள்ளது. அதுவே உண்மையான அழகியற் கலைகட்கும் ஊற்றாக உள்ளது. இந்த உணர்வு எவனுக்கு இல்லையோ, எவன் இதை எண்ணிவியந்து, பக்திக்கடலில் மூழ்கி நிற்க மாட்டானோ, அவன் இருந்தும் இறந்தவனேயாவான். கண்ணிருந்தும் குருடனேயாவான். வாழ்க்கையில் இந்த மர்மத்தைக் கூர்ந்தறியும் அறிவு ஒருவித அச்சத்தோடு கலந்துள்ளபோதும், அது சமயத்துக்கு வித்தாக அமைகின்றது. எம்மூளையினால் ஊடுருவ முடியாததொன்று உண்மையில் உள்ளதென்றும், மிகவுயர்ந்த ஞானமாகவும், ஒளியாகவும் எழிலாகவும் அது வெளிப்படுகின்றதென்றும், அவ்வித வெளிப்பாட்டின் தொடக்கநிலையில் உள்ள திருத்தமற்ற தோற்றப்பாடுகளையே எமது மந்த சக்திகளினால் அறிதல்கூடும் என்றும், அறியும் அறிவே.. உணர்வே... உண்மையான சமயவுணர்வின் கருவாகவுள்ளது. இவ்வண்ணம் கருதும்போது சமயப்பற்றுமிக்க மக்கள் வரிசையில் நானும் இடம் பெறுவேன்."

இவ்வாறு அறிவுலகமேதை ஐன்ஸ்டீன் I Believe என்னும் நூலில் குறிப்பிடுவது எமக்குச் சமயம் என்றால் என்ன என்று அறிய ஓர் முதற்படியாக அமைகின்றது.

இதுவரை கூறிய சமயம், விஞ்ஞானம் பற்றிய வாதங்களைத் தொகுத்துக் கூறின் மனிதனைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் முழுமையான அறிவைப் பெறவேண்டின் அறிவியற் கலைகளும், உணர்வியற் கலைகளும் ஒருசேர கற்கப்படவேண்டும் என்பதாம். அதாவது மூளையாற் பெறும் அறிவும் இதயத்தாற் பெறும் உணர்வும் இணைந்தியங்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் விஞ்ஞானம், சமயம், தத்துவம், கவின்கலை ஆகியவற்றின் செம்மையான ஆராய்ச்சி முடிவுகளை ஒருசேரத் தொகுத்து அறியும்போதுதான் நாம் உண்மையான உலகைக் காணமுடிகின்றது. இத்தொகுப்பறிவே மனிதனுக்கும் உலகுக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்கும். உலகத்தைப் பலகூறு செய்து ஆராயும் விஞ்ஞானம் பலதுறைகளிலும் ஆற்றிய ஆராய்ச்சி முடிவுகளை வைத்து ஒருமை காண முயன்று வருகின்றது. மனிதனை மையமாக வைத்தே இவ்வாய்வு நடைபெறும். அதேவேளையில் சமயம், இலக்கியம், அறிவியல் போன்ற துறைகள் வெகுவாக முன்னேறி மனிதனுக்குக் கிட்ட வந்து கொண்டிருக்கின்றன.

எனவே அறிவியலும் உணர்வியலும் தம்முட் கலந்து வருங்காலத்தில் செம்மையான ஒரு தத்துவம் உருவாகும் என எதிர்பார்க்கலாம். அத்தகைய முழுமைத் தன்மை வாய்ந்த தத்துவம் உருவாகுங்கால், விஞ்ஞானமும் சமயமும் தம்முள் முரண்பாடின்றி ஒன்றின் குறையை ஒன்று நிரப்புவதாக இருந்து ஒத்துவாழும் என்பதில் ஐயம் இல்லை என்பது எனது கருத்து.

❋ ❋ ❋





# காப்பிய ஆசிரியர் வெற்றிவேற் புலவர் வரலாறு

பழம் பெரும் புகழ்வாய்ந்த பண்பில் சிறந்த செந்தமிழ்ப் புலவர் பலர் பிறந்திலங்கிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓர் பகுதியாகிய பச்சிலைப்பள்ளியென்னும் பதிக்கணிந்தாயமைந்துள்ள குடாரப்பு என்னும் சிற்றூரிலே வாழ்ந்துவந்த சைவத்தமிழ்ப் பெரியாரும், கண்ணகி வழிபாடுபாசனை கைவந்தவருமாகிய கந்தரென்பவர், தன் இல்லற மனையாளோடு கண்ணகையாரை நினைந்து நெடுங்கால விரதமனுட்டித்த தவப்பயனால் வந்து அவதரித்த சுந்தரப் புதல்வரே வெற்றிவேலன்.

கந்தர் தம் மனமகிழக் காசினியிற் தோற்றிய மைந்தன் வெற்றிவேலன் தவப்பயனாய் வந்துதித்த தனையன் ஆதலின் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஐயாண்டகவையில் ஆசானிடம் சென்று அரி ஓம் நமவெனவே, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலாய இலக்கிய இலக்கண நூல்களைப் பயின்று புலமையுற்றுயர்ந்தான்.

“கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக” என்ற வாய்மொழிக் கிணங்கக் கலைச்சிறப்பும், நடுநிலையும் , கடவுட்பக்தியும், காண்டற்கரிய ஒழுக்கம் உடைமையும், கட்டழகும், வீரமும் ஆகிய அனைத்தும் அவரிடத்தேயொருங்கமைந்து திகழ்ந்தன. அதனால் அறிஞர்கள் பலரும், அறிந்தவர் பலரும் அவரைப் புகழ்ந்து பாராட்டினர்.

இவ்வாறு இவர் ஒரு சகலோத்தமனாகச் சகம் போற்றும் சக்திவானாகத் திகழ்வது கண்ட சிற்றறிவு படைத்த புல்லர் சிலரிடத்தே பொறாமை, என்னும் பொல்லாத்தீ கொழுந்து விட்டுப் புகைத்தெரிந்தது. தீ நெஞ்சம் படைத்த தீய அக்கொடியவர் பலர் கூடித் திட்டமிட்டுப் பொய் வழக்கொன்றை நீதிமன்றத்திற் சமர்ப்பித்து விசாரணைக்குட்படுத்தினர். விசாரணையின் போது திட்டமிட்டுத் தீவினை நினைந்த அப்புலவர்கள் புகன்று பொய்ச்சாட்சிகளின் ஆதாரத்தினால் அருள் நிறை மனத்தார் வெற்றி வேலனுக்குப் பதினான்கு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

முன்செய்த தீவினையின் முடிவு போலும் என்று கருதிய வெற்றிவேலன் எவ்வித கவலையு மில்லாது “இது என் தலைவிதி நீவிர் ஒருவருங் கவலையுறாதீர் நான் போய்வருகிறேனெ”ன்று சென்று சிறைச்சாலையுற்றார்.

சிறைச்சாலை தவச்சாலையாக அவருக்கு மிளிர்ந்தது. இரவு பகலாக அவர் அச்சிறைச்சாலையில் இருந்து தன் குலதெய்வமாகிய கண்ணகியை நினைந்து நெஞ்சுருகிக் கசிந்து கண்ணீர் சிந்தித் தியானித்துத் தாயே இது தர்மந்தானா? நான் தகுதியுடைய குற்றவாளிதானா? இது நீதியானதா? பாண்டியன் செங்கோல் கோடினானென்று பதைபதைத்தோடிப் பழிக்குப்பழியாக அன்னவனைக் கொன்று அழலூட்டி மதுரை மாநகரத்தையே தீயிட்டழித்த தெய்வமே! இது சரிதானா? நான் நிரபராதி என்று உண்மையை இவ்வுலகம் உணரவேண்டாமா? நான் உன் குமாரன் அல்லவா? சேய்வருந்துவதைக் கண்டும் இரங்காத தாயும் உண்டா? தயாபரி! எல்லாம் உன்செய லென்றுணரப் பெற்றேன். வேறொன்று மறியேன் என்று தியானித் திருந்து கண்ணகை யம்மனைப் பதிகத் தலைவி யாகக் கொண்டு ஓர் பதிகம் பாடியருளினார். இதற்கிடையில் பதின்மூன்று நாட்கள் கடந்து பதினான்காம் நாள் ஆகிவிட்டது.

தேவியருளின் காரணத்தால் சிறைக்கூடக் கதவு தானே திறக்கப்பட்டது. சிறைக்காவலர்கள் பல முறையாக அக்கதவைப் பூட்டமுயன்றும், கதவை இழுத்து மூடவோ, பூட்டவோ முடியவில்லை. இச் செய்தியை மேலதிகாரிக்குச் சென்று அறிவித்தனர். அதிகாரி உடனே அவ்விடம் வந்து நீர் குற்றவாளி அல்ல என்பதை நாமறிந்து கொண்டோம். நீர் உம்முடைய வீட்டுக்குப் போகலாமென விடுதலை வழங்கினார். அன்னையாங் கண்ணகையிடத்தே அன்பும் பக்தியும் மிகுந்த பத்தினித் தொண்டராகிய வெற்றி வேலர் அற்புதமும், அதிசயமும் கொண்டவராய் அளவிலா ஆனந்தத்துடன் வீடு வந்து சேர்ந்தார்.

வெற்றிவேலர் விடுதலை பெற்று வீடுவந்து விட்டாரென்றதும் கோளுரைத்துக் கோடேற்றிய கொடியவர் நாணித் தலை கவிழ்ந்தனர். நாவன்மை இழந்தனர், வாழ்விழந்தனராகப் பலவகைத் துன்பங்கட்களாயினர். இஃது நிற்க!

அம்பாளின் அருட்கடலிற் படிந்த அன்பராம் வெற்றிவேற்புலவர் அநுதினமும் அம்பாளைப் பூசித்துத் தியானித்து வழிபட்டு வருவாராயினர். ஒருநாள் அவர் சொப்பனத்திலே கண்ணகையார் கையிற் பிடித்த சிலம்போடும், கைப்பிரம்போடும், வேப்பம் பத்திரியோடும் தோன்றி "நீயெனது வரலாற்றைப்பாடு" என அருளிச் செய்து மறைந்தார். வெற்றி வேற்புலவர் கனவினின்றும் விழித்தார். கண்கள் நீர் சொரிந்தன, தேகம் பதறியதோடு புளகாங்கிதம் கொண்டது, நாத்தடுமாறி உரை குழறியது , கோவில் மணி ஒலித்தது, கோழிகள் கூவின, மயில்கள் அகவின. வைகறை யாதலின் சிறிது நேரத்தில் பொழுது புலர்ந்தது. புலவரின் கவலையறிந்தவர்கள் எல்லோரும் கண்ணகையாரின் திருவருளைவியந்து அத்திருத் தொண்டை நிறைவேற்றுமாறு வெற்றிவேற் புலவரை வேண்டி அவரின் தொண்டுக்குற்சாக மளித்தனர்.

அவருமவ்வாறே செய்யக்கருதி உலக மாதாவாகிய உத்தமியாங் கண்ணகையை வழிபட்டுத் தியானித்திருத்திப் பாடத்துணிந்து

"குணமான கண்ணகையைக் கோவலனார் தாம் மணஞ் செய் மணமாலை ....." என்று அடியெடுத்துப் பாடியருளினார்.

இவ்வாறு வெற்றிவேற் புலவர் பாடி அருளிய சிலப்பதிகாரக் கதையே இன்று சிலம்பு கூறல் எனப் பெயர் பெற்றுத் திகழ்கின்றது.

கற்பரசியாங் கண்ணகைத் தாயாரின் கட்டளையைச் சிரமேற் கொண்டு அவரின் திருவருளினால் அன்னாரின் சரித்திரத்தைப் பாடியருளிய வெற்றிவேற்புலவரவர் உலக மாதாவாகிய அம்பாளின் திருவடி நிழலிற் சேர்ந்தருளினார் . அவர் பூதவுடல் மறைந்த போதும் புகழுடம்பு இன்று மட்டுமல்ல, என்றும் நிலைத்து நின்று நிலவுவதாக.

வெற்றிவேற் புலவர் திருவடி வாழ்க;

* * *



# வெற்றிவேற் புலவர் பாடியருளிய
# சிலம்பு கூறல் காவியம்

*(வசனச் சுருக்கம்)*

*தொகுப்பு - அரியான் பொய்கை*

## முன்னுரை

**ப**ண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல அவற்றுள் ஐம்பெரும் காப்பியங்களாய் அன்னையாந் தமிழ் மாதின் அணிகலன்களாய்த் திகழ்வனவற்றுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் செந்தமிழ் நாட்டிற் பிறந்த செல்வி கற்புக்கணலாங் கண்ணகையாரின் சரித்திரத்தை விரித்து உரைத்திருப்பதை இலக்கியங் கண்ட வித்தகர் யாவருமறிவர் அன்றியும்,

"புலவர்க்கு வெண்பா புலி" என்பார்கள். அத்தகைய வெண்பாவிற் புகழ் பெற்ற புகழேந்திப் புலவரும், யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய இனிய செந்தமிழ் நடையில் கதாரூபமாகக் கண்ணகியாரின் கதையைக் கூறியிருப்பதும் காணற்குரிய ஒன்றாகும். இத்தகைய புகழேந்தியாரும், சிலப்பதிகாரத்தைப் பாடிய இராசகுமாரனாம் இளந்துறவி இளங்கோவடிகளும் தமிழ் நாடாகிய தாய்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆனால்.

ஈழத்துப் பெரும் புலவர்களாய் இனிய செந்தமிழிலே யாவரும் மிக இலகுவாகக் கற்றுணரக் கூடிய கதை வடிவிலே வெண்பா , விருத்தப்பா – கலிப்பா, ஆசிரியப்பா ஆகிய பாடல்களினால் அந்தாதியாகப் பாடிய பாடல்கள் ஏட்டுச் சுவடிகளாய் போற்றுவாரற்றுப் புகழற்று மறைந்தழிந்து போகும் நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பாடல்களைத் தேர்ந்தெடுப்பது அச்சுவாகனமேற்றி இவற்றுக்குப் புத்துயிர் கொடுத்துப் போற்றிப் பாதுகாத்தளிக்கும் தமிழ்த்தொண்டர்கள், தமிழைக் காப்பவர்கள், தமிழ்த்தியாகிகள் என்று தான் முன்வந்து இப்பணியைப் புரிவார்களோ அறியேன்.

இலங்கை தீவின் கீழ்மாகாணத்தைச் சேர்ந்த நைனாப்பணிக்கன் என்பவரும், வடமாகாணத்தைச் சேர்ந்த வெற்றிவேலன் என்பவரும், காங்கேயப்புலவரும் பாடியுதவிய சிலப்பதிகாரக் கதைகள்– கற்புக்கரசி கண்ணகி தேவியாரைக் கற்புடைத் தெய்வம் என்ற மட்டில் மாத்திரமன்றி அக்கண்ணகித் தேவி ஆதிபராசக்தியின் அவதார தோற்றமென்றும் அவன் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி சகல சீவராசிகளையும் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்து பரிபக்குவப்படுத்திப் பரமபதியாகிய இறைவன் திருவடிகளிற் சேர்த்து வீட்டின் மருளும் அருட்சக்தி யாவாளென்றும் விரித்துக் கூறுகின்றன. மேலும்,

வெற்றிவேற் புலவர் (வெற்றிவேலன்) பாடியபாடல் "சிலப்பதிகாரக் கதை" இதைச் சிலம்புகூறல் என்றுஞ் சொல்லுவதுண்டு. இப்பாடலை இலங்கையின் வடபகுதிகளிலுள்ள கண்ணகையம்மன் கோவில்களில் பொங்கல் காலமாகிய விசேட தினங்களில் விரதமாகவிருந்து விளக்கேற்றிய திங்கட்கிழமை தொடக்கம் பொங்கற் பூசைத்தினமாகிய திங்கட்கிழமையீறாகவுள்ள எட்டுத் தினங்களிலும் பக்திசிரத்தையோடு படிப்பவர்கள் படிக்கக் கேட்பவர்களும் சூழவிருந்து செவிப்புலன் வழிப்படுத்தி அதன் கண்ணுள்ள சொற்சுவை, பொருட்சுவை, வருணனைகள், காதல், வீரம், சோகம், சிருங்காரம், பக்திப்பரவசம் ஆகிய நவரசங்களையும் உணர்ந்து வசமழிந்து அற்புதமெய்தியவர்களாகவும், அதிசயமடைபவர்களாகவும், ஆனந்த பரவசமுற்று மனங்கசிந்துருகிக் கண்ணீர் வடிப்பவர்களாகவும் இருந்து கண்ணகி தேவியாரின் கருணைக் காளாகித் திகழ்வதை நாம் இன்றும் நேரிற் காணலாம்.


இத்தகைய பொற்புகு பாடலாங் கற்பரசியின் கதைகளில் சிலப்பதிகாரக் காப்பியத்திற் காணமுடியாத தெய்வீகத் தன்மைகள் விளங்கும் திவ்யவிச் செய்திகள் பல திகழ்வதைக் கண்ட மலர் வெளியீட்டுக் கழகத்தார் தமியேனை அதன் கண்ணுள்ள சில முக்கியமான பகுதிகளைச் சுருக்கி அவற்றினைத் தொகுத் தளிக்குமாறு கேட்டுக் கொண்ட அவர்கள் கட்டளைக் கமைந்து இதனை எழுத முன்வந்துள்ளேன்.

அறிவாற்றல் மிக்க அருந்தமிழ் வாணர்கள் அடியேனில் தொகுப்புரையில் குற்றங் குறைகளிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது குணத்தை மேற்கோள்வரென்ற நம்பிக்கையினாலும் அம்பாளின் அருட்பெருஞ் சரித்திரத்தைச் சொல்வதால் அப்பேறு அடியேனை அப்பராசக்தியின் அருளிற்றிளைக்க வைக்குமென்ற குறிக்கோளினால் இதனை எழுதுகிறேன்.

*"அம்பாளின் அருள் நோக்கு அருகிருந்துதவுவதாக"*

**வணக்கம்**

* * *







# சிலம்பு கூறல் காவியம்

இக்கதையைக் கோவலனார் கதை என்றும் கூறுவதுண்டு. இச்சரித்திர வரலாற்றுக் காப்பியம் கடவுள் வணக்கம், பாயிரம் , பாண்டியன் அரசிருக்கை, கண்ணகை திருவவதாரம், கோவலரவதாரம், திருக்கரத்தமாதல், தூரியோட்டம், கடலோட்டம், வெடியரசன் போர், வீரநாரணன் போர், திருக்கல்யாணக்கதை, அரங்கேற்று காதை, கோவலரைப் பெண்ணுக்கு மறித்தகதை, சிலம்புகூறல், உயிர்மீட்சி, வழக்குரை, மதுரைத் தகனம், குளிர்ச்சி ஆகிய பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள்,

*கடவுள் வணக்கம், வெண்பா*

*குணமான கண்ணகையைக் கோவலனார் தான்*
*மணஞ்செய் ... மணமாலை தன்னை வகுத்துரைக்கக்*
*கணபதிதன் ... பாதார விந்தம் பல நாளும்*
*மனமதிலுன்னிக்... காதாரக் கைதொழு வோங்காண்.*

என்று அடியெடுத்துத் தொடங்கித் தமது இட்டதெய்வங்களாகிய விநாயகர், சிவன், உமை, கண்ணகி, வைரவக் கடவுள், முருகக் கடவுள், மாரி, காத்தவராயன், நாச்சிமார் முதலிய தெய்வங்களை வேண்டுதல் செய்துதான் எடுத்து கொண்ட முயற்சி இனிது நிறைவேறும் பொருட்டு துதிக்கின்றார்.

*பாயிரம்*

வெற்றிவேற்புலவர் பாடியருளிய இக்காப்பியத்திற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை வாசகராகிய கதிர்காமர் அவர்களின் குமாரனாகிய சங்கரனென்பவர், பாயிரம் பாடி வழங்கியுள்ளாரென்பது பாடலிற் காணக்கிடக்கின்றது.

அன்னார் இந்நூலாசிரியர், வரலாற்றுச் சிறப்புக்களையும், நூல்வரலாற்றுச் சுருக்கத்தையும், அதன் சிறப்பையும் எடுத்துக் காட்டும் போதே இந்நூலின் பெருமையை யாவரும் உணரக்கூடியதாக விளங்குகின்றது.

## நூல்

## பாண்டியன் அரசிருக்கை

கடலிலே படிந்த முகில்கள் நீர்முகந்து சூற்கொண்டு கார்மேகமாகி மேலெழுந்து பொழிகின்ற மழைநீர் கால்வாய்களாகிப் பாய்ந்து ஒன்று கூடிச் சிற்றாறாகிச் சிற்றாறுகள் பல சேர்ந்து பெருநதியாகி கலையறியும் புகழ் வைகையாகிப் பிரவாகித்து மலைபடுதிரவியங்கள் காடுபடு திரவியங்களோடு மலைவாசிகளாகிய குறும்பர்களின் குடிசைகளையும் வில்லம்பு முதலியவற்றையும் வாரிக் கொண்டு வந்து நீர்வளம் பரப்பும் நாடு வைகைநாடாகிய பாண்டிய நாடாகும். சொக்கநாத சுவாமியின் திரு விளையாடல்களால் திருவருள் பெற்று வாழும் அப்பாண்டி மண்டலத்தில் தலைநகராகவும் , இராசதானியாகவும் திகழ்ந்தது மதுரை மாநகரம். அம்மதுரை மாநகரத்தில் முடியுடை மூவேந்தர்களுள் ஒரு சாராராகிய பாண்டிய மன்னர் பன்னெடுங்காலமாகப் படிபுரந்திருந்தனர்.

பதினாறாயிரம் பாண்டியர்கள் என்று பாருலகம் போற்றும் அப்பாண்டியரின் புகழ் பகருந்தரமன்று. இந்திரன் முடிமேல் வளை எறிந்தும், குலமுகிற் கூட்டங்களை விலங்கிட்டுச் சிறைப்படுத்தியும், கடல் சுவற அடல் வேலெறிந்தும், இமயத்திற் சென்றுதம் கயற்கொடி பொறித்தும், முத்தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழை வளர்த்தும், பெரும்புகழீட்டிய பெருமையை விரிக்கிற் பெருகும். அத்தகைய புகழும், வீரமும், கல்வியும், செல்வமும், படைபலமும் ஆகிய அனைத்தும் ஒருங்கேயமைந்த பாண்டியமன்னர் பரம்பரையிற் தோன்றிய தோன்றலே பாண்டியன் நெடுஞ்செழியன். சக்கரவாளக் கிரிபோலச் சுற்றி விளங்கா நின்ற மதிலாற் சூழப்பெற்று உயர்ந்த மாடகூடங்களாற் பொலிவுற்று மகரதோரணங்கள் அழகுசெய்கின்ற மதுரைப்பதியிலே இருந்து சொக்கநாதப் பெருமானின் திருவருள் நலத்தால் குறையொன்றுமின்றிக் கோல் கோடாது செங்கோல் செலுத்திப் பரிபாலித்து வந்தான்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் இல்லற மனைவியாகிய கோப்பெருந்தேவியோடு கூடி இன்புற்றுப் பன்நெடு நாட்களாகியும், தன்குலம் விளங்கக் குலக்கொழுந்தாகிய குழந்தையொன்றுங் கிடையாததாற் கவலைகூர்ந்து தன் மனைவியாகிய இராசமாதேவியைப் பார்த்துப் பெண்ணே! நாம் படிபுரந்தென்ன? பண்பிற் சிறந்தென்ன? பகருதற்குரிய தான தருமங்களைப் புரிந்தென்ன? செல்வமிருந்தென்ன? சீர் இருந்தென்ன? எமது கோல் விளங்கக் குலம் விளங்க, எங்கள் பேர் விளங்க எங்களுக்குரிய ஈமக்கடன்களைக் கழிக்கத் தானும் புத்திரப்பேறில்லையே, எங்கள் முற்றத்தில் குழந்தைகளின் சிற்றடியைக் காணும் சீரிய சிறப்பில்லாது போய்விட்டதேயென்று தன் கவலையை எடுத்துக் கூறினான். அதைக் கேட்ட கோப்பெருந்தேவி நாங்கள் செய்ய வேண்டியதாகிய முப்பத்திரண்டறங் களையும் முட்டின்றிச் செய்தும், செல்வங்களுள் முதன்மை பெற்றிலங்கும் மக்கட் செல்வம் கிடையாதிருப்பதன் காரணம் யாதோ? யாம் மட்டுமல்ல; இன்னும் எத்தனைபேர் இவ்வுலகிற் புத்திரப்பாக்கியம் இல்லாது புலம்பித் திரிகின்றார்கள். இதற்குரிய பரிகாரம் இன்னதென இயம்புதல் வேண்டும் என்று கேட்டாள்.

அதனைக் கேட்ட மன்னன், "மானே! இளம் வயதினையுடைய காளையர்களும், கன்னியர்களும் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டு கலந்து உண்டாகிய கற்பத்தை வசை வந்து விடுமேயென்று சிதைப்பவர்கள், வேறு எக்காரணத்தினாலேனும் சிசுக்கொலை செய்பவர்கள், பசுக்கொலை புரிபவர்கள், கோவில் களிலுள்ள திருவுருவங்களைத் திருடுபவர்கள், சிதைப்பவர்கள் போன்ற பாவிகட்குப் புத்திரபாக்கியம் கிடைக்கா தென்று நீதி சாத்திரங்கள் கூறுகின்றன" என்று கூறி, அதற்குரிய காரணங்களையும், காரணங்கள் ஒவ்வொன்றுக்குமுரிய பிராயச்சித்தங்களையும் விரிவாக எடுத்துக்கூறியதுமன்றி, வேறுமோர் சரித்திர வரலாற்றையும் விரித்துக் கூறுகின்றான்.

முன்னொரு காலத்திற் கார் முகில் வண்ணனாகிய கண்ணபிரான் புத்திரப்பேற்றின் பொருட்டு, முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை நினைத்து நெடுங் காலம் தவஞ் செய்து கொண்டிருந்தார். அப்போது ஆரமுதற் பொருளாகிய சிவபெருமான் உமாதேவி சமேதராக இடபவாகனத்திற் தோன்றி ஒரு புத்திரனைத் தந்தருளினோமெனத்

திருவாய் மலர்ந்தருளினார். கண்ணபிரான் அந்நேரத்தில் சக்தியாகிய உமையம்மையாரைப் பணிந்து வணங்காத காரணத்தினால் கோபங்கொண்ட பராசக்தி பரந்தாமனைப் பார்த்து 'பரமபதியாகிய எமதிறைவரது வாக்கின் பிரகாரம் வந்தவதரிக்கின்ற உனது குமாரன் அவரது நெற்றிக் கண்ணினால் எரிந்தழிந்து போகக் கடவது' என்று சாபமிட்டு மறைந்தார். இவ்வாறு தேவியிட்ட சாபத்தால் திகைப்படைந்த திருமால் அச்சாப விமோசனத்தின் பொருட்டு சிவன், உமை, முருகன் ஆகிய சோமஸ்கந்த முகூர்த்த மூர்த்தியைப் பிரதிட்டை செய்து பூசை வழிபாடாற்றி வருங்காலத்தில் உமாமகேஸ்வரன் அவர் முன் தோன்றி நாம் கூறிய படி புத்திரன் பிறந்தழிந்து மீண்டும் உயிர்பெற்று வாழ்வான் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அவ்வாறே திருமாலின் குமாரனாகிய மன்மதன் பிறந்து வளர்ந்து, தேவர்களின் தூண்டுதலினால் சென்று யோகத்திலிருந்த சிவபிரான் மீது தன் மலர்ப்பாதங்களை ஏவி அவரின் அக்கினிக் கண்களால் வெந்து சாம்பலாயினான். பின்னர் மன்மதன் மனைவியாகிய 'ரதி' சிவபெருமான் மலையரசன் மகளாய் அவதரித்த பார்வதியாரைத் திருமணம் செய்து திரும்பிய போது, அவர்கள் முன்னிலையில் சென்று தன் கணவரின் பரிதாப மரணத்தைக் கூறிப் புலம்பி நின்று மாங்கல்யப் பிச்சை கேட்டு மன்மதனை மீட்டுப் பெற்றாள் என்றும், சக்தியை வழிபடாது சிவத்தையே வணங்கிய பிருங்கு முனிவர், சக்தியின் சாபத்தால் துன்பமுற்றென் புருகுவானாரென்றும், அருட்சக்தியாகிய அம்மையப்பனின் அருட்பிர வாகங்களை எல்லாமெடுத்துக் கூறி, அவர்களால் ஆகாத தொன்றில்லை ஆதலின் அவர்களை நோக்கித் தவம் செய்து நாமும் நமக்கோர் நன்மகப்பேற்றை அடைவோமெனத் திட்டமிட்டு முயல்வானாயினன்.

## கண்ணகை அம்மன் திருவவதாரம்

மகப்பேற்றைப் பெற வேண்டுமென்று மாபெருந் தவஞ் செய்யத் துணிந்தமாறன் மங்களகரம் பொருந்திய சுபதினத்திலே மாமலர்க் கொன்றை, தும்பை, மதிசூடி வேணியராகிய சொக்கலிங்கப் பெருமான் வீற்றிருந் தருளுகின்ற மகிமை விளங்கும் திருவாலவாயின் கண் சென்று தரிசித்து, மதுரை மீனாட்சியம்மையாரையும் பணிந்து திருவாலவாயின் ஒரு புறத்தில் தவச்சாலையொன்றை அமைப்பித்தான். இவ்வாறு ஏவலாளர்களினால் அமைக்கப்பட்ட தவச்சாலையில் எழில் மிகுந்திலங்குந் திருநீறு அணிந்து உருத்திராக்க மணிவடம் பூண்டு தவக்கோலம் கொண்ட பாண்டியன், பரம்பொருளாகிய சிவ பெருமானையும், உலகமாதாவாகிய உமையம்மை யாரையும் ஆவாகனம் செய்து உரிய முறைப்படி பூசித்து வணங்கி அவர்களிருவரையும் அகத்திற் கொண்டு பரமவஞ்செழுத்தாகிய பஞ்சாட் சரத்தைத் தியானித்து சித்திரப் பாவை போற் பத்மாசனத்திலிருந்து ஐம்புலன்களையுமடக்கி அருந்தவம் செய்தான். ஆண்டுகள் பல கடந்தன.

கருணையங் கடலாகிய கண்ணுதற் பெருமான் கைதவன் செய்தருளிய மெய்த்தவங் கண்டு மகிழ்ந்து அன்னவனுக்கருள் செய்யத் திருவுளங் கொண்டு அருட்சக்தியாகிய அம்மையார் இடப்பாக மேவ இடபாரூடராகத் தோன்றியருளினார். இவ்வாறு தனது முன்னிலையிற் காட்சி கொடுத்தருளிய கறைமிடற்றெம் அண்ணலைத் தன் கண்முன் கண்டபாண்டியன் தன்னுள்ளம் குளிரக் கண்குளிர, ஆனந்தப் பரவ சத்தினால் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்து நின்று,

*"கற்புருவச் செப்புமுலைச் – கன்னியொரு பங்கினனே*
*பொற்புருவ மதனனைப் – பொன்ற விழித்திட்டவனே*
*திட்டமுறு சங்கரனே – தில்லைவன மீது நின்று*
*எட்ட இயலாத உன்னை – இப்பிறப்பிற் கண்டேனே"*

என்று போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினன், வாழ்த்தி வணங்கிய மாறன் முகத்தைப் பார்த்தருளிய மாதுபங்கர் 'மன்னவனே நீ இயற்றிய மாபெருந்தவத்தால் மனமகிழ்ந்திங்கெழுந்தருளினோம். வேண்டுவது உரைப்பாயாக' என வினவியருளினார். அப்போது "ஐயனே! எனக்கோர் புத்திரப்பேறீந்தருள்க" என இரந்து நின்றான் பாண்டியன். "அதற்கு உனக்கோர் பெண்மகவைத் தந்தேன்" என்று திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கைக் கேட்டு அகமும் முகமும் மலர்ந்து, அரன்றன் பொற்பாதமிறைஞ்சி அம்மையைத் தொழுது துதிக்கும் சமயத்தில் நித்திய கன்னிகையாகிய உத்தமியாமுலக மாதாவின் முத்தணி மார்பகத்திட்ட கச்சு காற்றினாற் சிறிது விலகியது.

*விட்ட வீடத் தன்னியத்தை மீனவனுங்கண்டனனே*
*வட்டச் செப்போ நல்லமிர்தம் வைத்த வன்னப்*
*பொற்குடமோ*
*இட்டமதன் பூமுடியோ.. யானைக்கோடோ இளநீரோ*
*பட்டமிதற் கென்னவென்று.. பட்சமுற்றுச் சிரித்தனனே.*

இவ்வாறு தன்வினை தன்னையே விடாது, சூழுங் காரணத்தால், தற்பரியின் இடது தன்னியத்தைக் கண்டு சிற்றாசை கொண்டு சிரித்தான். சிறிய சிரிப்பினால் சிறியராம் அவுணர்தம் முப்புரமெரித்த சிவன்தேவி கண்களில் தீச்சுவாலை தோன்றியது. அற்பனாகிய பாண்டியன் செய்த தவறின் காரணமாக ஆரணிமாமன்னை கண்ணிற் தோன்றிய அனல் இவ்வகிலமெலாம் எரித்து விடுமென்றுணர்ந்த எம் இறைவன் "இக்கோபந் தணிந்தருள்க" எனக் கூறித் தணித்தருளினார். அந்நேரத்தில் அங்கெழுந்த அக்கினிப் பிழம்பானது அடங்கி இரண்டு தீப் பொறிகளாகி அருகே நின்ற மாமரத்தின் கண் சென்று தங்கி மலர்களாயின.

இவை இவ்வாறாக, மாதுமையாள் மாறனைப் பார்த்து "அறிதிரண்ட முலைமிசை நீ ஆசை கொண்டு சிரித்ததினால் குறி திரண்ட கூடலுடன் கொன்றிடுவேன் உன்னை நான்" என்று வஞ்சினங் கூறி, "என் கணவன் உனக்களித்த பிள்ளையினால் நீயாசை கொண்டதாகிய எனது முலையை உனது முன் நிலையிற் திருகியெறிந்து பொன்னடித்துக் கனல் பரப்பி புரமெரிப்பேன்" என்று திருவாய் மலர்ந்து ஐயனுடன் அவ்விடம் விட்டு மறைந்து கைலயங்கிரி சென்றருளினார். இவ்வாறு சென்ற அம்மை அபிராமி, அரனடி தொழுது "அண்ணலே! அடியாள் மொழிந்த அருஞ்சபதம் நிறைவேற்றுவதற்கு, அடியேன் ஒரு பிள்ளையாகச் சென்று மேவ வரவந்தரவேண்டுமெனக் கேட்டு விடை பெற்றுக் கொண்டு வந்து முன்னரே மாமரத்தின் கண் சென்று தங்கிய கோபாக்கினியாம் மலரின் கண் வடுவாகி (பிஞ்சாகி) வீற்றிருந்தருளினார்.

இது நிற்க;

பார்வதியார் கொண்ட கோபத்தினாலும் கண்ணிற் கான்ற கனலாலும் கழறியவஞ் சினத்தாலும் கதியழித்து அறிவழிந்து மயங்கிய நிலையில் மண்மீது வீழ்ந்த மாறன் நெடுஞ்செழியன், சிறிது நேரத்தில் மயக்கந் தெளிந்து நெடுமூச்செறிந்து நித்திரை யினின்றும் விழித்தெழுபவன் போன்றெழுந்தான். நடந்தவை அனைத்தும் கனவு போலவன் மனத்திற் தோன்றி மறைந்தன. தனக்கு நேர்ந்த தீவினையைத் தீர்க்கும் முகமாக துணிந்தமாறன் மாதுமைபங்கராகிய சிவபெருமானை வேதாகமப்படி பூசை செய்து வழிபட்டு வருவானாயினன். அந்நாளில் அக்கோவிலினருகில் நின்ற அந்த மாமரத்தினில் நாளொன்றினுக்கு ஒரு மாங்கனியாகப் பாண்டியன் செய்கின்ற பூசைக்கு வீழ்ந்த வண்ணம் இருந்தன. ஒருநாள் இரண்டு மாங்கனிகள் ஒரு சேர வீழ்ந்தனவாதலின் நன்கு கனிந்ததைப் பூசைக்குபயோகித்து மற்றதை மறுநாட்பூசைக்குதவும் பொருட்டுக் கொண்டு போய் ஒரு பொற் குடத்தின் வைத்து மூடினான்.

உலகமாதாவாகிய உமையம்மையார் வந்து உற்பவமான அந்த மாங்கனியை மறு நாட் பூசைக்குரிய நிவேதனத்தின் பொருட்டுப் பூழியர் கோன் சென்று பார்த்த போது மாங்கனியிருந்த பொற் குடத்தில் மாங்கனிக்குப் பதிலாக,

*".... வன்னச்சுட்டை பொன்வளையல்*
*சின்னத்தோடு பின்னல் மணி – சென்னிறந்த கன்னசரம்*
*வண்ணப்பட்டம் பொன்னின் சிட்டி – வட்டமுக்குத்தியுடன்*
*பொனின்னமாலை நல்லரைஞாண்பூண்டு சிற்றாடையுடன்*
*உடுத்திரள் போல் வன்னமணி – யுட்பரிசு நாகமணி*
*நடுத்தயங்கச் செய்தசிலம் – பொன்றுவலக் காலில் நண்ண*
*அடுத்ததொரு சூரியன் – அக்குடத்தின் மீதொளியே*
*கொடுத்தனளே தொண்டர் செய்யுங் – குறை தவிர்க்கு*
*மிறையவளே"*

இவ்வண்ணம் பார்வதியார் பச்சிளம் பாலகியாகத் தோன்றியது கண்ட பாண்டியன் தான் தேடித் தவம் புரிந்த தனிப்பெருஞ் செல்வந்தனக்கு வந்துற்றதென மனமகிழ்ந்து அகங்குளிர்த்தானந்தம் கொண்டெய்திய இன்ப நிலையின் எல்லையை இவ்வளவு தானென்றுரைக்கவும் போமோ, தவத்தின் பெருமையால் தனக்குக் கிடைத்த பொன்னாரமுதை, வரிசை வாத்தியங்கள் முழங்க மங்கையர் வாழ்த்து ஒலி எழுப்பச் சகல மங்கள சோபனத்தோடு மாளிகையிற் கொண்டு சென்று மனைவி கையிற் கொடுத்தான்.

கோப்பெருந் தேவியுங் குழந்தையை வாங்கிய மாத்திரத்தே உவகை கூர்ந்து முத்தமிட்டு மார் போடணைத்தாள். அவ்வாறணைத்த அப்பொழுதே அவள் தன்னியங்களிற் பால் தாரை கொண்டொழுகியது. ஒழுகிய பாலை ஒண்டொடிக் கூட்டிய சமயத்தில் கேடுவருமென்று கெவுளி சொன்னது. காக்கைகள் கூட்டமிட்டுக் கரைந்தன. பூரண கும்பமொன்று தானாகவே வெடித்தது. வான்முகில் மின்னலுடன் இடி கான்றது. கோப்பெருந்தேவியாரின் உடல் பதறியது. கோட்டையிற் கட்டியிருந்த கயிற்கொடியும் சரிந்தது. இத்தகைய துன்னிமித்தங்களைக் கண்டு கலக்க மடைந்த பாண்டியன் தான் தவஞ் செய்யச் சென்றது முதல் நிகழ்ந்த விருத்தாந்தங்களை விபரமாகத் தன் தேவிக்கெடுத்துரைத்தான். அனைத்துந் தேவியின் திருவிளையாடலெனத் துணிந்து தான தருமங்கள் செய்து புத்திரியைப் பொற் றொட்டிலிட்டுத் தாலாட்டி மன்னனுந் தேவியின் மலரணை மேற்கண் துயின்றனர்.

நித்திரையினின்று நெடுமூச்செறிந்து துணுக் குற்றெழுந்த நெடுஞ்செழியன் கோப்பெருந் தேவியைப் பார்த்து தான் கண்ட கனவொன்றைக் கூறுகின்றனான். "தேனினுமினிய என்மானே! என் தேகமதிற் குட்டம் போன்ற ஓர் பிணி தோன்றி என்னை வருத்தியது. அப்போது ஒரு வயித்தியன் வந்து காட்டின் கண் ஒரு மூலி இருக்கின்ற தென்றும், அதை எடுத்து வரும்படியும் என்னிடம் கூறினான். நான் அவன் சொன்ன காட்டிற் சென்று தேடிய போது அம்மூலியைக் காணவில்லை. ஆனால் அங்கே என் தாயாரைக் கண்டேன். கண்ட மாத்திரத்தில் என் பிணிகளெல்லாம் என்னை விட்ட கன்றன. நான் மன்மதன் போற் தெய்வீக உருப்பெற்றுத் திகழ்ந்தேன். அப்போ தென்மனத்தில் மோகம் பிறந்தது. அன்னையைப் பார்த்தேன். அவள் முகத்தில் கோபக் கனல் கொழுந்து விட்டெரியத்தன் கழுத்தின் முத்துமாலை ஒன்றை என்முன் வீசிவிட்டு மறைந் தருளினாள். அன்னையைக் காணாத நான் அம்முத்து மாலையை எடுத்து வந்து உன் கழுத்திற் பூட்டினேன். நான் பூட்டிய முத்துமாலை நாகபாம்பின் வடிவாகி அக்கினியைக் கக்கி மறைந்தது. அவ்வக்கினி எவ்விடங்களிலேயும் பரந்தது. என் நெஞ்சு பதறியது. கண்விழித்தேன் கனவென்றுணர்ந்தேன் என்றனன்."

இதனைக் கேட்ட இராசமாதேவி என் தலைவ, நீர்மட்டுமல்ல நானுமொரு சொற்பனங் கண்டேன். எவ்வாறு சொல்வது எமது புத்திரியாகிய இக்குழந்தை இறைவரது இடப்பாகத்தில் அமரும் இறைவியைப் போல் கையில் ஏந்திய ஒற்றைச் சிலம்போடும், வேப்பம் பத்திரியோடும், விரித்த கூந்தலுமாய் உமது முன்னிலையில் வந்து நின்று எனது வழக்கை விளங்குக எனக் கூறினாள். உனக்குரிய வழக்கு யாதென நீர்கேட்டபோது நமது நாயகனார் கொண்டு வந்த நாகமணிச் சிலம்பை நீ அபகரித்துச் சென்றது மன்றி அவரை அநியாயமாகக் கொன்ற பாதகத்தை விளங்கும் பொருட்டே வந்திருக்கின்றேன். என்று வசைமாரி பொழிந்து தனது காற்சிலம்பைக் கற்படியின் மீதடித்துக் கனல் பரப்பி இரண்டு தெருவொழிந்த ஏனைய இடமாகிய மதுரைமாநகர் எங்குந் தீமூட்டி எரிக்கக் கண்டு கண்விழித்தேனென்று திகைப் போடுரைத்தாள்.

இடிமேலிடியிடித்தாற் போன்ற இருவர் கனவையும் எண்ணிச் சஞ்சலங் கொண்ட வேந்தன், சோதிடர்களை வரவழைத்துப் புத்திரியின் பலாபலன் களைப் பார்ப்பித்தான். அப்போது சோதிடர்கள் பாண்டியனைப் பார்த்துப் பண் வேந்தே! இக்குழந்தை உங்கள் புத்திரி என்று மாத்திரம் நினையாதீர்கள். இது தெய்வீகம் நிறைந்த எங்கள் குலதெய்வமென்றே கூற வேண்டும். இவள் உங்கள் சத்துருவாக மாறி மதுரைமாநகரை நீறாக்கி அழிவு செய்யும் பொருட்டுப் பிறந்த அவதார கன்னிகைபாவாள் என்று அங்கு நடந்த அபசகுனங்கள் அனைத்தையும் அவர்கள் கண்ட கனவையும் விரித்துரைக்கக் கேட்ட வேந்தன் இக்குழந்தையை இப்பொழுதே கொன்று விடுகிறேன், என்று கூறினான். அதைக்கேட்ட கணிதர்கள் அப்படியாயின் இப்பொழுதே இம்மதுரை அழிந்து விடும் ஆதலினால் பேழை செய்து பெய்வளையைப் பேழையில் வைத்துக் கடலிற் தள்ளிவிடுமென்றனர்.

அவ்வாறிசைந்த பாண்டியன் அழகியதோர் பேழை செய்து அதன் கண் அம்மையாரை வளர்த்தி மிதவையாம் பேழையைப் பூட்டி திறப்பையும் அதன் மேல் வைத்து அரிவையர் அனை வருமழுதிரங்க அதை கடலிற் தள்ளிவிட்டான். அடியவருள்ளத்துறையும்

அரனாரையும், அனந்தன் மீதறிதுயில் புரியும் பரந்தாமனையும் போன்று பொற் பேழையிற் துயில் புரிந்தருளும் பொற் கொடியாளாரணங்கு தான் வீற்றிருக்கும் பேழையை சோழநகர்த் துறையாகிய காவிரிப் பூம்பட்டினத்திற் கொண்டு போய்ச்சேர்க்குமாறு வாயுதேவனுக்கும், வருணராசனுக்கும் கட்டளை செய்து பேழையிற் துயில் புரிந்தருளினார்.

### *காவலரவதாரம்*

காவிரி நதியால் வளம் பெருகிக் கலைமகளும், அலைமகளுங் கலந்து வாழ மலைமகள் தன் மணவாளன் மதியணிந்த பெருமான் மன்றினடம் புரிந்தருளும் மலர்பாதன் திருவருளால் மனுநீதி கோடாது மாநிலம் புரிந்தருளும் சோழேசன் கண்பரப்புக் காத்தருளும் நாடு சோழவள நாடு. அந்நாடு சைவமுந் தமிழுந் தழைக்கச் சிவநாமமோங்கச் சிவனடியார்களும், தபோதனர்களும், கற்பால் மேற்பட்ட கன்னியர், கட்டிளங் காளையர் காண்டற்கு அரிய நல்லறமாயில்லறம் புரியுமில்லறத் தோர் யாவருமினிது வாழும் வனப்பால் மிக்கது. ஆங்கே அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் ஆகிய நாற்குலத்தவரும் நன்கமைந்து ஒழுக்க நெறி பிறழாது நாநிலம் போற்ற வாழ்ந்தனர்.

அவர்களுள் திரைகடலோடித் திரவியந் தேடுபவர்களாய் புகழை நாற்றிசையுஞ் சென்று பரப்புவர்களாய் பிறநாட்டு நானாவிதமான நாகரிகங்களையும் தமது நாட்டில் நிலைநாட்டு பவர்களாய் நிகரிலாச் செல்வந்தர்களாய்த் திகழ்ந்தனர் வணிகர். வணிகர் குல முதல்வனாகச் சீருஞ்சிறப்பும் பெற்ற செல்வனாய் வரையாது வழங்கும் வள்ளலாய் மாநிலம் போற்றும் "மாசாத்தார்" என்பவர் சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டணத்தில் வாழ்ந்து வருவாராயினர். அவர் தம் அன்புக்குரிய மனைவியாகிய வன்னமாலை என்பவளுடன் இல்லறம் புரிந்து வரும்நாளில் புத்திரப் பேறின்மையால் வருந்தித் தம்மாலான தான தருமங்கள் செய்தும் கிரகதோஷ நிவர்த்திகள் செய்வித்தும் பிரயோசனமின்றிப் பெரிய துன்பத்துக்குள்ளானார். அவரினும் பார்க்க அருமக வொன்றில்லையேயென அருந்துயருழந்த அவரின் மனைவியாளாகிய வன்னமாலை அவரைப் பார்த்து ஆருயிரன்ப! அறங்கள் பல புரிந்து மருமக வொன்றெய்தப் பெற்றிலம். ஊழ்வினையின் பழியெல்லாம் ஒன்றுபட்டுத் திரண்டு நின்று பாழ்மனையிற் பைசாசமிருந்து பாடியாட முயல்வதினால் நாயகற்கும் பூசை செய்து நற்றவமே நான் புரிந்து புத்திரப் பேறு பெற்று வருவேன். உத்தரவு தந்தருள்க எனப் பணித்தாள்.

அதற்கிணங்கி மாசாத்தார் விடை கொடுக்க வன்னமாலை சென்று தவச்சாலை ஒன்றமைத்துக் கன்னியர்கள் சூழ்ந்து நின்று காவல் செய்ய புண்ணிய நன்னீரிற் படிந்து நீறணிந்து மணிவடம் பூண்டு மகிமை தரு மஞ்செழுத்தை மனத்தமுத்தி கன்னி சிவகாமியையுங் கடவுளையுங் கருத்திலிருத்தி ஐம்புலனடக்கி அருந்தவ மாற்றினாள். அவன் தவங்கண்ட அருந்தவ உமையவள் ஆதிமுதற் பொருளாகிய பராபரனைப் பணிந்து சுவாமி! இவள் இத்தகைய கடுந்தவமியற்றக் காரணம் யாதோ என்று கேட்டருளினார். அதைக்கேட்ட பரமசிவன் பார்வதியைப் பார்த்து "எங்கும் நிறைந்து விளங்கு பவளாகிய உனக்குமா நான் கூற வேண்டும். வா அவள் முன்தோன்றியவள் குறையைப் போக்கியருள்வோ" மென்று இடபாரூடராகத் தோன்றிக் காட்சியளித்தனர்.

தத்துவத்தின் முதலான தனிப்பொருளாய் அம்மையப்பன் தனது முன்னிலையிற் தோன்றிய மாத்திரத்தே, முத்து நகை துலங்க முகமலர்ந்து அகமகிழ்ந்த அம்மையாம் வன்னமாலை ஓடோடிச் சென்று கால்களில் விழ்ந்து விண்ணவர்க்குமெட்டாத சோதி மதியாஞ் சுடரொளியே! கங்கைத் தும்பை அணிந்தவளே. 'காத்தருள்க' எனத் துதித்து அம்மையைப் பணிந்து.

*தளிர் பொருந்தும் பதத்தாளே... சங்கரியே*
*திகம்பரியே*
*ஒளிபொருந்தும் யானைமுக.. உத்தமனைப்*
*பெற்றவளே*
*மிளிர் பொருந்த வேற்றடக்கை.. வேலவர்*
*தன்றாயாரே*
*எழில் பொருந்த வெனையாழ ... இருகண் மலர் பரப்பு*
*மென்றாள்.*

இவ்வாறு பணிந்த வன்னமாலையைப் பார்த்து இங்குமக்கு வேண்டும் பரிசு எதுவோ என வினவிய பார்வதி பரமேசுவரரை வணங்கி நிற்கின்ற வன்ன மாலை தேவரீர்! மன்மதனிலும் மிக்க எழிலும் மாநிலத்திலென்றுமழியாத புகழும், மகாதேவராகிய தங்களிடத்து நீங்கா பேரன்பும் உடைய ஒரு புத்திரனைத் தந்தருள வேண்டும் என்றாள். "அவ்வண்ணமே அழகு மாண்மையுஞ் சக்தியமுந் தவறாத உத்தம புத்திரனொருவனைத் தந்தருளினோம். அவன் தன் பருவ காலத்தில் அழகென்றும் விரகந் தழுந்திக் குன்றனைய கனதனத்துக் கொடியிடையின் மயதாகிச் சென்றிடுவான்." என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

வரம் பெற்று மகிழ்ந்த வன்னமாலை வாழ்மனையின் மீண்டு வந்து கணவனை வணங்கித் தான் சென்று கடுந்தவம் செய்ததும், காலகாலன் வந்து காட்சிகொடுத்து வரமீய்ந்து சென்ற வரலாறனைத்தும், கூறி மகிழ்ந்தினிதிருந்தனள். சிலநாட்களில் சிவபெருமான் திருவருளால் வன்னமாலை கர்ப்பமுற்றுப் பத்தும் நிறைந்த பாலகனைப் பெற்றெடுத்தாள். பன்நெடுநாள் தவம் இருந்து பாலகனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்கள் பகரரிய தான தருமங்கள் செய்து தேவ பூசை ஆராதனைகளாற்றி வழிபட்டு மைந்தனைப் போற்றி வளர்த்து வருவாராயினர். குற்ற மற்ற குழந்தையாங் கோவலன் குதலை மொழிபேசிக் குழவி மதியெனக் குலவி வளர்ந்து, சகல சரித்திரங்களையும் பயின்று, மன்மதனோ இவனென்று மங்கையர் கண்டுமருளும் காளைப்பருவமெய்தினன்.

அந்நாளில் மாசாத்தற் கிணையாகச் சகல செல்வங்களும் நிறைந்தவராய் அழகு, குணம், கொடை ஆகியவற்றிற் சிறந்தவராய் அக்காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவரும், மாசாத்தாரின் மைத்துனருமாகிய "மாநாகர்" தமக்குமோர் புத்திரப் பேறில்லையே என்று கவலைகூர்ந்து அன்னதானம், சொர்ணதானம் ஆகியன செய்து சிவசேத்திரங்களுக்குச் சென்று சிவனடி வணங்கிச் சிவனடியார் சேவை செய்து வழிபாடியற்றி வருவாராயினர்.

## *திருக்கரத்த மாதல்*

(இஃது மாநாகருடைய திருக்கரத்தின் கண் கண்ணகையார் வந்து மகவாகிய செல்வமாகச் சேர்ந்த சரித்திரத்தை விரித்துரைத்தலின் இப்பெயர் பெற்றது.)

பாண்டிய மன்னராற் பொற்பேழை செய்து தற்பாதுகாப்பாகக் கடலிற் கடத்தி விடப்பட்ட கண்ணகையார் மக்கட் பேறுன்னி மாபெருந் தான தருமங்கள் செய்து மாட்சிமையுற்றுத் திகழும் மாநாகரிடத்திற் சென்று, அழகுங், குணமுங், கற்புங் கருணையுங், கடவுள் பக்தியும் நிறைந்த இந்திர வல்லி பாலிருந்து வாழ்வேனென்று திருவுளங் கொண்டு சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திற் பேழையைக் கொண்டு போய்ச் சேர்க்குமாறு கட்டளையிட்ட பிரகாரம் கடலரசனாகிய வருணபகவானும், வாயுதேவனும் பேழையைக் காவிரித் துறையை நோக்கிக் கொண்டு வரும் சமயம் அது,

அச்சமயத்தில் மாபெரும் வணிகராகிய மாநாகர், மாசாத்தார், ஆகிய இருவரும் தங்கள் கப்பல்களைப் பார்வையிடும் பொருட்டு காவிரித்துறையை அணுகி நிற்கின்றனர். கடற்கரையில் நின்ற மாசாத்தார் மாநாகரைப் பார்த்து "மைத்துனரே அதோ ஒரு பேழை அலை கடல் மேல் மிதந்து வருகின்றது பார்த்தீர்களா" என்று பேழையைச் சுட்டிக்காட்டினார். "ஆமாம் அழகான பேழை அதனுள் என்ன இருக்கின்றதோ தெரியவில்லை. யாதாயினுமாகுக. முதலில் பேழையைக் கண்டவராகிய உமக்கே பேழை உரியது. உள்ளிருக்கும் பொருள் எனக்குரியது என இருவருமிசைந்தனர். பேழையும் கரையில் வந்தணுகியது. மாநாகர் சென்று பேழையை எடுத்து வந்து கரையில் வைத்துப் பார்த்த போது அதன் மீது திறப்பிருப்பதைக் கண்டு திறப்பை எடுத்துத் திறந்து பார்த்தார்.

நிலவுலகெங்கும் நீலவொளி வீசியது. சகல சராசரங்களுஞ் சந்திர சூரியரீறாக அவ்வொளி மயமாகவே திகழ்ந்தனர். பார்த்தவர்களாகிய மாநாகர், மாசாத்தர் இருவரது கண்களும் ஒளிமழுங்கின. ஆனந்தமயமாகிய மெய்யறிவு தோன்றியது. அனைத்தும் அம்மை அபிராமியின் திருவிளையாட லென்றுணர்ந்து தலைவணங்கித் தாயே!

*சிவசங்கரன் மனைவி தேசாட் சொரூபி*
*செகமுதல்வி மீனாட்சி தேவாதிதேவி*
*மிகுபுதல்வி மலையர சனுக்குமொரு புதல்வி*
*வித்துக்கு வித்தான வேதாந்தரூபி*
*அகர ஆங்கார ஓங்கார ரீங்காரி*
*ஆமோமெனும் பொருளடங்கு சிங்காரி*
*உகர மகரான உத்துங்கவீரி*
*ஒழிமகுடன் முடிதெளிய நடனமிடு சூரி*
*நமநம சிவாயமாய் நாடிப் புரக்கும்*
*நாலெட் டறத்தி யிருநாலட்சரத்தி*
*சிவயநம தான திரு வருளிலொரு மாதே*
*தேவியெம் நயனவொளி தெரியவருள் செய்யே*

என்று தங்கள் மங்கிமறைந்த கண்ணின் ஒளியைத் தந்தருளுமாறு தாழ்மையுடன் வேண்டினர். இவர்களிருவரும் இவ்வாறிரந்து பணிதலும் எம்மையாளுடைய அம்மன் தன்னிடத் துண்டாகித் தேசோன் மயமாய்த் திகழ்ந்த ஒளியை அடக்கியவர்கள் கண்ணொளி பெற வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளுவது போல் வாய்திறந்தழுதார். வாளொளி மழுங்கிய வணிகர் கண்கள் ஒளி பெற்றன. வரப்பிரதசாதம் போல் வாழ்வளிக்க வந்துற்ற குழந்தையை எடுத்து அணைத்து மடிமீது இருத்தினார். இப்பொழுது எங்கள் கண்ணொளியைத் தந்துதவிய காரணத்தால் ஏகபரநாயகியாகிய இவள் நாமம் கண்ணகை என்று பெயரிட்டு எக்காலமானாலும் எனது மகள் கண்ணகைக்கு உமது மகன் கோவலனையே மணம் புரிவதென இருவருமிசைந்து நிச்சயம் செய்தனர்.

திருமணம் நிச்சயஞ் செய்ததன் பின்னர் குழந்தையாகிய கண்ணகையாரை மாநாகர் தனது மாளிகையின் கொண்டு வந்து மனைவியாராகிய இந்திரவல்லியிடம் கொடுக்க, புதையல் கிடைக்கப் பெற்றவள் போன்று பொங்கு மகிழ்வெய்திய இந்திரவல்லியும் பிள்ளையை வாங்கி மார்போடணைத்து முத்தமிட்டுத் தாயினும் மிக்கத் தயவுடன் வளர்த்து வருநாளில் கண்ணகையாருங் கலைமகளோ திருமகளோ எனக் கவின் பெற்று வளர்வாராயினர்.

## தூரியோட்டம்

மாதவப் பேறமைந்த மாநாகர் மாளிகையில் கண்ணகையார் வளர்ந்து வரும் நாளில் மாசாத்தார் மகன் கோவலனுக்கு மணஞ்செய்து கொடுக்கத் துணிந்த மாநாகர் தமது மகள் கண்ணகையாரின் வலது பாதத்திலுள்ள சிலம்புக்கிணைச் சிலம்பு செய்ய வேண்டுமெனக் கருதினர். கண்ணகையாரின் பாதத்திலுள்ள சிலம்புக்கிணைச் சிலம்பு செய்ய வேண்டுமாயின் நாகமணித் தரிசு அமைத்துச் செய்தாலன்றி இணையாகாதென்பதை உணர்ந்தார். அவ்வாறாயின் நாகதீவிற்குச் சென்று நாகராசனிடம் மணிவாங்கி வருவதற்கு வல்லவர்கள் யாரென்றும்; அவனே அதற்குத் தகுதியுடையவனென்றும்; தூதுபோக்கி மீகாமனை அழைத்து "நீ! நாகதீவிற் சென்று நாகராசனிடம் மணி வாங்கி வந்து தர வேண்டும். நாகமணி வாங்கி வந்து சிலம்பு செய்து அணிந்ததன் பின்னரே, நமது மகள் கண்ணகையாரைக் கோவலனுக்கு மணம் செய்து கொடுக்க முடியும்" வேண்டுவது யாதென வினவினார்.

அதைக் கேட்ட மீகாமன், "அரவிருக்குமிடம் போனால் யார் தான் உயிர் மீள்வர்? அன்றியும் அரவரசன் எங்ஙனம் எமக்கு மணிதருவான் என்று" கேட்க மாநாகர் கூறுகிறார். "முன்னொரு நாள் நான் வியாபார நோக்கமாகக் கப்பலில் வேற்றிடம் சென்று திரும்பிய போது கடலிலே காற்று வேகமாக வீசியது. ஆதலினாற் கரைக் கணித்தாய்க் கப்பலைக் கல்லுவைத்து, கரையில் இறங்கி வந்தேன். வரும்போது நாகராசனைக் கருடராசன் கொல்வதற்கு கங்கணம் பூண்டதனாலிருவருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அந்நேரத்தில் எனது ஒருகப்பல் திரவியத்தையும் கொடுத்து நாகராசனின் உயிரைக் காப்பாற்றினேன். அதனால் மனமகிழ்ந்து நாகராசன் உமக்கு வேண்டும் வரம் யாது? கேண்மினென்றனன். எனக்கு இச்சமயத்தில் வேண்டியதொன்றுமில்லை. தேவைப்படும்போது பெற்றுக் கொள்ளுகின்றேன் என்றே" அதைக்கேட்ட நாகத்தலைவன் என்னிடத்தில் எப்போது நீர் எதைப்பெற விரும்புகிறீரோ அப்போது ஆள்விடு வீராயின் அதை நான் அவரிடம் கொடுத்து அனுப்புவேனென்று உறுதியுரைத்தார். ஆதலின் நீர் அச்சமில்லாது சென்று அரவின் மணி பெற்று வருக" எனக் கூறினார்.

அதைக்கேட்ட மீகாமன் மாநாகரைப் பார்த்து "வணிகரேறே நாம் மணி வாங்கச் சென்று திரும்பி வருவதற்கிடையில் கடலாதிக்கம் புரியும் வெடியரசனோ மிகவும் கொடியவன். அவனையும் அவன் படை வீரரையும் பொருது வெற்றி பெற்று மீள வேண்டும். ஆதலால் அவனோடு போர் செய்வதற்குப் போதிய கப்பல்கள் வேண்டும். விலை கொடுத்து வாங்குங் கப்பல்கள் வெடியரசன் போருக்கு கந்தவையல்ல. கொல்லம் அல்லது இலங்காபுரியிற் சென்று கப்பலுக்காகிய மரங்களைக் கொணர்ந்து உறுதிப் பாடமைந்த கப்பல்கள் அமைக்க வேண்டு" மென்றான். அப்படியாயின் மரம்கொணர வல்லவர்கள் யாரென ஆராய்ந்தறிந்து ஆரிய வீரராம் பட்டணவர்களை அழைத்து, அவர்களுக்கு வேண்டியதாகிய பொன், பொருள், புடவை வகைகள் ஈய்ந்து, மகிழ்வித்து, அழகு, செட்டிப்பிள்ளை, செட்டித்தேவன், சங்கீதலோலன்; ஊர்நம்பியாதியாம் உயர்ந்த பட்டங்களையும் வழங்கியப்பட்டணவர்களை இலங்காபுரிக்குச் சென்று மரங்கொணருமாறு அனுப்பிவைத்தார். அவர்கள் வரும் போது தமக்குத் தேவையான. பண்டபதார்த்தங்களோடு இலங்கை வேந்தனுக்குத் தேவையாகிய பாற்குடங்கள், பட்டுவர்க்கங்கள், சாந்து, சவ்வாது, கஸ்தூரி போன்ற வாசனத்திரவியங்கள் ஆகியவற்றை நாவாய்களி லேற்றிச் சோழ நாட்டிலிருந்து புறப்பட்டுக் கடல் கடந்து இலங்காபுரியின் பல பாகங்களையும் சுற்றி "உலுக்காவற்றுறை"யை வந்தடைந்தனர்.

இவர்கள் இவ்வாறு துறைமுகத்தை வந்தடைந்ததும் துறைமுகவதிகாரி நீவிர் யாவர்? இவ்விடம் வந்த காரணம் யாதென? வினவ, "நாங்கள் சோழ நாட்டிலிருந்து வருகின்றோம். உங்கள் அரசனுக்கு வேண்டிய பாற்குடங்கள் மற்றும் பொருட்கள் பலவும் மாநாகர் அனுப்பியுள்ளாரெ"ன்றனர். இச்செய்தியை அவ் அதிகாரி அரசனுக்குணர்த்த அரசன் கட்டளைப்படி அனைவருஞ் சென்று அங்கிருந்தரசு செய்த சோழ வேந்தனை வணங்கிப் பாற்குடங்களாகியன வைத்துத் தாம் வந்த காரணத்தை விண்ணப்பம் செய்தனர். அது கேட்ட வேந்தன் மகிழ்ந்து தமது மந்திரிமாரிடம் கட்டளை பிறப்பித்து , மூன்று நாட்களுக்குள் கப்பலுக்கு வேண்டிய நல்ல மரங்களைத் தறிப்பித்து நாவாய்களில் நன்கு நிரப்பி அனுப்பி வைத்தனன். மரங்கள் யாவும் மாநாகரிருக்கும் காவிரிப்பூம் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தன.

மரங்கள் வந்து விட்டன என்பதையறிந்த மாநாகர் மகிழ்ச்சி பொங்க பட்டணவர்களைப் புகழ்ந்து பல பரிசில்கள் வழங்கி அவர்கள் வாழ்வதற்குரிய நாடு சில கொடுத்துச் சிறப்பித்தார்.

## கடலோட்டம்

இலங்காபுரியிலிருந்து கொண்டு வரப்பட்ட மரங்களினாலே எழிலும், வலுவும் பொருந்திய கப்பல்கள் செய்விக்க விரும்பிய மாநாகர் ஆங்காங்கு தமது ஏவலாளர்களை விடுவித்துத் திறமை வாய்ந்த தபதியர் பல்லாயிரவரை வரவழைத்து உமக்கு வேண்டும் பொருட்கள் பொன், வெள்ளி, செம்பாதியாக எவை எவை வேண்டுமோ அவையனைத்துமப்படியே தருவேன். இன்றிலிருந்து ஒருமாத காலத்துக்குள் மிகவும் வலிமை பொருந்திய போர்க்கப்பல்கள் பதினாயிரம் செய்து தர வேண்டுமெனத் தெரிவித்தார்.

அவர் கட்டளையை மேற்கொண்ட தபதியார் அவரை வணங்கி விடை பெற்றுச் சென்று நல்ல சுபதினத்திலே விநாயகரைப் பூசை செய்து வணங்கி வாச்சியுளி, வாளாதி ஆயுதங்களில் கப்பல் செய்யத் தொடங்கிக் குறித்த கால எல்லைக்குள் சகல கப்பல்களையும் எவ்வித குறையுமின்றி மேல்வீடு, கீழ்வீடு, நிலாமுற்றமாதி எல்லா வசதிகளோடும் செய்து முடித்து மாநாகரிடம் விண்ணப்பித்து நின்றனர். மாநாகரவர்களுக்கு வேண்டும் நிதியுதவியனுப்பியதன் பின்னர் மீகாமனை அழைத்துக் கப்பல்கள் யாவும் பூரணமாக வேலைகள் முடிந்தன. போருக்கு வேண்டும் போர் வீரர்களோ தயாராக இருக்கின்றனர். பேராயுதங்கள் யாவும் வேண்டியமட்டுமுள்ளன. நீர் மணிவாங்கப் புறப்படலாமென உரைத்தார்.

மாநாகருரை கேட்ட மீகாமன் சரி, அவ்வாறே செய்யவோமெனச் சென்று கோயிலையடைந்து காளகண்டரை வணங்கி விடை பெற்றுக் கௌரியம்பாளை வணங்குஞ் சமயத்திற் கண்ணகை யானவள் முன்தோன்றி "வீரனாம் மீகாமா நீ அஞ்சாது சென்று (நயினாதீவு) நாகதீவிற் கண்மணி வாங்கி வருக.

உன்னை எதிர்ப்பவர்களாகிய வெடியரசன் முதலாயினோரை வென்று வெற்றி மாலை சூடுக'' என ஆசீர்வதித்து "வேண்டும்போது என்னை நீ நினைப்பாயாயின் நான் உன் மனத்திற் தோன்றி உன்னைக் காப்பாற்றியருள்வேன்'' எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். அம்பாளின் அருள் வாக்கைப் பெற்ற மீகாமன் அகம் மிகமகிழ்ந்து அக்கணமே சென்று தனது மஞ்சனச் சாலையில் நீராடி ஆடை அணியலங்கார பூசனாகி அறுசுவை உணவருந்தித் தாம்பூலந்தரித்துத் தேவியைத் துதித்து வீரவாளைக் கையிலெடுத்துப் போர்க் கோலந்திகழ மாநகர் மனைக்கு வந்தனன்.

வந்த மீகாமன் கட்டளைப்படி சுபநேரத்திலே வேல், வாள், பலகை, குந்தம், வில், அம்பு வகை முதலாகப் போருக்கு வேண்டிய பொருட்களும், நாகராசனுக்கு வேண்டிய உணவு வகைகள், உடுப்பு வகைகள் எண்ணெய், தன்னீராதி பலவும் குறைவின்றி ஏற்றபட்டன. படைவீரரும் கப்பல் மீதேறினர். கண்ணகையாரை நினைத்து வணங்கி விடை பெற்ற மீகாமனும் "கண்ணகைப் புரவி'' என்று பெயரிட்ட தனது கப்பலில் ஏறினான். மாலுமிகளின் கணிப்பின் படி விண்மீன்களின் குறிப்பின் வண்ணம் கப்பல்கள் கடல் மீது சென்றன.

## *வெடியரசன் போர்*

மீகாமன் கப்பல்கள் மணிவாங்கும் பொருட்டுக் காவிரித் துறையிலிருந்து புறப்பட்டு நாகதீவை நோக்கி வருகின்றன. அக்காலம் கடலரசனெனப் புகழ் பெற்ற முக்கிய கோன் வெடியரசன் தூறுமலைச் சாரலில் வாழ்ந்து கடல் மீது வருங் கப்பல்களை மறித்துச் சூறையாடி ஆதிக்கம் புரிந்து வருங்காலம், ஒருநாள் வெடியரசன் மனைவி 'நீலகேசரி' கொடியதோர் கனவு கண்டஞ்சிக் கண்விழித்துக் கணவனாகிய வெடியரசனைப் பார்த்துப் பகருகின்றாள். வெகுவினையம் புரியும் வேந்தே; என் கணவ! நான் ஒரு பொல்லாத கனவு கண்டேன் . அதனைக் கேட்டருள்க.

"ஆகாயத்தில் தூறல் மின்னல்கள் தோன்றின. ஆழ்கடலிற் கொடிய, ஆலகாலம் பிறந்து என்னைத் துரந்தது. நான் அஞ்சிய போது எனது பல்லொன்று முறிந்து பாரில் வீழ்ந்தது. அட்டதிக்க மலைகளதிர்ந்து வீழ்ந்தன. பிடியானையொன்று மதம் பொழிந்து நின்றது. கொம்பனின் கோடுகளொடிந்தன. பெண்ணொருத்தி சஞ்சலங் கொண்டு தலைவிரி கோலமாக எமது மனையை விட்டு வெளியேறினாள். முற்றத்தில் நின்ற அரசமரமொன்று அடிசாய்ந்து வீழ்ந்தது. அது மட்டுமோ, உமது போர்வாளொடிந்திடவும், மாற்றானும்மைச் சிறைபிடித்துச் செல்லவுங் கண்டு துணுக்குற் றெழுந்தேன். பிராணபதி கனவோ மிகவுங் கொடியது. கரைக்குலத்தான் மீகாமனோ மிகவும் பொல்லாதவன். அவன் உங்களோடு நீங்காப் பெரும்பழி உடையவன். நினைக்கவே நெஞ்சம் பதறுகின்றது''என்றனள்.

அதைக் கேட்ட வெடியரசன் அன்பே அஞ்சற்க. வீராதி வீரர்கள் எல்லோரையும் விண்ணேற்றிய என் வீரத்தை அறிந்தவளாகிய நீயுமா இப்படிச் சஞ்சலங் கொள்ள வேண்டும். கரைக் குலத்தார் மட்டுமல்ல, உரைக்கும் எக்குலத்தாராயினும் என் முன் திரண்டு வருவாராயின் கல்லின் முன் கரைந்து விரைந்தோடும் காக்கைகள் போல் பின்வாங்கி விடுவர். ஆதலால் எமக்கு எக்குறையும் வாராது. அன்றியும் கனவுகண்டவர்களுக்கு அல்ல என்பதை நீயறியாயா? என்று தேற்றச் சிறிதளவு மனந்தேறிய நீலகேசரி தடாகத்திற் சென்று நீராடிக் கரையில் வந்து சந்தியா வந்தனஞ் செய்து கடவுளைப் பூசித்துக் கொடிய கனவின் பொருட்டுத் தான தருமங்கள் செய்தனள்.

அந்நேரத்தில் வெடியரசன் ஒற்ற னொருவனை அழைத்துக் கடலின் மீது மரக் கலங்கள் வருகின்றனவா? என்று பார்த்து வருமாறு கட்டளையிட்டான். அவ்வொற்றனும் சென்று வானளாவியுயர்ந்த மரமொன்றிலேறிக் கடலை நோக்கினான். கடலெங்கும் பரந்து வந்த மீகாமனின் கப்பல்களின் பாய்மரங்கள் ஆங்காங்கு தென்பட்டன. அதனைக் கண்ட ஒற்றன் விரைவாக மரத்தினின்று மிறங்கி ஓடிச் சென்று வெடியரசனுக்குக் கூற அவன் வெகுண்டெழுந்து மீகாமனே இத்தகைய மிக்க கப்பல்கள் கட்டித் தன்னுடன் போருக்கு வருகின்றானென்று எண்ணித் தனது போர் வீரர்களைத் திரட்டிப் போர்க்கப்பல்களை யெல்லாம் போருக்குப் புறப்படுவதற்கு தயாராக இருக்கும்படி கட்டளை பிறப்பித்துத் தானும் மாளிகையிற் சென்று

நீராடி ஆடையாபரண அலங்கிர்தனாய் அறுசுவை அன்னமுண்டு போர்க்கோலம் பூண்டான். போர்க்கோலம் பூண்ட வெடியரசன் மனைவியாகிய நீலகேசரியைப் பாத்துத் தனது வீரவாளை எடுத்துவருமாறுரைக்க அன்னவளும் சென்று மாயனை வணங்கி வாளை எடுத்து வந்து வெற்றியாகுக என வாழ்த்தியவன் கையிற் கொடுக்க வாங்கினான். நீலகேசரிக்கு விடை கொடுத்துப் புறப்பட்டுச் சென்று கடற்றுறையை அணுகினான். அங்கே அவனது வீரர்கள் அவனைக் கண்டதும் கடல் போலெழுந்து ஆர்ப்பரித்து வஞ்சினம் பல கூறி மாற்றானை மறிகடலிற் பொருதுளக்கி வெற்றி பெறுவோமென்று விருது கூறிப் புறப்பட்டனர். போர் முரசோடு , கொம்பு வாத்தியங்கள், தாரை முதலான சின்னங்கள் முழங்கின கப்பல்கள் யாவும் புறப்பட்டன.

அப்போது மீகாமேவலாற் பாய் மரத்திலேறிப் பார்த்த வீரனொருவன், வெடியரசன் கப்பல்கள் கடலிற் பரந்து வருவதைக் கண்டு மீகாமனுக்கு விண்ணப்பஞ் செய்ய மீகாமன் கட்டளைப்படி வீரர்களெல்லோரும் போருக்குரிய ஆயத்தங்கள் பலவற்றையும் அணிவகுத்துத் தயாராயினர். வெடியரசன் கப்பல்களும் மீகாமன் கப்பல்களை சுற்றி வளைத்துச் செல்ல வொட்டாமற் தடுத்தன. வெடியரசன் மீகாமனைப் பார்த்து 'நீங்கள் யார் எங்கே போகிறீர்கள் எனக் கேட்டான். அப்பொழுது மீகாமன் 'என்னை நீயறியாயா? நான் சோழ நாட்டவன். என் பெயர் மீகாமன். மாநாகர் கட்டளைப்படி கண்ணகையாரின் காற்சிலம்பு செய்வதற்கு மணிவாங்கி மீள்வதற்காக வந்தேனென்று கூறினான். அதைக் கேட்ட வெடியரசன் உனது காவலில் வந்த ஆயிரம் கப்பல்களையும் தீமூட்டி உன்னையும் நான் வென்றிலனேல் என் பெயர் வெடியரசன் அல்ல வென்று விருது கூறினான். அது கேட்ட மீகாமன் ஆத்திரங் கொண்டு சீறியெழுந்து "என் அன்னை கண்ணகையாரின் அருளினால் வலிதின் வந்து வழிமறித்தவனாகிய உன்னையும் உன் போர் வீரர்களையும் வென்றிலனாயின் என் பெயரும் மீகாமன் அல்ல" என்று சபதம் செய்தனன். இரு திறத்தாருக்கும் போர் மூண்டது. வாள் கொண்டு வீசினர். விற்களினின்றும் சரமாரி பொழிந்தனர். வேல் , ஈட்டி, குந்தம், கவுண், கல்லாமாதி எறிபடைகளை எறிந்தனர். இவ்வாறு போர் செய்து தலையிழந்தும், காலிழந்தும் , கரமிழந்தும், புயமொடிந்தும் பல்லாயிரம் வீரர்கள் மாண்டு மடிந்தனர். கடலினிடை பிணமலைகள் குவிந்தன. சமுத்திரமே குருதிக்கடலாக மாறியது. வெடியரசனது வீரர்கள் பட்டழிந்தனர். தனது சேனைகள் எல்லாவற்றையு மிழந்து தனித்தவனாகிய வெடியரசன் தனது கப்பலோடு ஒழித்தோடிச் செல்ல முயன்றான். அந்நேரத்தில் மீகாமன் அவனது கப்பலையுடைத்துக் கடலில் மூழ்கச் செய்தான். நீரில் மூழ்கிய வெடியரசன் நீந்திக் கரைசேர முயன்ற சமயத்தில் மீகாமன் அவனைத் துரத்தி பிடித்து வந்து தனது கப்பலின் கண் ஏற்றிப் பாய் மரத்துடன் கட்டி வைத்துக் காவல் புரிந்தனன்.

அந்நேரத்தில் வெடியரசனது போர் வீரர்களில் உயிர் தப்பிய ஒருவன் ஒருவருமறியாத வண்ணம் ஒழித்தப் போர் முன்னிலையில் வெட்டுண்டு வீழ்ந்த பிணத்தைக் தனக்குத் தெப்பமாகக் கொண்டு கரையேறிச் சென்று வெடியரசனின் மனைவிக்கு நடந்த விருத்தாந் தங்களை யெல்லாம் விரித்துக் கூற, அதனை நீல கேசரி கேட்டு மண் மேல் விழுந்து புலம்பி என்செய்வேனென்றழுதாள். அங்கு நின்றவர்கள் அவளைப் பார்த்து அம்மணீ! அழுது வருந்துவதிற் பயனில்லை. உனது கணவன் தம்பியாகிய வீரநாரணனுக்கு இச்செய்தியை விரைவாக அறிவியுங்கள். அவர் புறப்பட்டு வந்து மீகாமனுடன் பொருதி வெடியரசரை மீட்டுதவுவாரென்றனர். அந்தவுரை கேட்ட மாத்திரத்திலே நீலகேசரி அருகில் நின்ற அவ்வீரனைப் பார்த்து இவ்விடத்தில் எனக்குறுதுணை புரிபவர்கள் ஒருவருமில்லாத தினால் நீயே வீரநாரணனிடம் சென்று இச் செய்தியை எடுத்துரைத்து வருகவெனக் கட்டளையிட்டாள். அக்கட்டளையைச் சிரமேற் கொண்டவனாகிய அத்தூதுவன் வீரநாரணனைத் தேடி விரைந் தோடுகின்றான்.

## வீரநாரணன் போர்

வேட்டை மீது நாட்டங் கொண்ட வீரநாரணன் வேட்டைக் கோலம் பூண்டு வேட்டை வீரர்கள் பலர் சூழ, வேட்டை நாய்கள் சில முன் தொடர எலுமிச்சை மலைச்சாரலில் வந்து கொண்டிருக்கின்றான். அவன் தன்னை நோக்கி வருகின்ற தூதுவனைக் கண்டு,

தமையனாகிய வெடியரசன் அனுப்பிய தூதனென் றெண்ணித் "தூதுவனே! நீ பதட்டத்தோடு ஓடோடி வருகின்றனையே எதற்காக வந்தாய்" என்று கேட்டான். அப்போது தூதுவன் எவ்வண்ணம் எடுத்துரைப்பேன். மணிவாங்கும் பொருட்டு மாநாகர் அனுப்பிய மீகாமனைக் கடல் மீது சென்றெதிர்த்த உங்களண்ணர், தனது போர் வீரர்களை இழந்ததுமல்லாமல் தானும் கட்டுண்டு கைதாயினர். கப்பல்கள் யாவும் கரைக்குலத்து மீகாமன் கைப்பற்றி விட்டானென்றனன்.

என்ற மாத்திரத்திலே வீரநாரணன் கண்கள் சிவக்கக் கடுங்கோபம் கொண்டு "பலசரக்குக் கொண்டு விற்கும் பட்டணத்தான் செட்டியனுப்பிய சேவகனா எனது தமையனாரைச் சிறைப்பிடித்தான். அவனை ஆழ்கடலில் வெட்டியமர் செய்து வென்றிலனேல் நான் வெடியரசன் தம்பியல்லேன்" என விருது கூறி, ஆங்காங்காளனுப்பித் தனது படை வீரர்களை வரவழைத்துத் தானும் யுத்தசன்னத் தனாயினான்.

போர்க்கோலங் கொண்ட வீரநாரணன், தமது கப்பல்களெல்லாவற்றையும் தயார் செய்து வாள், தண்டு, வளைதடி, சக்கரம் முசலம் ஏழு தோமரமாதியாம் படைவகைகளையும், பலவகையான தீன்பண்டங்கள் யாவுமேற்றி கொம்பு, குழல், தாரை, முரசு, மத்தளம், துடியாதி, வாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு மீகாமனைத் தேடிக் கடல்மீது வருகின்றான். இதற்கிடையில் மீகாமனது கப்பல்கள் நாகராசன் வீற்றிருக்கும் நாகமலைச் சாரலையடைந்து கல்லு வைத்துக் கட்டப்பட்டன. ஆதலால் அங்கு போனால் நாகராசனது பகைக்காளாக வேண்டி வருமெனத் துணிந்து மீகாமனது வரவு பார்த்து நின்று வழிமறித்துப் போர் புரியக் கருதி அவ்விடம் போகாது . வீரநாரணனும் இடையிலே கல்லு வைத்துக் கப்பல்களைக் கட்டிக் காத்து நிற்கின்றான்.

முன்னராகவே நாகமலைச் சாரலில் சென்று கப்பல் கட்டியிறங்கிய மீகாமன், நாகராசனுக்கு வேண்டும் பாற் குடங்களையும் எடுத்துக் கொண்டு சென்று அங்குள்ளதாகிய நாகவனம், பூகவனம், முதலாய சோலைகளையும், தடாகங்கள், நீரோடைகள், குன்றுகளாய காட்சிகள் பலவற்றையும் பார்த்துப் பரவத்தனாய் அற்புதச் செய்திச் சென்று நாகராசனது கோபுர வாயிலையடைந்து , தடாகத்தில் மூழ்கிச் சந்தியாவந்தனம் செய்து கண்ணகையாரையும் நினைத்து வணங்கிப் பாற்குடத்தோடு மாளிகையினுட் புகுந்து பல வாயில்களையுங் கடந்து அத்தாணி மண்டபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றான். ஏழு கோட்டைவாயிலையுங் கடந்து அரவரசன் அத்தாணி மண்டப வாயிலையடைந்த மீகாமன் அப்பாற் செல்ல முடியாது அவ்விடத்தே நின்றான்.

நின்ற மீகாமன் அவ்விடத்தே வெள்ளை வஸ்திரமொன்றை விரித்து அதன்மீது வெற்றிலை பாக்கு பழவகைகள், பலவகை மலர்வர்க்கங்கள், வாசனைத்திரவியங்களாதியனைத்தையும் பரப்பிக் கற்பூர வாலாத்தியேந்தி அரவரசைத் துதித்து மனதிற் தியானித்து தவத்தில் நிற்கின்றான். இதனையறிந்த நாகராசன் இவனது உண்மை நிலையை அறிந்தருளத் திருவுளங் கொண்டான். கொடிய விஷம் மிகுந்த பாம்பு வர்க்கங்கள் பலவற்றையுமேவினான். அவைகள் வந்து மீகாமனைச் சூழ்ந்து அவன் மீது ஏறி அவனது உருவம் தெரியாதவாறு எங்குமூர்ந்து சுற்றிக் கொண்டன. அந்நேரத்தில் அவன் கண்ணகையாரை நினைக்கவே, கண்ணகையாரவள் முன்தோன்றி ஒரு மந்திரத்தை உபதேசித்து மறைந்தருளினார். மீகாமன் அம் மந்திரத்தைச் செபஞ் செய்து நாகராசனைத் துதிக்கின்றான். இவன் தவநிலையைக் கண்ட நாகராசன் மனமகிழ்ந்து ஒரு வயோதிபப் பிராமணராக அவன் முன் எழுந்தருளினான். அவர் அவ்விடம் வந்த மாத்திரத்தே அவன் மீது நகர்ந்து மூடிக் கொண்டிருந்த நாகங்களெல்லாம் மறைந்தகன்றன. அப்போது அவ்வையர் மீகாமனைப் பார்த்து "நீயார்? இங்கு வந்த காரணம் யாது?" எனக் கேட்டார்.

அதைக் கேட்ட மீகாமன் அந்தணோத்தமரே நான் காவிரிப்பூம் பட்டணத்திலிருந்து வந்திருக் கின்றேன். வருணகுலத்தவன் மீகாமன் என் பெயர். மாநாகர் கட்டளைப்படி கண்ணகையாரின் காற் சிலம்பு செய்வதற்கு மாநாக மணி வாங்க வந்தேனென்று ரைத்தனன். அதைக் கேட்ட வேதியர் அப்படியாயின் நான் சென்று நாகராசனிடம் இச் செய்தியைத்

தெரிவிக்கின்றேனென்று சென்று தன்னரியணை மீதமர்ந்து கந்தொருவனைப் பார்த்து மீகாமனை அழைத்து வருமாறாணையிட்டு வீற்றிருந்தருளினார். கந்தருவனால் அழைக்கப்பட்டுச் சென்ற மீகாமன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் நாகராசனைக் கண்டு வணங்கியவர் முன்னிலையில் நின்று, ஆயிரஞ் சிரசுகளிலவனிதனில் போற்றும் ஆதிமூர்த்தியே! அழகிய பாற்கடலில் அரிதனக்கோ ஆசனமானவனே! அரிபிரமேந்திராதி தேவர்கள் தாம் அமிர்தம் பெறப் பாற்கடலைக் கடையுமன்னாளிற் தாம் பாம்பாக நின்றதற் பரனே! முப்புரமெரித்த அந்நாள் முக்கண்ணுடைய வண்ணல் தன் கைவில்லின் நாணாகத் திகழ்ந்த நாகராசனே போற்றி! என்று துதித்தனன். அந்நேரத்தில் நாகதேவன் உளம் மிக மகிழ்ந்து அங்குள்ள சித்தர்கள் முனிவர்களைப் பார்த்துப் பலவகை நவரத்தினங்களை வேண்டிய மட்டும் கொடுக்குமாறு கட்டளையிட்டுத் தானும் ஒன்பது பெரிய நீண்ட நாகங்களாக வடிவு கொண்டு வடதிசை நோக்கிப்படுத்திருந்து நாகரத்தினங்களையீன்று. பின்னர் அந்தணராக வடிவங்கொண்டு அவைகள் எல்லாவற்றையும் மீகாமனிடம் கொடுக்க, மீகாமனும் நாகராசனை வணங்கி அம் மணிகளைப் பெற்று செம்பட்டு வஸ்திரத்திலே மூடி அரண் செய்தான். அதன் பின்பு நாகராசன், மீகாமனுக்குப் பல வரங்களையுங் கொடுத்து விடையீந்தனுப்பினான். விடை பெற்ற மீகாமன் நாகராசனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டுக் கப்பலில் வந்தேறிப் பலவகை வாத்தியங்கள் முழங்க எல்லோருமானந்த வயத்வர்களாகி ஆடிப்பாடி ஆற்பரிக்கக் கப்பல்களிற் காவிர்ப்பூம் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டுக் காததூரம் சென்றனர்.

சிறிது தூரத்தில் மரங்கலங்கள் பரந்து வருவதைக் கண்ட மீகாமன், பகைவர்களே படை திரட்டி வருகின்றார்களென்பதையறிந்து தனது படை வீரர்களைப் பார்த்துப் போருக்கு ஆயத்தமாகும்படி தயார் செய்து வெடியரசனைப் பார்த்து, வருபவர்கள் யாரெனக் கேட்டான். வெடியரசன் தனது தம்பியாகிய வீரநாரணன் என்றோத அப்படியாயின் அவனைத் திரும்பிச் செல்லு மாறுத்தரவிடுக. நான் உன்னைக் கொண்டுபோய் மாநாகருக்குக் காண்பித்தனுப்பு கின்றேன் என்றான். அதற்கிசைந்த வெடியரசன் 'தம்பி! நீ வீணே போர் புரிய வேண்டாம் திரும்பி விடு. நான் உன்னிடம் வந்து சேர்வேன்' எனத் திருமுகமொன் றெழுதி அம்பில் வைத்தேவினான். தனது முன் நிலையில் வீழ்ந்த ஓலையை எடுத்து வாசித்த வீரநாரணன் மிகவும் கோபங் கொண்டு 'உன்னைச் சிறை பிடித்த மீகாமனை உவரியின் மேற் கொன்றுளக்கி உன்னையும் விடுவித்து அவனுடைய கப்பல்களுங் கவர்ந்திலனேல் நான் கடலரசன் தம்பியல்ல' என்றெழுதிய ஓலையை வெடியரசனுக்கு அம்புமூலமாக அனுப்பி மீகாமன் கப்பல்களைச் சென்று வளைத்துப் போர் தொடங்கினான்.

இரு திறத்தாருக்கும் இரண்டு நாட்களாக பெரும் போர் நடந்தது. ஈற்றில் வீரநாரணன் மீகாமனையணுகி வாள்ப்போர் செய்வோம் வருகவென அழைத்தான். அவ்வாறிசைந்த இருவருந் நெடுநேரம் போர் செய்து களைப்புற்ற மீகாமன் தனது கப்பலில் இருந்த வண்ணங் கண்ணகையாரை நினைக்கக் கண்ணகையார் தோன்றி வீரநாரணன் தலையில் மூலியொன்றுள்ளது. அதனால் அவன் உனது படைகளில் மாண்டொழிய மாட்டான். ஆதலால் இந்த வேலினாலெறிந்து வெற்றி பெறுகவென ஒரு வேற்படைக் கலத்தைக் கொடுத்து மறைந்து சென்றருள, அவ்வாறே மீகாமன் எறிந்த வேலினால் வீரநாரணன் மடிந்தான். தம்பியாகிய வீரநாரணன் தன் பொருட்டாக வந்த பொழுது தனது முன்னிலையில் மாண்டு மடிந்தமையைக் கண்ட வெடியரசன் புலம்ப, அவனை மீகாமன் தேற்றினான். வீரநாரணன் சேனைகளும் பின்னிட்டோடின மீகாமன் கப்பல்கள் விரி கடல் மேல் விரைந்தன.

## *விளங்கு தேவன் போர்*

கீரிமலைக் கண்மையிலுள்ள கடற் கோட்டை வாசலில் வீரநாரணன் தம்பி 'மெய் விளங்கு தேவர்' தனது வீரர்களின் மல்யுத்தப் பயிற்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது வீரநாரணன் போரில் தப்பியோடிய வீரனொருவன் வந்து விளங்கு தேவனைப் பணிந்து நின்று எம் தலைவ! அலைகடலில் வந்த மீகாமனுடன் பொருது உங்களண்ணர் வெடியரசன் தளைப்புண்டான் வீரநாரணன் போர்க்களத்தில் மடிந்தொழிந்தான். சேனா வீரர்களுள் இறந்தவர் போக எஞ்சியோர் பின்வாங்கி விட்டனர். என்று விண்ணப்பஞ் செய்தனன்.

இதனைக் கேட்ட விளங்கு தேவன் அண்ணாவைக் கொன்ற அம்மாற்றானைக் கொன்று என் அண்ணராம் வெடியரசனை மீட்காது வீடு திரும்பேனென்று சபதஞ் செய்து படைதிரட்டிச் சகல ஆயத்தங்களோடும் வந்து மீகாமனைச் சூழ்ந்து இருதினங்களாகப் பெரும்போர் புரிந்தான். அவ்வேளையில் மீகாமனும், விளங்கு தேவனும் ஒருவரோடொருவர்ஒத்த வீரர்களாய் வாள்ப்போர் செய்திளைத்து இறுதியில் மல்யுத்தம் செய்ய முனைந்தனர். அதனைக் கண்ட வெடியரசன் இருவரையும் விலக்கி உங்கள் அன்னராகிய என்மீது ஆணை இட்டுச் சொல்கிறேன். இருவரும் உங்கள் கோபந்தணிந்து சமாதானமாகுங்கள். எங்களுக்குள் இனிப்பகை வேண்டியதில்லை. நாங்களும் சோழநாடு சென்று திரும்புவோமென்றனன். இருவரும் வெடியரசனின் வேண்டுகோட்கிசைந்து சமாதான மாயினர். வெடியரசனது கட்டும் அவிழ்க்கப்படது. அவனுமாடையலங்காரம் செய்து யாவரும் கப்பலில் காவிரித்துறையை அடைந்தனர்

இதையறிந்த மாநகர் வீதிகளை அலங்கரித்துச் சகல மங்களவாத்தியங்கள் முழங்க மீகாமனை எதிர் கொண்டழைத்துச் சென்று மாளிகையிற் புகுந்தார். மீகாமனாற் கொண்டு வரப்பட்ட மணிகளை யாவருஞ் சென்று பார்த்து உவகை கூர்ந்தனர். மீகாமனுக்கும் பதினெட்டு வரிசைகளும் பற்பல பரிசில்களும், பட்டங்களும் கொடுத்து மாநகர் மகிழ்வித்தார். வெடியரசனுக்கும், விளங்கு தேவனுக்கும் வேண்டிய பொருட்களோடு அவர்களது கப்பல்களையுங் கொடுத்தனுப்பினார். அவர்களும் அங்கிருந்து மீண்டுவந்து இனிமேல் கடலாதிக்கம் எமக்கு வேண்டியதில்லையெனத் திட்டமிட்டு மட்டக் கொழும்பு என்னுமிடத்தில் குடியேறி கமஞ் செய்த வாழ்வாராயினர்.

## கண்ணகை அம்மன் திருக்கல்யாணம்

நாகமணி வந்தது கண்டு நன்மகிழ் வடைந்த மாநாகர் நன்நாளிலே மாசாத்தருடன் தொடர்பு கொண்டு தாம் நிச்சயஞ் செய்தபடி கண்ணைகையாரின் திருமணத்தை நிறைவேற்ற வேண்டுமென மனம் பொருந்தித் திருமண நாளுங் குறித்தனர். திருமணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களனைத்தும் செய்யத் தொடங்கிய மாநாகர், தமது மகளாங் கண்ணகையாருக்குரிய கவின்மிகு ஆபரணங்களைச் செய்விக்கும் போது சிலம்புக்குரிய பொன்னை உருக்கும் சமயத்தில் அப்பெண் மேற்குத்திசைப்பக்கமாக சூரியனுதயஞ் செய்வது போல் வேகமாக உருகிக் துற்சகுனங் காட்டிய போதும் வீதிமறைப்பின் பராமுகத்தால் சிலம்பும் நாகமணி உள்ளீடாக நவரத்தினங்கள் பதிந்து நன்கமைக்கப்பட்டது.

மேலும் மாந்தை நகரிலிருந்து வரவழைக்கப் பட்ட தபதியர்களினாலே மனமண்டபங்கள், மஞ்சனச் சாலைகள் , மணமேடைகள் முதலியனவும் அங்கு பணியாற்றும் சூத்திரப்பாவைகள் முதலாக வேண்டி யனைத்தும் வேண்டிய வாறே அமைக்கப்பட்டன. திருமணத்திற்கு வருமாறு சகல தேயத்தவர்களுக்கும் திருமணவோலைகள் மூலமாகவும், தூதர்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. யாவரும் வந்தனர். முகூர்த்தமும் நெருங்கியது.

மணமகனாம் கோவலனுக்கும், மணமகனாகிய கண்ணகைக்கும் மஞ்சள் நீராட்டி ஈரம் புலர்த்தி ஆடையாபரணங்களினாலே அலங்கரித்து இருவரையும் மணச்சாலையின் கண் அழைத்து வந்தமர்த்தினர். விவாகச் சடங்குகள் வெகு விமரிசையாக நடந்தன. மணமாலை சூடி மாங்கல்யம் தரித்து அறுகரிசி சொரிந்தாசீர்வதித்துச் சுடர்த்தட் டேந்தியாலர்த்திக் கண்ணூறு தீரக் கவின் மிகு திலகமிட்டு அரசாணி சுற்றி வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி காட்டி மாளிகையிற் புகுந்து மணச் சோறருந்தி மஞ்சத்தமர்ந்தனர்.

மஞ்சத்தமர்ந்த மணமகனாங்கோவலன் மாதுநல்லாள் கண்ணகையின் மாண்புமிகு தோற்றங் கண்டு கண்ணும், நெஞ்சும் களிகூர காதல் கூர்ந்து காதல் மது உண்டான் போல் மயலாகித் தன் காமவேட்கையைத் தனிக்கச் கருதிக் கண்ணகி பால் நண்ணினன். அவ்வாறு கோவலன் கண்ணகையை அணுகத் தொடங்குஞ் சமயத்தில்

*தொடங்கு கின்றவளவு தனிச்.. துய்யபுகட் கோவலர்க்கும்*
*மடம் பொருந்துங் கண்ணகைக்கும்.. மாறு கொண்டங்*
*கிடையாக*
*இடம் பொருந்து மக்கினியொன்.. றெழுந்தெரிந்து கொழுந்து*
*விட்டு*
*தடம் பொருந்து முகட்டளவும் .. சாரநின்று தளிர்த்ததுவே.*

இவ்வாறிருவருக்குமிடையில் உண்டாகிய அக்கினிக் கொழுந்ததைக் கண்ட கோவலன் அஞ்சி அம்மையாங் கண்ணகையைப் பார்த்து, நான் உன்னருகில் அணுகும் போது இவ்வக்கினிச் சுவாலை உண்டான அற்புதம் யாதென வினவினார். அதைக்கேட்ட கண்ணகையாள் கோவலனைப் பார்த்து நான் உங்களுக்கோர் பரம இரகசியத்தை இன்று ரைக்கிறேன். இதை நீர் எவருக்கும் சொல்லாதிருத்தல் வேண்டும். சொன்னால் இதனால் நடக்க வேண்டிய காரியங்கள் கெட்டழிந்துவிடும். நான் ஓர் தெய்வீகம் நிறைந்த அவதாரப் பெண்ணாக வந்தவதரித்தவள். என்னை நீரணுகுவீராயின் இங்குண்டாகி மறைந்த அக்கினியால் எரிந்து நீறாகி விடுவீர். நான் உலகாசாரப்படி உங்களால் மணநாண் பூட்டப் பெற்றதற்கமைய உமக்குரிய தொண்டுகளைப் புரிந்து பார்ப்பவர்கள் கொண்டாடும் பத்தினி போல் வாழ்ந்து வருவேனெனக் கூறி அருளினார். இவ்வற்புதத்தைக் கண்ணகையார் வாயாற் கேட்டறிந்த கோவலன், ஆரணங்கே உன் பெருமைகளை இன்ன தென்றறியாத நான், இன்றுன் வாயிலாக அவ்வற்புதங்களை அனுபவங்கள் மூலமாக அறிந்தும் உன்னையென் பத்தினியாகப் பெற்றது மென்தவப்பேறன்று உணர்ந்தேன். இனியுன் சொற்படியே நடந்து கொள்கின்றேனென்று உறுதியளித்துத் தனித்தனி மஞ்சத்துறங்கினார்.

## அரங்கேற்று அல்லது மாதேவி கூத்து

புண்ணிய புருடர்களென்று பூதலம் போற்றும் புகழால் மேம்பட்டவர்களும் புகலரிய புதுமைகளைச் செய்ய வல்லவர்களுமாகிய முப்பத்து முக்கோடியென்று மூதறிஞர்களால் கணிக்கப்படுகின்ற தேவர்கள் வாசஞ் செய்கின்ற பொன்னுலகத்தில் இராசதானியாக விளங்கும் இந்திர புரியென்றழைக்கப்படுகின்ற அமராபதியிலே அமரரனைவருக்கும் இறைவனாகிய தெய்வேந்திரன் தன் கொலுமண்டபத்தில் வீற்றிருக் கின்றான். கொற்றக் குடை நிழற்றக் குளிர்சாமரமிட்ட கோதை நல்லார் பலர் நின்று குற்றேவேல் புரியத் தேவர்கள் வந்து திருவடிகள் தொழுதேத்த அருந்தவ முனிவர்கள் ஆசிகூறி வாழ்த்தெடுப்ப அநேக மங்கள வாத்தியங்கள் அலை கடல் போல் முழங்க அத்தானி மண்டபத்தில் அமர்ந்திருக்கும் அமரேந்திரன் முன்னிலையில் அன்று ஊர்வசியின் நடனம் நடைபெறுகிறது.

மார்பகத்தின் கண்ணேயலங்கரிக்கின்ற மணிமுத்து மாலைகள் அசைய மணிமேகலா பரணமானது மருங்கிற்றிவள நவரத்தின சகிதமாகிய நற்பணிகள் நங்கை நல்லாள் மேனியெங்கும் பொங்குமெழில் பரப்ப அசைந்தாடுமழகார்ந்த பொற் கொடி போல் அணங்கின் நல்லாளான அவ்வுருப்பசி ஆட, அருகிருந்து கானப்பிரியராகிய நாரதமகா முனிவர் கந்தருவர்களுங்கண்ட அதிசயிக்கும் வண்ணமாகத் தன்து யாழை வாசித்த இன்னிசை யோடெழா நின்று பண்ணோடமைந்த பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கின்றார். தெய்வேந்திரனாதி தேவர்கள் பலரும் அன்றைய நடனத்தைக் கண்டு ஒன்றுமில்லாத வண்ணம் இன்று இவ்வூர்வசியின் நடனம் இவ்வளவு பிரமாதமாக இருக்கின்றதே என்று பெருமகிழ்வெய்தி அற்புதமடைந்தவர்களாய் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அச்சமயத்தில் அவ்விடத்தெய்திய அமரேந்திரன் குமாரணாய சயந்தன் ஆடலழகியாம் ஊர்வசியை ஆவல்மிக உற்று நோக்கினன். அவளது கண்களும் அவன் மேற் பாய்ந்தன. கண்ணோடு கண்ணினை நோக்கொத்த மாத்திரத்தில் கரைபுரண்டெழுந்த காதற் பிரவாகம் இரு வருள்ளங்களிலும் பிரவாகித்தது. அந்நேரத்தில் அலைகடல் மீதெழுந்த பூரணசந்திரன் போற் பொலிவுபெற்று விளங்கிய சயந்தனது காதலால் தன்வயமிழந்த ஊர்வசி மெய் மறந்து வியர்வை கொள்ள மேனி பசலை பூர்ப்ப வலியிழந்து சயந்தனைப் பார்த்துக் கைகூப்பி வணங்கி கதி அழிந்து மயங்கி வீழ்ந்தாள். இவ்வாறு மோகங் கொண்ட ஊர்வசி ஆகங்குழைந்து அறிவற்ற வனியில் வீழ்ந்ததைக் கண்ட நாரதருக்குத்

திகைப்பாகவிருந்தது. இவனிவ்வாறு விழுந்த தற்குரிய காரணம் யாதெனச் சிந்தித்தார். சிறிதில் உணர்ந்தனர். உண்மையை உணர்ந்த நாரதருக்கு உண்டான கோபத்துக்கு அளவேயில்லை. "ஊர்வசியாகிய உனது நடனத்தின் பொருட்டு நாரதன் ஆகிய நானேயிருந்து யாழ் வாசித்தினிமையாகப் பாடியும் நீ உதாசீனம் செய்து ஒழுங்கு வழியாடாது உன் மனத்தை அற்ப ஆசையின் மாட்டலைய விட்ட காரணத்தினால் நீ பூவுலகு சென்று கணிகையாகப் பிறப்பாயாக" என்று சபித்துச் சயந்தனைப் பார்த்து 'நீயும் இவள் மீது கொண்ட போகத்தைத் தீர்க்கும் பொருட்டுக் கன்ம பூமியாகிய காசினியிற் பிறந்து கணிகையாமிவள் மீது மோகங் கொண்டு முடிவில் இறந்துபடுவாயாக' என்று சாபமிட்டருளினார். அவ்வாறே இந்திரன் குமாரனாகிய சயந்தன் சோறுடைத்தென்று யாவராலும் புகழப்படுகின்ற சோழவள நாட்டிலே காவிரிப் பூம் பட்டணத்திலே வாழ்ந்த மாசாத்தராம் மாவணிகரின் மைந்தன் கோவலனாகப் பிறந்து கண்ணகையை கடிமணஞ் செய்திருந்தான்.

அவ்வாறே நாரதரிட்ட சாபத்துக்காளான நங்கை நல்லாள் ஊர்வசியும் சோழநாட்டிலே சிறப்புற்றுத் திகழ்ந்த திருக்கடையூரிலே கணிகையாகிய "சித்திராபதி" வயிற்றிற் சித்திரப்பாவை தானோ என்று கூறும்படியாகச் சிறந்த பெண்மகவாகத் தோன்றினாள். தமது தவப்பயனென வந்தவதரித்த தையல் நல்லாளுக்குத் தாயுந் தந்தையும் 'மாதேவி' என்று பெயரிட்டுப் பொற்றொட்டில் ஏற்றித் தாலாட்டி சீராஞ் சிறப்போட வளர்த்து வருவாராயினர். மாதேவியும் மதிக்கலை வளர்வது போல் மாநிலம் போற்ற வளர்ந்து ஐந்தாவது வயதிலே ஆசானிடம் சென்று சுபமுகூர்த்தத்தில் கல்வி கற்கத் தொடங்கிச் சகல கலைகளையுங் கற்று வரும் காலத்தில் மாதேவியார் தனது குலத்தொழிலாகிய நாட்டியத் தொழிலையுங்கற்க வேண்டுமென விரும்பிய பெற்றோர் சோழராசனால் பல விருதுகளவித்துப் பாராட்டுப் பெற்ற சிறந்த வித்தகனாகிய நட்டுவனாங் காளிங்கன் என்பவனிடம் நல்ல சுபமுகூர்த்தத்திற் சென்று நாட்டியக் கலையையும் கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினர். மாதேவியும் ஆரம்பக் கல்வி முதலாக நாட்டியக் கலையீறாகத் தாம் கற்க வேண்டியதாகிய எண்எழுத்து, இசை இறாக தாளங்கள் பண், பாடல்கள், நாட்டியங்கள், நடனங்கள், கூத்து வகைகள் ஆகியனைத்தையும் எவரும் அதிசயிக்கும் வண்ணம் பயின்று வல்லுனராயினன்.

*எண்ணுமெழுத்து மிசை மூன்றும் பண்ணேழும்*
*பண்ணமைத்த சடத்துப் பதினொன்றுங் – நண்ணிய சீர்*
*உற்றபதினென் கலையுமுணர்ந் துவமையறங்*
*கற்றனளே மாதேவியாள் காண்*

இவ்வாறு கற்று வருநாளில் மாதேவிக்குக் கன்னிப்பருவமும் வந்தெய்தியது. பருவத்தில் கன்னி பன்னரிய கலைகளிற் கலைக்கன்னி, கன்னியழ கொழுகுங் கட்டழகிற் கமலையாக விளங்கிய மாதேவியார் தனது ஆசானாகிய 'காளிங்கன்' எனும் நட்டுவனிடம் சொல்லி

*"பற்றுலகில் நல்ல நடம் சங்கீதம் பாவழகில்*
*மற்றுமிவள் சூடாமணி யென்று – உற்றதொரு*
*மட்டவிழ்த்தார் பொன்னி வளநாட்டிலே விருது*
*கட்டுவித்தான் மாதவியாள் காண்"*

நாட்டிய சூடாமணி யென்று விருது கூட்டி வீற்றிருக்கிறாள். அப்போதவள் கலைத்திறன் கண்டு அழுக்காறு கொண்ட நட்டுவர்கள் அவளது விருதுக் கொடியை அறுக்க வேண்டுமென அவாவுற்றவர்களாய் சோழராசனிடம் சென்று மாதேவி விருதுகட்டி எங்களெல்லோரையும் ஏளனஞ் செய்கிறாளென்று முறையிட்டனர். அதைக்கேட்ட சோழராசன் அதனை நான் நன்கறிந்து ஆவன செய்கின்றேனென்று காளிங்கனை அழைத்து நான் உனது மாதேவியாளின் நடனங்காண வேண்டுமென்றும் அதற்குரிய முகூர்த்தத்தைக் குறித்து அழைத்து வருமாறு கட்டளை இட்டான். நடன அரங்கும் முறைப்படி அமைக்கப்பட்டது. மாதேவியை அழைத்து வருமாறு தூது போக்கினான் சோழமன்னன்.

அந்நேரத்தில் அங்கு தோன்றிய விஞ்சையன் ஒருவன் சோழராசனை வணங்கினான். நீயார் இவ்விடம் வரக் காரணம் யாதென வினவிய சோழராசனை

விஞ்சையன் பார்த்து மன்னா நான் பொன்னுலகத்திலிருந்து வந்திருக்கின்றேன். இன்று மாதவியின் நடனம் காணவென்றே நாட்டம் கொண்டு வந்தேன். மாதேவியின் நடனம் மண்ணுலகிலுள்ளவர்கள் காணக்கூடியதொன்றல்ல. அவள் தேவமாதர்களில் ஒருவராகிய ஊர்வசியாவாள் என்று மாதேவி கோவலன் ஆகிய இருவரது பூர்வீகங்களையெல்லாம் எடுத்தும் புகன்றான். அவை அனைத்தையும் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்தனாய் இவ்வுண்மைகள் முழுவதையும் இன்னும் இருந்து பார்ப்போம் என்று விஞ்சையனோடு அரங்கேற்று மண்டபத்தையடைந்தான். அங்கே அரசனது கட்டளைப்படி அடையாபரண அலங்காரியாக அடரங்கில் வந்தடைந்த மாதேவி முதற்கண் மன்னனை வணங்கினான். அவ்வளவில் மங்கள வாத்தியங்கள் யாவும் முழங்கின. பலவகை ஆரவாரங்களும் அலைகடல் போலொலித்தன.

அன்று கோவலன் கண்ணகியைத் திருமணஞ் செய்த நாலாந் நாள் மாதேவியின் நடன அரங்கேற்ற ஒலியானது கோவலன் செவிகளிற் படவே யாதென வினாவியறிந்த கோவலன் நடன அரங்கை நோக்கிப் புறப்படுகின்றான். அதைக்கண்ட மாநாகர் மாதேவி மையல் விளைப்பாளாகையிலங்கு போவது தகுதியல்லவெனத் தடுத்துக்கூறியும். அப்படியெதுவும் நடந்து விடாதெனத் தெரிவித்து புறப்பட்டுச் சென்ற கோவலன் அரங்கேற்று மண்டபத்தையடைந்து சோழனை வணங்கியவர் பக்கத்திலிருந்து நடனங் காண்கின்றான். மாதேவி, கோவலனாகிய இருவரது மனமுங் கண்ணும் ஒன்றோடான்று மோதுகின்றன.

மாதேவியார் உரியமுறைப்படி இராக தாள வகைகள் தவறாத வண்ணம் யாவரும் பார்த்தும் கேட்டும் மகிழுமாறு நடனங்கள், நாட்டியங்கள், கூத்து வகைகள் ஆதியாடல் பாடல்களையெல்லாம் மிகவும் அழகாகவும், இனியவையாகவும் ஆடிப்பாடி அரங்கு ஏற்றினாள். பார்த்தவர்களனைவரும் பரவசமடைந்து அற்புதமற்புதமென மகிழ்ந்து மாதேவியைப் பாராட்டினர். மன்னவனாகிய சோழேசனும் அவ்வாறே மகிழ்ந்து மாதேவியாருக்கு வேண்டிய ஆடையாபரணங்களையும், பொற் காசுகளையும் வழங்கியும் திருப்தியடையாதவனாய் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னரிமாலை ஒன்றையும் வெகுமதியாகக் கொடுத்து இன்னும் வேண்டுவதியம்புதி என வினவினான்.

அப்போது மாதேவி மன்னனைப் பார்த்து மாநிலம் போற்றும் மன்னர் மன்னா! நான் பிறக்கும் போது என்னோடுடன் பிறந்த முத்தாபரணமொன்று என் கழுத்தில் இதோ உள்ளது. இதனை நான் அறுபதடிக் கம்பத்தின் மீது நின்று ஆகாயமார்க்கமாகச் சுற்றி வீசுவேன். இது யார் கழுத்தில் விழுகின்றதோ அவரை நான் என் கணவராக ஏற்று இல்லறம் நடாத்துவதற்கனுமதி தரவேண்டும். என்று பணிவுடன் வேண்டினள். அரசனுமதற் கியைந்தனுமதி கொடுக்கவே மாதேவியார் கம்பம் மீதேறினாள்.

கம்பத்தின் மீதேறிய மாதேவி தான் கற்றறிந்தாடிய கம்பங் கூத்தையுமாடியீற்றில் தனது முக்காரத்தைக் கழற்றி எறிய ஆரம்பிக்கும் போது தாயாகிய சித்திராபதி முத்து மாலையைக் கோவலன் கழுத்தில் விழும்படி எறிவாயாக என்று வேறெவருமறியா வண்ணம் வீணாகானம் செய்தாள். அதையுணர்ந்த மகளாம் மாதேவியும் அவ்வாறே அம்மாலை கோவலன் கழுத்துற வேண்டுமென்று கடவுளை நினைந்து வணங்கி மாலையை வீசினாள். வீசிய மாலையும் வினை வசத்தால் போலும் விண்மீது சென்று சுற்றி வந்து ஆடரங்கில் அமர்ந்திருந்து ஆவலோடு தங்கள் கழுத்தில் விழ வேண்டுமென அவாவுற்றிருந்த அனைவரையும் விலக்கி, ஆடவர் திலகனான மணமகள் கோவலன் கழுத்தில் வந்துற்றது.

மாதேவியர் மனம் திரிந்தபோதுங் கணிகைபாற் சேரல் கௌரவக் குறைவாகுமென்றுணர்ந்த கோவலன் வெகுண்டெழுந்து விரைவாக மாலையைக் கழற்றி வீசவே மாலை மறுபடி சென்று மாதேவி கழுத்துற்றது. இவ்வாறாக மாதேவியார் மும்முறை வீசியும் மும்முறையும் வீசப் பெற்ற முத்தாரம் கோவலன் கழுத்திலேயே வீழ்ந்தலங்கரித்தது.

அதனைக் கண்ட மாதேவி கம்பத்தினின்று இறங்கினாள். வணிகர் குலதிலகராகிய கோவலர் தங்களுடன் தடையின்றி மனம் பொருந்தி வரமாட்டாரென்றறிந்த சித்திராபதியின் மாதேவியின்

கரத்தில் ஒருவகை லேபனத் தைலத்தையும் தடவி வசியமாவதற்குரிய இருமருந்து பூசிய தாகிய தாம்பூலத்தையும் அவன் கையிற் கொடுத்து இத்தாம்பூலத்தைக் கோவலருக்குக் கொடுப்பாயாக வென கூறி விடுத்தனர். அங்கு நின்றவை கண் வந்த மாதேவி கோவலனைத் தன்னுடன் வருமாறழைக்க செட்டிக்குந் தாசிக்குந் தொடர்பில்லையெனக் கோவலன் மறுத்தனன். அப்போது மாதேவியாள் மனமுடைந்த வளாய் "அப்படியாயின் இத்தாம்பூலத்தையருந்தி எனது மாலையைத் தந்தருள்க." எனக் கூற அதற்கிசைந்து மாதேவியாற் கொடுக்கப்பட்ட தாம்பூலத்தை வாங்கியருந்தினார்.

வெற்றிலையை அருந்திய கொற்றவன் போற்கோடானு கோடி தனம் படைத்த கோவலன் மாதேவியிட்ட மருந்தினால் மையல் மிக்கடையவனாய் மதியிழந்து மனமுடைந்து மாதேவியாரைப் பின் தொடர்ந்தனன். கோவலன் தன்னை விட்டுப் பிரியானென்ற உண்மையை உணர்ந்த மாதேவி தான் கோவலரைக் கணவனாக ஏற்றுக் கொள்வதனால் கோவலன் தன்னனுமதியின்றித் தன்னை விட்டுப் பிரியக் கூடாதென்றும், தன் மனைவியாகிய கண்ணகையாரிடம் போகக் கூடாதென்றும், நாளொன்றுக்கும் தனக்கு ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் பணயமாக செலுத்தவேண்டுமெனவுந், தவறுங் காலத்திற் கோவலன் தனக்கு அடிமைப்பட்டவனாய் ஏவல் புரிய வேண்டுமென்றும் சோழனது முன்னிலையில் நிபந்தனையிட்டாள்.

நாரதரிட்ட சாபத்தால் நங்கை நல்லாள் மாதேவியின் மையல் வலையிற் சிக்கி மாநிலத்தில் மடிந்தொழியும் பொருட்டு வந்தவதரித்தவள் ஆகிய கோவலன் காம மயக்கத்தால் கருத்தழித்து, காரிகையாம் மாதேவியின் கருத்துக்கிசைந்து சோழராசன் முன்னிலையிலேயே சகல நிபந்தனை களுக்குமாகித் தான் நடந்து கொள்வதாக உடன்படிக்கை செய்து கொள்கின்றான். பின்னர் இந்த உண்மையை உலகறிந்து கொள்ளும் வண்ணமாக மாதேவியின் வேண்டுகோட்படி சோழரானது பட்டத்து யானை மீதமர்ந்து சோழ நாட்டைச் சுற்றி வலம் வருகின்றனர். யானை மீதமர்ந்த கோவலனும், மாதேவியும் நகர்வலம் செய்யும் போது கண்டவர்களெல்லோரும் கோவலனின் ஊழ்வினை இதுவோவென்றுள்ளுடைந்து வருந்தினர். ஆடலழகி யாம் மாதேவியாரின் மணமாலையைப் பெறும் வாய்ப்பு நமக்குக் கிடைக்க வில்லையேயென்று மனமுடைந்த காளையர் பலர் கோவலன் மீதழுக்காற்றடைந்தனர். கண்ணகையாரோ தனது கணவராகிய கோவலனாரின் மணக்கோலங் காணயான் செய்தமாதவப் பயன் யாதோ என்று மனமகிழ்ந்து அவர்கள் வரும் வழியில் பூரண கும்பம் பொலிவித்து விளக்கேற்றிச் சுடர்த்தட்டேந்திய தோழியர்கள் மூலம் ஆலாத்தியெடுத்து உபசரித் தருளினார். அந்நேரத்தில் கோவலன் நாணம் மிகுந்தவனாய் தலைகவிழ்ந்தப்பாற் சென்று மாதேவி வீட்டிற் போய் மதனும், ரதியும் போல் மலரனை மேவி மகிழ்ந்தினிதிருந்தனர்.

## கோவலரைப் பொன்னுக்கு மறித்த கதை

ஈருடலும் ஒருயிரும் போல் இணையில்லா இன்பந் நுகர்ந்திருந்த கோவலனும் மாதேவியும் இன்னலென்பதை அறியாதவர்களாய் இருவர் மனமுமொன்றாகி உண்டுடுத்து ஆடல்பாடலாதியாம் இன்ப நிகழ்ச்சிகளில் திளைத்தமையினால் நாட்கள் போவதே தெரியாமல் மறைந்தன. ஆறுவருடங்கள் அவை ஆறு நாட்கள் போல் அவர்கள் வாழ்நாளிற் கழிந்தன. அதற்கிடையில் நாளொன்றுக் ஆயிரத்தென் கழஞ்சு வீதம் பணயம் நல்கியதால், ஆணழகன் கோவலனின் அருநிதிக் குவியல்கள் ஆல் நல்லாள் மாதேவியின் மாளிகையிற் குவிந்தன.இதற்கிடையில் கோவலனது செய்குத்துக்கள் கப்பல்களீறகக் காணி பூமிகள், கால்நடைகள், யாவும் விலைப்படக் கோவலன் வறியவனானான். அவ்வாறவன் வறியவனானது மட்டுமல்ல மாதமொன்றுக்குரிய பணயக்கடன் காரணுமாயினன்.

ஒரு மாதகாலமாகப் பணயந் தவறியதால் கோபங்கொண்ட மாதேவியின் தாயாரான சித்திராபதி மாதேவியைப் பார்த்து இன்னுமேன் கோவலனிடம் குறித்த பொன்னை நீ வாங்கவில்லை. ஒரு மாதத்திற்குரிய பொன்னிலொன்றுங் குறையாமல் வாங்க வேண்டும் அல்லது அவனைப் பிடரியிற் பிடித்து தள்ளிவிட வேண்டுமென்று வற்புறுத்தினான். மாதேவியார் கணிகையர் குலத்திற் பிறந்தாலுங் கற்பு, ஒழுக்கங் குன்றாதவளாகையால் கனவனாங்

கோவலனைப் பிரிதலாற்றாளாய் தாயைப் பார்த்துத் தாயே! தாலிகட்டிய தன்மனைவியாகிய கண்ணகையாரையும் மறந்து அன்று முதலின்றளவும் ஆறு வருடங்களாக என்னையே உறுதுணையாகக் கொண்டு நான் கேட்டுக் கொண்டபடி பணயமுந்தந்து பாதுகாத்து வந்தவராகிய என் கணவரை இன்று வறியவராகி விட்டாரென்று தள்ளிவிட நீதியுண்டோ? அவர் இன்றல்ல நாளையேனும் நமக்குத் தரவேண்டிய பொன்னைத் தருவாரென்றுரைத்தாள்.

அதைக் கேட்ட சித்திராபதி கோவலனோ வறியவனாயினன். மாதேவியோ கோவலனைப் பிரிவதற்கு மனமிசையாதவளாயினள். ஆதலினால் எப்படியும் இதற்கொரு சூழ்ச்சி செய்து இவர்களைப் பிரிக்க வேண்டுமெனத் துணிந்து இருவரையும் வேறு கூறாக்கும் மருந்து சேர்க்கப்பட்ட பலகாரமொன்றைச் செய்து மாதேவிக்குண்ணுமாறு கொடுத்தாள். அம்மருந்தின் வலிமையினாலே மாதேவியாரின் மனம் மாறியது. கோவலன் மீது கொண்ட அன்பு ஆசாபாசங்கள் அனைத்துமவளை விட்டகன்றன. அவற்றுக்குப் பதிலாக அவன் மீது வெறுப்பும் ஆத்திரமுங் கொண்ட மாதேவி தன் பணயப் பொருளை வாங்கிக் கொண்டு அவனைக் கொன்று விடத் திட்டமிட்டாள்.

ஒரு நாள் மாதேவி கோவலனை மடியிற் பிடித்து இழுத்து வீழ்த்தி நீ கூறிய படி கடந்த காலமாகிய ஒரு மாதத்துக்குரிய முப்பத்தினாயிரத்து இருநூற்று நாற்பது கழஞ்சு பொன்னையும் இப்போது தருகின்றாயா? இல்லையா? எனக் கோட்டாள். மாதேவியின் மனமாற்றங் கண்டு வியப்படைந்த கோவலன் மானே இப்போது என்னிடம் பொன்னேது நீ அறியாயா? இன்றில்லை இன்னும் சில நாட்களில் தந்து விடுகின்றேனென்றனன். அதைக்கேட்ட மாதேவி அடங்காக் கோபங் கொண்டவளாய் இப்பொழுதே எனது பொன்னைத் தரவேண்டும். இல்லை யேலுன்னைச் சும்மா விடமாட்டேன் என்று கோவலரது கைகளைக் கட்டிச் சுடுமணலில் நிறுத்தி நெற்றியிற் கல்லுவைச் சவுக்காலடித்துத் தண்டித்துப் பொன்தந்தாலொழியக் கட்டு அவிழேனேன்று கனன்று செல்கிறாள்.

கட்டியடித்தாலுங் கையிலில்லாப் பொன் வருமோ வென்றழ திரங்கிய கோவலன் தன் வாழ்வின் மாற்றங்களையெல்லாம் நினைந்து சுடுமணலில் சூரியனின் கிரணங்கள் கருக்கக் கதிரவனைப் பார்த்த வண்ணம் பதைபதைத்து என் செய்வேனென்று ஏங்கியழும் போது கண்ணகையாரின் நினைவு வருகின்றது. கற்பரசியாங் கண்ணகையே, அன்று மணவறையில் மேவிய போது எங்கள் இருவருக்குமிடையில் எழுந்தெரியும் பெரு நெருப்பை உண்டாக்கிய நீ எங்கள் குலதெய்வமல்லவா உன்னைப் பிரிந்து இம்மாதேவியைப் பின் தொடர்ந்ததாலல்லவா நான் இன்று இத்துயரத்துக் காளானேன். பேசுதற்கரிய பிழைகாரன் ஆன காரணத்தால் அவதியுறுமென் அல்லல் நீயறியாத தல்ல ஆசையென்னும் பாசவலையிற் சிக்கி அறிவிழந்து கணிகை பாற் சென்று கருத்தழிந்து நின்று கதியற்றுத் திகைக்கும் எனது குற்றத்தை மன்னித்தெனக்கருள் புரிய வேண்டும்.

*இலையில் சேர் விழியாளே– இத உனக்குத்*
*தெரியுமடி*
*கலைமுழுது மளந்தவள் நீ – கற்பிலொரு தெய்வமும்*
*நீ*
*வலையறுக்கும் சுடரயில் நீ – மனதிலொரு*
*விளக்கொளி நீ*
*நிலைபார்த்தேன் வினையகற்ற – நீயருள்*
*செய்மாமயிலே.*

என்று நெஞ்சுருகி நின்று கண்ணகையாரைக் கோவலன் வேண்டுதல் செய்யும் பொழுது எங்கும் நிறைந்து நின்று அங்கங்களைத்தையும் ஆட்டுவிக்கும் ஆதிபராசக்தியும் அவதாரமாகிய கண்ணகைவார் அக்கோவலக்குற்ற துன்பத்தை நீக்கத் திருவுளங் கொண்டு தன் பாங்கியாரை அழைத்துத் தனது மணியணிப்பணிகள் பலவற்றையும் எடுத்துக் கொடுத்துத் தனது கணவரிடம் கொண்டு போய்க் கொடுத்து மாதேவியின கடனைத் தீர்த்ததன் பின் அவர் வருவதற்கு விரும்புவாராயின் சிவிகையில் ஏற்றியழைத்து வருமாறும் வருவதற்கு மனமில்லாது இன்னும் மாதேவி மேல் மையல் உளதாயின் நாகமணி சிலம்பிருக்கிறதென்றும் அதைவிற்றால் ஆறு நூற்றாண்டுகளானாலும் அல்லல் இன்றி ஆனந்தமாக

மாநிதியங் கொடுத்த மாதேவியை மருவி வாழலாமென்றுங் கூறிச் சிவிகையுங் கொடுத்தனுப்பு கின்றான்.

சிவிகையுடன் சென்ற சேடியர் கோவல னாரைக் கண்டு மணியணிகளெல்லா வற்றையும் அவரிடம் கொடுத்துக் கண்ணகையார் கூறியனுப்பிய செய்திகளையும் விண்ணப்பம் செய்து நின்றனர். அதைக்கேட்ட கோவலர் நான் மாதேவியின் அனுமதியின்றி எதையும் செய்ய முடியாத வகையில் சத்தியம் செய்திருப்பதால் அவளுக்குக் கொடுக்க வேண்டிய பணம் முழுவதையும் கொடுத்ததன் பின்னர் எப்படியாவது விடை பெற்று வீடு வந்து சேருகின்றேன். நீங்கள் போங்களென்றனுப்பி விட்டு மாதவியை அழைத்து ஆபரணங்களனைத்தையும் அவள் கையிற் கொடுக்கின்றார். அவளும் அதை வாங்கித் தாய் கையிற் கொடுக்கத் தாயாரும் அதனை உருக்கியுரைத்த மாற்றறிந்து நிறுத்துப் பார்த்த போது மேலும் இருநூற்றி நாற்பது கழஞ்சு பொன் கோவலனாற் கொடுக்க வேண்டியதாறிருந்தது. அந்நேரத்தில் மாதேவியினாற் கட்டவிழ்க்கப்பட்டுக் கட்டினின்றும் நீங்கிய கோவலன் மாதேவியைப் பார்த்து மாதே! என் மனைவி கண்ணகையார் சன்னி சுரத்தால் பீடிக்கப்பட்டு இறக்குந் தறுவாயில் இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. மாங்கல்யம் தரித்த காரணத்தினால்அவளுக்கு நான் செய்ய வேண்டிய அந்தியக் கடமைகளைச் செய்வதற்குக் கடமைப்பாடுடையேன். ஆதலால் நான் போய் அவைகளைச் செய்வதற்கு எனக்கனுமதி தருகவென்று வேண்டினான்.

அப்போது மாதேவியார் மிகுதியாகவுள்ள எனது பொன்னை எப்போது தருவீர்களென்று வினாவ, இன்னும் சில நாட்களுக்குள் தந்து விடுகிறேனென்ற கோவலனை அப்படியாயின் நீர் காவிரியாற்றின் கழுத்தளவு தண்ணீரில் நின்று சத்தியம் செய்து தருவீராயின் விடை தருவேனென விளம்பினாள். அதற்கிசைந்த கோவலன் காவிரியாற்றிற் சென்று இறங்கும் போது கூடிச் சென்ற மாதேவியார் அவரை ஆற்றில் தள்ளி வீழ்த்திவிட்டு வீடு திரும்பினான். எதிர்பாராத வகையில் ஆற்றிலமிழ்த்திய கோவலன் கண்ணகையாரை நினைக்கவே அவரின் திருவருளாலங்குள்ள சுறாவினங்கள் அவரைச் சுமந்து வந்து கரையில் விடுத்தன. கரையடைந்த கோவலன் மாதேவியின் வீட்டில் வந்து விடை தருமாறு கேட்டனன்.

ஆற்றினின்று ஆருயிர் பிழைத்தானென்று அதிசயமடைந்த மாதேவி கோவலனைப் பார்த்து நீர் போக வேண்டுமாயின் கற்கிணற்றிற் சென்று இந்தக் கும்மா குடத்தில் ஒரு குடந் தண்ணீர் கொண்டு வந்து வைத்து விட்டுப்போம். நான் உமது ஞாபகமாகப் பார்ப்பதற்கென்று பகர்ந்தனன். அவ்வாறுடன்பட்ட இருவரும் கிணற்றுக்குச் சென்று கோவலன் தண்ணீரள்ளும் சமயத்திலவனைக் கிணற்றினுள் தள்ளி வீழ்த்திப் பாரியதோர் பாறாங்கல்லையும் மேலே வீழ்த்தி வீடு திரும்பினாள் மாதேவி. அம்மாதேவியினாற் கிணற்றில் வீழ்த்தப்பட்ட கோவலன் கண்ணகையாரை நினைக்கவே, தலைக்கு மேல் வந்தகல் இடையில் அசைவற்று நின்று நிழல் கொடுத்தது. அச்சமயத்தில் கிணற்றிலுள்ள நீரானது பொங்கிப் பிரவாகித் தெழுந்த கோவலனைக் கொண்டு வந்து தரையிற் சேர்த்தது. வெளியே வந்த கோவலன் மாதேவி பாற் சென்று மனைக்கே விடைதருமாறு வேண்டினான்.

வேறு வழியில்லையெனக் கண்ட மாதேவி உமது ஆடையாபரணங்களை எனக்குத் தருவீராயின் அனுமதி வழங்குவேனென்றனள். அவ்வண்ணமே அரைஞான் முதலாக அவள் முன் கழற்றி வைத்து ஆத்திநாருங் கோவணமுமாக விடை பெற்று வீடுவந்த கோவலன் இக்கோலத்தில் நான் எப்படிக் கண்ணகையார் முன் இப்பொழுது போவது இரக்காலமானதும் போவோமென்று ஓர் ஆல மரத்தின் மீதேறியிருந்து பசியின் கொடுமையால் அதன் கண்ணுள்ள பழங்களைப் பிடுங்கி உண்ணுகின்றான்.

தண்ணீரெடுக்குமாறு அவ்வழியே சென்ற கண்ணகையாரின் பாங்கியர் கோவலனைக் கண்டு மீண்டு வந்து கண்ணகையாரிடம் விளம்பினர். கணவர் வந்திருக்கின்றாரென்றதும் அவருக்குரியதாகிய ஆடையாபரணங்களோடு சென்றவரை அழைத்து வருமாறாணையிட அவர்களுமவ்வாறே சென்று கோவலனை வருமாறு விண்ணப்பம் செய்யக் கோவலரும் ஆடையாபரணங்களை அணிந்து கால்

நடையாகக் கண்ணகையாரின் வீட்டுக்கு விரைந்து சென்றார். கண்ணகியாருங் கணவனாகிய கோவலரை எதிர்கொண்டழைத்து ஆசனத்திருத்தி சற்கரை வசனங்களை கூறி மகிழ்வித்து உணவருந்துமாறு செய்து ஒருவரோடொருவர் அளவளாவி நடந்த விபரங்களை ஒருவருக்கொருவர் கூறுகின்றனர்.

அந்நேரத்தில் அவமானத்துக்காளான கோவலன் மதுரை மாநகரம் சென்று வாணிபம் செய்து மாதேவியாரின் கடனைக் கொடுத்து விட்டுத் தாமும் வாழ்வாங்கு வாழவேண்டுமெனத் தெரிவிக்கவே கண்ணகையார் தானும் மதுரைக்கு வருவதாக விருப்பம் தெரிவிக்க இருவரும் புறப்பட்டு இரவோடிரவாகப் பிரயாணஞ் செய்கின்றனர்.

## *சிலம்பு கூறல்*

காட்டு வழிபல கடந்து கண்ணகையாருங் கோவலனும் கால்கடுக்க நடந்து மதுரை மாநகரை அடைந்தனர். ஆங்கேயவர்கள் இடைய சேரியிற் சென்று தம்மை எதிர் கண்ணடழைத்துச் சென்ற முதுமகள் ஒருத்தியின் வீட்டில் தங்கி இளைப் பாறியதன் பின் சமையல் செய்து சாப்பிட்டு அவர்கள் வீட்டிற் சில பகல் தங்கியிருந்தனர். ஒரு நாட் கோவலன் கண்ணகையாரைப் பார்த்து இடைய சேரியிலிருந்து இடுசோற்றை உண்டிருந்தால் உலககோரம்மை இகழ மாட்டார்களா?

ஏந்தியிழையாள் மாதேவியின் கடனை நாம் கொடுக்க வேண்டாமா, தன்மானத்தோடு வாழ்வதற் கொரு வழிகாண வேண்டாமோ என்று தன் வேதனைகளை ஒவ்வொன்றாக எடுத்து விளம்பினான். தன் கணவன் தாங்கொணாத் துயரால் வருந்துவதைக் கண்ட கண்ணகையார் தனது காலின் மணிச் சிலம்பைக் கழற்றி மதுரை மாநகரிற் கொண்டுபோய் விற்று வாணிபத்தை ஆரம்பிக்குமாறு சொல்லவே அதற்கிசைந்த கோவலன் காற் சிலம்பைக் கழற்றுகின்றான். சிலம்பு தவறுவதோடு துற்சகுனங்களு முண்டாகின்றன. அதனால் மனமுடைந்த கண்ணகையார், கோவலனுக்கு வேண்டுமறிவுரைகள் பலவற்றையும் எடுத்துச் சொல்லி ஆபத்துக்களிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்து கின்றார்.

அவற்றைக் கேட்ட கோவலன் கண்ணகையாரைத் தேற்றி விரைவில் வந்து விடுகிறேனென்று விழம்பிப் புறப்படும் போது இடைச்சியாகிய முதுமகளை அழைத்துத் தாயே!

*பொன்னே மணிவிளக்கே புருடராகமே*
*பொதுவர்குல நாயகியே பொற்கொடியே*
*அன்னேதவமே யறத்தின் பயனே*
*அடைந்தவர் தமக்குதவு மாருயிர்த்*
*துணையே*
*மின்நேர் பெறுங்காம விறல்பொற்*
*சிலம்பை*
*வெற்றி மதுரா புரியில் விற்றுவருமளவும்*
*தென்னாரு மாலைக்கருங்குழ வென்கின்ற*
*செய்யிளை யுந்தற் அடைக்கலம் அம்மா*

என்று கண்ணகையாரை ஆயர்குலக் கொழுந்தாமாச்சியிடம் அடைக்கலமாகக் கொடுத்துப் புறப்பட்டுச் செல்லுகின்றான்.

செல்லும் மார்க்கத்தில் ஒரு செம்மான் வீடு. வெளியே சென்றிருந்த செம்மான் வேர்த்துக் களைத்து மேனியெல்லாம் மெலிந்து வீட்டுக்கு வருகின்றான். வந்தவன் தன் மனைவியைப் பார்த்துத் தண்ணீர் கொண்டு வருமாறு பணிக்க மடியிற்கைக் குழந்தையை வைத்துப் பாலூட்டிக் கொண்டிருந்த செம்மாத்தி குடத்திலிருக்கிறது வார்த்துக் குடியுங்களெனச் சொன்னாள். தனது கட்டளைக்கமையாமையாற் கடுங்கோபங் கொண்ட செம்மான் மனைவியை அடித்தான். அதனால் ஆத்திரங் கொண்ட மனைவி “அங்கமிராண்டாய்க் கிடப்பாய் அரசனுன்னை முனித்திடுவான். அலியழைக்குமடா அநியாயம் செய்பவனே” என்று வாயில் வந்தபடி கூறி மண்ணள்ளிக் கொட்டித் திட்டுகிறாள். இதனைக் கண்ட கோவலன் ஏக்கங் கொண்டவனாய் இன்னலுற்றிரங்கி யொருவாறு தெளிந்து கடவுளை நினைந்து மனத்தைத் திட்டப்படுத்தியப்பாற் செல்கின்றான்.

சென்று கொண்டிருக்கும் மார்க்கத்தில் மலைக் குறத்தி ஒருத்திதென்படவே அவளிடம் சாத்திரங் கேட்கின்றான். அவள் கோவலனுக்கு நடந்ததாகிய விருத்தார்த்தங்களையெல்லாம் விபரமாகக் கூறி

நீர்மதுரைக்கேகுவது புத்தியல்ல உமக்கு அரசனாற் பகைவிளையுமெனக்குறி சொல்லுகிறாள். அதனையுங் கேட்டு அளவிலாத் துன்படைந்த கோவலன் ஆலவாயெம்பெருமானே உனது துணையன்றி யொன்றுமறியேனெனத் துணிந்து அப்பாற் சென்று மதுரைமாநகரத்தின் கண்ணுள்ளதாகிய அந்தணர், வணிகர், வேளாளர் ஆதியாந்தெருக்கள் தோறுஞ் சென்று சிலம்போ சிலம்பு என்று விலை கூறுகின்றான். சிலம்பைக் கண்டவர்களெல்லோரும் இச்சிலம்பை வாங்குவதற்கு எம்மிடந் தகுதியில்லை நீர் வேறெங்காவது கொண்டுபோய் வில்லுமெனக் கூறி அனுப்பினார்.

அவர்களைக் கடந்து அப்பாற் சென்ற கோவலன் கணிகையர் தெருவிற் சென்று விலை கூறினான். கட்டழகமைந்த கோவலனையும், கணித்தற்கரிய விலையுயர்ந்த சிலம்பையுங் கண்ட கணிகையர் கோவலனை ஏமாற்றிக் கவரப்பலவிதமான சூழ்ச்சிகளை கையாண்டனர். அவைகள் பலிக்காமற் பலனற்ற மையைக் கண்ட தவத் தாசியர்கள் ஒரு சிலர் கூடிக் கோவலனைத் துரத்திப் பிடித்து வீட்டுக் கிழுத்துச் சென்று சிலம்பைக் கவர்ந்து கொள்ளுமாறு தீண்டிய சமயத்தில் கண்ணகையாரின் கடாட்சத்தால் கடுங்கோபங் கொண்டது போல் நாகமணிச் சிலம்பும் கூறும்.

*"தாரை கொண்டு சலசலவெனச் .. சத்தமிட்டுப் பேசியதே*
*பாரை கொண்டதே வடியாள் .. பரத்தையரே கேளுமடி*
*ஆரை நான்கு சாதிகளும்.. அணையுந் துணிவுடையவள் நீ*
*துணிவு பெறுசிவனிடத்திற் ... சோதியெனச் சுடரொளியாய்*
*புனிதமுற்ற பூவைபதம்.. பூண்டவென்னைத் தீண்டாதே"*

எனச் சீறிச் சினந்துரைப்பக் கேட்டுச் சித்தங் கலங்கிய விலைமாதர் கோவலனைப் பணிந்து தம்மை மன்னித்தருளுமாறு வேண்டி விரைவில் விடை கொடுத்தனுப்பினர்.

தாசியாரின் மோகனவலையைத் தாண்டிய கோவலன் அப்பாற் சென்று பாடசாலையொன்றை அடைந்து அங்குள்ள ஆசானாகிய அந்தணர் கேசரி ஒருவரிடம் பலனைச் சொல்லுமாறு கேட்க அவனும் நாள்கோளறிந்து நன்றாக ஆராய்ந்து முன்னர் குறத்தி கூறியது போலவே நீர்மதுரைக்கு ஏகுவது புத்தியல்ல வீடு திரும்புவதே நன்றென விளம்பினன். வினைவசத்தால் கேடுவரும் போது மதிகெட்டு விடும் என்று வேறுவழியொன்றுமில்லையெனத் துணிந்த கோவலன் வீடு திரும்ப மனம் பொருந்தாதவனாகி நடப்பவை யாகவும் நடந்தேறட்டு மென்று துணிந்து அப்பாற் சிலம்பை விலை கூறிக் கொண்டே போகின்றான்.

இஃதிவ்வாறாக மதுரைக்கரசனாகிய பாண்டியன் பத்தினியாம் இராசமாதேவியின் பாதச் சிலம்பு பழுதடைந்து விடுகின்றது. பாண்டியன் தன்னரண்மனைப் பொற்கொல்லனாகிய வஞ்சிப் பத்தனையழைத்த மனையாளின் பாதச்சிலம்பிலுள்ள பழுது அகற்றி மூன்று நாட்களுக்குள் கொண்டு வந்து கொடுக்குமாறு பணித்துச் சிலம்பை ஒப்படைக்கிறான். சிலம்பை வாங்கிய பொற் கொல்லன் வீடு சென்று சிலம்பின் பழுது நீக்கி அரும்பொட்டிச் சிறுசுவரில் உலரவைத்துப் பிள்ளைகளிடம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டு வெளியே போகிறான். அந்நேரத்தில் அயல் வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடிச் சென்று மதுரைத் தட்டானின் மகன் ஓரால மரத்திலேறி அங்கிருந்த கருடன் குஞ்சை பிடித்த சமயத்தில் அது கைதவறி விடுகிறது. அதனால் துன்பங்கொண்ட தாய்க் கருடன் தன் குஞ்சின் பழியைத் தீர்க்கின்றேனென்று திட்டமிட்டு விரைவாக வந்து மதுரைத் தட்டான் தன் வீட்டுச் சுவரில் உலரவைத்திருந்த பாண்டிமாதேவியின் சிலம்பைக் கவர்ந்து சென்று சப்த சமுத்திரங்களையுங் கடந்து பொன்மலையின் கண்ணுள்ள ஓர் குகையில் வைத்துக் காத்திருந்தது.

வெளியே சென்ற வஞ்சிப்பத்தன் வீடு திரும்பினான். சிலம்பைக் காணவில்லை திகைத்தான், திடுக்குற்றான் எங்குந் தேடினான் கிடைக்கவில்லை. மனைவி மக்களைக் கோட்டான். அவர்களுந் தெரியாதென்றனர்.

*"செல்லமுகிற் சிறைபுரிந்த.. செழியனெனைமுனி..*
*யமுன்னம்*
*கல்லில் விழுந்துயிர்விடட்டோ.. கத்தி தன்னைத் தாடி..*
*யென்றான்*
*சொல்லி லென்ன நஞ்சையுண்டு.. சோதியுயிர்*
*விடுவ..னென்றான்"*

இவ்வாறு செய்வதறியாது திகைப்பெய்தி மனைவி மக்கள் அனைவரையும் அடித்துத் துன்புறுத்தி தற்கொலை செய்து கொள்ளத் துணிந்த சமயத்தில் வஞ்சித்தட்டான் மகளாகிய வன்னித்தட்டான் தகப்பனை நோக்கித் தந்தையே சிறிது நேரத்தின் முன் ஒரு செட்டியார் இவ்வழியே நாகமணிச் சிலம்பொன்றை விலை கூறிச் சென்றார். நான் இப்போது தான் பார்த்து வந்தனெனக் கூறினான். சாமுடற்குயிர் வந்தெய்தியது போல் இச்செய்தியைக் கேட்ட பொற் கொல்லர் எங்கேயவரை நான் சென்று பார்த்தேன் வருகிறனென்று மிகவும் விரைவாகக் கோவலனைத் தேடிச்சென்று காண்கிறான்.

மணிச்சிலம்பு விலை கூறும் மாவணிகர் கோவலனைக் கண்ட மதுரைத் தட்டான் அறிந்தவன் போலருகே சென்றளவளாவி அவர் வரலாறனைத்து மறிந்து தான் அச் சிலம்பை அரசனாகிய பாண்டியனிடம் கொண்டுபோய் விற்றுத் தருகிறேனென்றழைத்த சென்று பாண்டியன் முன் நிறுத்தினன். பழுதகற்றி வைத்த பாதச் சிலம்பை திருடிச் சென்றானென்றும் தான் பின் தொடர்ந்து விற்றுத் தருவதாகச் சொல்லி இங்கழைத்து வந்தேனென்றும் இதோ உங்கள் சிலம்பெனக் கூறிக் கள்வனைக் கைப்பொருளுடன் கொண்டு வந்திருக்கின்றேனென்றனன். பாண்டியனும் பாங்கரில் நின்ற கோவலனைப் பார்த்து உமது வரலாறு கூறுக எனக் கோவலர் தன் வரலாறனைத்தையுங் கூறினார். அதைக்கேட்ட வஞ்சிப்பத்தன் அரசே! கள்ளனிடம் கேட்டால் உண்மையுரைப்பானா? இச்சிலம்பை இவ் ஏழை வணிகளின் மனைவி பூண்டானென்றால் இதை நீங்களும் நம்புகிறீர்களா? யாராவது சிலம்பு விற்பவர்கள் ஒற்றைச் சிலம்பையும் விற்பதுண்டா? அன்றியும் நான் செய்த சிலம்பை எனக்குத் தெரியாதா? இன்னும் சந்தேகமென் அரசே என்றனன்.. அதைக்கேட்ட பாண்டியன் என்ன இருந்தாலும் வேறு ஆதாரங்கள் உண்டோ என்றறியும் பொருட்டுத் தட்டானிடம் சிலம்பைக் கொடுத்துப் பாண்டிமாதேவியிடம் போய் உமது சிலம்பு தானோ என்றறிந்து வருமாறனுப்புகின்றான்.

பாண்டிமாதேவியிடம் சென்ற பொற் கொல்லன் மீண்டு வந்து தேவியார் தன் சிலம்பென்றே கூறுகின்றார் எனப் பொய் வார்த்தை கூறினான். தட்டானின் சொல்லை நம்பிய தமிழ்மாறன் கோவலரைக் கொல்ல நினைத்த யானைப் பாகர்களை வரவழைத்துக் கோவலனை யானையால் இடறும்படி கட்டளையிடு கின்றான். பாகர்கள் யானையை மதப்படுத்திக் கொண்டு வருகின்றனர். வஞ்சிப்பத்தன் கோவலன் கைகளைக் கட்டியிழுத்து வந்து யானை முன் விழுத்துகின்றான். யானையின் காலடியில் வீழ்ந்த கோவலன் தான் கள்வனல்லவென்றுங் கண்ணகையாரின் காற்சிலம்பை விற்பதற்காக வந்தேனென்றும் தன் மீது குற்றமில்லை என்றும் கூறிப்புலம்புகின்றார். பாகர்கள் யானையைத் தூண்டிக் கோவலனைக் கொல்லுமாறேவுகின்றனர். அந்நேரத்தில் கண்ணகையாரின் கணவரென்றதுமே.

*"ஏவுகின்ற வாரணமும் .. இயற்கை செறி கோவலரைக்*
*காவி விழிக் கண்ணகையார்.. கணவரென்று*
*சொன்னதனால்*
*மேவுகின்ற வுலகமெல்லாம்..வித்தெனவே*
*பெற்றெடுத்து*
*ஆவிகொண்ட உலகமெல்லாம்.. அறம் வளர்க்கும்*
*சீமாட்டி*
*ஆரணிதன் கணவனையான்.. அடித்துகளாய்*
*வதைத்தேனேல்*
*காரணிக்கத் தெரிவுமதால்.. கடுமை*
*யென்றுமனதிலெண்ணி"*

பாகர்களும் அஞ்சும் வண்ணம் பாகர்களைச் சீறிச் சினந்து கோவலனை வணங்கிக் கையூதியவ்விடம் விட்டகன்றது.

இதையறிந்து பாண்டியனிடம் வஞ்சிப்பத்தன் சென்று சோழ நாட்டவன் மருந்து மந்திரத்தால் வல்லவனென்றும் அவன் யானையை மட்டுமல்ல வளர்ந்தெரியும் பெரு நெருப்பையும் தடுத்து விடுவானென்றும் அவனைச் சும்மா விடக்கூடாது.

விட்டோமேயானால் நம் நாட்டையும் நாட்டு மக்களையும் நாசமாக்கி விடுவானென்றும் மழுவாற் பிளப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தனன். ஊழ்வினையின் பெருவலியால் மதியிழந்த மன்னன் பொன் செய் கொல்லன் வார்த்தையை நம்பி இராசமாதேவியின் சிலம்பைத் திருடியவன் இன்னும் என்னதான் செய்யாமாட்டானென்று முன்னரிலும் மிகுந்த கோபங் கொண்டு கொலைஞர்களை அழைத்துக் கோவலனை கொன்றுவிடுமாறு கட்டளையிடுகின்றான். கோவலருங் மால கருங் கொலைக்களங்குறுகினர்.

கோவலன் வரலாறறிந்த கொலைஞன் கோவலரை ஓடி உயிருய்யுமாறு உரைக்கின்றான். அதற்குடன்படாத கோவலன் தான் செய்த தவறுகளினால் தனக்கு உண்டான மானபங்கங் களைனைத்தும் தன்னோடு மறைந்து மாய்ந்து போகட்டும் நீயென்னைப் பிளந்து வைப்பாயாக என ஆணையிட்டு அங்குள்ள கல்லிற்படுக்கின்றார். கடவுளை நினைத்து அரசனது கட்டளைப்படி பிளப்பதாலெங்கண் மீது குற்றமில்லை எனத் துணிந்த மாலகன் கோவலரைப் பிளந்து பாண்டியனிடம் சென்று விண்ணப்பம் செய்து வீடு திரும்பினன்.

## உயிர் மீட்சி

கோவலன் கொலையுண்ட வரலாறனைத்துங் கோதை நல்லாள் கண்ணகையார் இடைய சேரியில் கனவிற் காண்கின்றார்.

*"முத்து மணி தெறித்திடவும் – முன்றானை தீப்படவும்*
*ஒத்ததிரு மங்கிலியம் – உடனறுந்து வீழ்ந்திடவும்*
*தத்திவரு கொம்பனொன்று – தானிறந்து வீழ்ந்திடவும்*
*நந்துநிகர் நகை விழவும் – நாரியர்களலறிடவும்"*

கண்டெழுந்த கண்ணகையார் குணவனாகிய கோவலனை நினைந்து தலையில் அடித்துக் கொண்டு பூமியில் வீழ்ந்து புரண்டுருண்டு புலம்புகின்றார். இடைச்சியர்கள் ஓடோடி வருகின்றனர். பொன்னானமேனி புழுதிபடக் கூந்தல் குலைந்து சோரக் 'கூ''கூ' வென்றலறும் கோல் வளையாங் கண்ணகையாரைப் பார்த்து அம்மா! இப்படியேன் அழுகின்றீர்கள். இங்கே என்ன நடந்து விட்டது எனக் கேட்டனர். அதைக்கேட்ட கண்ணகையார் நான் என்னென்று என் வாயால் எடுத்துச் சொல்வேன். நடக்கக் கூடாதெல்லாம் நடந்துவிட்டது. என்கணவர் என்னை விட்டுப் பிரிந்து விட்டார். சிலம்பு விற்கச் சென்ற என் செல்வரைத் தன் சிலம்பைத் திருடிய கள்வன் என்று தமிழ்மாறன் கொன்று விட்டானென்றலறினாள்.

அதைக்கேட்ட முதுமகள் அம்மா வருந்தாதே அப்படியொன்றும் நடந்திருக்க முடியாது. இதோ நான் சென்று பார்த்து வருகிறேனென்று பால், தயிர், மோர் இவைகளைச் சுமந்து கொண்டு விலை கூறிச் செல்பவள் போல் கோவலனைத் தேடிச் செல்கின்றான் கோவலனைக் கொன்ற சங்கதியை யாராவது பேசுவார்களேயானால் அவர்களையும் பாண்டியராசன் கொன்றுவிடுவானென மதுரைப்பத்தன் மறைமுகமாக வதந்தியைப் பரப்பியிருந்ததால் இடைச்சியாகிய மதுமகன் எங்குந் தேடியீற்றில் கொலைக்களத்திலே கொலையுண்டிருந்த கோவலனைக் கண்டான். துயரந்தாங்க முடியவில்லை தான் கொண்டு சென்ற சுமையைப் போட்டடித்து அதற்காக அழுபவள் போலழுது பின்தேறி வீடுதிரும்புகிறாள். அவள் மனம் மாறுகிறது. கோவலன் இறந்து விட்டான். கண்ணகையோ கைமையாகி அநாதையாக இருக்கின்றாள். கட்டழகோ, குணமோ, ஒழுக்கமோ, இளமையோ ஒன்றுங் குறைவின்றி நிறைவு பெற்றவள் எப்படியும் எனது மகனுக்கே இவளை மணஞ் செய்ய வேண்டும் என்று துணிந்த இடைச்சியம்மை வீடுவந்ததும் தனது வரவையே எதிர்பார்த்திருந்த கண்ணகியாரே நோக்கி அப்படியொன்றும் நடந்து விடவில்லை. கோவலன் உயிரோடு வந்து சேருவானெனக் கூறினாள்.

இடைச்சியம்மையின் இதயபூர்வமான எண்ணங்கையெல்லாம் அறிந்த கண்ணகையார் கடுங் கோபங் கொண்டு நீ சென்று கொலையுண்டிருந்த என் கணவரைக் கண்டு உனது பாற்குடத்தைப் போட்டடித்து

புலம்பவில்லையா?உன் மனதிலுள்ளதாகிய எண்ணத்தை நான் அறியாதவளல்ல. உன்னிடத்திலே அடைக்கலம் புகுந்தவளாகிய எனக்குத் துரோகம் நினைத்தவன் நீ இதோ உன் வீட்டைப் பார் என்று உற்றுப் பார்க்கவே கண்ணிலிருந்து தோன்றிய தீயினால் வீடு தீப்பற்றி எரிந்தது. இவ் அதிசயத்தைக் கண்ட இடைச்சியர்கள் அச்சங்கொண்டு ஓடோடி வந்து அம்மா காப்பாற்றுங்கள். அறியாமற் செய்த குற்றத்தை மன்னித்தருள் புரிய வேண்டுமென்று பணிந்தனர். அடைக்கலம் புகுந்த இடத்து ஆதரித்தமையாலும் அடைந்தவர்களைக் காப்பாற்றும் அருட்டிறத்தாலும் அவ்வக்கினி குளிர அருள் செய்த நிரபராதியாகிய என் கணவரை வதைத்த நெடுஞ்செழியன் வீற்றிருக்கின்ற இந்தமதுரையை,

*எரிக்கிரையாய்த் தான் கொடுத்து*
*இருந்தரசன் முடியறுத்து*
*பரிக்கு மந்தத் தட்டானை*
*பழிவாங்கி மீளேனேல்*
*வரிக்குமிந்த முலை சுமந்த*
*மாதிரினி யல்லவென்று*
*எரிக்கு நிகர் சாபமிட்ட*
*ஏந்திழையா னெழுந்தாளே.*

இவ்வாறு சபதஞ் செய்தெழுந்த கண்ணகையார் கண்ணீருங் கம்பலையுமாக மதுரை மாநகரரெங்கும் தேடிப் பாடசாலை மாணவனொருவன் வழிகாட்டச் சென்று கொலைக்களத்தே பிளப்புண்டு கிடந்த தன் நாயகனின் உடலைக் கண்டு உளங்குலைய ஓடோடிச் சென்று மேலே வீழ்ந்து புலம்பினார். பின்னர் இறைவராகிய திருவாலவாயெம்பெருமானை வேண்டியவரினருள் பெற்றுக் கணவனாகிய கோவலனை உயிர்பெற்றெழச் செய்து நடந்த வரலாறனைத்தும் வழுவாது கேட்டு முன்னரிலும் மூண்டெழுகின்ற கோபாவேசங் கொண்டு உமது களங்கந் துடைக்குமாறு நான் இப்பொழுதே பாண்டியனிடம் போகின்றேன். நீதி கேட்கின்றேன். நிட்டுரனாகிய பொற்கொல்லனையும் அவன் சொற் கெட்ட நியாயமாக உம்மை வதைத்த அப் பாண்டியனையும், அவனது பட்டணமாகிய மதுரையும் எரித்துச்சாம்பராக்குகின்றேன். நீரும் சாயுச்சிய பதமெய்தியின்புற்று இருப்பீராக என விடை கொடுக்கக் கோவலனுடலும் நிலை குலைந்தது. கண்ணகையார் கொற்கையர்கோன் கொலுமண்டபம் நாடிப் புறப்படுகின்றார்.

## வழக்குரையும் மதுரை தகனமும்

கொலைக்களத்திலிருந்து புறப்பட்ட கண்ணகையார் பாண்டியன் கொலுமண்டபம் நோக்கிச் செல்கின்றார். விரிந்த கூந்தலும் விறுவிறுப்பான நடையும் கையிற் பிடித்த காற் சிலம்பொன்றும் கண்ணீர் வழிந்தோடுங் கண்களும் மெய்யிற் படிந்த பூமியுமாகக் கமலமலரடி சிவக்கக் காசினியில் நடந்துவருங் கண்ணகையாரைக் கண்டவர் பலருமஞ்சினர். “ கொஞ்சமும் அஞ்சாது குற்ற மற்ற என் கணவராங் கோவலரைக் கூர்மழுவாற் பிளப்பித்த கொடுங்கோல் வேந்தன் கோவில் எங்கே எங்கே ” என்று வினாவிய வண்ணம் விரைந்து சென்ற கண்ணகையார் வேல் மாறன் வீற்றிருக்கும் கோட்டை வாயிலையடைகின்றனர்

இதற்கிடையில் பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியார் பயங்கரக்கனவொன்றைக் கண்டெழுந்து பாண்டியனிடம் கூறப் பாண்டியன் மனையாளைத் தேற்றித் தனக்கு எந்த விதமான தீமைகளும் வராதென்றும் இந்திராதி தேவர்களே தன் பெயர் கேட்டால் அஞ்சி நடுங்குவார்கள் என்றும் கூறிக் கொலுமண்டபத்து வந்திருக்கின்றான். கோபுர வாயிலிற் குறுகிய கண்ணகையார் அங்கு நின்ற வாயிற் காவலனைப் பார்த்துக் காவலோய் பாண்டிய மாதேவியின் பாதச்சிலம்பைத் திருடிக் கொடிய மழுவுக்கிரையாகிய கோவலன் தன் தேவியாங் கள்வர் குலக்கள்ளி கண்ணகை வந்திருக்கின்றேன் என்ற செய்தியை உன் மன்னனிடம் தெரிவிப்பாயாக என்றனள். கண்ட மாத்திரத்தே கதிகலங்கிய காவலன், பாண்டியன் முன்சென்று பாதங்களை வணங்கி விண்ணப்பஞ் செய்தனன். அப்படியாயின் அவளை இங்கேயனுப்புக என்ற ஆஞ்ஞையின் படி கண்ணகையார் அரசசபையிற் சென்றார். அங்கு சென்றதும் அங்குள்ள அசையோருக்கபயமென்று தன் வணக்கத்தைத் தெரிவித்துப் பின்னர் அரசனை நோக்கினார்.

அரசரென்று படிபுரப்போர் அடாது செய்தவர்களைத் தண்டிப்பதேயன்று அநாதை வணிகனை ஆய்ந்தோய்ந்து பாராது அநியாயமாகக் கொலைபுரிபவர்களா, வறுமையின் கொடுமையை நீக்கி மறுமலர்ச்சி காணும் வண்ணம் மனைவியின் காற்சிலம்பை மதுரைமாநகரிலே வியாபாரஞ் செய்யும் பொருட்டு வந்த என் கணவனைக் கொன்ற கொடுங்கோலன் நீதானாவெனக் கேட்டார்.

கோல்கோடிய கொற்றவன் நீதானாவென்று கேட்ட மாத்திரத்திலேயே கோபங்கொண்டவனாகிய பாண்டியன் ஆத்திரத்தாலறிவிழந்து அளவறியாமற் பேசு மாடவளே! நீயார் உன் ஊரெது, பேரெது உரைக்குதி என்றனன். எனது நாடு சோழநாடு சோழவளநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டணத்தில் கணித்தற்குரிய புகழால் மேம்பட்ட வணிகர். குலதிலகன் மாநகர் மகன், என் பெயர் கண்ணகை. அந்நகர் வாழ் மாசாத்துவான் மகன் கோவலன் என் கணவர். அவர் மாதேவிக்கு மாநிதியம் தோற்ற காரணத்தால் மாநாகமணி உள்ளீடாகச் சமைந்த காற்சிலம்பை நீ திருடியதுமல்லால் என் கணவரையும் இரு பிளவு செய்தனையே இதற்குரிய நீதிகோரியே இங்கு வந்திருக்கின்றேனென்றார். அது கேட்ட பாண்டியன் உன் சிலம்பு நாகமணிச் சிலம்பொன்று சொல்லுகின்றாயே உனக்கு எப்படி நாகமணி கிடைத்தது என வினாவினான்.

என் தந்தையாகிய மாநகர் மாநாகத்திடம் போய் மணிவாங்கும் பொருட்டு மீகாமனை விடுத்த வழிமறித்த கடலரசனான வெடியரசனையும் அவன் துணைவரையும் வென்று நாகதீவிற் சென்று மணிவாங்கி வந்து சிலம்பு செய்த பின்னரே இரு பிளவான கோவலர்க்கும், எனக்கும் திருமணம் நிறைவேறியது. அத்தகைய சிலம்பையே நீயபகரித்தாய். என் கணவரை வதைத்தாய். அவரைப் பார்த்த மட்டிலேயே அவர் ஒரு செட்டியென்பதை உன்னால் கண்டு கொள்ள முடியவில்லையே எனவுரைத்தார்.

செட்டியானாலென்ன வேறு எந்தத் தேவ னானாலென்ன அரண்மனைப் பொருளாகிய அரச மாதேவியின் அணிச்சிலம்பைத் திருடினவனை சும்மா விடுவேனா? கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் அவர்தம் கடமையாதலினாற் கொன்றெனென்று கூறினான். அரண்மனையிற் திருடியதைக் கண்ட துண்டா இல்லைக் கேட்டதுண்டா? இல்லச் சாட்சிகள் ஏதாவதுண்டா எனக் கேட்க, ஆம் அரசமாதேவியின் சிலம்பைப் பழுதகற்றி வைத்த வஞ்சிப் பத்தன் வீட்டிலேயே சிலம்பு திருடப்பட்டது. அரண் மனைத் தட்டானாகிய வஞ்சிப்பத்தன் கையும் களவுமாகப் பிடித்துக் கைப்பொருளோடு கொண்டு வந்தனன். அன்றியும் தட்டானையனுப்பி என் மனைவியின் சிலம்புதானா என்று விசாரித்தறிந்த பின்பே மரண தண்டனை வழங்கினேன் என்றனன் பாண்டியன்.

பாண்டியன் இவ்வாறு கூறிய மாத்திரத்தில் பத்தினியார் கண்ணகை, பாண்டியனைப் பார்த்து "மதிகெட்ட மன்னனே உன்சிலம்பைக் காணவில்லை யென்றதும் வஞ்சிப்பத்தன் வழிப்போக்கன் ஒருவனை பிடித்திழுத்து வந்து திருடன் இவன்தான் என்று விட்டால் உடனே அவனைக் கொன்று விடுவது தான் உன் நீதியோ? என் கணவரைக் கள்வன் இவன்தானெனக் கொண்டு வந்து நிறுத்திய கொற்கொல்லனையா இராசமாதேவியிடம் விடுவது. அவள் தன்னுடையவென்றோ அல்ல வென்றோ சொன்னதை நீ எப்படி உள்ளபடி அறிவாய். தூர்த்தனாகிய பொற்கொல்லன் சொல்லை மதித்தத் துண்டித்த என் கணவரை உன்னாலெனக்குத் தரமுடியுமா, உன்னிடத்திலே யான் அரசன் என்ன செய்யினும் என்னைக் கேட்பவர் யார்? என்ற மமதை குடிகொண்டு விட்டது. அதனையடக்குவதற்காகவே வந்திருக்கின்றேன். இதோ உன் மனைவியின் சாட்சியைக் கேட்டேனென்று சொல்லுகின்றாயே அஃதுண்மையானால் இப்போது உன்மனையாள் என் சிலம்பைத் தன்னுடையதென்றுரைப்பாளாயின் இப்பொழுதே தான் வழக்கிழந்து போகின்றேன் இல்லையேல் உன்னைப் பழிவாங்கியே தீருவேன் என்றனள்"என்ற மாத்திரத்தே தான் நீதி தவறி விட்டேனென்ற காரணத்தால் பாண்டியன் முகம் வாடியது. பாண்டியன் தலை கவிழ்ந்தான். பார்த்து நின்ற கண்ணகையார் அவையகத்தோரே கேட்டீர்களா அரசியின் சாட்சியத்தை இப்போது அரசர் என்ன

சொல்லப் போகின்றார். இது மட்டுமா இராசமாதேவியிறன் இணைச் சிலம்பு இவரிடம் இருந்ததல்லவா, அதனோடு என் சிலம்பை ஒப்பிட்டுப் பார்த்திருக்கலாமே. இவரின் முத்துச் சிலம்புக்கும் எனது நாகமணிச் சிலம்புக்குமுள்ள பேதத்தை உடனேயே உணர்ந்து கொள்ளலாமல்லவா? எங்கே என் சிலம்பு? இங்கே கொண்டு வருக. அதனையனைவரும் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்வதற்கு என்று கண்ணகையார் கேட்கப் பெண்ணின் சொல் கேட்டு ஏவல் செய்வதற்காக நானிங்கிருக்கவில்லை என்றனன் பாண்டியன். இதைக் கேட்ட கண்ணகையார் ஏளனமாகச் சிரித்து அரச சபையிலே ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா, நல்லது நீ கொண்டு வரமாட்டாய் இதோ நான் எனது சிலம்பை இவ் இடம் வரவழைக்கின்றேனெக் கூறி,

*"அன்றெனக்கு மணமுடிக்க ... ஐயர் செய்து காலிலிட்ட*
*நன்று நாகமணிச் சிலம்பே... நற்சபையில் வருவாயே"*

என அழைத்த மாத்திரத்தில் கண்ணகையாரின் நாகமணிச் சிலம்பு பாண்டியனின் பெட்டகத்தின் பூட்டை முறித்துப் புறப்பட்டுச் சலசலவெனச் சத்தமிட்டுச் சபையில் சிலம்பே அங்கே நில்லெனக் கூறியருள அதைக்கண்டவர்களெல்லோரும் ஆச்சரியமும் அற்புதமும் கொண்டனர். அந்நேரத்தில் கண்ணகையார் அங்கு நின்ற தட்டானைப் பார்த்துப் புல்லறிவின் காரணத்தால் அன்னையர் தங்கழுத்தில் பொன்னையே திருடுகின்ற பொற்கொல்லனே நீ பழுதுபார்த்தரும் பொட்டிச்சிறுசுவரில் வைத்த பாண்டிமாதேவியின் சிலம்பைக் கருடன் எடுத்துச் செல்ல அதைக் காணாத காரணத்தால் கலங்கிய வனாகிய நீ உன் மகன் வாயிலாகவறிந்து என் கணவனைத் தேடிப்பிடித்து மழுப்பு வார்த்தைகள் பேசி மயக்கி மன்னவன் முன் கொண்டு வந்து விட்டுக் கொடிய கள்வனென்று கொலைக்காளாக்கிய உனைச் சும்மா விடுவேனென்று மட்டுமென்ணற்க , என்றுரைக்க தட்டான் தட்டுத் தடுமாறிச் சிறிது தேறி மன்னனைப் பார்த்து மன்னவா! ஏன் கலங்குகின்றீர்கள். இதோ இவள் மகா கொடியவள். பாண்டிமாதேவியின் பாதச் சிலம்பைத் திருடிய பாதகனின் மனைவியல்லவா, இவள் யானையே தன்னைக் கொல்லாத வண்ணம் மயக்கி விரட்டிய மந்திரக்காரன் மனைவி மாயாசாலம் வல்லவள் இவள். தனது சிலம்பொன்று என்முன்னிலையிற் சொல்லிய பாண்டிமாதேவியையே மயக்கிய மாயை வல்லாள். இவளைச் சும்மா விடக்கூடாது மன்னவா இவளுக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டு மென்றனன்.

இதைக் கேட்ட கண்ணகையார் உண்மை தான். மாய மந்திரம் வல்லவனாக இருக்கலாம். கள்வர் குலக் கள்ளியாகவிருக்கலாம். அரசன் என்னைத் தண்டனைக் குள்ளாக்கலாம். ஆனால் உண்மையை நிலை நாட்டுவேன். கணவனின் பழிவாங்கியே தீருவேன். இதோ பாண்டியனின் சிலம்பை வரவழைக்கின்றேன் பாருங்கள் என்று கருடனை நினைத்து "ஏ கருடனே குஞ்சைக் கொன்ற குற்றத்துக்காகப் பழி தீர்க்கும் பொருட்டு நீ கொண்டுபோன சிலம்பை அவையோர் காண இவ்விடம் கொண்டு வருக" என்று திருவாய் மலர்ந்தருளிய மாத்திரத்தே கருடன் சிறகடித்துப் பறந்து சென்று சிலம்பை எடுத்துக் கொண்டு வந்து போட்டது. அரசன் முதலவையோரீறாகப் பாண்டிமாதேவியின் சிலம்பைக் கண்டனர். பாண்டிமாதேவியின் முத்துச் சிலம்பும், கண்ணகையாரின் நாகமணிச் சிலம்பும் பார்ப்பவளுடைய கண்களுக்கு வெள்ளிடை மலைபோற் தெள்ளுதற் புலயாயின.

அந்நேரத்தில் கண்ணகையார் அங்கிருந்த வர்களைப் பார்த்து அறிவாற்றல் மிக்க பெரியோர்களோ அறங்கூறி அரசனை அல்லவை செய்யாது நல்லழி நிறுத்தும் ஆற்றல் மிக்க அமைச்சர்களே இப்பொழுது பார்த்தீர்களா? உண்மை எங்கேயென்று . பாண்டியனே உனக்கு என் சிலம்பில் ஆசையிருந்தால் நீ சிலம்பை வாங்கிக் கொண்டு என் கணவரை வெட்டாது விட்டிருக்கலாமல்லவா? இல்லாது விட்டால் அவரைச் சிறைப்படுத்தி சில தினங்கள் பொறுமையாக இருந்து தகுதியான ஆதாரங்களை ஆராய்ந்தறிந்து அவரை விடுதலை புரிந்திருக்கலாமே, அவைகளனைத்தையும் விடுத்து அற்பனாகிய பொற்கொல்லன் வார்த்தையையே ஆதாரமாகக் கொண்டு கோனேன்னு மாங்காரத்தாற் கொடுங்கோல் புரிந்த கொடியவனே

நீயோர் கொற்றவன் தானா? கோல் கோடியவனாகிய உன்னையும் உன் உற்றதோழனாகிய இவ்வஞ்சிப் பத்தனையும் கொன்று யமலோகம் அனுப்பி வைப்பேன் காண்பாயாக, என்று பல வகை மொழிகளையும் சொல்லி மிகவும் மானபங்கமாக ஏசினார்.

கண்ணகையார் கழறிய வார்த்தைகளால் புண்பட்ட நெஞ்சத்தனான நெடுஞ்செழியன் கண்களிற் கனல் பறந்தன. பெண்ணே! என் பெருமைகளை நீயறியாய் இந்திரன் முடி மேல் வளை எறிந்தேன். கடல் கவற வேல் விடுத்தேன். சப்தமுகிற் கூட்டங்களையே தளையிட்டுச்சிறை செய்தேன். இமயத்திற் கொடி பொறித்த என் பெருமையை அறிந்த இந்திராதி தேவர்களை என்பெயர் கேட்டால் நடு நடுங்குவார்கள். என்ன செய்வது பெண்ணென்பதற்காக நான் இதுவரை பொறுத்திருக்கின்றேன். உனது வீண் பேச்சுக்கள் இங்கு வேண்டியதில்லை. இதோ உன் சிலம்பு எடுத்துக் கொண்டு போகலாம். வேண்டுமானால் இன்னும் ஏதாவது பொன் பொருள் தருகிறேன் கொண்டு செல் என்றனன்.

அதைக் கேட்ட கண்ணகையார் அளவுக் கடங்காத கோபங்கொண்டவராய் அண்டம் செவிடுபட நகைத்து , சிலம்பு செம் பொன்னும் , பொருளும் பொக்கிசங்களும் எனக்கு வேண்டியதில்லை. எனக்கு வேண்டியவர் என் கணவர். அவர் நிரபராதி என்பதை நான் நிலை நாட்டிவிட்டேன். நீ குற்றவாழி, மாநிலம் போற்றும் மகா உத்தமராகிய என் கணவரைக் கள்வனாக்கிக் கொலைமாலை சூடிய உன்னைச் சில பகல் தானும் உயிருடன் உலகில் வாழ விடேனென்றனன். பாண்டியனால் அவமானம் தாங்க முடியவில்லை. பெண்ணே உன்மடியுங் கிழித்து மயிருங் கொய்து, மார்பையும் அரிந்து மானபங்கம் செய்து துரத்துவன் தன் முன் நீ போகின்றாயா? இல்லையா? என்றனன்.

இதைக்கேட்ட கண்ணகையார் ஆம் போகத்தான் போகிறேன். அதற்கிடையில் உன் ஆணவத்தையடக்கத்தான் போகின்றேன். இதோ பார்,

*ஆடுகின்றேன் திருநடனம் – ஆழலிடுவேன்*
*நின்மதுரை*
*பாடுகின்றேன் பெரும்புகழைப் – பந்தடிப் பேன்னுன்*
*சிரத்தை*
*சூடுகின்றேன் தட்டான்றன் – சோதிக்*
*குடல்மாலையென்றாள்*

என்றளவில் வேறுவழியில்லையெனக் கண்ட பாண்டியன் தொல்லைபுரியும் பாதகிமார்களையழைத்து கண்ணகையாரைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையிடுமாறு கட்டளையிட அவர்களுமணுகின்றனர்.

*நகைத்த பின் முருக்கின தரத்தினை மடித்தான்*
*நச்சுலவு மைக்குவளை யிற்கனலை யிட்டாள்*
*உகத்தில் வட வைக்கன லெழும்பவும் விழித்தாள்*
*உற்றபல கொற்றவர் களித்துள நெரித்தார்*
*சகத்திலொரு மேருருவு காட்டியெதிர் நின்றாள்*
*சுங்கமுறு துங்கமுடி மன்னரத கண்டார்*
*எவர்க்குமரி தானதொரு பேருருவு கொண்டாள்*
*இந்திரன் முதல் வானவர்கள் யாவரது*
*கண்டார்*

*எடுத்ததொரு திருமுகமும்– இருக்குந்நாலு*
*பெருங்கரமும்*
*வடுத்திகழ மொருகரத்தில் – மழவொருகை*
*சூலமுமாய்*
*சுடற் குலவு முடியுடனே – சோதிபெறு பாசமுமாய்*
*இடற் பொருவு முருவெடுத்தாள் – இமையவர்க்குங்*
*கிடையாதே*

இத்தகைய பயங்கரமான பாரிய பிரமாண்டமான தனது விசுவரூபத்தைக் கண்ணகையார் கொண்டருளுதலும் அதனைக் கண்ட இந்திராதி தேவர்கள், முனிவர்கள் திக்குப்பாலகர்கள், பாவரும் அஞ்சி நடுங்கி அம்மையாரின் கோபத்தாற் தாங்கள் ஆபத்துக்கோ, அழிவுக்கோ ஆளாகாத வண்ணம் போற்றித் தொழுது புட்பாஞ்சலி செய்தனர். பாண்டியனது கொலு மண்டபத்திருந்தோர் யாவரும் செய்வதறியாது திகைத்து மரம்போல் மதியிழந் திருந்தனர். பாண்டியனோ பார்த்தான். பயங்கரனாயினன். தன் முன்னிலையிற் தோன்றி நிற்கின்ற கண்ணகையார்

முன்னை நாளிற் தன்னைச் சபித்துத் தலைவனாகிய சிவபெருமானோடு மறைந்து சென்ற மலைமகளாகவே தோற்றினார். அன்றியும் மாங்கனியிற் தோன்றிய தனது மகள் தானிவளோ என்ற எண்ணமுந் தோன்றி நிலைத்தது. தன்வினை தன்னைச் சூழ்ந்து விட்டதென்றும் தான் இனித் தப்பமுடியாதென்றும் தனக்குத்தானே தேறிய மீனவன் தன்னிலையறிந்து – தவித்தான்.

அப்பொழுது கண்ணகையார் பாண்டியனைப் பார்த்து எனது தனத்தை அரிவேனென்று நீ சொன்ன காரணத்தினால் இதோ எனது தன்னியம். தனது இடது மார்பைத் தன் கையாற் திருகிப் பாண்டியன் மார்பகத்தெறிந்தருளினார். அதன் பின் நாகமணிச் சிலம்பை எடுத்துப் பாண்டியனின் முன்னிலையில் படியில் அடித்துடைத்தும் உடைந்த சிலம்பை நோக்கி,

*அடுத்துனையே மடுத்து வைத்த –*
*அரசனையும் கூடலையும்*
*பகுத்தபொறி பலவாகிப் – பற்றியெரி*
*யென்றனளே*

அந்நேரத்தில் அதிலிருந்துண்டாகிய தீயும் அன்னை கண்ணிலக்கினியும் அவ்விடத்தில் சுவாலித் தெரிந்தது. அப்போது திருகி எறிந்த இடது மார்பால் வடிகின்றதாகிய இரத்தத்தை மாற்றும் பொருட்டு இடைச்சியர்கள் கண்ணகையாரின் மார்பிலே பசுவெண்ணையைக் கொண்டுவந்த பின்னர் பறைச்சியர்கள் அதன்மீது பஞ்சை வைத்துக் கட்டித் களையாற வீசித் தம்மைக் காத்தருளுமாறு வேண்டுதல் செய்யவே அவர்கள் சேரி அழியாவரங் கொடுத்து ஏனைய இடங்களெல்லாம் எரியட்டு மென்று எடுத்துச் சொல்லவே எவ்விடங்களிலும் தீ சுவாலித் தெரிந்தது.

இதற்கிடையில் கண்ணகையார் தட்டானை யுதைத்து வீழ்த்தியவன் குடலரைப் பிடுங்கி மன்னன் மார்பகத்தெறிய மன்னனும் மடிந்தனன். கண்ணகையார் அவ்விடம் விட்டுச் சென்று தட்டான் வீட்டிற் சென்று புகுந்து அவன் மகனைப் பிடித்து இரண்டாகக் கிழித்து,

*பிழந்து கெருடாவுன் – பிள்ளைதனைக் கொன்றபழி*
*வழைந்து வந்த வாங்கெனவே– வன்கெருடன்*
*சிறையடித்து*
*கிளம்பி வந்து மவனீரல் – கேடகலத் தானெடுத்து*
*உளம்புந்த குஞ்சு கொன்ற – ஒரு பழி கொண்டேகியதே.*

## *குளிர்ச்சி*

இடையேசேரியையடைந்த கண்ணகியாரை இடைச்சியர்கள் எதிர்கொண்டழைத்துப் பன்னீர், புனுகு ஆகிய வாசனைச் சாந்து வகைகளை அணிந்து சாமரை கொண்டு விசிறிக் களைப்பகற்றிப் பூம்பந்தர் நிழலிருத்திப் பூசைபுரிந்து வணங்கி நின்று,

*ஆண்டவளே குளிர்ந்தருள்வாய் ஆயிளையே*
*குளிர்ந்தருள்வாய்*
*காண்டகை சேராயிரங்கண் காரிகையே*
*குளிர்ந்தருள்வாய்*
*வேண்டினோங் குளிர்ந்தருள்வாய் வித்தகியுன்*
*கோபமெல்லாம் என்று குளிர்ச்சி பாடி,*
*துங்கமட மாதரெல்லாம் சூழ்ந்து கரஞ் சிரங்குவித்து*
*மங்கைநல்லாய் மதுரைநகர் மாறு கொண்டு சீறுமனல்*
*அங்கதுவே தான்தணிய அருளி மழை பொழியுமென்றார்*

இவ்வாறு வேண்டுதல் செய்ய மழை பொழிவித்து வெப்பம் தணியவருள் புரிந்து அருளுருவங் கொண்டவரவர்க்காம் வரங்கள் பல கொடுத்துப் பலவிடங்களிலும் சென்று தம்மை வழிபட்டவர்கள் எல்லோருக்குங் கருணை பாலித்துத் திருவாலவாயான் வரங்கொடுத்தருளிய வண்ணம் இலங்கையில் வந்தருளினார்.


இலங்காபுரியடைந்த கண்ணகையார் பல்வேறிடங்களிலும் சென்று பலவகையான அற்புதங்களையும் காண்பித்து வற்றாப் பளையில் வந்தருளினார். வற்றாப்பளையில் நந்திக்கடற்கரையிலே மாடுகள் மேய்கின்ற பிள்ளைகள் விளையாட்டாகக் கோவில் கட்டிப் பூசை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னிலையில் நரைதிரை மூதாட்டியாராகத் தோன்றிய கண்ணகையார் அப்பிள்ளைகளைப் பார்த்து மீண்டும் ஒர்முறை பூசைபுரியுங்கள் பார்ப்போமென்றும், பூசை செய்வதற்கு நீங்கள் உங்கள் பாற்கலசத்தைக்

கொண்டு சென்று நதிகடலில் நீரள்ளிவந்து விளக்கேற்றுமாறும் திருவாய் மலர்ந்தருள அவர்களுமவ்வாறே செய்தனர். உப்புநீரில் விளக் கெரிவதைக் கண்ட கோபாலச் சிறுவர்கள். தாயே! நீயே எங்கள் தெய்வமெனத் தொழுது போற்றினர். அவர்கள் பூசையையேற்றருள் புரிந்த கண்ணகையார் அப்பாலகர்களைத் திரு நோக்கம் செய்து நான் இங்கெழுந்தருளிய தினமாகிய வைகாசிமாதம் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற திங்கட்கிழமை தோறும் என்னையின்று போலென்றும் வழிபாடு செய்யுங்கள். கண்ணகையாகிய நான் என்றென்றும் வந்து தோன்றி உங்கள் இன்னல் தீர்த்தின்பமியீந்தருள் வேனென்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

இவ்வாறு மறைந்த கண்ணகையார். இங்கிருந்து கதிர்காமஞ் சென்று கதிர்வேல் முருகன் கருணை பெற்றதன் பின் அங்கிருந்து புறப்பட்டுக் கைலயங் கிரிக்குச் சென்று தெய்வீகம் பெற்றுச் சிவபெருமானிடம் பாகத்தினிது வீற்றிருந்தருளினார்.

(இக்காவியம் வழமையாக வற்றாப்பளை பொங்கல் தினத்தோடு சேர்ந்த முன் ஏழு நாட்கள் தொடர்ச்சியாக படிக்கப்படுகின்றது)

* * *





# உபநிடதங்கள் ஓர் அறிமுகம்

*சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ்*
*கொழும்பு - இராமகிருஷ்ணமிஷன்*

ஓம் ஸஹனாவவது/ ஹநௌ புனக்து, ஸஹ வீர்யம்
கரவாவஹை, தேஜஸ்வினாவதீதமஸ்து மா வித்விஷாவஹை,
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஹிந்து சமயத்தின் உயிர் நாடியாக விளங்குபவை உபநிடதங்கள். எல்லையில்லா பரப்பும், ஆழமுங் கொண்ட ஆன்மீகக் கடலில் ஆழ மூழ்கி வெளிக் கொண்டு வரப்பட்ட ஒரு சில நல்முத்துக்களே இவை. தேச கால, இன, மத, மொழி வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து, அனைவருக்கும் பொதுவானதும், அவசியமானதுமான வாழ்க்கைத் தத்துவங்களையும், நெறிமுறைகளையும் எடுத்துக் கூறுவது தான் உபநிடதங்களின் தனிச் சிறப்பு. உண்மை ஒன்றே ஞானிகள் அதைப் பலவாறாக அழைக்கின்றனர் (ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி). இவ்வுலகில் காணப்படும் எண்ணற்ற ஞானிகளும், அவர்கள் சேர்ந்த சமயங்களும், பல மொழிகளில் பேசினாலும், அவர்கள் அனைவரும் எடுத்துக் கூறிய உண்மை என்னவோ ஒன்றே. வேறுபாடுகள் மொழியில்தான் உள்ளனவே தவிர, கருத்தில் அல்ல. இவ்வாறு அனைத்து சமயக் கருத்துக்களையும், அனுபவங்களையும் ஒருங்கிணைக்கும் சிறப்பு உபநிடதங்களைச் சாரும். உபநிடதக் கருத்துக்கள் அனுபவத்திலிருந்து மலர்ந்தவை; அறிவு சார்ந்தவை. இக்கருத்துக்கள் திரும்பத் திரும்ப, சாதனைகளின் வாயிலாக பரீட்சிக்கப்பட்டு, அவற்றின் உண்மை நிலைப்பாடு நிரூபிக்கப்பட்டவை. எனவே உபநிடத உண்மைகளை யாரும் மறுக்கவியலாது. யார் வேண்டுமானாலும், சாதனைகளின் வாயிலாக, இவ்வுண்மைகளை அனுபவமாகப் பெறலாம். இன்றுவரை இவ்வுலகில் தோன்றியுள்ள அனைத்து சமயங்களின் கருத்துக்கள் அனைத்தும் உபநிடதங்களில் பிரதிபலிக்கின்றன என்பது அந்நூல்களின் எல்லையில்லா பரிமாணத்தைக் காட்டுவதை அனைவரும் உணரலாம்.

உபநிடதங்கள், எண்ணிக்கையில், இருநூறுக்கும் அதிகமானவை என்றாலும், மிக முக்கியமாகக் கருதப்படுபவை பத்தேயாகும். ஆதிசங்கரர் இந்தப் பத்து உபநிடதங்களுக்கும் உரை எழுதியுள்ளார். சில அறிஞர்களின் கருத்தின்படி, ஆதிசங்கரர் பதினோராவது உபநிடதம் ஒன்றிற்கும் உரை எழுதியுள்ளார். இந்தப்பதினொரு உபநிடதங்களைத் தவிர, மேலும் நான்கு உபநிடதங்களைத் தனது பிரம்ம சூத்திர உரையில் அவர் குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும், பொதுவாக

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்து முக்கிய உபநிடதங்களானவை, ஈச, கேன; கட, ப்ரஸ்ன, முண்டக, மாண்டுக்ய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்ய மற்றும் ப்ருஹதாரண்யக உபநிடதங்கள் என்பனவாகும். இவற்றைத் தசோபநிடதங்கள் என்று கூறுவார்கள்.

ஈஸாவாஸ்ய உபநிடதம், தனது முதல் மந்திரத்திலேயே அனைத்து உபநிடதங்களின் சாரமாக விளங்கும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை எடுத்துக் கூறுகின்றது.

கேனோபநிடதம், எல்லா புலனறிவுகளுக்கும் பின்னணியில் விளங்கும், மாறுபாடில்லாத, என்றும் நிலைத்த சாட்சியாக விளங்கும் ஆன்மாவை விளக்குகின்றது.

கடோபநிடதம், கவிதை நயமும் கருத்தாழமுங் கலந்த ஒப்பற்ற நூல். யமதேவனுக்கும் , நசிகேதன் என்ற சிறுவனுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் வாயிலாக, முக்திப்பேற்றை அடைய உதவும் மார்க்கம் குறித்தும், முக்தியின் விளக்கத்தைக் குறித்தும், ஆன்மாவின் விளக்கத்தையும் அளிக்கின்றது.

ப்ரச்னோபநிடதம், அதன் பெயர்க்கேற்ப, கேள்வி பதில் வாயிலாக பல ஆன்மிக விடயங்களை அலசுகிறது. ஆறுபேர் அடங்கிய சீடர் குழாம் ஒன்று , தங்கள் குருநாதராகிய பிப்பலாத முனிவரிடம் ஆறு கேள்விகள் கேட்க, அவர் அளிக்கும் பதிலே இந்த உபநிடதமாக அமைகின்றது.

முண்டக உபநிடதம், இவ்வுலகில் விளங்கும் அனைத்து ஞானங்களையும் இரு வகைப்படுத்தி, ஆன்மாவை அறிய உதவும் ஞானத்தை 'பரா ஞானம்', அதாவது 'உண்மையறிவு' என்றும் அதைத் தவிர்த்த மற்ற ஞானம் அனைத்தையும் 'அபரா ஞானம்' அதாவது 'சாதாரண அறிவு ' என்றும் விளக்குகிறது.

மாண்டுக்ய உபநிடதம், பன்னிரண்டே மந்திரங்களை உள்ளடக்கிய மிகச்சிறிய நூல். மனிதனின் விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளைப் பற்றியும், சதா மாறிக்கொண்டிருக்கும் இம்மூன்று நிலைகளுக்கு அப்பால், மாறாத வஸ்துவாக விளங்கும் துரீய நிலை, அதாவது, ஆத்மாவின் , நிலைபற்றியும், விரிவாக விளக்குகின்றது இந்நூல். நான்கு மகா வாக்கியங்களில் ஒன்றாகிய 'அயம் ஆத்மா ப்ரம்ம', இவ்வுபநிடதத்தின் இரண்டாம் மந்திரத்தில் அமைந்துள்ளது. மனிதனின் அழிவற்ற சாகாநிலையாகிய ஆத்மநிலையை இம்மகா வாக்கியம் உணர்த்துகின்றது.

அடுத்து வரும் தைத்திரீய உபநிடதம், 'ப்ரம்மவிதாப்னோதிபரம்', 'பிரம்மனை அறிந்தவன் உயர்நிலை எய்துகிறான்' என்ற பேருண்மையை நிலைநாட்டி , பின் , அந்த உயர் வஸ்துவை மறைத்துள்ள ஐந்து உறைகளை (பஞ்சகோசம்) விளக்கிக் கூறி, அந்த உறைகளைத் துளைத்துச் சென்று ஆன்மாவை உணரும் வித்யையையும் கூறுகின்றது.

ஐதரேய உபநிடதம், மனித ஆன்மாவின் முழுமையை, அதாவது மாறுபாடு இல்லாத நிலைத்த தன்மையை 'ப்ரக்ஞானம் பிரம்ம' என்ற மகா வாக்கியத்தை அடிப்படையாக வைத்து விளக்குகின்றது.

சாந்தோக்ய உபநிடதம், சத்யகாமன், ஸ்வேதகேது, நாரதர் போன்ற தலைசிறந்த சாதகர்கள் மற்றும் ஆருணி, சனத்குமாரர், ப்ரஜாபதி போன்ற குருமார்கள் – இவர்கள் இருபாலார் இடையே அமைந்த உரையாடல்கள் வாயிலாக பல உண்மைகளை விளக்குகின்றது. மகா வாக்கியங்களில் ஒன்றாகிய 'தத்துவமஸி' யின் மூலம் மனிதனின் தெய்வீக இயல்பை நன்கு விளக்குகிறது. தனது இந்த தெய்வீக இயல்பை உணர்வதன் மூலம் மனிதன் அனைத்து இன்னல் களிலிருந்தும் விடுபடுகிறான் என்கிறது இந்த உபநிடதம். 'தாதி ஸோகம் ஆத்மவித்' இவ்வுபநிடதம் ஆன்மிக வளர்ச்சியின் பல நிலைகளை, இந்திரன், பிரஜாபதி இவர்களின் சம்பாஷணை மூலம் எடுத்துக் காட்டுகிறது. உலகியலின் குறைகளையும், அதன் இன்னல்களையும் இந்நூலில் காணலாம்.

ப்ருஹதாரண்யக உபநிடதம், அனைத்து உபநிடதங்களிலும் பெரியது. ப்ருஹத் ஆரண்யகம், பெரிய வனம். அதாவது, இதுவரையிலும் ரிஷிகள்

கண்டெடுத்த அனைத்து ஆன்மிகக் கருத்துக்களையும் உள்ளடக்கி, வனம் போன்று காடு போன்று, விரிந்து பரந்து கிடக்கும் நூல் இது. இந்நூலில் மிகச் சிறந்த நான்கு ஆன்மிகவாதிகளை சந்திக்கிறோம். ராஜரிஷி ஜனகர், பிரம்மரிஷி யாக்ஞவல்க்யம், மற்றும் யாக்ஞவல்க்யரின் இரு மனைவிமார்களாகிய மைத்ரேயி மற்றும் கார்க்கி. யாக்ஞவல்க்யரைத் தனது கூர்மையான அறிவினால் பல ஆன்மிகக் கேள்விகளைக் கேட்கிறாள் கார்க்கி. இவ்வுரையாடல், மற்றும் இதர உரையாடல்கள் மூலம் மனிதனின் தெய்வீக இயல்பு, உலகின் ஆன்மநேய ஒருமைப்பாடு போன்ற பல விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. நான்கு மகா வாக்கியங்களில் ஒன்றாகிய 'அஹம் ப்ரம்மாசி' ,'மனித இயல்பாகிய ஆன்மா', பரம்பொருளாகிய ப்ரம்மனோடு ஒன்றியுள்ள தன்மையை இந்நூல் விளக்குகின்றது.

இந்த முக்கிய பத்து உபநிடதங்களும் இன்று நம்முடைய கைகளிலே தவழுகின்றன என்றால், அதற்கு காரணகர்த்தாவாக விளங்குபவர் ஆதிசங்கரரே. அவற்றிற்கு விளக்க உரை எழுதியதின் மூலம் அவை என்றென்றும் மனித குல விளக்காக அமையும்படி செய்த அந்த மகா புருஷருக்கு இவ்வுலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. உபநிடத வாக்கியங்களை விளக்க உரைகள் வாயிலாகத் தான் விளங்கிக் கொள்ள முடியும். சங்கரரைத் தொடர்ந்து, இன்று வரை, பல அறிஞர்கள், ஞானிகள் உபநிடதங்களுக்கு உரைகள் எழுதி , இந்து சமயத்தின் பெருமையை உலகறியச் செய்துள்ளனர்.

உபநிடதங்களின் பொதுவான பொருளடக்கம் பின்வருமாறு; இறைவனின் இயல்பு என்ன? மனித ஆன்மாவின் இயல்பு என்ன? உலகியலின் இயல்பு என்ன? இறைவன், மனிதன், உலகம் இம்மூன்றிற்கும் இடையே காணப்படும் தொடர்பு எத்தகையது? உலகின் தோற்றம் , முக்தி நிலை, பந்த நிலை, ஆன்ம சாதனைகள் போன்ற அடிப்படைக் கருத்துக்கள் இந்நூல்களில் விவாதிக்கப்படுகின்றன.

மனித வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து இது நாள்வரை இவ்வுலகில் தோன்றிய பல கருத்துக்கள், கால வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டோ அல்லது பல மாறுதல்களையோ கண்டிருக்கும் போது, உபநிடத உண்மைகள் மட்டும் இம்மியளவும் பாதிக்கப்படாதும், எள்ளளவும் மாற்றமடையாதும், உயர்ந்த சிகரங்களைப் போன்று நிலைத்து நிற்கின்றன என்றால் அது அவ்வுண்மைகளின் அழியாத் தன்மையையே எடுத்துக் காட்டுகின்றன. எனவேதான் இந்த உபநிடத மந்திரங்கள் 'சத்யஸ்ய சத்யம்', 'உண்மைகளில் எல்லாம் உண்மை' என்றழைக்கப் படுகின்றன. இவ்வுண்மைகளை நிதரிசனமாக உணரும் பொழுது ஒருவன் சாகா நிலையாகிய முக்தியைப் பெறுகின்றான். ஆனால் இவ்வுண்மைகளை உணர அவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன? 'உபநிஷத்' என்ற சொல்லே இதை விளக்குகின்றது. 'உபநிஷத்' என்றால் 'அருகில் அமர்தல்' என்று பொருள். அதாவது, 'குருவினை நாடி உண்மையை உணர்தல்' என்பதாம். குருவினை நாடுபவனுக்கு உலகப்பற்று இருக்க முடியாது. அவனுக்கு ஆன்ம வேட்கை ஏற்பட்டுள்ள காரணத்தினால் ஆன்ம விசாரத்திற்கு தகுதியுடையவன் ஆகிறான். எனவே உபநிடதம் பற்றின்மை, ஆன்மவேட்கை, மன ஒருமைப்பாடு முதலிய தகுதிகளை முன் வைத்தே ஒருவன் ஆன்ம லாபம் எய்த முடியும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.

ஆனால் இத்தகைய உயர் தகுதிகள் அற்ற சாதாரண உலக மாந்தனுக்கு உபநிடதம் கூறும் அறிவுரை என்ன? உலக ஆசைகளில் மூழ்கியிருக்கும் ஒருவன் கடைத் தேற வழி உண்டா? உலகைத் துறக்க இயலாத அவன் செய்ய வேண்டிய காரியம் என்ன?

உபநிடதங்கள் , ஒவ்வொருவருடைய தகுதி மற்றும் மனநிலைகளுக்கு ஏற்றபடி அவர்களுக்கு வழிகாட்டுகின்றது. உலகப்பற்று இல்லாத ஒருவனுக்கு அளிக்கும் உபதேசங்கள், உலகப்பற்றுடைய மாந்தனுக்குப் பொருந்தாது என்பதை முற்றிலும் உணர்ந்திருந்த இந்த அருமையான நூல்கள் உலக போகங்களை ஒருவன் அனுபவிக்க விரும்பினால் அதைத் தடைசெய்யவில்லை. நூறு ஆண்டுகள் வாழ்க என்று வாழ்த்துகிறது. 'ஜிஜீவிஷேத் சதம் சமா:' என்று 'நற்பிரஜைகளைப் பெற்று, செல்வங்களை வளர்த்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்', என்று உற்சாகப் படுத்துகின்றது. ஆனால் இப்படிப்பட்ட இன்பமயமான உலக வாழ்க்கையில் சில நற்காரியங்களையும் சேர்த்துக்

கொள்வதன் மூலம், படிப்படியாக உயர்குணங்களைப் பெற்று, இறைவாழ்க்கைக்கு முற்றிலும் தன்னை தகுதி உடையவனாக ஒருவன் ஆக்கிக்கொள்ளலாம் என்கிறது. 'சத்யம் வத' உண்மை பேசு; 'தர்மம் சர' நேர்மையுடன் வாழ்; 'ஸ்வாத்யாயாத் மா ப்ரமத:' 'சாஸ்த்ர விஷயங்களைக் கேட்கத் தவறாதே;' 'மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ' 'பெற்றோர்களையும், பெரியோர்களையும், உற்றார் உறவினர்களையும் மரியாதையுடன் நடத்து' 'மாக்ருத; கஸ்யஸ்வித்தனம்' 'பிறச் சொத்திற்கு ஆசைப்படாதே' 'அனவத்யானி கர்மாணி சேவிதவ்யானி' 'நற்காரியங்களில் ஆர்வத்தோடு ஈடுபடு' 'த்யக்தேன புஜ்ஜீதா;' 'தியாக சிந்தனையோடு உலகை அனுபவி' இப்படிப் பல நற்போதனைகளை நமக்கு வழங்கும் உபநிடதங்களின் மேன்மையை நன்கு உணர்ந்து அந்நூல்களை நமது வாழ்க்கையின் வழிகாட்டிகளாக அமைத்துக் கொண்டு பெரும் பயன் எய்துவோமாக!

ஓம் சாந்தி; சாந்தி;

## ஈஸாவாஸ்ய உபநிடதம்

*ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணத் பூர்ணமுதச்யதே/*
*பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ண மேவாவ சிஷ்யதே//*
*ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:*

**ஓர்** விந்தையின் சிருஷ்டி அல்லது தோற்றம் என்பது, அது செடியாகி, மரமாகி, பூத்து, காய்த்து, கனிகளை ஈயும் பொழுதுதான் நிறைவு பெறுகிறது. அந்த நிறைவில்தான் அதன் பெருமையும், சிறப்பும் வெளிப்படுகிறது. மனித வாழ்க்கையும் அவ்வாறே நிறைவை எய்த வேண்டும்; தேங்கிக் கிடக்கக் கூடாது. 'வளர்ச்சியே வாழ்வு வளர்ச்சியின்மையே சாவு ' என்று வாழ்க்கையின் இலக்கணத்தைக் கூறுகின்றார் சுவாமி விவேகானந்தர். மனித வாழ்க்கை விருத்தியடைய வேண்டும். விரிவு பெற வேண்டும் என்றால் என்ன பொருள்? நன்றாக உண்ணுவதால் உடல் வளர்ச்சியடைகின்றது. பல நூல்களை வாசிப்பதால் அறிவு வளர்ச்சி ஏற்படுகின்றது. நன்றாக உழைப்பதால் செல்வம் பெருகுகின்றது. இவற்றை வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்று கூறலாமா? ஒரு வகையில் இதை ஓர் முன்னேற்றம் என்று கூறினாலும், இத்தகைய முன்னேற்றத்தினால் வாழ்க்கை நிறைவு பெறுவதில்லை. இத்தகைய வளர்ச்சியை , பின்னடைவு காணக் கூடிய முன்னேற்றம் என்று கூறலாம். சுயவளர்ச்சியையும் , சுயநலத்தையும் அடிப்படையாகக் கொண்ட அனைத்து முயற்சிகளும், வளர்ச்சிகளுமே பின்னடைவு கொண்டவை. அவை முழுமையான மன நிறைவைத் தர இயலா. யார் ஒருவன் அனைத்து உயிர்களிடத்தும் இறைவனைக் கண்டு அவர்களது நலனுக்காகவே வாழ்கிறானோ அவனே அனைத்து துக்கங் களிலிருந்தும் விடுபட்டவன். அவனது மனதிலே எந்தக் குறைவும் இருக்க இயலாது. நிறைவான வாழ்க்கை அவனுடையது என்கிறது ஈசாவாஸ்ய உபநிடதம்.

*'யஸ்மின் ஸர்வாணி பூதவாணி பூதானி ஆத்மைவாபூத் விஜானத:*
*தத்ர கோ மோஹ க: ஸோக ஏகத்வமனுபஸ்யத:'*

'தனது இதயத்திலே அமர்ந்துள்ள அதே இறைவனை, ஆன்மாவை உலக ஜீவராசிகள் அனைத்திலும் காண்பவன் எவனோ, அவனுக்கு துக்கம் ஏது? மோகம் ஏது? ' இது ஈஸாவாஸ்ய உபநிடத்தின் ஏழாவது மந்த்ரம்

ஆனால் இது மிக உயர்ந்த நிலையாயிற்றே. இந்த நிலையை அடைய விரும்பின், அதற்கு ஒரு தொடக்கம் இருக்க வேண்டுமல்லவா, ஒரு வழிமுறை இருக்க வேண்டுமல்லாவா? திடீரென எல்லோராலும் இம்மகத்தான காரியத்தை செய்ய இயலாது என்பதை உபநிடதம் அறியும் (ஈசாவாஸ்ய உபநிடதம் மக்கள் மூன்று வகையினராக பிரிக்கின்றது. முதல்வகையினர் முமுக்ஷீக்கள், அதாவது, மோட்ச நிலையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள். இரண்டாவது வகையினர் சாதகர்கள். மூன்றாவது வகையினர் பத்தஜீவிகள் , அதாவது பந்த நிலையில் இருக்க விரும்புவர் முதல் வகையினரது நன்மை வேண்டி, இந்த உபநிடத்தின் முதல் மந்திரம் கூறுகின்றது.

"ஈஸாவாஸ்ய மிதம் சர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்/
தேன த்யக்த்தேன பூஞ்ஜீதா மா க்ருத கஸ்யஸ்வித்தனம்//

இதன் பொருளாவது "(தோன்றி மறையும் தன்மையதான இவ் வுலகின்கண் காணப்படும் அனைத்தும் , இறைவனால் வியாபிக்கப்பட்டதாக அறியப்பட வேண்டும். ஈஸ்வர பாவனையால் ஏற்பட்ட அந்த தியாகத்தால் உன்னை ரக்ஷித்துக் கொள். யாருடைய பொருளுக்கும் ஆசைப்படாதே."

கடற்பரப்பில் நீர்க்குமிழிகள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன. நீர்ப்பரப்பிலிருந்து குமிழி வடிவத்தில் வேறுபட்டு காணப்படினும், நீர்க்குமிழியும் அதே கடலைச் சேர்ந்ததே. அவ்வாறே இவ்வுலகில் காணப்படும் அனைத்தும், பெயராலும் உருவத்தாலும், ஒன்றிலிருந்து மற்றொன்று பல நூறு, ஆயிரம் கோடி வழிகளில் வேறுபட்டுக் கிடந்தாலும். அவையனைத்துமே இறைவனிலிருந்து தோன்றி, இறைவனிலேயே நிலைத்து, முடிவில் இறைவனிலேயே மறைபவை. எனவே இவ்வுலகை இறைவனிலிருந்து வேறாகக் காணாது. 'ஒன்றாகக் காண்பதுவே காட்சி' என்ற ஔவையாரின் கூற்றுப்படி . இறை உணர்விலே நிலைத்து நிற்பது தான் ஒரு முழுக்ஷிவின் நிலை. எல்லாம் இறைவனின் தோற்றமாகக் காண்பவனுக்கு, மற்றவர்களைக் கண்டு பொறாமைப் படவோ மற்றவர்களோடு போட்டி போடவோ இயலாது. அவனது வாழ்க்கையே அவனது ஒவ்வொரு செயலுமே, அப்பின் அடிப்படையில், தியாகத்தின் உணர்வில் அமைந்த இறை வழிபாடாக அமைகின்றது. இது தான் மோட்சத்தில் ஆர்வமுடைய முதல் வகையினரது நெறிமுறை.

சாதகர்களாகிய இரண்டாம் வகையினர் எங்ஙனம் தங்களை வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்பதை இரண்டாம் மந்திரத்தில் காண்கிறோம்.

'குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் சதம் ஸமா/ :
ஏவம் த்வயி நான்யதே தோ வஸ்தி ந கர்ம லிப்யதே நரே'
இதன் பொருளாவது

"இவ்வுலகில் நூறாண்டுகள் ஒருவன் வாழலாம். ஆனால் அவன் விதித்த கருமங்களைச் செய்ய வேண்டும் . இது ஒன்றே பற்றுக்கள் தொடராது இறைவனை அடைய ஒரு வழியாகும்."

மரம் செடி கொடிகளைப் போன்றோ, மிருகங்களைப் போன்றோ, அல்லது மண், கல், பாறை போன்றோ, நூறு ஆண்டுகளோ இல்லை இன்றும் அதற்கு அதிகமாகவோ இவ்வுலகில் இருப்பதில், வாழ்வதில்தான் என்ன பயன் இருக்கின்றது. மனித வாழ்க்கையின் பயன் என்பது, நீண்ட நாள் வாழ்வதில் இல்லை; பயனுள்ள முறையில் வாழ்வதில்தான் அமைந்துள்ளது. உபநிடதம் கூறுகின்றது. 'குர்வந்நேவேஹ கர்மானி ஜிஜீவிஷேத்' பயனுள்ள காரியங்களைச் செய்தவாறு வாழ்வாய் என்கிறது. பயனுள்ள காரியம் என்றால் என்ன? எந்தெந்த காரியங்கள் பிறர் நலனுக்காக, இறைவனுக்காக வென்று செய்யப்படுகின்றனவோ அவை மட்டுமே பயனுள்ளது; மனிதனை பந்தத்திலிருந்து , சோக மோஹங் களிலிருந்து விடுவிப்பவை. சுயநல நோக்கோடு செய்யப்படும் மற்ற அனைத்துக்காரியங்களுமே மேலும் மேலும் பந்தத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, உபநிடதம், சிறப்பாக, சந்தோஷமாக, நூறு ஆண்டுகள் வாழ்வாய் என்று மனிதனை ஆசீர்வதித்து, அதே சமயத்தில் அந்த வாழ்க்கை பிறர் நலத்தை நாடியதாக அமைதல் அவசியம் என்கிறது. எனவே விதகர்களாக விளங்குபவர்களுக்கு இறை வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு முக்கிய உபதேசமாகும்.

மூன்று வகை மக்களின் இதுவரை முமுக்ஷீ, சாதகர் என்ற இரு வகையினருக்கான வாழ்க்கை முறைகளைக் கண்டோம். கடைசி வகையினரான, பந்தத்தில் ஆழ்ந்திருக்கும், இறை உணர்வோ, பக்தியோ, இல்லாதிருக்கும் மக்களை, உபநிடதம் நிந்திக்கிறது.

"அஸுர்யா நாம தே லோகா அந்தேன தமஸா வ்ருதா\
தாம்ஸ்தே ப்ரேத்ய அபிகச்சந்தி யே கே ச ஆத்மஹனோ ஜ ஜ :\\"

எந்த மனிதர்கள் தம்மைத்தாமே அழித்துக் கொள்கிறார்களோ, அவர்கள் அஸுர்யா எனப்படும் காரிருள் நிறைந்த உலகங்களை நோக்கிப் போகின்றனர்

இங்கே தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் மனிதர் என்றால் யார்? முன்கூறியபடி, தியாக உணர்வுடன் கர்மம் புரியாதவர்களும் முக்தியில்

இச்சையில்லாதவர்களுமே ஆவர். இந்த மந்திரத்தில் காணப்படும் 'ஆத்மஹன:' என்ற வார்த்தை இவர்களைக் குறித்தே கூறப்பட்டது. தங்கள் உடலை அவர்கள் நன்றாக போஷிக்கலாம். அலங்கரித்துக் கொள்ளலாம். நல்ல வசதியான வீட்டில் வாழலாம்; நல்ல அந்தஸ்திலும் இருக்கலாம். ஆனால் இவர்கள் முழுதும் சுயநலம் கொண்டவர்களாக இருப்பின், அவர்கள் இருந்தும் இறந்தவர்களாகவே கருதப்படுவர். அக்ஞானத்தின் சுய நலத்தின் பிடியில் அகப்பட்டு, அவர்கள் இருண்ட வாழ்க்கையே வாழ்கின்றனர். எனவே, இறைவனை ஒதுக்கி வைத்து, வெறும் புலன் நாட்டங் கொண்டவராக வாழ்பவர், ஒருகாலும் மன நிறைவை எய்த இயலாது.

இங்ஙனம் முதல் மூன்று மந்திரங்களின் வாயிலாக ஈஸோபநிடதம், வாழ்க்கையின் நோக்கத்தைக் கூறி, அதை அடைவதற்கான தகுதியையும், நெறிமுறைகளையும் விளக்கி அடுத்த ஐந்து மந்திரங்களின் வாயிலாக, பரமநிலை என்றும் முக்திநிலை என்றும் கூறப்படும் இறைவனோடு ஐக்கியமாகிய ஆன்மாவின் அழிவற்ற தன்மையையும், எங்கும் வியாபித்திருக்கும் சர்வத்ர நிலையையும், சர்வசக்தி நிலையையும் விளக்குகிறது. உதாரணத்திற்கு எட்டாவது மந்திரத்தைக் காண்போம்.

*'ஸ பர்யகாச்சுக்ரமகாயம வ்ரணமஸ்னுவிரம்*
*சுத்தமபாபவித்தம் /*
*கவின்மனீஷீ பரிபூ : ஸ்வயம்பூர்யாதாதத்யதோர்தான்*
*வ்யததாச்சாஸ்வதீச்ய: ஸமாப்ய ://*

அந்த ஆன்மா எங்கும் வ்யாபித்தவன், பிரகாசமானவன், சரீரமில்லாதவன், புண்படாதவன், நாடிகள் இல்லாதவன், சுத்தமானவன், பாவங்கள் அற்றவன், எல்லாம் அறிந்தவன், மனதை ஆள்பவன், அனைத்தையும் கடத்தவன், தானே உண்டானவன்.


அடுத்துவரும் நான்கு மந்திரங்களில் ஞான கர்ம சாதனைகளைத் தனித்தனியாகக் கடைப்பிடிக்காது. அவற்றை ஒருசேர கடைப்பிடித்து சாகா நிலையை எய்துமாறு அறைகூவல் விடுக்கிறது இந்த உபநிடதம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அளித்து, முடிவான வீடு பேற்றை எய்தாவிடில் வாழ்க்கை முழுமை பெறுவதில்லை என்பதே நமது சமயத்தின் முதலான கருத்து. கடைசி நான்கு மந்திரங்கள் நல்வழி காட்டி இறைநிலைக்கு இட்டுச் செல்லுமாறு செய்யப்படும் பிரார்த்தனையாகும்.

ஈஸாவாஸ்ய உபநிடதம், ஈஸாவாஸ்யம் என்ற சொல்லில் ஆரம்பிப்பதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இது சுக்ல யஜீர்வேதத்தைச் சேர்ந்தது. அதன் வாஜஸநேய சம்ஹிதை பகுதியில் நாற்பதாவது அத்யாயமாக, பதினெட்டு மந்திரங்களாக விளங்குகிறது.

இந்த உபநிடதம் அளவில் மிகச் சிறியதாக இருப்பினும், கருத்தாழத்தில் பரந்து காணப்படுவது. மனித வாழ்க்கை எங்ஙனம் சிறப்புற அமைய வேண்டும் என்பதை உணர்த்தும் இவ்வுபநிடதத்தைப் போற்றுவாயாக!

*ஓம் ..........*

**ஓம் சாந்தி: சாந்தி:**





# பாரோர் புகழ் வரும் பங்குனி உத்திரம்



திரு. ஹரிஹரசர்மா -

சைவ சமயத்தில் புண்ணிய நாட்களும் விரததினங்களும் மாதந்தோறும் இடம் பெற்று வருவதை யாவரும் அறிவர். சமூக கலாச்சார வாழ்கையோடு அவை பின்னிப் பிணைந்துள்ளன. மக்கள் லௌகீக வாழ்க்கையில் அமிழ்ந்து போகாமலிருப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. ஆன்மீகத்தை மறவாமல் இருப்பதற்கும் வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயம் நல்வழியிற் தொடர்ந்து செல்வதற்கும் புண்ணிய நாட்கள் அவர்களைப் புடம் போட்டெடுக்கின்றன. உண்மைக் கருத்துக்களையும் தத்துவக் கருத்துக்களையும் மக்கள் மனதில் பதியச் செய்வதற்குப் புராண இதிகாசங்களைப் போல இதர விரதங்களும் பெரிதும் துணைபுரிகின்றன. கதைகள் வாயிலாகப் பௌராணிகர்கள் இக்கருத்துக்களை மனதில் பதியச் செய்தனர். இவை அனைத்திற்கும் மன ஒருமைப்பாடு மிக இன்றியமையாதது. இவ்வாறு அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் பங்குனி உத்திர விரதமும் ஒன்றாகும்.

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் சேரும் தினத்திலே இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. பங்குனி மாதத்திற் பூமி மீனராசியில் நிற்க சந்திரன் உத்தர நட்சத்திரத்தோடு கன்னியில் நின்று பூரண கலை பெற்றுப் பூரண கிரணத்தை உத்தர நட்சத்திர குணத்தோடு பூமிக்குக் கொடுத்தலால் இத்தினம் விசேடமானதாகும். சிவபெருமானையும் உமாதேவியாரையும் திருமணக்கோலத்தோடு தியானிப்பதால் இது திருமண விரதம் எனவும் அழைக்கப்படும்.

இந்த விரத மகிமையை அளவிட்டு உரைத்தல் சுலபமன்று. இந்த விரதத்தை அநுஷ்டித்தவர்களும் பயனடைந்தவர்களும் எண்ணிலடங்கார். இளைஞர்களுக்கும் கன்னியர்களுக்கும் அருமையான இனிய விரதம் இது.

தேவர்கள், முனிவர்கள், நாயன்மார்களுக்கு இறைவன் காட்சியளித்து ஆசீர்வதித்த பெருநாள் பங்குனி உத்திர நன்னாள்.

திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்ற செட்டியார் தமது அருமைப் புதல்வி பூம்பாவையை திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருமணஞ் செய்வதாக நிச்சயித்திருந்தார். பூம்பாவை பூக் கொய்யச் சென்ற சமயம் பாம்பு தீண்டி இறந்து விட்டாள். தந்தையார் அவள் உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைத்தார். சம்பந்தப் பெருமான் அங்கு சென்ற சமயம் இதை அறிந்து, சாம்பரடங்கிய

குடத்தை கபாலிச்சரமென்னும் தலத்திற்கு வரவழைத்தார். கபாலிச்சரருக்குத் திருமண மகோற்சவ நாள் இந்நாளின் மகத்துவம் பற்றி ஆளுடையபிள்ளையார் பூம்பாவைப் பதிகத்திலே,

*மலிவிழாவீதி மட நல்லார் மாமயிலைக்*
*கலிவிழாக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்*
*பலி விழாப்பாடல் செய் பங்குனி உத்திர நாள்*
*ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்*

என்று பாடினார். பூம்பாவையும் உயிர் பெற்றெழுந்தார்.

மலையத்துவஜனும் அவன் மனைவி காஞ்சன மாலையும் பிள்ளைவரம் வேண்டித் தவம் இயற்றியபோது, யாகத்திலிருந்து தோன்றியவளே மீனாட்சி. பெற்றோர் 'தடாதகை' எனப் பெயரிட்டு அவளை வளர்த்து வந்தனர். தடாதகைப் பிராட்டியர் மூன்று மார்பகங்களுடன் அவதரித்தாள். யாரைப் பார்த்தால் அவளது மூன்றாவது மார்பகம் மறையப் போகிறதோ அவனே அவளுக்கு மணாளனாவான் என்றது ஓர் அசிரீரி. எண் திசையும் தன் வசமாக்கிய தடாதகைப் பிராட்டி கைலாசமலை நோக்கிச் சென்றபோது முக்கண்ணன் முன் நாணி நின்றாள். அவளுடைய மூன்றாவது தனம் மறைந்தது. அவளின் குறைதீர்த்த, அழகிற் சிறந்த சுந்தரராக, சொக்க வைக்கும் சொக்க நாதச் சிவபெருமானே தோன்றினார். அதன்பின் பூலோகம் வந்த சுந்தரேஸ்வரர் திருமால் கைபிடித்துக் கொடுக்க மீனாட்சி அம்பாளை பங்குனி உத்தர நாளில் மணந்தார். மீனானது தன் பார்வையால் தன்குஞ்சுகளைக் காத்து வருவதுபோல், தன் மீன்போன்ற கண்களால் அன்னை மீனாட்சி அனைவரையும் காத்து வருகின்றாள். இங்கு அன்னைக்குத்தான் முதல் வழிபாடு.

தக்ஷன் மகாளாக அவதரித்த தாக்ஷாயணி தந்தை அவமரியாதை செய்ததன் காரணமாக பூமியில் மறு அவதாரம் எடுக்க விரும்பினாள். சிவபிரானும் வரம் ஈந்து அருளினார். இந்த தாக்ஷாயணியே மலை யரசனான ஹிமவான், மேனை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தாள். பர்வத குலத்தில் அவதரித்ததால் அவளுக்குப் பார்வதி என்ற நாமம் ஏற்பட்டது. நாரதர் கூற்றுப் பிரகாரம் பார்வதி சிவபிரானை மணக்கக் கடுந்தவம் புரிந்தாள். இறைவன் அவளது மனோவலிமையைச் சோதித்து மகிழ்ந்து "ஜீவராசிகளின் நன்மைக்காகவே நான் பார்வதியைத் திருமணஞ் செய்ய விரும்புகின்றேன். சப்தரிஷிகளே! நீங்கள் ஹிமவானிடம் சென்று பெண் தரும்படி கேளுங்கள் என்று அவர்களை வேண்டிக் கொண்டார். அவர்களும் அதன் பிரகாரம் சென்று ஒழுங்குகளைச் செய்தார்கள்.

சிவபிரானும் மணமகனுக்கு ஏற்ற வகையில் ஆடை அணிகலன்கள் அணிந்தவராகப் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களாலும், மகரிஷிகளாலும், பிரமத கணங்களாலும் சூழப்பட்டுவர ஹிமவானின் மாளிகையை அடைந்தார். பார்வதியும் அழகொழுக வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவராக அலங்கரிக்கப் பெற்றிருந்தாள். அவர்களது திருக்கல்யாணச் சடங்கு முழுவதும் நன்கு முறையறிந்த புரோகிதர்களாற் செய்து வைக்கப்பட்டது. உலகிற்குத் தாய் தந்தையரான அவ்விருவரும் உலகின் பாட்டனாராக இருக்கும் பிரம்மதேவரை வணங்கினர்.

*"இத்தம் விதிக்ஞேன, புரேஹிதேன பிரயுக்த*
*பாணிக்கிரஹணோபசாரோ*
*ப்ரணே மதுஸ்தௌ பிதரௌ பிரஜாநாம்*
*பத்மாசனஸ்தாய பிதாமஹாய"*

இவ்வாறு கூறுகிறது காளிதாசன் இயற்றிய குமாரசம்பவம்.

இவர்களுடைய திருக்கல்யாணம் பங்குனி உத்திரத்தன்று நிகழ்ந்ததாக நூல்கள் கூறுகின்றன.

பங்குனி உத்திர தினத்தன்று திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வீதியிற் பவனி வருவது குறித்துப் புலவர் ஒருவர் சந்தோஷித்துப் பின்வரும் பாடலைப் பாடினார்.

*பாரோர் புகழவரும் பங்குனி உத்திரத்தில்*
*ஆருரர் வீதி அணுகினார் – நேரே*
*பணச் சர்ப்பந்தரித்துப் பொற்பதத்திற் கிண்கிணிச் சத்தம்*
*கிணுக்குக் கிண் கிணுக் கென்னவே*

இத் தினத்தின் மகிமையை இப்பாடல் குறிப்பிடுகிறது. இந்த விரதத்தினை உணர்த்துவதற்கு, முன்னர் நிகழ்ந்ததாகக் கூறப்படும் வரலாறும் உண்டு. திரேதாயுகத்தில் ரகு என்று சொல்லப்படுகின்ற மிக உயர்ந்த பண்பும், குணசீலருமான அரசன் ஒருவன் தனது நாட்டை மனுதர்ம சாஸ்திரத்திற் கூறப்பட்ட படி ஆண்டு வந்தார். பசி, பட்டினி, நோய், துன்பம் என்பன காணப்படவில்லை. மக்கள் மனநிறைவோடு வாழ்ந்து வந்தார்கள்.


எனினும் அக்காலத்தில் வாழ்ந்த ராக்ஷஸி ஒருத்தி மக்களுக்குப் பல வகையிலும் துன்பம் இழைத்து வந்தாள். மக்களால் பொறுக்க முடியவில்லை. ரகு மன்னனும் மனம் நொந்து நாரத மகரிஷியிடம் முறையிட நாரதர் பங்குனி உத்திர விரதத்தைப் பிரசைகளோடு சேர்ந்து அனுஷ்டிக்குமாறு கூறினார். இந்த விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் ராக்ஷஸியைப் பலமிழக்கச் செய்வதோடு மட்டுமன்றி கூடுதலான செல்வமும் சம்பத்தும் அந்த ராஜ்யம் முழுவதற்குமே கிடைக்குமெனக் கூறினார். அவர்களும் அவ்வாறே அனுஷ்டித்து நன்மைகள் பெற்றனர். பங்குனி உத்திர தினத்தன்று தமிழ் நாட்டில் சில ஆலயங்களில் காமதகன உற்சவமும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

பங்குனி உத்திரம் பூரணையோடு கூடிவரின் மிகவும் சிறப்புடையது. முறைப்படி விரதம் இருந்து பூஜைசெய்து முருகனை வணங்கினால், பிறவிப் பயனை அடையலாம். 48 ஆண்டுகள் பங்குனி உத்தர நக்ஷத்திர விரதம் இருப்பவர்களுக்கு அடுத்த பிறவி அருட்பிறவியாக அமையுமென நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பிறவியில் உலகத்தவர் வணங்கும் தெய்வீகத் தன்மை அடைவார்கள்.


வருடம் முழுக்க ஒழுக்கக்கேடாக இருந்துவிட்டு பங்குனி உத்திர விரதம் மட்டும் இருப்பவர்களுக்குத் தீய பலன்களே கிடைக்கும். உத்திர நக்ஷத்திர அதிபதி சூரியன், பாவங்களைச் சுட்டுப் பொசுக்கும் சூரியன், போலித்தனமாகப் பக்தி வேடமிடுபவர்களைச் சுட்டெரித்து விடுவான் என்கிறது சூரிய புராணம்.

எனவே பார்வதி, பரமேஸ்வரர் திருவுருவங்களைப் பொன்னால் அமைத்து அபிஷேக ஆராதனைகள் புரிந்து சிவபெருமானை உமாதேவியாரோடும் எழுந்தருளச் செய்து பூசை அர்ச்சனை கிரியைகளை விதிப்படி செய்து வாழ்வாங்கு வாழ்ந்து இக பர சுகம் பெறுவோமாக.

* * *







# சைவ சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை

கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி -
(விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். சைவ சமயத்தின் முடிந்த முடிபாய் அமைந்த கொள்கையே சைவசித்தாந்தம். இது முப்பொருள் உண்மை பற்றிப் பேசுகிறது. அவை பதி, பசு, பாசம் என்பன. பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் குறித்து நிற்கிறது. பாசங்களினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள் பந்தத்தினின்றும், தளையினின்றும் விடுபட்டு பதியோடு சேர்தலே ஆன்மாக்களின் இலட்சியம். இதனை விளக்கும் நூல்கள் சித்தாந்த சாஸ்திரங்கள். சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் ஒழுங்கமைவுக்குட்பட்ட வகையில் அவற்றை விளக்கும் நூல்களாக சைவசித்தாந்த சாஸ்திரங்கள் விளங்குகின்றன. இவை மெய்கண்ட சாஸ்திரங்கள் எனவும் அழைக்கப்படும். மெய்கண்ட சாஸ்திரங்களுக்கு அடிப்படையாய் அமைந்தவை திருமுறைகள், ஆகமங்கள், வேதங்கள் என்பவையாகும். வேதங்களைப் பொது நூலாகவும், ஆகமங்களைச் சிறப்பு நூல்களாகவும் கொண்டு தோற்றம் பெற்றதுதான் சைவசித்தாந்தத் தத்துவம். வேதாகமக் கருத்துக்கள் திருமுறைகளில் இடம் பெறுகின்றமையும் இவற்றின் சாரமாகவே சைவசித்தாந்த நூல்கள் தோற்றம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

*வேதம் பசு அதன் பால் மெய்யாகம் – நால்வர்*
*ஒரு தமிழ் அதனுள்ளுறு நெய்*
*நெய்யின் உறுசுவையாம் – போதமிகு நீள்வெண்ணெய்*
*மெய்கண்டான் செய்யதமிழ் நூல்.*

எனும் பாடல் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்களுகிடையே உள்ள தொடர்பிளை விவரிக்கிறது. தேவாரங்களை வேதசாரமாகக் கொள்வது மரபு. திருமுறைகளைத் தோத்திரங்களாகவும், சைவ சித்தாந்த நூல்களை சாஸ்திரங்களாகவும் கொள்வதும் மரபு. தோத்திரங்கள் இறைவனைப் புகழ்ந்து பாடும் நூல்கள். சாத்திரங்கள் புகழ்ச்சிக்குரிய பொருளாகிய பரம்பொருளின் உண்மை, அதன் இயல்பு, இலக்கணம், தொழிற்பாடு பற்றி விளக்குவன. அந்த வகையில் சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களைத் தம்முள் மாறுபடாது விரித்துரைக்கும் நூல்களாக அமைந்த மெய்கண்ட சாஸ்திரங்கள் எண்ணிக்கையில் 14 ஆகும். அவை,

*உந்தி களிறு உயர் போதம் சித்தியார்*
*பிந்திருபா உண்மை பிரகாசம் வந்தவருட்*
*பண்பு வினா போற்றிக் கொடி பாசமிலா நெஞ்சுவிடு*

*உண்மை நெறி சங்கற்பமுற்று*

| | |
|---|---|
| 1. திருவுந்தியார் | 2. திருக்களிற்றுப்படியார் |
| 3. சிவஞானபோதம் | 4. சிவஞானசித்தியார் |
| 5. இருபா இருபஃது | 6. உண்மை விளக்கம் |
| 7. சிவப்பிரகாசம் | 8. திருவருட்பயன் |
| 9. வினா வெண்பா | 10. போற்றிப் பஃறொடை |
| 11. கொடிக்கவி | 12. நெஞ்சுவிடுதூது |
| 13. உண்மை நெறி விளக்கம் | |
| 14. சங்கற்ப நிராகரணம் | |

இவற்றுள் முதநூலாக விளங்குவது சிவஞானபோதம். சிவஞானசித்தியார் வழிநூலாகவும், சிவப்பிரகாசம் சார்பு நூலாகவும் கொள்ளப்படுகிறது. சித்தாந்த சாஸ்திரங்கள் தரும் விளக்கங்களின் அடிப்படையில் சைவசித்தாந்த தத்துவத்தினை விளங்கிக் கொள்ளலாம்.

## முப்பொருள் உண்மை

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மை பற்றி விளக்கினாலும் முப்பொருட்களிலும் மேலானது பதியாகிய இறைவனே. பதி என்றால் தலைவன் என்று பொருள்படும். சைவசித்தாந்த சாத்திரங்கள் அனைத்தும் முப்பொருள் உண்மை பற்றிப் பேசினாலும் முப்பொருட்களிலும் மேலான பரம்பொருளாகிய பதியையே சிறப்பித்துக் கூறுவன.

*"பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்து*
*பதி பசு பாசம் தெரித்தல் பதி பரமே"*

என்ற அடிகள் இதனை உணர்த்தும். முப்பொருள் உண்மையை விளக்கும் சைவசித்தாந்தம் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய அளவைப் பிரமாணங்களின் அடிப்படையில் முப்பொருள் உண்மை பற்றிக் கூறுகிறது. பிரத்தியட்சம் அனுமானத்தின் மூலம் முழுமையாக விளக்க முடியாத பரம்பொருளான பதியை வேதாகமப் பிரமாணங்களின் அடிப்படையில் விளக்குகிறது. அவை சுருதிப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என்று அழைக்கப்படுகின்றன. சைவாகமங்களின் ஞான காண்டப் பகுதியே சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்கி நிற்கிறது. சிவாகமங்களே முப்பொருள் உண்மையை எடுத்துக் கூறும் மத நூல்கள். சிவாகமங்களின் முடிந்த முடிவாயுள்ள உண்மையை மெய்கண்ட தேவர் தம் சிவஞான போதத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். சிவஞானபோதம் 12 சூத்திரங்களையும் 82 வெண்பாக்களையும் கொண்டது.

## பதி உண்மை

சைவசித்தாந்தம் இறைவனுக்கு முப் பொருட்களிலும் மேலான தலைவன் ஒருவன் என்ற பொருளில் பதி என்ற பெயரைக் கொடுத்துள்ளது. ஒரு பொருளின் உண்மையை விளக்குவதாயின் அதனைக் காட்சிகளின் மூலம் நாம் பார்த்திருத்தல் வேண்டும். அவ்வாறு சாட்சிக்கும் புலனாகாத பொருளினை ஊகத்தின் மூலமாவது விளக்குதல் வேண்டும். அந்தவகையில் சைவ சித்தாந்தம் காட்சிக்குப் புலனாகும் உலகை அடிப்படையாகக் கொண்டு அவ்வுலகைப் படைத்தவனும் ஒருவன் உளன். அவனே பதியாகிய இறைவன் என்று கூறுவதைக் காணலாம். எந்த ஒரு பொருளின் தோற்றத்திற்கும் மூன்று காரணங்கள் உண்டு. ஒன்றுமில்லாத வெறுமையில் இருந்து எதனையும் தோற்றுவிக்க முடியாது. உள்ள பொருளில் இருந்தே இன்னொரு பொருள் தோற்றம் பெற முடியும். உதாரணமாக ஒரு பானையின் தோற்றத்திற்கு மண் முதற் காரணமாகவும், திரிகை முதலியன துணைக்காரணமாகவும் குயவன் நிமித்த காரணமாயும் நின்று அதனைத் தோற்றுவிப்பது கண்கூடு. அதேபோன்று உள்பொருளாகிய உலகமும் ஒருவனாற் தோற்றுவிக்கப்பட்ட பொருள், எனக் கூறும் சைவ சித்தாந்திகள் அதன் தோற்றத்திற்கு முதற்காரணமாக மாயையையும் துணைக் காரணமாக சக்தியையும் நிமித்த காரணமாக இறைவனையும் கூறி உலகின் உண்மையைக் கொண்டு அதனைச் சிருஷ்டித்த கர்த்தாவும் ஒருவன் உளன் என்ற முடிவுக்கு வருகின்றனர்.

*"காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம் கண்டாம்*
*பாரில் மண் திரிகை பண்ணாமவன் முதல் துணை நிமித்தந்*
*தேரின் மண் மாயையாகத் திரிகைதன் சக்தியாக*
*ஆரியன குலாலனாய் நின்று ஆக்குவன்*
*அகிலமெல்லாம்"*

பதி உண்மைக்கு இலக்கணமாய் அமைந்த சிவஞானபோதம் 1ம் சூத்திரம் பதி உண்மையை உலகின் உண்மையைக் கொண்டு விளக்குகிறது.

"அவனவள் அது, எனும் அவை மூவினைமையிற் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர், (என்ற சூத்திரம்) அவன் அது என்றும் அவள் என்றும் சுட்டியறியப்படுவதாகிய இவ்வுலகம் தோன்றுதல், ஒடுங்குதல், நிலைபெறுதல் எனும் முத்தொழில்களை உடையது. எனவே அது ஒருவனாற் தோற்று விக்கப்பட்ட உள் பொருள். அப்பொருளின் ஒடுக்கத் திற்குக் காரணமாக உள்ள இறைவனே அதன் தோற்றத்திற்கும் காரணமாக உள்ளான்.

*சிவஞானசித்தியார் இதனை*
*ஒருவனோடொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகமெலாம்*
*வருமுறைவந்து நின்று போவதும் ஆதலாலே*
*தருபவன் ஒருவன் வேண்டும் தான் முதல் ஈறுமாகி*
*மருவிடும் அறாதி முந்த சித்துருமன்னி நின்றே*

சேதன அசேதனப் பிரபஞ்சம் தோன்றும் முறையிற் தோன்றி, நின்று நிலை பெற்று, ஈற்றில் ஒடுங்குவதும் உடமையினால் அதனைத் தோற்றுவித்து நிலைப்படுத்தி ஒடுக்குவதற்குக் கர்த்தா ஒருவன் வேண்டப்படும். அக்கருத்தா தனக்கொரு முதல்வனின்றித் தானே இவற்றிற்கும் நிமித்தகாரணனும், சங்கார காரணனுமாய் நின்று தொழிற்படுகின்றான். அவன் இயல்பாகவே பாசம் நீங்கிய ஞானமாகிய வடிவத்தைப் பொருத்தி நின்று காரியப்படுத்தும் இயல்புடையவன் என்று பதியுண்மை விளக்கப்பட்டுள்ளது.

## பதியின் இயல்புகள்

சைவசித்தாந்தம் கூறும் பதியின் இயல்புகளை ஆராயின் அது அனைத்திற்கும் மேலான உள்பொருள். சிறப்பாக உலகத்தைத் தோற்றுவிக்கும் கர்த்தாவாகிய பதி, அப்படைப்பின் மூலம் எத்தகைய மாற்றத்தையும் அடைவதில்லை. மாறுகின்ற எப்பொருளும் காலப் போக்கில் அழிந்து விடும் என்பது நியதி. மாறாத இயல்பினையுடைய பதிக்கு சிறப்பாக எண் குணங்கள் கூறப்படுகின்றன. அவை தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற் றலுடைமை ஆகிய எண்குணங்கள் இறைவனுக் குரியவை. இவ் எண்குணங்களையும் சத் (Existence) சித் (Conciousness) ஆனந்தம் (Bliss nature) என்ற மூன்று இயல்புகளாகக் கூறுவர். இதனால் சச்சிதானந்தம் என்ற பெயர் பதிக்குக் கூறப்படுகிறது.

பதிக்குரிய சிறப்பியல்பாக சைவ சித்தாந்தம் சொரூப, தடத்த,லக்ஷணங்களைக் கூறுகிறது. சொரூப லக்ஷணம் என்பது இறைவனது இயல்பான (Essential Nature) நிலையாகும். இந்நிலையில் இறைவனுக்குக் குணங்குறிகள் இல்லை. அருவம், உருவம், அருவுருவம் இல்லை. இதனை சிவப்பிரகாச பாடல் பின்வருமாறு கூறுகிறது.

*'நிலவும் அருவுருவன்றிக் குணங்குறிகளின்றி*
*நின்மலமாய் ஏகமாய் நிந்தமாகி*
*அலகிலுயிர்க் குணர்வாகி அசலமாகி அகண்டிதமாய்*
*ஆனந்த உருவாயன்றிச்*
*செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது*
*தற்சிவம் என்பர் தெளிந்துள்ளாரே'*

குணங்குறிகளற்ற உருவமற்ற பரம்பொருள் மலங்களுக்கப்பாற்பட்டது. ஒன்றேயானது. நித்தியமானது, அளவில்லாதனவாகிய உயிர்களுக் கெல்லாம் உணர்வு போன்றது. சலனமற்றது. கண்டிக்க முடியாதது. எல்லையற்றது. ஆனந்தமே இயல்பாக உடையது. ஆன்மாக்கள் சென்றடைவதற்கு அரியது. ஆனால் சென்றடைய வேண்டிய பொருளும் அதுவே. சிறியவற்றுள் சிறியது. பெரியவற்றுள் பெரியது. இதனை அறிந்தவர்கள் 'சிவம்' என்று அழைப்பர். சிவம் என்பது அன்பு, இன்பம், ஆனந்தம், மங்கலம், நன்மை போன்ற பல்வேறு பொருளில் வழங்கப்படும்.

இத்தகைய சொரூப நிலையிலுள்ள இறைவன் தடத்த நிலைக்கு இறங்கி வந்து அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளைத் தாங்கி ஐந்தொழில்களைச் செய்து ஆன்மாக்களை ஈடேற்று வதாக சைவசித்தாந்தம் கூறுகிறது.

சைவ சித்தாந்த தத்துவக் கொள்கைப்படி பதியாகிய இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களைச் செய்கிறார். அனாதியாகவே ஆணவ மலத்தினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள், அறியாமை காரணமாகக் கன்மங்களைச் செய்து மீண்டும் மீண்டும் பிறப் பிறப்புக்குட்படுவதனால், அப்பிறவியினின்றும் விடுபடுதலே அவற்றின் உயர் குறிக்கோள் ஆகும். இதுவே மோட்சம் அல்லது முத்தி எனப்படும். முத்தி நிலையை அடைவதற்கு ஆன்மாக்கள் தாம் செய்த கர்மப் பயன்களில் இருந்து விடுபடுதல் வேண்டும். அக்கன்மப் பயன்களை அனுபவிக்கும் பொருட்டு இறைவனால் தனு, கரணம், புவனம், போகம் ஆகியன படைக்கப் படுகின்றன. அவற்றைக் காத்தலும், ஆன்மாக்களின் பழம் பிறப்பை மறைத்தலும், ஆணவ மலம் அழிக்கப்படுவதும், திருவருள் அருளலும் இறைவனுக் குரிய தொழில்களாகக் கூறப்படுகின்றன. நடராஜ வடிவம் இந்த ஐந்தொழில் தத்துவத்தை விளக்கி நிற்கிறது.

ஆன்மாக்கள் செய்த நல்வினை தீவினை என்ற இருவினைப் பயன்களின் அடிப்படையில் அவற்றுக்குப் பிறப்பும் இறப்பும் வழங்க இறைவன் தனது சக்தியுடன் இணைந்து நிற்பள். இதனை "இருவினையிற் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கமற நிற்கும் அன்றே" என்ற சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம் இதனை விளக்குகிறது. இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய இறைவன் ஆன்மாக்கள் முன் செய்த தவப்பயனின் காரணமாகக் குருவாக எழுந்தருளி வந்து உண்மையை உபதேசிக்கிறார். "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு' என்ற சிவஞான சித்தியார் பாடல், "ஐம்புலன்களோடு ஆன்மாக்கள் கொண்ட தொடர்பு நிலையற்றது என்பதை உணர்த்தித் தமக்கும் ஆன்மாக்களுக்கும் இடையே உள்ள தொடர்பின் உண்மையை உணர்த்த ஆன்மாக்கள் தமக்கும் இறைவனுக்குமிடையே வேறுபாட்டின்மையை உணர்ந்து இறைவன் பாதங்களை அடைகின்றன. இவ்வாறு இறைவனது தாள்களில் ஆன்மாக்கள் தம் பாதத்தைப் பொருத்துவதாக சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

சைவசித்தாந்த தத்துவம் ஆன்மாக்கள் தம் தலையை இறைவனது பாதங்களிற் (தாள்களில்) பொருத்துவதை தாள்+தலை என்ற சொற்களின் புணர்ச்சியைக் கொண்டு விளக்குகின்றன. தாள்+தலை என்ற சொற்கள் புணர்ந்து தாடலை என்ற சொல் வரும்போது அது ஒன்றுமல்ல, இரண்டும் அல்ல. இந்த வகையில் ஆன்மாக்கள் அத்துவிதமாக இறைவனோடு கலந்து விடுகின்றன எனக் கூறப்படுகிறது.

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் சைவ சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கையை ஆராயின் முப்பொருட்களிலும் மேலான இறைவன் ஆன்மா க்களுக்குத் தனு, கரண, புவனம், போகம் ஆகியவற்றைத் கொடுத்து, மலமாயையை அகற்றி வல்வினையை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுப்பர் என்ற கருத்துத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

* * *





# மடுமாதா திருப்பதியின் கண்ணகி அம்மனின் செபமாலை மாதாவாக அருள் புரிகிறாள்?

*M. விவேகானந்தன்*


மடுப்பகுதியில் புராதன காலத்தில் கண்ணகி அம்மனை வைத்து வழிபட்ட கோயில் இருந்தது என்பது பற்றி, எமது முன்னையோர் வாயிலாக அறிந்திருக்கின்றோம். இது பற்றிய ஆதாரமாக, வரலாற்று ஆய்வாளரான திரு. சி. எஸ். நவரத்தினம் தாம் ஆங்கிலத்தில் எழுதி **(1960ல்)** வெளியிட்ட "வன்னியும் வன்னியரும்" என்ற வரலாற்று ஆய்வு நூலில், மற்றொரு ஆய்வாளரான திரு. ஐவேஸ் என்பவரின் நூற்குறிப்பை ஆதாரமாகக் காட்டி எழுதியிருப்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

"மடு" என்னும் இடத்தில் புராதனமாக கண்ணகியை வழிபட்ட ஆலயம் இருந்ததென்றும், போத்துக்கேயரின் வருகையினால், இங்கு செபமாலை மாதா என்னும் கத்தோலிக்க தேவாலயம் ஆக்கப்பட்டது என்றும் இதனால் ஒரு அன்னை தெய்வம் இருந்த இடத்தில் இன்னொரு மாதா ஆலயம் உருவாகினாலும், முன்பு உருவாகினாலும் கண்ணகியை வழிபட்டு வந்த பெருந்தொகையான இந்து தமிழர்களும் புத்தமதச் சிங்கள மக்களும் கண்ணகி எனவே தொடர்ந்து மடுப்பகுதியைத் தரிசித்து மாதாவைப் பயபக்தியுடன் வணங்கி வருகின்றனர் என்றும் அறியக்கூடியதாக உள்ளது என திரு. ஐவேஸ் தமது வடமத்திய மாகாண ஆய்வு என்ற கைநூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலமாவது வருமாறு:-

"Tradition a scribes that a temple for Kannakai was at Madhu before the coming of the Portuguese. The Popularity of the "Lady of the Holy Rosemary" among Hindus my possibly be attributed to the age long veneration of Kannakai in the locality, for one mother cult has given place to another. This tradition is endorsed by Mr. Ievers in his "manual of the North central Provence" as follows, st.Mery's Church at Madhu is considered by the Buddhists and a great many of the Tamil pilgrims who resort there as the temple of Pathini Amman" *(Amman Kovil)*

எனவே பத்தினி தெய்வமாகிய கண்ணகி ஒற்றுமைக்கோர் தெய்வம் ஆகும்.

# பயனற்ற ஏழு




ஆதாரம் : சீவக சிந்தாமணி


சக்தி
ஓம் சக்தி


சக்தி
Designed & PRinted by Unie ARts (Pvt) Ltd., Colombo 13. Tel: 330195.